வெளியீடு 25-1-1991

Issued 25-1-1991

26 மார் 991

434

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 6, 1990 - தொகுதி 26 - எண் 2

Friday, the 6th April, 1990-Volume 26-No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009**

விலை ரூ. 3.00]

[Price Rs. 3-00

143802

D

V2111;31'N90

N90.26.2

## உள்ளடக்கம்.

*6—4—1990*

| | பக்கங்கள். |
|---|---|
| 1. இரங்கற் குறிப்பு— | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு, .. | 215 |
| 2. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 216–251 |
| 3. தகவல் கோரல்— | |
| (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள். .. .. .. .. | 251 |
| (ஆ) வினா நேரம் முடிவுற்ற பின் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குறித்த நடைமுறைகள் .. .. | 254–256, 259–260, 271–272 |
| (இ) விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்வது பற்றி முதலமைச்சர் டெல்லியில் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து .. .. .. .. | 91 94–95 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| (அ) சென்னையில் சிறு தொழில்களுக்காகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் குடியிருப்புகளாகப் பயன்படுத்தப்படுவதால் சிறு தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து. .. .. .. .. | 251–254 |
| (ஆ) சென்னை மருத்துவக் கல்லூரியில் பிணப் பரிசோதனை செய்யப் போதுமான மருத்துவர்கள் இல்லாமை குறித்து. .. .. .. .. | 256–259 |
| 5. அறிக்கை அளித்தல்— | |
| பொதுக் கணக்குக் குழு .. .. .. | 259 |

EB. 434

தமிழ் நாடு
சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

வெளியீடு - 25-1-91

Vol 26 No. 2

1990

D
V 2:11,31'N90
N90.26.2
143802

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி .. .. 260–350

(அ) கோரிக்கை எண். 26—கைத்தறியும், துணித்தொழிலும் .. .. 260–261

(ஆ) கோரிக்கை எண். 34—நகர்ப்புற வளர்ச்சி 261–270, 272

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு .. 260, 261–262, 325–349

*திரு. சி. கோவிந்தராஜன் .. .. 262, 263–270

திரு. செ. இராமலிங்கம் .. .. 272–278

திரு. எம். அப்துல் லத்தீப் .. .. 278–290

திரு. பி. எச். பாண்டியன் .. .. 290–295

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் .. 295–299

*திரு. எஸ். எஸ். கருப்பசாமி .. .. 299–305

*திரு. கோ. பூவராகன் .. .. .. 309–316

திரு. ஏ. சுப்பு .. .. .. .. 316–319

*திரு. சோ. அழகர்சாமி .. .. 319–325

7. அறிவிப்பு—

அவை நிகழ்ச்சிகள் நடைபெறும்போது அமைச்சர்களிடம் உறுப்பினர்கள் சென்று பேசுவது குறித்து .. 262–263

8. விதி 110 இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை—

(அ) காவிரி நீர்ப்பிரச்சினை பற்றி டெல்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தை குறித்து .. .. .. .. 305–307

(ஆ) நெய்வேலி பழுப்பு நிலக்கரி எடுப்பதற்காக ''ராயல்டி'' கொடுக்க மத்திய அரசு இசைவு தெரிவித்துள்ளது குறித்து 307–308

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 351


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 23, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990, ஏப்ரல் 6, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.''

ஒரே தன்மையில் இயங்குவதால் சிறப்புப் பெறும் கற்புடைய மகளிரைப் போல ஒருவன் தன்னைத்தானே காத்துக்கொண்டு நடந்தால் பெருமைப் பண்பு அவனிடத்தில் நிலைக்கும்.

## 1. இரங்கற் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. வி. கார்த்தீசன் அவர்கள் 3–4–1990 ஆம் நாள் அன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கார்த்தீசன் அவர்கள் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் இராதாபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அவர்கள் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நின்றனர்).*

[1990 ஏப்ரல் 6

## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மேல்நிலைப் பள்ளிகளில் அரசியல் பாடம்.

***2221.** திரு. சோ. பால்ராஜ் :

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :*

*மேல்நிலைப் பள்ளிகளில் அரசியலையும் பாடமாக சற்றுத் தர திட்டம் உள்ளதா ?*

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

மேல்நிலைக் கல்விப் பாடத்திட்டத்தின் பகுதி '3'-ல் அரசியல் அறிவியல் பாடம் (Political Science) ஒரு விருப்பப் பாடமாக ஏற்கெனவே வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சோ. பால்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசியலில் 18 வயது வந்தவர்கள் வாக்களிக்கலாம் என்ற நிலைமை இருப்பதால் அவர்களுக்கு அதை முக்கியப் பாடமாக வைத்து கற்றுக் கொடுத்தால் அவர்களுக்குள்ள அரசியல் அறிவு தெளிவடைய நல்ல வாய்ப்பு இருக்கும் என்கின்ற காரணத்தால் அதனை வருகிற ஆண்டு முதல் எல்லா வகுப்புகளுக்கும் பாடமாக வைக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பாடத் திட்டங்களை வகுப்பதற்காக ஒரு தனி அறிஞர் குழு, அதாவது கல்வியாளர்களின் குழு இடம் பெற்றிருக்கிறது. அந்தக் கல்வியாளர்கள் குழுவில், என்னென்ன வகையான பாடங்களை மாணவர்களுடைய வகுப்புத் தரத்திற்கு ஏற்ப அமைக்கலாம் என்பது தீர்மானிக்கப்படுகிறது. இந்தப் பாடத் திட்டம் அதிக அளவுக்கு முக்கியத்துவம் பெறவேண்டும் என்று அவர்கள் கருதுவார்களேயானால் அப்போது ஒரு வேளை அதிகம் இடம் பெறச் செய்யலாம்.

**திரு. சோ. பால்ராஜ் :** பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டிலிருந்து இதனை ஏற்படுத்த முடியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானிக்க வேண்டியவர்கள் நாமல்ல. ஆலோசனை வேண்டுமானால் வழங்கலாம்.



1990 ஏப்ரல் 6]

**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசியல் பாடத்தோடு கூட பெண்களைப் பற்றிய பிற்போக்குக் கொள்கைக்கு எதிராகவும் வரதட்சணைக் கொடுமைக்கு எதிராகவும் அதாவது இதுபோன்ற சமூகக் கொடுமைகளுக்கு எதிராகவும் பள்ளி மாணவர்களுக்கு அறிவுரை, போதனை வழங்க அரசு ஆலோசனை கூறுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, சமூகவியல் என்ற பாடம் இடம் பெற்றிருக்கிறது. அந்தப் பாடத்தில் இந்தக் கருத்துக்களும் இடம் பெறும்படியாக ஆலோசனை கூறப்படும்.

### மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் செனட், சிண்டிகேட் அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்.

***7565.** திரு. உ. ரா. வரதராசன் :

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :*

*(அ) மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் செனட், சிண்டிகேட் அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல் செயல்படுவதை அரசு அறியுமா ?*

*(ஆ) ஆம் எனில், அந்த அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தப்பட அரசு முயற்சி எடுக்குமா ?*

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அறியும்.

(ஆ) அரசு முயற்சி எடுத்து வருகிறது.

9–05 மணி

**திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டிலிருந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல், இப்பல்கலைக் கழகத்தினுடைய செனட், சிண்டிகேட் அமைப்புகள் எல்லாம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதுசம்பந்தமாக, உயர்நீதிமன்றத்திலேயும் பிரச்சினைகள் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தர், வழக்குகளை விரைவாக முடிப்பதற்கோ, சிண்டிகேட், செனட் தேர்தல்களை விரைவாக நடத்தி முடிப்பதற்கோ எந்தவித முயற்சியும் எடுக்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டும் எழுந்திருக்கிறது. ஆகவே, இந்த அமைப்புகளுக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கு, உடனடியாக அந்த வழக்கையும் விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[1990 ஏப்ரல் 6

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே அப்போது உருவாக்கப்பட்ட அவசரச் சட்டம், சட்டங்கள் இவை காரணமாக ஏற்பட்ட வழக்குகள், அண்மையில் தமிழக சட்டமன்றத்திலே கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட சட்டத் திருத்தம் மூலமாக ஓரளவுக்கு வலுவிழந்து விட்டன. எனவே, விரைவாக நீதிமன்றத் தீர்ப்பு அல்லது நீதிமன்றத்தினுடைய முடிவு காண முடியும். இடையிலே ஏற்பட்ட ஒரு வழக்கிலேயும் கூட, ஒரு முடிவு சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே நடைபெற்ற தேர்தலிலே, வாக்குகளை எண்ணி அறிவிக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப் பல்கலைக் கழகத்திற்கான ஆட்சிக் குழு அல்லது செனட் இப்படிப்பட்ட அவைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கான வாய்ப்பு உருவாகி இருக்கிறது.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாமல் இருக்கக்கூடிய அந்தப் பல்கலைக் கழகத்திலே பல்வேறு சீர்கேடுகள், முறைகேடுகள் எல்லாம் காணப்படுகின்றன. திரு. பழனிவேல் ராஜன் அவர்களுடைய தலைமையிலே அமைந்திருக்கக்கூடிய குழு அஞ்சல்வழித் தேர்வு சம்பந்தமான முறைகேடுகளை எல்லாம் விசாரித்து அறிந்து சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரைகள் கூட, அமல்படுத்தப்படாமல், நிறைவேற்றப்படாமல் இருந்துகொண்டிருக்கிற நிலைமைகள் எல்லாம், இதன் காரணமாக-தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாததன் காரணமாக, இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்தக் குறைகளையும், சீர்கேடுகளையும் களைவதற்கு, அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்தினுடைய தன்னாட்சி உரிமையில் அரசு நேரடியாக, தேவை இருந்தால் தவிர கட்டாயமான சூழ்நிலை இருந்தால் தவிர, தலையிடுவது அவ்வளவு நியாயமல்ல: இருந்தாலும், அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய குழுக்களெல்லாம் முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவதாக விரைவாக அறிவிக்கப்படுமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நோக்கம் நிறைவேறும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் சட்டமன்றத்தில் இருந்து நானும் செனட் மெம்பர் முன்பு நடந்த தேர்தல் ஒன்றில் வாக்கு எண்ணப்படுகின்ற நேரத்தில், அன்று நீதிமன்றம் வாக்கு எண்ணக்கூடாது என்ற ஒரு தடையுத்தரவு பிறப்பித்து, இப்போது அந்தத் தடையெல்லாம் நீக்கப்



1990 ஏப்ரல் 6]

பட்டிருக்கிறது. எனவே, நீண்டகாலமாக நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதை விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து, அந்தப் பல்கலைக் கழகத்திற்கு செனட், சிண்டிகேட் போன்ற ஜனநாயக உரிமைகளை-நிறுவனங்களை, அமைப்பதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் அது குறித்து ஆலோசனை செய்து வருகிறது. சட்டத் துறையோடு கலந்து பேசி வருகிறது. விரைவாகச் செயலாற்றுவதற்கு முயற்சிக்கப்படும்.

டாக்டர் க. காஞ்சனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் பல்கலைக் கழகத்தினுடைய செனட்டிற்கு நியமன உறுப்பினர்களாக அனுப்பப்படுகிறார்கள். அதற்குப் பிறகு, ஆட்சிமன்றக் குழுவிற்கு வரவேண்டுமென்று சொன்னால், தேர்தலிலே நிற்க வேண்டியிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் பணியையும் செய்துகொண்டு தேர்தலிலே ஈடுபட்டு-சிண்டிகேட் தேர்தலிலே ஈடுபட்டு, ஆறேழு மாதங்களுக்கு வாக்கு சேகரிப்பதற்குச் சிரமமாக இருக்கின்ற காரணத்தால், டைரக்டாக அவர்கள் சிண்டிகேட்டுக்கு அனுப்பப்படுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைவிடத் தேர்தலிலே நிற்காமல் இருப்பது நல்ல காரியம்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக் கழகத்திலே எத்தனை ஆண்டுகளாக இவ்வாறு சிண்டிகேட் அல்லது செனட் அமைப்புகள் இல்லாமல் இருக்கின்றன? எப்போது நீதிமன்றத்திலே வழக்கு தொடரப்பட்டு தடை விதிக்கப்பட்டது? நம்முடைய அரசாங்கத்தினுடைய சார்பாக எத்தனை முறை அந்தத் தடையை நீக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன? முயற்சி எடுக்கப்படவில்லை என்றால், ஏன் எடுக்கப்படவில்லை?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 வது ஆண்டில் இந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டன. அப்போது இருந்த அரசு, கொண்டு வந்த சில சட்டங்கள் காரணமாக, 6 ஆண்டுகளுக்கு மேல் யாரும் அந்த செனட்டிலே அல்லது சிண்டிகேட்டிலே, மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட உரிமை பெற மாட்டார்கள் என்று தடை விதிக்கப்பட்டதன் காரணமாக, அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த தேர்தல், வாக்குகள் எண்ணுகிற கட்டத்திலே நிறுத்திவைக்கப்பட்டது. அது முறையா, இல்லையா என்பது வேறு பிரச்சினை. அதனுடைய தொடர்ச்சியாக, நீதிமன்றத்திலே இருந்த வழக்கு,

[1990 ஏப்ரல் 6

முழு தீர்மானத்திற்கு வரமுடியாத ஒரு கட்டத்திலே இருந்த போது, இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே, அந்தத் தடைச் சட்டங்கள் நீக்கப்பட்டு விட்டன. எனவே, இப்போது அந்தத் தடைகள் எல்லாம் நீக்கப்பட்டு முன்னர் இருந்ததுபோல் இயங்குகிற வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

திறந்தவெளி சிறைச்சாலை அமைத்தல்.

*4900. திரு. துரை சந்திரசேகரன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், திருமலை சமுத்திரம் பகுதியில் திறந்தவெளி சிறைச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில், எப்போது பணி துவங்கப்படும் ?

9-10 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சை மாவட்டம், திருமலை சமுத்திரம் பகுதியில் திறந்தவெளி சிறைச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) புதிய திறந்த வெளிச் சிறை அமைக்க 64.81 ஏக்கர் நிலப்பரப்பு திருமலை சமுத்திரம் என்ற கிராமத்தில் சிறைத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு கட்டிடப் பணிகளுக்காக ரூ. 11.47 இலட்சங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், திருமலை சமுத்திரத்தில் உள்ள பாலசேவிகா கல்வி நிறுவனத்தினர் (தனியார் நிறுவனம்) சென்னை உயர் நீதி மன்றத்தில் மூன்று வழக்குகள் தொடர்ந்து திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்க இடைக்கால தடை உத்தரவு பெற்றிருக்கின்றார்கள். மேற்படி இடைக்கால தடை உத்திரவை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறந்தவெளி சிறைச்சாலையின் மூலம் ஆயுள் கைதிகள் திருந்தி வருகின்றனர். அவர்கள் அங்கு விவசாயம் செய்வதன் மூலம் உணவு உற்பத்தி பெருகுகின்ற ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படுகிறது. திறந்த வெளி சிறை அமைக்க முடிவெடுத்த பின் அமைந்த தனியார் பொறியியல் கல்லூரி தடை உத்தரவை வாங்கியிருக்கிறது. அந்தத் தடையை நீக்கி விரைவில் அந்த இடத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாலசேவிகா என்ற தனிப்பட்ட நிறுவனம் கல்வி அறக்கட்டளை தனியார் நிறுவனம் சிறைத்துறைக்கு ஒதுக்கப்பட்ட இடத்தைப் பொறுத்து நீதிமன்றத்தில் தடை ஆணை பெற்றுள்ளதற்குச் சொல்கின்ற காரணம் இந்தச் சிறைச்சாலை அமைப்பதன் மூலமாகக் கல்வி அமைப்புக்குப் பாதகம் ஏற்படும் என்றும் மற்றும் சில காரணங்களைச் சொல்லி தடை உத்தரவை 1988ஆம் ஆண்டு வாங்கியிருக்கின்றார்கள். அந்தத் தடை உத்தரவை நீக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. திறந்தவெளி சிறைச்சாலை சிறைவாசிகளுடைய நன்மை கருதித் தான் என்பதால் விரைவாகச் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நீலகிரி தெற்குத் தோட்டம் பகுதியில் திறந்த வெளி சிறைச்சாலை மிகச் சிறப்பாக நடைபெற்று 1982 ஆம் ஆண்டு முடிவுற்று அதற்குப் பிறகுதான் திருமலை சமுத்திரத்தில் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. அதுபோலவே, தஞ்சை மாவட்டத்தில் செஞ்சிப்பட்டி பூதலூர் பகுதிகளில் ஏராளமான அரசு நிலங்கள் இருக்கின்றன. அவற்றில் அமைக்கின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் தஞ்சை மாவட்டத்தில் நீலகிரி தெற்குத் தோட்டம் என்ற இடத்தில் 114 ஏக்கர் சிறைத்துறைக்குச் சொந்தமாக இருந்தது. அந்த இடத்தை அன்றைக்குத் தஞ்சைப் பல்கலைக்கழகம் வேண்டுமென்று கோரியதால் 9—6—1982ல் பல்கலைக் கழகத்திற்குக் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு தான் திருமலை சமுத்திரத்திலே 64 ஏக்கர் ஆர்ஜிதம் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு 11 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேறு இடம் மாற்றுவது என்று சொன்னால், இன்னும் பிரச்சினையில் தாமதம் ஆகலாம். தடை ஆணையை ரத்து செய்து, சிறைச்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஆயிரம் ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தற்போது 50 ஏக்கர் நிலம் போதுமானது என்று தெரிவித்தார்கள். திறந்த வெளிச் சிறைச்சாலை அமைக்கப் போதிய இடத்தைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கேட்டு திறந்தவெளி சிறைச்சாலையை அங்கே அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1990 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்வது முழுக்க முழுக்க உண்மை. தஞ்சையில் இருக்கிற தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு இடம் கொடுக்கப்பட்டதால் - வேறு இடம் தேவையாக இருந்தது. வேறு இடம் எடுக்கப்பட்டு விட்டது. ஆனால் பக்கத்தில் இருக்கிற கல்லூரி நிர்வாகம் கோர்ட்டுக்குச் சென்று தடையாணை பெற்றிருக்கிறது. அந்தத் தடையாணையை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல சம்பந்தப்பட்ட அரசு வழக்கறிஞரை அழைத்துப் பேசி உடனடியாக அந்தத் தடையாணையை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திறந்த வெளிச் சிறைச்சாலை, மூலம்தான் எதிர்காலக் கைதிகளுக்கு ஓர் ஆக்கபூர்வமான வாழ்க்கை அனுகூலமாக அமையும் என்று சிறைச்சாலை சீர்திருத்தக் கமிஷன் பரிந்துரை செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் புதிய திறந்த வெளிச் சிறைச்சாலைகள் மேலும், அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் அரசுக்கு வந்துள்ளனவா? தஞ்சையிலிருப்பதை சிவகங்கைக்கு மாற்றம் செய்யும் செயற் குறிப்பு அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி தஞ்சையைப் பொறுத்தது ஆகும். சிவகங்கை பற்றிக் குறிப்பு இல்லை. தஞ்சைக்கும் சிவகங்கைக்கும் எவ்வளவு தூரம் என்பது கூட எனக்குத் தெரியாது. எனவே, இதனைத் தனிக் கேள்வியாகப் போட்டால் விளக்கம் தருகிறேன்.

மத்திய சிறைச்சாலைகள் கட்டுதல்.

5983. திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரி, பெரியார் மாவட்டங்களில் மத்திய சிறைச்சாலைகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.



1990 ஏப்ரல் 6]

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக மக்கள் இயக்கப் போராட்டங்களில் ஈடுபடுகின்ற தர்மபுரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள கைது செய்யப்பட்டால் அவர்களைக் கர்நாடக எல்லையில் இருந்து கிட்டத்தட்ட 250 கிலோ மீட்டர் தூரமுள்ள சேலம் சிறைச்சாலைக்குக் கொண்டுவந்து அடைக்கிறார்கள். கைது செய்யப்பட்டு, சிறைச்சாலையிலே அவர்களைக் கொண்டு வந்து அடைப்பதற்குள் ஒரு நாள் ஆகிவிடுகிறது. அதுமாத்திரமல்ல. அவர்களைப் பார்க்க அவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்கள் வருகிறபோது ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. அதுமாத்திரமல்லாமல், குற்றவாளிகள் சப்ஜெயிலில் வைத்து கொடுமைப்படுத்தப்படுகிற நிலைமை இருக்கிறது.....................

9.20 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவைக் கேளுங்கள்.

திரு. வ. முல்லைவேந்தன் : தர்மபுரி மாவட்டத்தில் ஒரு சிறைச்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அப்படி அமைக்கின்ற நிலையில் அதைத் திறந்த வெளிச் சிறைச் சாலையாக உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த சிறைக்கைதிகள் சேலம் மத்திய சிறையிலும், பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கோவை மத்திய சிறையிலும் வைக்கப்படுகிறார்கள். அதுவே போதுமானதாகக் கருதப்படுகிறது. போராட்டம் இல்லாமல் இருந்தால் இந்தப் பிரச்சினையே கூட எழாது. தற்போது அங்கே மத்திய சிறைச்சாலை அமைக்கும் திட்டம் இல்லை.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குறிப்பாக அரசுத் துறையில் ஆண்களும், பெண்களும் பணியாற்ற வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானம் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் போராட்டத்தில் ஈடுபடுகின்ற கணவன், மனைவியை ஒரே சிறையில் அடைக்க அரசு ஆவன செய்யுமா? (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே சிறையிலா அல்லது ................(சிரிப்பு).

[1990 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குக் கொடுக்கப்பட்ட இடத்தை மீண்டும் வாங்குகின்ற யோசனை கிடையாது. அப்படி வாங்குவதும் முறையல்ல. தமிழ்ப் பல்கலைக்கழக இடத்திற்குப் பதிலாக ஏற்கெனவே அரசாங்கத்தால் 64 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு 11 லட்சம் ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. பிரச்சினை இப்போது நீதிமன்ற தடை ஆணை இருக்கிறது. அந்த தடை ஆணையை ரத்து செய்து, ஏற்கெனவே குறிப்பிட்டு இருக்கிற 64 ஏக்கர் நிலத்தில் அந்த திறந்த வெளி சிறைச்சாலை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலைக்கு ஆர்ஜிதம் செயயப்பட்ட நிலம் தடை ஆணையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதன் பக்கத்திலே நடத்தப்படுகின்ற பாலிடெக்னிக் தனியாரால் நடத்தப்படுகிறது. அவர்களே இந்த மாதிரி ஒரு தடை நீண்ட காலமாக இருக்கவேண்டும் என்று செயல்படுகிறார்கள். அதிகாரிகளும் அவர்களோடு சேர்ந்து செயல்படுகின்றார்கள் என்ற கருத்து. அந்தப் பகுதியிலே இருக்கிறது. ஆகவே அந்தத் தடையை நீக்குவதற்கு உடனே கோர்ட்டிலே கவுண்டர் பைல் செய்து தடையை நீக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

9–15 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவுண்டர் ஸ்டேட்மெண்ட் தாக்கலாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அதிகாரி யார் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அந்த அதிகாரிமீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். தனியார் சிலர் அப்படி வாங்கிவிடுகிறார்கள். அரசு போடும் திட்டங்களுக்குத் தடையாக நீதிமன்றங்களுக்குச் சென்று இப்படித் தடையாணை வாங்கிவிடுகிறார்கள். 1984ல் வழங்கப்பட்ட தடைகள் கூட அப்படியே இருக்கின்றன. இந்த வழக்கைப் பொறுத்தவரையில் 1988 ஆம் ஆண்டுதான் தடையாணை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தடையாணையைக் கூட ரத்து செய்ய அரசாங்க வழக்கறிஞர் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுசம்பந்தமாக அரசாங்க வழக்கறிஞரிடத்தில் பேசப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலை திறப்பதன் நோக்கம் பரம்பரைக் குற்றவாளிகளையும், சந்தர்ப்பவசத்தால் நெறி குற்றம் புரியும் குற்றவாளிகளையும், தனிமைப்படுத்தி திருத்துவதற்காகச் செய்யும் நல்ல முயற்சி ஆகும். அந்தவகையில்





மாவட்டந்தோறும் இந்தத் திறந்தவெளிச் சிறைச்சாலைகளை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை சிங்காநல்லூர் பகுதியிலும் திறந்த வெளிச் சிறைச்சாலை இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலும் ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உறுப்பினருடைய கருத்தும் பரிசீலிக்கப்படும்.

டாக்டர் த. சாந்தகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் திறந்தவெளி சிறைச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? பெண் கைதிகளுக்கு...... (மணியடிககப்பெற்றது).

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற திறந்த வெளி சிறைச்சாலை அமைக்க அரசு என்னென்ன அடிப்படைகளை எதிர்பார்க்கிறது? எப்படிப்பட்ட தகுதிகளை எதிர்பார்க்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறந்த வெளிச் சிறைச்சாலை என்றால அது விசாலமாக, திறந்த வெளியில் இருக்கவேண்டும். 'திறந்த வெளி' என்பதை தமிழ்ப்பேராசிரியர்தான் விளக்க வேண்டும். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தச் சொற்களே போதுமானவை என்பது என்னுடைய விளக்கம்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் திருமலை சமுத்திரம் பகுதியில் திறந்தவெளிச் சிறைச்சாலை அமைப்பது சம்பந்தமாக நிலம் கையகப்படுத்துதல் பற்றிய வழக்கு கோர்ட்டில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏதோ தஞ்சை மாவட்டத்தில் புதிய திறந்தவெளி சிறைச்சாலை திறக்கக் கோருவதாக அர்த்தப்படக்கூடிய முறையில் அரசு பார்க்கக் கூடாது. முதலில் தஞ்சையில் திறந்தவெளிச் சிறைச்சாலை இருந்தது. இருந்து செயல்பட்டுக் கொண்டிருந்த இடத்தை தமிழ்ப் பல்கலைக் கழகம் எடுத்துக்கொண்டபடியால் மாற்று இடம் கிடைப்பதில் பல ஆண்டுகள் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டும், ஏற்கனவே அந்த இடத்தில் திறந்தவெளிச் சிறைச்சாலை இருந்து செயல்பட்டுக் கொண்டிருந்தது என்ற அடிப்படையிலும் அங்கே திறந்த வெளிச் சிறைச்சாலையை விரைந்து ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

[1990 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, போராட்டத்திற்குச் செல்லுகிறவர்கள் அதை முடிவு செய்துகொள்ள வேண்டும். (சிரிப்பு)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மத்திய சிறைச்சாலையிலும் பெண்களை அடைக்கின்ற அறைகளிலே காற்று உள்ளே வருவதற்கு வசதிகளையும், சேனிடேஷன் வசதிகளையும் செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தர்மபுரி பெரியார் மாவட்ட மத்திய சிறைச்சாலையைப் பற்றியது. பொதுவாக சிறைச்சாலைகள் பற்றி வரும்போது தெரிவிக்கலாம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதால் சொல்கிறேன். பெண்களுக்கு என்று தனியாக சிறை இருக்கிறது. பிரச்சினை என்னவென்றால் நான் சிறைச்சாலைகளுக்குச் சென்று பார்த்தபோது, அங்கே இருக்கும் 4 பெண்களும் சேர்ந்து இருப்பதில்லை. தகராறு என்று சொல்லுகிறார்கள் (சிரிப்பு). அது இல்லாமல் இருந்தால் போதும்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்கள் பிரிக்கப்படும்போது சிறைச்சாலைகளையும் ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் இருக்கிற கைதிகளை சேலத்திற்குக் கொண்டு வருகிறார்கள். கோவை மாவட்ட மத்திய சிறைச்சாலையிலே இடமே குறைவு. ஆனால் ஜெயில் பாப்புலேஷன் அதிகம். நீலகிரி மாவட்டம், பெரியார் மாவட்டம், கோவை மாவட்டத்தில் இருக்கிற அத்தனை கைதிகளும் அங்கேதான் இருக்கிறார்கள். அங்கே இட நெருக்கடி இருக்கிறது. எனவே பெரியார் மாவட்டத்திலே துரிதமாக மாவட்ட மத்திய சிறைச்சாலையை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொல்லும் யோசனை நல்ல யோசனை. புதிய மாவட்டம் அமைக்கும்போது மாவட்டத்திற்குத் தேவையான மாவட்ட ஆட்சியர், போலீஸ் இலாக்காவைச் சேர்ந்த டி.எஸ்.பி., மாவட்ட சிறைத் துறை அதிகாரி, டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் ஆகியோர்களுக்குத் தேவையான அலுவலகங்களையும், குடியிருப்புகளையும் கட்டுவது பொருத்தமாக இருக்கும். இனிமேல் அமைக்கும் மாவட்டங்களுக்கு அதைப் பற்றிப் பரிசீலிக்கலாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 6]

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பல முறை கோவை மத்திய சிறைச்சாலையிலே இருந்து அனுபவம் பெற்றவர்கள். நாடு பாதி, நங்கவரம் பாதி என்று சொல்லுவதுபோல சோவை பாதி, மத்திய சிறை பாதி என்று இருக்கிறது. எனவே நடுநாயகமாக இருக்கும் அந்தச் சிறைச்சாலையை வேறு இடத்திற்கு மாற்றி, அந்த இடத்தைப் பயனுள்ள வகையிலே பயன்படுத்தும் செயற்குறிப்பு பல முறை ஆய்வு செய்யப்பட்டு நின்று போயிருப்பதாக அறிகிறேன். அதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் கோவை மத்திய சிறைச்சாலையிலே எனக்கு அனுபவம் என்று சொன்னார்கள். அவருக்குத்தான் அதிக அனுபவம். ஏனென்றால் நீண்ட நாட்கள் அங்கே இருந்திருக்கிறார்கள். நடுநாயகமாக இருக்கும் மத்திய சிறைச்சாலையை மாற்றும் செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டது. வேண்டியானால் மீண்டும் அதைப் பரிசீலிக்கலாம்.

9.25 மணி

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மத்திய சிறை அமைந்து இருக்கின்ற இடம் ஏறத்தாழ 5 கோடி அல்லது 6 கோடி ரூபாய் விலை பெறுமானம் உள்ள காரணத்தால் அரசு ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்து, புறம்போக்கு நிலங்களிலே மாற்றி கோவையிலும், பெரியார் மாவட்டத்திலும் திறந்தவெளிச் சிறை அமைப்பதற்கு உத்தேசம் இருக்கிறதா ? அப்படித் திறந்தவெளிச் சிறைச்சாலை அமைகின்ற நேரத்தில் அதற்கு என்ன செலவு ஆகும் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல இப்போது மத்தியச் சிறை அமைந்து இருக்கிற இடங்கள் எல்லாம் ஒரு காலத்தில் ஒதுக்குப் புறமாக இருந்தவை. அவைகள் இப்போது நடுநாயகமாக வந்துவிட்டன. கோவை, மதுரை, திருச்சி போன்ற இடங்களில் மத்திய சிறை அமைந்துள்ள இடங்கள் எல்லாம் விலை அதிகமான இடங்கள் ஆகும்; நெருக்கடி நிறைந்த இடங்களும் ஆகும். எனவே ஒட்டு மொத்தமாக மாஸ்டர் பிளான் தயார் செய்துதான் அதைக் கவனிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல கோவையைப் பொறுத்தவரையில் அந்த மத்தியச் சிறைச்சாலையை மாற்றுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா என்பதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[1990 ஏப்ரல் 6

## முத்திரைத் தாள்கள் விற்பனை.

*5117—திரு. கே. பிச்சாண்டி:

*மாண்புமிகு வருவாய்த்துறைஅமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :*

*முத்திரைத் தாள்களை அதிக விலைக்கு விற்கும் ஸ்டாம்பு வெண்டர்களை கைது செய்து சிறையிலிட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே,

சட்டத்தில் இடமில்லை.

திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முத்திரைத் தாள்கள் மக்களுக்குத் தட்டுப்பாடின்றிக் கிடைக்கவும், விற்பனையாளர்கள் அதிக விலையில் விற்பதைத் தடுக்கவும், பதிவாளர் அலுவலகம் உள்ள ஊர்களில் தடையின்றி கிடைக்க முத்திரைத்தாள் விற்கும் உரிமம் அதிக அளவில் வழங்கவும், அதிக அளவில் முத்திரைத் தாள்கள் அவர்களுக்குக் கிடைக்கவும் அரசு நடவடிக்கை யெடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, அவர் கேட்ட கேள்வி,—முத்திரைத் தாள்களை அதிக விலைக்கு விற்கும் முத்திரைத் தாள் விற்பனையாளர்களின் முறையற்ற செயல்களுக்கு முத்திரைச் சட்டம் விதி 25 (iii) இன் கீழ் உரிமத்தை ரத்து செய்ய விதிகளில் இடம் இருக்கிறது. அவர் கேட்டது, அப்படிப்பட்ட தவறான முயற்சியில் தாள்களை அதிக விலைக்கு விற்கும் முத்திரைத்தாள் விற்பனையாளர்களைக் கைது செய்ய அரசு முன் வருமா என்கின்ற கேள்வி. சிறை பிடிக்க அரசுக்கு உரிமை இல்லை; அறையில் வைக்க அரசுக்கு உரிமை இல்லை.

திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தில் இடமில்லை என்பதால்தான், உரிமங்கள் அதிகம் வழங்கப்பட வேண்டுமென்ற வகையிலே முத்திரைத் தாள்கள் விற்கின்ற உரிமங்களைப் பெறுவதில் வேலையற்ற பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையில் உரிமம் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, முன்னுரிமை வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 6]

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முத்திரைத் தாள்களைவிற்கக் கூடிய ஸ்டாம்பு வெண்டர்கள் சில பேர் வேண்டுமென்றே அந்தத் தாள்களை விற்காமல் ஸ்டாக் வைத்துக் கொள்கிறார்கள். பத்து ஆண்டுகளுக்கு முன்பான ஒரு முத்திரைத் தாள் வேண்டுமென்று கேட்கின்ற பொழுது அந்தத் தாள்களை அதிக விலைக்கு விற்று போர்ஜரி வழக்கு தாக்கல்செய்வதற்கு அவர்கள் உறுதுணை புரிகிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவ அவர்களே, ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும், எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. ஆசையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முத்திரைத் தாள் விற்கும் உரிமையை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, குறைந்த அல்லது ஒன்றிரண்டு நபர்களுக்குக் கொடுத்திருக்கின்ற காரணத்தினால் இத்தகைய சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே, அந்த வட்டார நிலைமையைக் கருதி, முத்திரைத்தாள் விற்கக் கூடிய உரிமையை அதிகமான நபர்களுக்கு வழங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, தேவைப்பட்டால் அந்தக் காரியத்தில் அரசு ஈடுபடும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள் தட்டுப்பாடாக இருக்கின்ற நேரத்தில் அதற்கான பணத்தைச் சார் பதிவாளர் அலுவலகத்தில் கட்டி விட்டுப் பதிவு செய்து கொள்வதற்கு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. அதுபோல, நீதிமன்றங்களிலும், சில சமயங்களில் ஸ்டாம்ப் பேப்பர்கள் கிடைப்பதில்லை. ஆகவே நீதிமன்றங்களில் கன்சர்ன்ட் கிளார்க் ஒருவரை அப்பாயின்ட் பண்ணி அவரிடம் பணம் கட்டி இரசீது வாங்கும் முறையில் முத்திரைத் தாளுக்கு உண்டான மாற்று ஏற்பாடுகளைச் செய்ய அரசுக்கு இயலுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, இது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆல்போன்ஸ் அவர்களின் அருமையான யோசனை. கவனிக்கப்படும்.

[1990 ஏப்ரல் 6

சேரன்மகாதேவி தொகுதியில் விட்டுமனைப் பட்டா.

*2055. திரு. பி. எச். பாண்டியன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் சேரன்மகாதேவி தொகுதியில் இதுவரை வழங்கப்பட்ட வீட்டு மனைப் பட்டா எவ்வளவு ?

(ஆ) நிலுவையில் உள்ள வீட்டுமனைப் பட்டாக்கள் எவ்வளவு ?

(இ) அப்பட்டாக்கள் எப்போது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே,

(அ) சேரன்மகாதேவி தொகுதியில் 1947 ஆம் ஆண்டு முதல் இதுவரை 4,628 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) நிலுவையில் உள்ள இனங்கள் 25.

(இ) பாப்பாங்குடி கிராமத்தில் புல எண் 259/1ஏ தீர்வை ஏற்படாத தரிசு நிலத்தை நத்தமாக மாற்றி 25 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொகுதி முழுவதும் சம்பந்தப்பட்ட கேள்வியாகும். அங்குள்ள ஜனத் தொகையில் கணிசமான அளவு ஆதி திராவிட மக்களும் வசிக்கிறார்கள், பிற்படுத்தப்பட்ட மக்களும் வசிக்கிறார்கள். குறிப்பாக நகரப் பஞ்சாயத்துகளில், பத்தமடை கிராமம், முக்கூடல் கிராமம், மேலச்சேவல் கிராமம் இதுபோன்ற கிராமங்களில் இன்னும் மனைப் பட்டாக்கள் வேண்டும் என்ற வேண்டுகோளைக் கொடுத்து இருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களிடத்தில் அந்த மனுக்களைக் கொடுத்து இருக்கின்றேன். அதை அமைச்சர் அவர்கள், இந்தக் கூட்டத்தொடர் முடிவதற்கு முன்பு, தொகுதி முழுவதும் உள்ள வேண்டுகோளை ஏற்று அவைக்கு ஒரு அறிக்கை தருவார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட கேள்வி சேரன்மாதேவியைப் பற்றியது. இங்கு வந்து உட்கார்ந்த இடத்தில் பல ஊர்களைப் பற்றிய செய்தி, தகவல்களை எனக்குத் தந்து, ஒரு அறிக்கை



1990 ஏப்ரல் 6]

தருமாறு கேட்டு இருக்கிறார்கள். நான் அறிக்கையைத் தருகிறேன். அவருக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக அவர் கேட்க விடுபட்டுப் போன துணைக் கேள்வி என்ற அளவிலே நான் சில தகவல்களை அவருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். சேரன்மாதேவி தொகுதியில் 1947 முதல் இதுவரை வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் 4,628. அதில் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டது 2,285: பழங்குடியினர் இல்லை: இதர வகுப்பினர் 2,334. பத்தமடையைப் பற்றி கேட்டார்கள். ஒரு குறிப்பை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். பத்தமடையில் சமீபத்தில் வழங்கப்பட்ட பட்டாக்கள் 80. 1988–89-ல் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாகள் 192. 1989–90-ல் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாகள் 89. பழங்குடியினருக்கு 3: 1988-89-ல் இல்லை. இதர வகுப்பினர்களுக்கு 1988–89-ல் வழங்கப்பட்டவை 425: 1989–90-ல் 122. 1988–89-ல் மொத்தம் வழங்கப்பட்டவை 620: 1989–90-ல் 211. நிலுவையில் உள்ள இனங்கள் 25. பாப்பாங்குடியைப் பற்றிச் சொன்னார்கள். பாப்பாங்குடி கிராமப் புல எண் 259/1ஏ தீர்வை ஏற்படாத தரிசு நிலத்தை நத்தமாக மாற்ற சேரன்மாதேவி துணை ஆட்சியாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது முடிந்ததும் 25 பேருக்குப் பட்டாக்கள வழங்கப்படும். திரு. பி.எச்.பாண்டியன் அவர்கள் கேள்வி எழுப்ப மாட்டார் என்று நம்புகிறேன்.

9-30 மணி

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, முக்கூடல் கிராமத்தில் டாக்டர் அம்பேத்கார் காலனிக்குத் தென்புறத்தில் குடியிருக்கக் கூடிய ஏழை அரிசன, பள்ளர், மலை சாதி, குறவர் மக்கள் இன்றைக்கும் கூட நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அந்த மனுக்களைத்தான் உங்களிடத்தில் கொடுத்தேன். ஆகவே, இன்னும் நிலுவையில் இருக்கக் கூடிய பட்டாக்கள்—இன்னும் சர்வே செய்து-இன்னும் பல பேருக்குப் பட்டா கிடைக்கிறது என்று கூடத் தெரியவில்லை. அப்படிப்பட்ட மக்களுடைய வேண்டுகோளை ஏற்று மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்கு முன்பு இந்த அவையில் இதுபோல ஒரு அறிக்கையை விவரமாகச் சொல்லுவார்களா என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்கள் இதுபோல 234 தொகுதிகளுக்கும் சொல்வார்களா என்று அனைவரும் அறிய விரும்புகிறார்கள். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்களின் இந்தக் கேள்விக்கு நான் ஆரம்பத்திலேயே பதில் சொல்லி விட்டேன். திருப்பியும் கேட்கிறார். என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டு நிற்கிறேன்.

[1990 ஏப்ரல் 6

## ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்.

*1867. திரு. கே. ரவி அருணன்:
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், சிவந்திபுரம் ஊராட்சி பகுதியில் சர்வே எண் 130/1-ல் அரசு புறம்போக்கு இடத்தில் அன்னை இந்திரா நினைவு குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் அதிகமுள்ள இடங்களில் மக்கட் தொகைக்கேற்ப ஊரக வளர்ச்சி முகமையினால் இடங்கள் தேர்வு செய்யப்பட்டு குடியிருப்பு வீடுகள் கட்டப்படுகின்றன. அரசிடம் செயற்குறிப்பேதும் இல்லை.

திரு. கே. ரவி அருணன் : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் ஆதி திராவிடர் குடியிருப்புகள் கட்டுவதற்காக மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அடிக்கல் நாட்டப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதாகச் சொல்லி அங்கே வீடு கட்ட தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த வழக்கின் விவரம் என்ன? அந்த வழக்கில் நீதிமன்றத் தடையை நீக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்ட நிலம் புல எண், 130/1-ல் 1986/87 ஆம் ஆண்டு ஆதி திராவிடர்களுக்கு 30 தொகுப்பு வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டது. ஆனால், அந்த இடம் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானது என்று நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற்றதால், அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. நீதிமன்றத் தடையாணை இன்னமும் நீக்கப்படவில்லை.

திரு. கே. ரவி அருணன் : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் ஆதிதிராவிட மக்கள் வசிக்கிறார்கள். அந்தப் பகுதியில் மின்சார வசதி, குடிதண்ணீர் வசதிகள் செய்யப்படவில்லை. அதைக் கருத்திற் கொண்டு, மின்சார வசதி, குடிதண்ணீர் வசதி அந்தப் பகுதிக்குச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, தனிவினா எழுப்பக் கோருகிறேன்.



1990 ஏப்ரல் 6]

## கிராமப் பஞ்சாயத்து நீதிமன்றங்கள்.

*5220. திரு. ப. முத்துசாமி :
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கிராமப் பகுதிகளில் ஏற்படும் நிலம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கிராமப் பஞ்சாயத்து நீதிமன்றங்கள் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ப. முத்துசாமி : தலைவர் அவர்களே, நீண்டகாலத்திற்கு முன்னால் தமிழகத்தில் கிராமப் பஞ்சாயத்துக்கள் நீதிமன்றங்களாக செயல்பட்டு வந்திருக்கின்றன. குறிப்பாக நிலம் சம்பந்தமான வாய்க்கால் தகராறு, வரப்பு தகராறு, கூலித் தகராறு சம்பந்தமான சிறு வழக்குகள்வின் வருபமாகி கடைசியில் கிரிமினல் வழக்குகளாகி, நீண்டகாலமாக முடிக்கப்படாமல் இருப்பதால் கிராமப் புறங்களில் விவசாயிகள் அந்த வழக்குகள் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையினாலே இப்படிச் சிறு வழக்குகளைக் கிராம அளவிலே முடிப்பதற்குக் கிராமப் பஞ்சாயத்து நீதிமன்றங்களைஅரசு ஏற்படுத்த இனியாவது முயற்சிக்குமா என நான் அறிய விரும்புகிறேன்.

9—10 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, சென்னை கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் 1950, பிரிவு 132-ன் படி ஊராட்சிகள் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளாக செயல்பட்டு வந்தன. ஊராட்சித் தலைவரும், ஊராட்சி துணைத் தலைவரும், ஊராட்சி மன்ற உறுப்பினர்களும், அந்த நீதிமன்றங்களிலே அலுவல் சார்புள்ள தலைவராகவும், துணைத் தலைவராகவும், உறுப்பினர்களாகவும் இருந்து வந்தார்கள். 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு, மேற்படி சட்டப் பிரிவு 191 (1) மற்றும் (2), இதன்படி ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் அமைக்கப்பட்ட பின்னர் அனைத்து ஊராட்சிகள், 1888ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராமக் கோர்ட்டு சட்டத்தின் பிரிவு 9(1)-ன்படியான காரியங்களுக்காக பஞ்சாயத்துக் கோர்ட்டுகளாக செயல்பட்டு வந்தது நிறுத்தப்பட்டுவிட்டது. அக்காலக் கட்டத்தில் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளில் நிலுவையில் இருந்த வழக்குகள் அனைத்தும், தமிழ்நாடு கிராமக் கோர்ட்டுகள் சட்டம் 1888 பிரிவு 9(1)-ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்கு மாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அவ்வாறன கோர்ட்டுகளை ஏற்படுத்தவில்லை என்றால்

[1990 ஏப்ரல் 6

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த முத்திரைத் தாள் விவகாரத்தைப் பற்றித் துணைச் சபாநாயகர் ரொம்ப நன்றாக அருமையாகச் சொன்னார். காரணம் என்ன என்பதைப் பற்றி, ரொம்ப வரவேற்கிறேன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கேள்வியைக் கேளுங்கள். அவர் நன்றாகச் சொன்னார் என்று பாராட்டும் விழா அப்புறம் நடத்துவோம்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: பாராட்ட வேண்டியதைப் பாராட்ட வேண்டியதுதானே. ஆகையினாலே, வாங்குகிறவன் இருந்தால் தானே விற்பவன் இருக்க. எப்படி இருக்கிறது என்றால், ஏதோ வசனம் சொல்வார்கள், அதாவது, என் வீட்டுப் பெண் பொல்லாதது, உன் வீட்டுப் பிள்ளையை அடக்கிக் கொள் என்று. அதுமாதிரி, வாங்குகிறவன் இருந்தால்தானே ஐயா விற்கிறவன் விற்கிறான். இலஞ்சம் கொடுக்கின்றவன் இருப்பதால்தானே வாங்குகிறவன் வாங்குகிறான்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா நேரத்தில் ''தத்துவங்கள்'' அனுமதிக்கப்பட மாட்டா.

9—35 மணி

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, வாங்குபவர்கள் யார் என்று கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, தீட்சிதர் அவர்கள் தத்துவம் பேசுகிறார் என்று சொன்ன காரணத்தால் சொல்கிறேன். குழப்ப நிலையில் இருந்துதான் தத்துவங்கள் பிறக்கும். (சிரிப்பு).

பட்டா வழங்குதல்.

*6305—திரு. பி. மாரப்பன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முகாசிப்பிடாரியூர் பஞ்சாயத்து பனங்காட்டில் சுமார் 40 ஆண்டுகளாகக் குடியிருப்போருக்கு, குடியிருக்கும் இடத்தை பட்டா கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே,



1990 ஏப்ரல் 6]

பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம், முகாசிப்பிடாரியூர் கிராமத்தில் புல எண் 710-2இல் உள்ள தோப்பு புறம்போக்கு நிலத்தை அதில் குடியிருக்கும் 47 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது சம்பந்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டு செயற்குறிப்புகள் மாவட்ட வருவாய் அலுவலரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, பனைமரங்கள் இருக்கிற காடுகளில் பனைமரம் ஏறுவதற்கு ஒருவருக்கு 2-சி பட்டா கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அந்த நிலம் வேறு ஒருவருக்கு இருக்கிறது, அல்லது அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. எனவே, பனை மரம் இருக்கிற இடங்களில் பட்டா வாங்கியவர்களுக்குச் சிக்கல் ஏற்படுகிறது. இது தமிழகம் முழுவதும் இருக்கிற நிலைமை. எனவே, யாருக்கு 2-சி பட்டா பனைமரம் ஏறுவதற்கு உரிமம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அவர்களுக்கே அந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க அரசு நடவடிக்கையெடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு யோசிக்கும்.

திரு. வி. தம்புசாமி : தலைவர் அவர்களே, நீண்டகாலமாக புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு இன்னமும் பட்டா கிடைக்கவில்லை. அதனால் வீடு கட்ட அரசு கடனோ.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது காங்கேயம் தொகுதி பனங்காட்டைப் பற்றியது. அடுத்து திரு. சி. கோவிந்தசாமி திருப்பூரில் ஏதாவது பனங்காடு இருக்கிறதா ? (சிரிப்பு).

திரு. சி. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, அந்த பனங்காட்டைப் பற்றியே கேட்கிறேன். சுமார் 40 ஆண்டுக் காலமாக அங்கேகுடியிருந்து வருவதாகக்கேள்வியில் எழுப்பப்பட்டிருக்கிறது. பட்டா வழங்குவதில் தோப்பு புறம்போக்கு என்பதால் நத்தமாக மாற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறதா ? அப்படியென்றால், எவ்வளவு ஆண்டுகள் என்று எல்லை இல்லாமல் 40 ஆண்டுகள், 30 ஆண்டுகள் என்று நீடிக்கிறதே, இதை ஒரு முடிவிற்குக் கொண்டு வருவதற்குக் காலவரையறை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல்குறிப்பிட்ட சட்டப் பிரிவு 7-ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட கிராம முன்சீப் கோர்ட்டுகளுக்கு மாற்றப்பட வேண்டும் என அப்போது ஆணையிடப்பட்டது. ஆனால், கிராம முன்சீப் கோர்ட்டுகளோ, அல்லது பஞ்சாயத்து நீதிமன்றங்களோ இது வரையில் ஏற்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிலம் தொடர்பான பிரச்சினையைத் தீர்க்கும் பணிகளை தற்போது மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் செய்து வருகின்றன.

திரு. ப. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதுபோன்ற கிராமப் பகுதிகளிலே ஏற்படுகின்ற வழக்குகளுக்கு கிராம அளவில் தீர்க்கக்கூடிய முறையை ஏற்படுத்தினாலொழிய அந்த வழக்குகள் நீண்டகாலம் நிலுவையில் இருந்து தீர்க்கப்படாமல் பெரும் அவதிக்கு ஆளாகக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையினாலே இனிமேலாவது பரிசீலித்து கிராம அளவிலே ஏற்படக்கூடிய சிறிய வழக்குகளை அங்கேயே தீர்க்கக்கூடிய ஒரு நல்ல முறையை இந்த அரசு ஏற்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே அரசியல் தலையீடு அதிகமாக ஏற்பட்ட காரணத்தால், ஏற்கெனவே இப்படி நடந்துவிட்ட நிலையில், ஏற்கெனவே நடந்துகொண்டு வந்து வழக்குகளின் நிலையில் ஆங்காங்கு உள் கோஷங்கள் ஏற்பட்டு ஊராட்சி மன்றங்களும் இரண்டு மூன்றாகப் பிரிந்து அந்தக் காரணத்தால் அந்த மன்ற நடவடிக்கைகூட தடைப்படுகின்றநிலை ஏற்பட்டதால்தான், அது இப்படி நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது என்று நான் அறிகிறேன். உள்ளபடியே மன்றம் பரிசீலிக்க வேண்டிய நிலை வந்தால், அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

பேரூராட்சிகளுக்கு நிதி ஈடு.

*6524. திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள ஊதிய உயர்வினால் கூடுதல் செலவினை எதிர்நோக்கியுள்ள பேரூராட்சிகளுக்கு நிதி ஈடு செய்ய அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகளின் நிதி நிலையைப் பெருக்குவதற்காக ஆலோசனை கூறும் பொருட்டு, அரசு திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களை தலைவராக கொண்ட வல்லுநர் குழு ஒன்றினை அமைத்துள்ளது. இக் குழு





பேரூராட்சிப் பணியாளர்களின் சம்பள செலவினத்தை அரசு ஏற்பது குறித்து பரிசீலிக்கக்கூடும் என்று கருதுகிறேன். மேற்படி வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லுநர் குழுவினுடைய அறிக்கை என்றைக்கு வரும், அது எப்போது அமல்படுத்தப்படும் என்பதெல்லாம் ஒருபுறம் இருக்க, இடைக்கால நிவாரணமாக, அரசு எவ்வளவோ நல்ல மனதுடன் அரசு ஊழியர்களாக, உள்ளாட்சி நிறுவனத்திலே இருப்பவர்களை, அதுவும் பேரூராட்சி நிர்வாகத்திலே இருப்பவர்களை ஏற்றிருக்கிறது. ஊதிய உயர்வும் தந்திருக்கிறது. அந்த இக்கட்டுகளை சமாளிக்க முடியாமல் Self Generating Funds இல்லாமல் அந்தப் பேரூராட்சிகள் தத்தளித்துக் கொண்டு இருக்கிற நேரத்தில், ஒரு இடைக்கால நிவாரணமாக— குறைந்தது பஞ்சப்படியையாவது, ரிலீஸ் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, ஒரு காரியத்திற்காக ஒரு குழுவை அமைத்துவிட்டு, அதற்குப் பிறகு இடையிலே குழுவினுடைய முடிவு தெரியாத வரையில், அப்படிச் செய்வது நியாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): தலைவர் அவர்களே, பேரூராட்சியில் பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கு, மாதா மாதம் சம்பளம் வழங்க முடியாத நிலையில் சில பேரூராட்சிகள் இருக்கின்றன. அத்தகைய பேரூராட்சிகள் வளர்ச்சிப் பணிகளில் கூட ஈடுபட முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில் தமிழக அரசு அந்தப் பேரூராட்சிகளை கலைக்கின்ற திட்டம் ஏதாவது உண்டா ? அல்லது பேரூராட்சிகளுக்கு வருமானத்தைப் பெருக்குகின்ற வழிவகைகள் அரசு மூலமாக காணப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, செலவு அதிகமாகிறது. அதிலும் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியவில்லை என்பதற்காக எந்தப் பேரூராட்சி மன்றமும் நிச்சயமாக கலைக்கப்படமாட்டாது. ஆனால் அப்படி ஒரு சங்கடமான சூழ்நிலை ஏற்படும்போது, அப்படி அலுவலர்கள் சம்பளம் பெறாமல் கஷ்டநிலைக்கு வருவார்களானால், குழுவின் பரிந்துரை கிடைப்பதற்கு தாமதம் ஆகுமானால், அதைப்பற்றி ஒரு இடைக்காலமாக அப்போது யோசிக்கலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### கூட்டுறவு ஊழியர்களுக்கு பஞ்சப்படி.

*5060. திரு. சு. குருநாதன் :
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தொழிற்தாவா சட்டம் 113 விதியின்படி தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதிய உத்தரவை ரத்து செய்து அரசு ஊழியர்களுக்கு வழங்குவதுபோல கூட்டுறவு ஊழியர்களுக்கு பஞ்சப்படி வழங்கும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை. கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் ஊதியம் மற்றும் படிகள் அந்தந்த சங்கங்களின் நிதி நிலையைப் பொறுத்து நிர்ணயம் செய்யப்படுகிறது.

### மையத் தொகுப்பில் இருந்து வழங்கப்பட்ட அரிசி, கோதுமை, பாமாயில்.

* 7055 பேராசிரியர் க. பொன்னுசாமி :
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1989 ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் முடிய மைய அரசு மாநிலத்திற்கு மையத் தொகுப்பில் இருந்து மாதம் வாரியாக வழங்கிய அரிசி, கோதுமை, பாமாயில் அளவு எவ்வளவு ?

(ஆ) மையத் தொகுப்பில் ஒதுக்கியதில் மாநில அரசு பெற்றுக் கொண்ட அரிசி, கோதுமை, பாமாயில் அளவு எவ்வளவு ?

(இ) கூடுதலாகப் பெற மாநில அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை விவரம் என்ன ?

9-45 மணி

மாண்புமிகு திரு. பொன், முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : 1989 ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் முடிய, மைய அரசு இம்மாநிலத்திற்கு மத்தியத் தொகுப்பிலிருந்து 4,25,000 டன் அரிசி ஒதுக்கியதில், 4,22,827 டன் அரிசியை, இம்மாநில அரசு எடுத்துள்ளது. இதே கால



அளவில் 2,73,000 டன் கோதுமை ஒதுக்கியதில், 1,66,797 டன் எடுக்கப்பட்டுள்ளது. மத்திய ஒதுக்கீடான 20,500 டன் சமையல் எண்ணை— பாமாயில், முழுமையாக எடுக்கப்பட்டது.

(இ) கடிதங்கள் மற்றும் தொலையச்சு செய்திகள் மூலம் கூடுதலாக அரிசி மற்றும் பாமாயில் ஒதுக்கீடு செய்யும்படி, மாநில அரசு, மைய அரசை பலமுறை வலியுறுத்தியுள்ளது. வலியுறுத்திக் கொண்டிருக்கிறது.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எனது கேள்வியை சரியாகக் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். கேள்வி, மாதம் வாரியாக எவ்வளவு என்பது. மொத்தமாகக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், இன்று நியாய விலைக் கடைகளில் பெரும்பாலான கடைகளில், கிராமப்புறங்களில், 2 ரூபாய் அரிசி இல்லையென்று சொல்லி, ரூ. 3-50-அரிசி மட்டும்தான் இருக்கிறது என்று சொல்லி, அதிலும் போக்குவரத்துச் செலவுக்காக என்று 5 பைசா, 10 பைசா சர்சார்ச் போலவும் வசூலிக்கிறார்களே ..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாக்கள், குற்றச்சாட்டுக்களாக இருக்கக்கூடாது. பேராசிரியர் நன்றாக அறிய வேண்டும். செய்திக்கு வரவேண்டும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி ; இதை அரசு அறியுமா ? இதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படி, நான் பதிலளிக்க வேண்டுமேயானால் காலத்தைக் குறைப்பதற்காகத்தான்மொத்தமான அளவினைக் குறிப்பிட்டேன். மாத வாரியாக அரிசியினுடைய அளவைத் தெரிவிக்க வேண்டுமேயானால், ஜனவரி மாதம், 1989 ஆம் ஆண்டு, 1,05,000 டன் ; பிப்ரவரி மாதம், 40,000 டன் : மார்ச் மாதம் 40,000 டன் ; ஏப்ரல் மாதம்—40,000 டன் : மே மாதம்—40,000 டன் ; ஜூன் மாதம்—40,000 டன் ஜூலை மாதம்—40,000 டன் ; ஆகஸ்டு மாதம்—40,000 டன், செப்டம்பர் மாதம்—40,000 டன்; அதே போல் கோதுமை, ஜனவரி—30,000 டன் : பிப்ரவரி—31,500 டன் ; மார்ச்—31,500 டன் : ஏப்ரல்—30,000 டன் , மே—30,000 டன் , ஜூன்—30,000 டன் : ஜூலை—30,000 டன் : ஆகஸ்டு—30,000 டன் : செப்டம்பர்—30,000 டன்; ஆக, 2,73,000; டன் கோதுமை. அதேபோல், பாமாயில், ஜனவரி—6,300 டன்: பிப்ரவரி—3,600 டன்; மார்ச்—3,600 டன் ; ஏப்ரல்—1,000 டன்; மே—1,000 டன்; ஜூன்—1,000 டன் : ஜூலை

—1,500 டன் : ஆகஸ்டு—1,250 டன் : செப்டம்பர்—1,250 டன் : ஆக, 20,500 டன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மோட்டா ரக அரிசி—2 ரூபாய் அரிசி, கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். 2 ரூபாய் அரிசி என்பது மோட்டா ரகம். அது, விளைச்சலிலே, தமிழகத்திலே, குறைவாக இருக்கின்ற காரணத்தால், ஆந்திராவிலே அல்லது மத்தியத் தொகுப்பிலிருந்து வாங்குகின்ற நேரத்தில், மோட்டா ரக அரிசியை அவர்கள் அனுப்புவது இல்லை. இங்கே விளைவது கூட, ஹை கிரேட் வெரைட்டி—விளைகின்ற காரணத்தால், அவைகள் எல்லாம் சன்னம், மிக சன்னமான அரிசியாகத்தான் நமக்கு கிடைக்கிறது. இருக்கின்ற மோட்டா ரக அரிசி, பரவலாக தமிழ்நாடு முழுவதிலும் கொடுக்கப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அவர்கள் ஏதோ அரிசியை கூடுதலான விலையில் வாங்குவதாகத் தெரிவித்தார்கள். குறிப்பிட்டு, கடையில் எங்கே வாங்கப்படுகிறது என்று தெரிவிப்பார்களேயானால், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

9.50 மணி

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே ஆட்சி மாறினால் பாமாயில் அதிகமாக வரும் என்று இந்த அரசு சொல்லியிருந்தது. ஆட்சி மாற்றத்திற்குப்பின்னாலும் பல்வேறு கிராமப்புற நியாய விலைக் கடைகளில் பாமாயிலைப் பார்த்தே பல நாட்கள் ஆகி விட்டன என்று மக்கள் சொல்லுகிற நிலை இருப்பதை அரசு அறியுமா? அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா? கிராமப்புற மக்களுக்கு பாமாயில் உடனே அதிக அளவில் வழங்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; ஆட்சி மாற்றத்தின் காரணமாக அதிகமான ஒதுக்கீட்டை அரிசியிலும் பாமாயிலிலும் நாம் பெற்று இருக்கிறோம் என்பது உண்மை. டிசம்பர் மாதத்தில் நம்முடைய துணைப்பிரதமர் தமிழ்நாட்டுக்கு வருகை தந்தபோது 90 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசியை வழங்கினார்கள். ஏற்கெனவே 40 ஆயிரம் தான் கொடுக்கப்பட்டு வந்தது. அதை 90 ஆயிரமாக மாற்றி கொடுத்திருக்கிறார்கள். அது போல மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் டெல்லிக்கு சென்ற நேரத்திலே 50 ஆயிரம் டன் அரிசியிலே இருந்து 55 ஆயிரம் டன்னாக உயர்த்தி தந்தார்கள். அதற்குப் பின்னாலே நான் டெல்லிக்குச் சென்றபோது 55 ஆயிரத்தை 60 ஆயிரமாக உயர்த்தி வந்திருக்கிறோம். அதற்கு பின்னாலே நம்முடைய மத்திய உணவு அமைச்சர் தமிழகத்திற்கு வருகை தந்தபோது. அவர்களோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தி 60 ஆயிரத்திலிருந்து 75 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயர்த்தியிருக்கிறோம்.



அதைக் கூட அவையிலே அறிக்கை மூலமாக அன்றைக்கு தாக்கல் செய்தேன். அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் பொன்னுசாமி அவர்கள் எங்கே இருந்தார் என்பது தெரியவில்லை. இதே போன்று பாமாயிலும் 1,500 மெட்ரிக்டன்னிலேயிருந்து 1,250 ஆக குறைக்கப்பட்டது. பின்னாலே 2,100 மெட்ரிக் டன் இன்றைக்கு உயர்த்தி தரப்பட்டிருக்கிறது. பாமாயில் குறைவாக வருவதற்கு காரணம் பாமாயிலை இறக்குமதி செய்வதிலே ஏற்பட்டுள்ள அன்னியச் செலாவணி தொடர்பான சங்கடங்களை அல்லாமல் வேறு ஏதும் அல்ல என்பதையும் குறிப்பிட்டு தெரிவிக்க விரும்புகிறேன். கோதுமையை வேண்டுமென்ற அளவுக்கு மத்திய அரசு கொடுக்கிறது. ஆனால் மக்களுக்கு அதை வாங்கி சாப்பிடக்கூடிய மன நிலை இல்லாத காரணத்தால் ஒதுக்கப்பட்ட கோதுமையைக் கூட முழுவதுமாக எடுக்க முடியாத சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். எனவே ஆட்சிமாற்றம் என்பது கணிசமான நன்மையை தமிழகத்திற்கும் தமிழக மக்களுக்கும் வழங்கியிருக்கிறது. என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

### வேளாண்மை அலுவலர்கட்கு நிர்வாகம் மற்றும் நிதி அதிகாரம்

*வினா 3331.ஏஏ—திரு. ந. சௌந்திரபாண்டியன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேளாண்மை அலுவலர்கட்கு வட்டார வளர்ச்சி அலுவலர்களைப் போன்று நிர்வாகம் மற்றும் நிதி அதிகாரங்கள் வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ந. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டில் மழை குறைவாக இருப்பதாலும், நிலத்தடிநீர் குறைந்ததாலும், கரும்பு, வாழை போன்ற பணப் பயிர்களை விவசாயிகள் பயிரிடச் சென்று விடுவதால் நெல் உற்பத்தி செய்யப்படும் பரப்பளவு குறைந்ததாலும் அரிசி உற்பத்தியை சரியான நிலையில் விளைவிக்க விவசாயிகளுக்கு தொழில் நுட்பம் மூலமாக பெருக்கி, பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஈடு கொடுத்து உணவு நிலையை பெருக்கி வருகிறது விவசாயத் துறை. அப்படிபட்ட விவசாயத்துறையில் வேளாண்மை வளர்ச்சி அலுவலகங்கள் ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது உள்ளன. விவசாயிகள் காய்கறி விதைகள் வேண்டுமென்று அங்கு சென்று கேட்டால்

அதற்கு தோட்டக் கலை துறையை கேளுங்கள் என்று பதில் கூறுகிறார்கள். மேலும் அவர்களிடம் தென்னங்கன்றுகள் வேண்டுமென்று விவசாயிகள் கேட்டால் எண்ணெய் வித்துத் துறையை கேளுங்கள் என்று கூறுகிறார்கள். எனவே விவசாயிகள் சிரமப்படுகிற நிலை தற்போது இருக்கிறது. எனவே அனைத்தும் வேளாண்மை வளர்ச்சி அலுவலகத்திலே கேட்டு தெரிந்து கொள்ளும் வகையில் அனைத்துப் பொருட்களும் அவர்களே கொடுப்பதற்கு அரசு வழி வகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனிமேல் கேள்விகளுக்கு இடமும் இல்லை என்று கருதுகிறேன்.

பாசன வசதி.

* 7262. திரு. எஸ். டி. உகம்சந்த்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பாசன ஏரி, குளங்களில் தண்ணீர் கிடைக்காத நேரத்தில் ஏரி, குளங்களின் மத்தியில் அரசு குழாய் கிணறுகளை நிறுவி மோட்டார் பம்பு செட்டு அமைத்து பாசன வசதி அளிக்க முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; ஆண்டுதோறும் மழையின் அளவானது குறைந்து கொண்டே வருகிற இந்தச் சூழ்நிலையில் ஏரிப் பாசனத்தை மட்டும் நம்பி வாழ்ந்துக் கொண்டிருக்கிற விவசாய மக்களுக்கு அவர்களுடைய பயிரை பாதுகாக்க இதுபோன்று ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று முன் இதே மன்றத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முன்பு குழாய்க் கிணறு வாரியத்தின் மூலமாக ஆதி திராவிட மக்களுக்கு இதே போன்று பாசன வசதிகளை



தென்னாற்காடு, செங்கை அண்ணா, தஞ்சாவூர், இராமநாதபுரம் மாவட்டங்களில் செய்வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதற்கான ஒப்புதலும் அளிக்கப்பட்டு செலவும் செய்யப்பட்டிருக்கிறது. சூழ்நிலை காவிரி வறண்டு வருகிற இந்தச் சூழ்நிலையில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விரிவுரையில் இறங்கக் கூடாது. வினாவாகக் கேட்டால்தான் இனிமேல் அனுமதிப்பேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: அரசே அதை மறுபரிசீலனை செய்து விவசாயிகளை வாழ்விக்க இந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

9-55 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ், இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன், காமராசர் ஆகிய மாவட்டங்களில் சில இடங்களில் பாசன ஏரி, குளங்களில் சமுதாய குழாய் கிணறுகள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால் இவ்வாறான ஆழ் குழாய் கிணறுகள் அமைக்க மத்திய அரசு அனுமதிக்காததால் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ், 1988-89 ஆம் ஆண்டு முதல் சமுதாய குழாய் கிணறுகளுக்குப் பதிலாக, திறந்த வெளிக் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; இன்றைக்கு காவிரி பிரச்சினையானது நீண்டு கொண்டு வருகின்றது. ஒரு நல்ல முடிவு ஏற்படும் என்ற இந்தச் சூழ்நிலையில் அந்தப் பகுதியில் வாழ்கின்ற விவசாயப் பெரு மக்களுக்கு ஊற்று நீர் மிக அதிகமாகக் கிடைக்கின்ற சூழ்நிலையில் அந்தப் பகுதியிலே இது போன்ற திட்டத்தை அரசு செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் மூலக் கேள்வி கேட்டது ஏரியில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து பாசன வசதியை அளிக்க முடியுமா என்று. அதற்கான விளக்கத்தைத் தந்தேன். ஆனால் ஏரியிலே எல்லா இடங்களிலும் தண்ணீர் இருக்கும் என்று நாம் எதிர் பார்க்க முடியாது. மழைக் காலங்களில் பரவலாக பல்வேறு பகுதிகளில் ஏரிகளிலே தண்ணீர் நிற்கிறது. ஆகவே, ஏரியிலே ஊற்று இருக்கின்றது என்று கருத இடம் இல்லை.

[1990 ஏப்ரல் 6

## திருமயம் தொகுதியில் தொழிற்சாலை அமைத்தல்.

*1687—திரு. ஆலவயல் சுப்பையா :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியைச் சார்ந்த ராயவரம், செங்கீரை பகுதிகளில் கிடைக்கும் சிவப்பு, மஞ்சள், நீல ஸ்படிக கற்களைக் கொண்டு (Paints) மற்றும் வீடுகட்ட வேண்டிய கலைப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருமயம் தொகுதியைச் சார்ந்த ராயவரம், செங்கீரைப் பகுதிகளில் கிடைக்கும் சிவப்பு மற்றும் மஞ்சள் வண்ணக் கற்களின் அமைப்புகள் பெயின்ட் செய்வதற்குப் போதுமானதாக இல்லை. அந்தப் பகுதியில் முறையே 9 ஆயிரம் மற்றும் 6 ஆயிரம் டன் வண்ணக்களிமண் இருப்பளவு உள்ளதென கணக்கிடப்பட்டுள்ளது.

இக்களிமண்ணில் மண் துகிள்கள் மற்றும் குறைந்த அளவு இரும்புச்சத்துமே இருப்பதன் காரணமாக பெயின்ட் உற்பத்திக்கு அதை பயன்படுத்த இயலாது.

திரு. ஆலவயல் சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் தொகுதி மிகவும் பின் தங்கிய தொகுதி, ராயவரம், செங்கீரை பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் மிகவும் நலிவுற்ற மக்கள், அந்தப் பகுதியைப் பற்றி மீண்டும் ஆய்வு செய்து, அரசு ஏதேனும் ஒரு தொழிற்சாலையை இந்த ஆண்டு அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, அந்தப் வண்ணக் களிமண்கள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு, பரிசோதனையின் முடிவில் அது பெயின்ட் தயார் செய்வதற்குத் தகுதியானது அல்ல என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் களிமண்கள் மிகக் குறைந்த அளவே அந்தப் பகுதியில் இருப்பதன் காரணமாக, அந்தக் குறைந்த அளவை நம்பி அங்கே ஒரு தொழிலைத் தொடங்குவதென்பது இயலாத காரியம் என்பதன் காரணமாகத் தான் அரசு அந்தத் திட்டத்தைக் கைவிட்டு இருக்கிறது. அந்தக் களிமண்ணை அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் வீடுகளுக்கு வண்ணம் பூசுவதற்காகப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.



1990 ஏப்ரல் 6]

## கலப்புமணத் தம்பதிகளுக்கு வேலைவாய்ப்பு.

*2113—திரு. கே. ஆர். ஜி. தனபாலன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கலப்பு மணத் தம்பதிகளுக்கு கல்வி மற்றும் அரசுத் துறை வேலை வாய்ப்புகளில் சிறப்பு ஒதுக்கீடு செய்து தரப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ; மாண்புமிகு தலைவர் அவர்களே,

கலப்புத் திருமண தம்பதியரின் குழந்தைகளுக்கு மருத்துவம், பொறியியல் போன்றவற்றில் சேர்ந்து பயில இட ஒதுக்கீடு செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ள கலப்பு மணத் தம்பதியர்களுக்கு அங்கிருந்து அரசு வேலைகளுக்கு பட்டியல் அனுப்பி வைக்கப்படும் போது, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணத்தை ஊக்கப்படுத்தும் இந்த அரசு, உடல் ஊனமுற்றவர்களுக்கு கல்வியிலும், வேலைவாய்ப்புகளிலும் 3 சதவிகிதம் இட ஒதுக்கீடு அனுமதித்தது போல, கலப்புத் திருமணம் செய்கின்றவர்களுடைய குழந்தைகளுக்கு கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு வேலைவாய்ப்புகளில் சிறப்பு ஒதுக்கீடு அளிக்க இதுவரை ஆணை எதும் பிறப்பிக்கப்படவில்லை. இது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சமுதாய நலக்கூடம் ஆக்கிரமிப்பு

6519. திரு. ஏ. தங்கராஜு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமாரியில் 1956 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட சமுதாய நலக்கூடத்தை தனியார் ஒருவர் ஆக்கிரமித்திருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்பு செய்தவர் அவ்விடத்திலிருந்து வெளியேற்றப்பட்டு அவரால் கட்டப்பட்ட உணவு விடுதியும் நகரியத்தால் அகற்றப்பட்டது. வேறொரு இடத்தில் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்காக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு எதிர்பார்க்கப்படுகிறது.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. ஏ. தங்கராஜு : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அரசுக்குச் சாதகமாக இருப்பது உண்மைதானா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் சாதகமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. தங்கராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இருந்தும் அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் தனது அறிக்கையில் மேற்குறிப்பிட்ட மாற்று இடத்தில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு திருத்தப்பட்ட வரைப்படம், மதிப்பீடுகள் தயார் செய்து அனுப்பி வைக்குமாறு கோரியிருக்கிறார்கள். திருநெல்வேலி தாடகோ செயற்பொறியாளர் அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றதும் அரசு விரைவில் அதுபற்றி ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## துறையூர் நகருக்கு காவேரியிலிருந்து குடிநீர்

*546. திரு. ஆர். மூக்கன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, துறையூர் நகருக்கு காவேரியிலிருந்து குடிநீர் கொடுக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?





(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) துறையூர் நகராட்சி மற்றும் உப்பிலியாபுரம், மேட்டுப்பாளையம், தாத்தையங்கார்பேட்டை, பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சிகள் மற்றும் 94 வழியோரக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க ஒரு கூட்டுக்குடிநீர்த் திட்டம் தயாரிப்பது பற்றி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் அளித்த பின்னர், திட்டப்பணிகள் தொடங்கப்படும்.

திரு. ஆர். மூக்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டம் எந்த ஆண்டு எப்போது நிறைவேற்றப்படும்? அந்தத் திடடத்தின் மூலம் எவ்வளவு பேர் பயன்பெறுகிறார்கள்? அந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு; வழியோரத்தில் எத்தனை நகரங்கள், கிராமங்களுக்குள் குடிநீர் வழங்கத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது? நபர் ஒருவருக்கு ஆகும் செலவு எவ்வளவு? ஆண்டுக்கு இதைப் பராமரிப்பதற்கு எவ்வளவு செலவு என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் விளைவாக ஏறத்தாழ 94 வழியோரக் கிராமங்களுக்குப் பயன் கிடைக்கும் என முன்பு சொன்னேன். மேலும் இந்தத் திட்டத்தின் தோராய மதிப்பீடு ரூபாய் 1064.50 லட்சம் ஆகும். மேலும் இந்தத் திட்டத்தின் மூலமாக துறையூர் நகராட்சியில் 40 ஆயிரம் மக்களும், தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சியில் 15,566 மக்களும், மேட்டுப்பாளையம் பேரூராட்சியில் 10,920 மக்களும், பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சியில் 14,500 மக்களும், உப்பிலியாபுரம் பேரூராட்சியில் 15,000 மக்களும், வழியோரத்தில் 1 லட்சத்து 86 ஆயிரத்து 806 மக்களும் பயனடைந்து கொண்டு இருக்கிறார்கள். நபர் ஒன்றுக்கு இதன் மூலமாக ரூபாய் 481 செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் இருக்கிறது. அரசின் அனுமதிக்குப் பிறகு இது துவக்கப்படும் என்பதை முன்பு சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்துதல்

*1716. திரு. எம். சிரங்கன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூரில் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் குடிநீர் திட்டத்தை கொளத்தூர் யூனியன் முழுவதும் விரிவுபடுத்தி குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம். எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

திரு. எம். சீரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக சுமார் 58 லட்ச ரூபாய் செலவில் கொளத்தூர் திட்டம் நிறைவேற்றப்பட்டு அதன் மூலம் 40 வழியோரக் கிராமங்களுக்கு தண்ணீர் வழங்கப் படும் என்று திட்டம் போடப்பட்டு அது செயல்பட்டுக்கொண்டிருக் கிறது முழுமையாக முன்பு அது பயன்படுத்தப்படவில்லை என் பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு அரசிடம் குறிப்பு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு உருவாக்கப் பட்ட கொளத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக 41 கிராமங்கள் பயன் பெறுவதாக அரசின் குறிப்பு இருக்கிறது. அது அன்றி மேலும் 29 குடியிருப்புகளுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிற அந்த ஒன்றியத்தில் குடிநீர் வசதி கொடுக்கவேண்டிய நிலை இருக்கிறது. அந்த 29 இடங்களுக்குக் குடிநீர் வசதியைச் செய்து தரும் முயற்சியை இந்த அரசு மேற் கொண்டிருக்கிறது, கொடுக்கப்படுகின்ற இந்த 41 இடங்களில் ஏதேனும் குறை இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால் அதை நிவர்த்தி செய்வதற்கு குடிநீர் வடிகால் வாரியம் முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-05 மணி

திரு. எம். சீரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் இப்போது முழுமையாகத் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று சொல் கிறார்கள். காரணம், கரண்ட் முழுமையாகப் பயன்படுத்த முடி யாமல் ஃபீடர் லைனில் கோளாறு இருக்கிறது என்று சொல் கிறார்கள். அந்த ஃபீடர் லைன் அமைப்பதற்காக ஏற்கெனவே அரசால் திட்டம் போடப்பட்டு 5 இலட்சம் ரூபாய் ஒதுக்குவதற் காக எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணத்தை



யார் கட்டுவது என்ற காரணத்தில் அந்தத் திட்டம் அப்படியே இருக்கிறது. அந்தப் பணத்தைக் கட்டுவதன் மூலம், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கும். இப்போது பல கிராமங்களில் அமைக்கப் பட்டிருக்கும்படியான அந்தப் பைப்புகள் குறிப்பாக, செட்டிப் பட்டி, கோட்டூர் போன்ற பகுதிகளிலே தண்ணீர் போகாத காரணத்தால் மக்களுக்குப் பயன் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை விரைந்து நிறைவேற்றுவதற்கு அரசு நட வடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகா மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடை பெறுகிற திட்டங்களிலே இருக்கிற குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான், இந்தச் சட்ட மன்றம் நடைபெறுகின்ற நாட்களில் ஒவ்வொரு நாளும் மாலை 4 மணியிலிருந்து 9 மணி வரையில் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளும் அந்தந்த மாவட் டத்தைச் சார்ந்த குடிநீர் வாரியத் தலைமைப் பொறியாளர், மேற்பார்வைப் பொறியாளர், நிர்வாகப் பொறியாளர், ஆகி யோரை அழைத்து வைத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் நேருக்கு நேராக அவர்களுடைய பிரச்சினைகளைச் சொல்லி, விவாதித்து அதற்கான முடிவுகளை எடுப்பதற்குக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இதுவரை ஏறத்தாழ 7 மாவட்டங்களில் இது போன்ற பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு அதற்கான முடிவுகளை எப்படி எடுப்பது என்று ஆய்வுகள் எல்லாம் செய்யப்பட்டிரு கின்றன. உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கருத்துக்களை அவருடைய மாவட்டம்பற்றி நடைபெறும் கலந்துரையாடலில் சொன்னால் அதற்கான ஏற்பாடுகளை, குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளும் அரசும் உடனடியாகச் செய்யும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

### தென்கரை ஊராட்சிக்கான குடிநீர்த் திட்டம்

*4210. திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குருந்தங்கோடு ஒன்றியம், தென்கரை ஊராட்சிக்கான குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறதா?

(ஆ) இல்லை எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கோட்டவிளை மற்றும் ஆறு குடியிருப்புகளுக்குத் திறந்த வெளிக் கிணற்றினை குடிநீர் ஆதாரமாகக்கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப்பட்டது. மேற்கண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் தோப்பு மற்றும் தென்கரை குடியிருப்புகளும் பயன் பெறும் வகையில் திட்டமிடப்பட்டது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகள் முடிக்கப்பெற்று ஊராட்சியில் பராமரிப்பிற்காக 15—11—1984-ல் ஒப்படைக்கப்பட்டது. எனினும், குடிநீர் ஆதாரமான திறந்த வெளிக் கிணற்றில் கோட்டவிளை, பிராந்தன சேரி, புன்னவிளை, ஆளூர் மற்றும் சுங்கான்கடை ஆகிய ஐந்து குடியிருப்புகளுக்கு மட்டுமே நீர் வழங்குமளவிற்கு கிணற்றின் கொடுதிறன் இருந்ததால், இத்திட்டத்தின் கடைநிலைப் பகுதியி லுள்ள தோப்பு மற்றும் தென்கரை குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க இயலவில்லை.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்கரை ஊராட்சியில் 6 ஆண்டுகளுக்கு முன்பே குடிநீர் மேல்நிலைத் தண்ணீர் தொட்டி கட்டப்பட்டு, கடந்த 6 ஆண்டுகாலமாக அந்தப் பகுதியிலே வாழுகின்றமக்கள் தண்ணீர்த் தொட்டியை தாகத்தோடு பார்த்துக்கொண்டே காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, விரைவிலே அந்தத் தொட்டியில் நீர் நிரப்பப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்குக் குடி தண்ணீர் விநியோகம் செய்யப்படுகின்ற வகையில், துரித நட வடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசால் இதுபோன்ற குடிநீர் தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டு, அதற்கு நீர் ஆதாரம் இல்லாத இடங்களை முன்னுரிமை எடுத்துக் கொண்டு அதை வேகப்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்கரை ஊராட்சிப் பகுதியில் ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற தென்கரை பகுதி இந்தத் திட்டத்தோடு இணைக்கப் படாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே, இந்தக் குடி நீர்த்திட்டம் அமலாக்கப்படும்போது, ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற தென்கரை உள்ளிட்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினருடைய கருத்தினை இந்த அரசு நிச்சயமாகக் கருத்திலே கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் —விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு ; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால்; அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

### 3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. எஸ். ஆர். இராதா : ** * * * * *

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

### 4. கவன ஈர்ப்பு

(அ) சென்னையில் சிறு தொழில்களுக்காகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் குடியிருப்புகளாகப் பயன்படுத்தப்படுவதால் சிறு தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அடுத்ததாக, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்த கவன ஈர்ப்பு. திரு. செங்கை சிவம் அவர்கள் மாண்புமிகு சமூக நலன் —ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருவார்.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையில் சிறு தொழிலுக்காகக் கட்டப்பட்ட கட்டிடங்களைப் பலர் குடியிருப்பதற்கு உபயோகப்படுத்தி வருவ தால் சிறுதொழில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலன்—ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற் குக் கொண்டு வருகிறேன். ** (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

[திருமதி. சுப்புலட்சுமி செகதீசன்] [1990 ஏப்ரல் 6

அறிக்கை

தொழில் வணிக இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள தொழிற்பேட்டைகளைப் பொறுத்தவரை சென்னைக்கு அருகில் அடையாறு மற்றும் பெருங்குடியில் இரண்டு தொழிற் பேட்டைகள் உள்ளன. இவை மின்சாரம் மற்றும் மின்னணு தொழில் நிலையங்கள் அமைப்பதற்குரிய தொழிற் கூடங்கள் மற்றும் செப்பனிட்ட மனைகளை வழங்குகின்றன. வியாசர்பாடியில் கூட்டுறவுத் தொழிற்பேட்டை ஒன்றும் உள்ளது. 104 தொழிற் கூடங்களும், 174 செப்பனிட்ட மனைகளும், இரண்டு கட்டங்களில் மின்னணு மற்றும் அதன் சார்புத் தொழில்களைத் துவக்குவதற்கு 132 தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. முதல் கட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளவர்களில் 40 பேரும் இரண்டாவது கட்டத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் 4 பேரும் ஏற்கனவே உற்பத்தியை துவக்கிவிட்டனர். எஞ்சியவற்றில் தொழிற்கூடங்களும் இதர வளர்ச்சி நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன.

வியாசர்பாடியிலுள்ள கூட்டுறவுத் தொழிற் பேட்டையைப் பொறுத்தவரை, 53 தொழிற்கூடங்களும், 57 செப்பனிட்ட மனைகளும், அதன் உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த அனைத்து தொழிற்கூடங்களும் செப்பனிட்ட மனைகளும் தொழிலியல் உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட தொழிற்பேட்டைகளில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என்று தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

சென்னைக்கு அருகில் கிண்டி மற்றும் அம்பத்தூர் ஆகிய இடங்களில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் இரு தொழிற்பேட்டைகள் உள்ளன. இவ்விரண்டு தொழிற்பேட்டைகளில் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொழிற்கூடங்களில் யாரும் குடியிருப்பதாகவோ இதனால் சிறுதொழில்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது என்பது பற்றியோ தகவல் இல்லை என சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.

* * * * * * * * *

திரு. செங்கைசிவம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாசர்பாடி தொழில் பேட்டையில் சுமார் 30க்கும் மேற்பட்ட தொழில்கள் துவங்க...... (குறுக்கீடு) பல மனைகள் ..... பல ஆண்டுகாலமாகவே காலியாகவே உள்ளன. உடனடியாக அங்கே தொழில் கூடங்கள் தொடங்க சம்பந்தப்பட்டவர்களுக்கு அரசு அறிவுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்).

** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



1990 ஏப்ரல் 6]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: பேரவைத் தலைவர் அவர்களே, வியாசர்பாடியில் கூட்டுறவுத் தொழிற்பேட்டை ஒன்று உள்ளது. 104 தொழிற்கூடங்களும், 174 செப்பனிடப்பட்ட மனைகளும் இரண்டு கட்டங்களில் மின்னணு மற்றும் அதன் சார்புத் தொழில்களைத் துவங்க 132 தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. (கூச்சல்-குழப்பம்) முதல் கட்டத்தில் ஒதுக்கப்பட்டவர்களில் 40 பேரும், இரண்டாவது கட்டத்தில் ஒதுக்கப்பட்டவர்களில் 4 பேரும் ஏற்கனவே உற்பத்தியைத் துவக்கி இருக்கிறார்கள். மேற்கொண்டு அந்தப் பகுதியில் தொழில்களுக்குத் தேவையான நடவடிக்கையை அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்).

திரு. செங்கைசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; சென்னை வியாசர்பாடி தொழில் பேட்டையில் தற்போது கூட்டுறவு முறையில் தொழில் துவங்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் அது அதிகாரிகளின் மேற்பார்வையில் உள்ளது. தொழிற்பேட்டையின் அபிவிருத்திக்காக கூட்டுறவு வங்கியினுடைய கணக்கில் 40 இலட்சம் ரூபாய்க்கு மேலே கணக்கில் இருந்தும் அந்தத் தொழிற்பேட்டையில் கழிவு நீர் செல்ல வசதி, குடிநீர் வசதி மற்றும் ரோடு வசதி போன்றவற்றைச் செய்து தரவில்லை. எனவே இத்தொகைகளை மேற்சொன்ன காரியங்களுக்காக உடனடியாகச் செலவிட அரசு நடவடிக்கை எடுக்குமா என நான் அறிய விரும்புகிறேன். (கூச்சல், குழப்பம்). மேலும் அடிக்கடி அப்பகுதியில் மின்சாரத் தடை ஏற்படுவதாலும் அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்ட அந்த 40 இலட்சம் ரூபாய் எந்தப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது (கூச்சல்-குழப்பம்) ** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் என்ன கேட்டார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. எனவே சபை அமைதியானதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் கேள்வியைக் கேட்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

திரு. செங்கைசிவம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாசர்பாடி தொழில்பேட்டை தற்போது கூட்டுறவுத் துறையில் இயங்குவதால் தனி அதிகாரிகளின் மேற்பார்வையில் உள்ளது. அந்தத் தொழில் பேட்டையின்

** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அபிவிருத்திக்காக கூட்டுறவு வங்கியிலே 40 இலட்சம் ரூபாய்க்கு மேலே இருக்கிறது. அந்தப் பணத்தைக் கொண்டு கழிவு நீர் வசதி, குடிநீர் வசதி மற்றும் ரோடு வசதி போன்றவை செய்து தரப்படவில்லை.

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளி யேறினர்)

எனவே இத்தொகையை மேற்சொன்ன காரியங்களுக்காக உடனடியாகச் செலவிட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். மேலும் தொழில் பேட்டைகளில் அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுகிறது. அதையும் நிவர்த்தி செய்து அத்தொழிற்சாலைகள் சிறப்பாக இயங்க வழிவகை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; பேரவைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்டிருக்கிற அந்த 40 இலட்சம் ரூபாய் நிதி எந்தத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் தற்போது என்னிடம் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று அந்தப் பகுதியில் கழிவு நீர் அகற்றுதல், சீரான மின்சார விநியோகம் செய்தல் போன்றவற்றிற்கு அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.* *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசத் தொடங்கியதிலிருந்து அனைத்துச் செய்திகளும் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுகின்றன. முறைப்படி கவன ஈர்ப்பு மட்டுமே பதிவாகும்.

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (ஆ) வினா நேரம் முடிவுற்ற பின் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குறித்த நடைமுறைகள்.

திரு. கோ. வீரையன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அறையிலே பேசிவிட்டு வந்து, அதை இங்கே எழுப்ப அனுமதி மறுப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அவையிலே பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்புவதையே கூட நீங்கள் அனுமதிக்க மாட்டேன் என்று சொல்வது எப்படிச் சரியாக இருக்கும்?.

** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வீரையன் அவர்கள் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும். ஏதாவது ஓர் அமைதியான நிகழ்ச்சி போகிறபோது ''order''லிருந்து விலகுவதுதான் ''point of order''. இயல்பான நடவடிக்கை ''order'' அதிலிருந்து ஏதாவது ஒரு 'disorder' இந்த அவையிலே ஏற்பட்டுப்போய்விட்டால், அதுதான் '' point of order '' '' point of o der '' க்கு உள்ள விதிகளைத் தயவுசெய்து மீண்டும் படித்துப் பார்க்கவும். தங்களுடைய கருத்துக்களைத் திணிப்பதற்காக யாரும் '' point of order '' கேட்க முடியாது. அறையில் பேசி, மறுக்கப்பட்ட பிறகு இந்த அவையில் ஒருவர் கேட்பது, அதிலேயும் குழப்பம் விளைவிப்பது, இதற்கிடையிலே ''point of orde.'' என்ற உரிமைகளைக் கையாளுவது, அது முற்றிலும் தவிர்க்கப்படவேண்டும். அதை நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். மீண்டும் நீங்கள் ''point of o:der'' க்குள்ள பகுதிகளைப் படித்துப் பார்த்து மீண்டும் ஒரு முறை சரி செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொளகிறேன்.

10-20 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்று. நீங்கள் ஒரு தீர்ப்புச் சொல்கிறபோது, எழுந்து நிற்கின்ற உறுப்பினர்கள், பேசிக்கொண்டு இருந்தாலோ அல்லது எழுந்திருந்தாலோ உட்காரவேண்டும். உங்களுடைய தீர்ப்புக்குப் பின்னாலே மீண்டும் உங்களுடைய அனுமதியின் பேரிலேதான் பேச வேண்டும். இன்னொன்று. மாண்புமிகு உறுப்பினர்கள் ஒட்டு மொத்தமாக எழுந்திருக்கிறார்கள். நீங்கள் அந்தப் பிரச்சினைக்கு அனுமதி வழங்காமல் போனபிறகு ஒட்டுமொத்தமாக எழுந்து நின்று கொண்டு 'பாயின்ட் ஆப் ஆர்டர்' என்று எழுப்பினால் அதை எப்படி அனுமதிப்பது ? அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் கொடுத்த தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். திரு. குமரி அனந்தன் அவர்கள் பிரச்சினை எழுப்பினார்கள். பின்னர் நம்முடைய உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர், இது தொடர்பாகவோ அல்லது வேறு எது தொடர்பாகவோ எழுப்பினார்கள். எப்படிப்பட்ட கருத்து வரக்கூடிய நிலைமை இருக்கிறது என்று சொன்னால் பொதுவாக பாயின்ட் ஆப் ஆர்டர்-ஐ கிளப்புவதே கூட அவைத் தலைவர் அவர்கள் அனுமதிப்பது இல்லை என்ற கருத்து வரக்கூடாது என்பதற்காகத்தான் இதை நான் கேட்கிறேன். ஆகவே அப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்தாமல் இருக்கும்படி தங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

[1990 ஏப்ரல் 6

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடந்த 14 மாதங்களாக நீங்கள் இந்த அவையைக் கவனித்து வந்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். எல்லா "Points of order" களுக்கும் அனுமதி அளித்திருக்கிறேன். சில நேரங்களில் சில "Irrelevant" ஆகக்கூட இருக்கும், அவற்றை அனுமதித்து இருக்கிறேன். காரணம் அமைதியான நேரத்தில் எழுப்பப்படுகின்ற எல்லா "Points of order" க்கும் அனுமதி கொடுத்து இருக்கிறேன். ஆனால் அவர்கள் அவையில் ஒரு கருத்தைக் கேட்டு அதை நான் மறுத்து, இது அவையில் எழுப்பிக் கேட்பது, இது இந்த தமிழ்நாடு சட்டமன்றத்திற்குத் தொடர்பற்ற ஒரு செய்தி, இப்போது அது வேறு அவையில் எழுப்புவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று தெளிவாகச் சொன்ன பிறகும் எப்படியும் தங்கள் கருத்தைத் திணித்தே ஆகவேண்டும் என்று முயற்சி செய்வது அதற்கு விதிகளில் இடம் இல்லாதபோது அப்படி எழுப்பப்படுகின்ற "Points of order" என்பது குறுக்கு வழியில் புகுகின்ற முயற்சி என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். எனவே "Points of order" க்குள்ள எல்லா சட்ட விதிகளையும் நான் நன்றாக ஆராய்ந்தே வைத்திருக்கிறேன். மீண்டும் 14 மாதகால நம்முடைய நடவடிக்கைகளை மீண்டும் படித்துப் பார்க்கவும் அல்லது நினைத்துப் பார்க்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

(ஆ) சென்னை மருத்துவக் கல்லூரியில் பிணப் பரிசோதனை செய்யப் போதுமான மருத்துவர்கள் இல்லாமை குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆஸ்கார் சி. நிக்லி அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

THIRU. OSCAR C. NIGLI : Hon. Speaker, Sir, I wish to call the attention of the Hon. Minister for Public Health to a matter of urgent public importance, namely,

"Inadequate number of doctors in the Madras Medical College for conducting post-mortem and the consequences arising out of it."

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பெற்றுள்ளது.



1990 ஏப்ரல் 6] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

அறிக்கை

சென்னை மருத்துவக் கல்லூரியில் சவப் பரிசோதனை செய்வதற்கு அளிக்கப்பட்டுள்ள வசதிகள் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிக்கும் 1975ஆம் வருடம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. மேலும் அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனையிலும் சவப் பரிசோதனை செய்வதற்குரிய வசதிகளை விரிவுபடுத்துவதற்கான கருத்துருவில் கீழ்க்காணும் பதவிகள் உருவாக்க 1990–91ஆம் ஆண்டு பகுதி திட்டம் II-ல் சேர்க்கப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| 1. குற்றத் தடய அறிவியல் துறையில் சிறப்புப் பேராசிரியர். | 1 |
| 2. அறிவியல் உதவியாளர் .. .. | 1 |
| 3. பிணவறை பணியாளர் .. .. .. | 1 |
| 4. ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர் தரம்-2. | 1 |
| 5. உதவியாளர் .. .. .. .. | 1 |

அவ்விதம் அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனைக்கும் மேற்படி வசதிகள் உருவாக்கப்பட்டால் சென்னை மருத்துவக் கல்லூரியிலுள்ள வேலைப்பளு ஓரளவு குறையும். மேலும் இராயப்பேட்டை மருத்துவமனையில் சவப்பரிசோதனை எடுத்துக்கொள்வதற்கும் அண்மையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சென்னை மருத்துவமனையில் பிணவறை மருத்துவமனையில் மத்தியில் உள்ளது. அது இறந்தவர்களின் சடலங்களை உடனடியாக பரிசோதனைக்கு எடுத்துச் செல்ல வசதியாக உள்ளது. இந்த சவகிடங்கில் விசாரணை செய்வதற்கும் உறவினர்கள் அமர்ந்திருக்கவும் வசதியாக அறைகள் உள்ளன. காவல் துறையில் இருந்து சவ பரிசோதனை செய்வதற்கு உரிய கடிதம் காலை 9 மணி முதல் பிற்பகல் 3.30 வரை வேலை நாட்களிலும், விடுமுறை நாட்களில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1-00 வரையிலும் பெறப்படுகிறது. அக்கடிதம் கிடைத்தவுடன் அதற்கு ஒரு பதிவு எண் கொடுக்கப்பட்டு வருகிறது. தடயயியல் மருத்துவ பேராசிரியர் (Professor of Forensic Medicine) சவப் பரிசோதனைக்கு உடன்டியாக ஆணையிடுவார். இப்பிரிவில் கீழ்க்கண்ட மருத்துவர்கள் பணிபுரிகின்றார்கள் :—

| | |
|---|---|
| இயக்குநர் மற்றும் பேராசிரியர் .. .. | 1 |
| கூடுதல் பேராசிரியர் .. .. .. | 1 |
| உதவி பேராசிரியர்கள் .. .. .. | 5 |

நாள்தோறும் சராசரி 10 சவ பரிசோதனைகள் செய்யப்படுகிறது. ஒரு சவ பரிசோதனை செய்து முடிக்க சுமார் 1 மணி நேரம் ஆகும். சில நேரங்களில் கொலை செய்யப்பட்ட சடலங்களை பரிசோதனை செய்ய அதிக நேரம் தேவைப்படும். சவப் பரிசோதனை செய்யும் போது, பணியாளர்கள்மீது ஏதாவது புகார் அளிக்கப்பட்டால் உடனடியாக கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சென்னைப் பொது மருத்துவமனையில் உடனடியாக சவப் பரிசோதனை செய்வதற்கும் வருகின்றவர்களின் தேவைகளை உடனடியாக கவனிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் பொது மருத்துவமனையை பொறுத்த அளவில் ஏதேனும் வேண்டத்தகாத சம்பவங்கள் நடைபெறா வண்ணம் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது.

THIRU OSCAR C. NIGLI : Sir, I wish to bring to the kind attention of the Hon. Minister that 15 doctors are required for conducting post-mortem in the concerned Department of the Madras Medical College Hospital. But, currently, only six doctors have been employed whereby a lot of hardship is caused. Moreover, the post-mortem is conducted only up to 6 o'clock in the evening. As a result of shortage of doctors and also shortage working hours, the general public, especially the poor people are put to hardship. Therefore, will the Hon. Minister please increase the present number of doctors and staff and also extend the working hours?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சென்னை பொது மருத்துவ மனையில் இப்போது பிணப் பரிசோதனைக் கூடத்தில் இயக்குநர் மற்றும் கூடுதல் பேராசிரியர் ஒருவரும், உதவிப் பேராசிரியர்கள் 5 பேர்களும் பணியாற்றுகின்றார்கள். சென்னையிலே இதுபோன்ற நெருக்கடிகள் அதிகம் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு, ஸ்டாலின் அவர்கள் எடுத்துச் சொன்னதற்கு ஏற்ப, அந்தத் தொகுதியிலே இருக்கிற ராயப்பேட்டா மருத்துவ மனையிலே பிண பரிசோதனையிலே சில முறைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே அந்த மருத்துவமனையிலே நெருக்கடிகள் குறைவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. காலத்தை உயர்த்துவது பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். இது இரவு நேரத்திலேயே செய்யலாம் என்று கூட முன்பு பேசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இயக்குநர் அவர்களிடம் இது குறித்து பேசியபோது இரவு நேரத்திலே பிண பரிசோதனை செய்யப்படுகின்றபோது ரத்தத்





திலுடைய அலர்கள் எல்லாம் சரியாகத் தெரியாது என்று குறிப்பிட்டதன் விளைவாக, விளக்கு வெளிச்சத்திலே தெரிய முடியாது என்றும், இரவில் செய்யக்கூடாது என்றும் நீதிமன்றத்திலே இருந்து பழைய தீர்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலே அதைச் செய்ய முடியாது என்ற சந்தர்ப்பங்களையும் எடுத்துச் சொன்னார்கள்.

10-25 மணி

இருந்தாலும் இரவு நேரத்திலும் அதுகுறித்து செய்ய முடியுமா என்பதை மேலும் அவர்களை விசாரிக்குமாறு, ஆராயுமாறு சொல்லியிருக்கிறேன். அதுகுறித்து மருத்துவர்களின் அறிக்கை வந்த பிறகு காலத்தைக் கூட்டுவது பற்றிய முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. கோவிந்தராஜன்.

திரு. சி. கோவிந்தராஜன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

திரு. உ. ரா. வரதராசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. சி. கோவிந்தராஜன். முடிக்கட்டும்.

5. அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 38-வது ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை அறிக்கையை தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

3. தகவல் கோரல்— தொடர்ச்சி.

(ஆ) வினா நேரம் முடிவுற்ற பின் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குறித்த நடைமுறைகள்— தொடர்ச்சி.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ;- மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு ஒரு முன்மொழிவு என்ற முறையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த 14 மாத காலமாக இந்த அவையிலே கேள்வி நேரம் முடிந்த பிறகு,

சில முக்கியமான பிரச்சினைகளை மாண்புமிகு அமைச்சர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து அதற்கு விளக்கம் தருவதற்கான 'சீரோ அவர்' நேரம் இல்லாத நேரத்தில் தான் வாய்ப்பு அளிப்பீர்கள். இந்தச் சபையில் நடந்திருக்கக்கூடிய நிகழ்ச்சிகள் அல்லது சில்ரால் கையாளப்பட்ட உத்திகள் காரணமாக அதை நிரந்தரமாக மறுப்பது என்ற நிலைக்கு போய்விடக்கூடாது. ஆகவே, தங்களுடைய அனுமதியோடு அவையினுடைய மரபையும், கண்ணியத்தையும் காக்கக்கூடிய முறையிலே மக்களுடைய முக்கியமான சில பிரச்சினைகளை எழுப்பக்கூடிய முறையிலே இந்த 'சீரோ அவர்' என்பதற்கான நடைமுறையை மீண்டும் கடைப்பிடிக்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிற இந்தப் பிரச்சினை பலமுறை எண்ணிப் பார்க்கப்பட்டது. 'சீரோ அவர்' என்று சொல்லப்படுவது சட்டமன்ற விதிகளிலே இடம் பெறாத ஒன்று. ''இடம் பெறாதது'' என்ற அர்த்தத்தில்தான் ''சீரோ'' வருகிறது. ''சீரோ'' இடம் அளிக்கப்படாதது என்ற பொருளில்தான் 'சீரோ அவர்' எனப்படுகிறது. ஆனால் நடைமுறையில், சில நேரங்களில் பாராளுமன்றத்தில் அப்படி எழுப்பப்படுகிற பழக்கம் ஏற்பட்டது. அது இங்கேயும் இடம் பெறத் தொடங்கியது. ஆனால், அமைச்சர்கள் விடை அளிக்கும் பழக்கம் பாராளுமன்றத்தில் இல்லை. பாராளுமன்றத்தில் விடை அளிப்பதில்லை. இங்கே அப்படி விடை அளிக்காமல் ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டால்—தெளிவு இல்லாத நிலைமை ஏற்படும் என்பதால் விடையும் அளிக்கப்பட்டது. அப்படி விடை அளிக்காத நிலைமை ஏற்கப்பட்டால் சில கருத்துக்களை உறுப்பினர்கள் சொல்லும்போது—அப்படியே அது உண்மை நிலைபோல் ஆகிவிடும். அதன் விளைவாக ''ஜீரோ அவர்'' என்றும் இல்லாத நேரம் என்பது 'நேரம் கெட்ட நேரம்' என்றும் ஆகிவிடுகிறது. எனவே, நேரம் கெட்ட நேரமாக ஆகாமல், தேவைக்கு ஏற்ப, நிலைமைக்கு ஏற்ப, சபாநாயகர் அவ்வப்போது முடிவு செய்வது தவிர வேறு வழி கிடையாது.

6. மானியக் கோரிக்கைகள், 1990–91—விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 26—கைத்தறியும், துணித் தொழிலும்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;

''மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும், துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 43,88,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.'' [illegible]



திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கவும், 1981 ஆம் ஆண்டு கைத்தறி நெசவுத் தொழிலாளர் நலச் சட்டத்தை அமுல்படுத்துவது குறித்தும், இச்சட்டத்திலிருந்து கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளித்துள்ளவிதிவிலக்கு குறித்தும் விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் ;

''மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,88,43,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண் 34—நகர்ப்புற வளர்ச்சி

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;

''மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்புற வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,13,58,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை நகரத்தை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் சேர்க்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்புற வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,13,58,31,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியும் துணித் தொழிலும் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி பற்றிய மானியக் குறிப்புகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. நமது மாண்புமிகு உறுப்பினர்கள் அவைகளை எல்லாம் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் கருத்துக்களைச் சொன்னபிறகு, தேவைப்பட்டால் என்னுடைய பதிலுரையில் விளக்கங்களைச் சொல்வதாகக் கூறி, இந்த மானியக் குறிப்புகளைச் சட்ட

திரு. சி. கோவிந்தராஜன் : கடந்த ஆண்டு, 15,000 தறிகள் ஆண்டுதோறும் கூட்டுறவுத் துறையில் கொண்டு வரப்படும் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு கொள்கைக் குறிப்பில் கொடுக்கப்பட்டிருப்பது, அந்த இலக்கையும் தாண்டி, 39,000 என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் கணக்கில்தான் கோளாறு இருக்கிறது. ஏற்கெனவே இருந்தது 2 லட்சத்து 58,000-த்தோடு 39 ஆயிரத்தையும் சேர்த்தால், 2 லட்சத்து 97,000 வரும். ஆனால் 2 லட்சத்து 85,000 என்று இருக்கிறது. இதில் தவறு இருக்கிறது. இதே மாதிரி வேறு சில பிழைகளும் இருக்கின்றன. அச்சுப் பிழைகள் என்று கருதுகிறேன். தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் என்று வரும் போது ஆங்கிலத்தில் 189 என்று இருக்கிறது. தமிழில் 181 என்று இருக்கிறது. ஆதிதிராவிடர்களுக்காக என்று இருப்பது ஆங்கிலத்தில் 29 என்று இருக்கிறது. தமிழில் 21 என்று இருக்கிறது. இப்படிப்பட்ட சிறு பிழைகளை எல்லாம்கூட திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

10-35 மணி

அடுத்து அன்றைக்கு இருந்த கூட்டுறவுச் சங்கங்களைக் குறிப்பிட்டுக் காட்டினார்கள். 1,665 பிரதம சங்கங்களில் 297-ல்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட போர்டுகள் இருப்பதாகவும், 406-ல் நாமினேட்டட் போர்டுகளாகவும், 937 ஸ்பெஷல் ஆபீசர்களால் நிர்வகிக்கப்படுவதாகவும், 25-ல் அரசு அலுவலர்கள் இருப்பதாகவும் புள்ளிவிவரம் கொடுத்து, உடனடியாக நாமினேட்டட் போர்டுகள் பூராவும் கலைக்கப்படும் என்றும், கூட்டுறவுச் சட்டத் திருத்தம் விரைவில் கொண்டு வந்து தேர்தல்கள் நடத்தப்படுமென்ற உறுதியை அளித்தார்கள். ஆனால் இதுவரை தேர்தல்கள் நடத்தப்படவில்லை. ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட போர்டுகள் 297 என்று கொடுக்கப்பட்டிருந்ததுகூட கலைக்கப்பட்டு, இன்றைக்கு அனைத்தும் ஸ்பெஷல் ஆபீசர்களின் நிர்வாகத்தில் இருக்கிறது. அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் என்ன என்பது குறித்து அதிகம் பேசத் தேவையில்லை. ஜனநாயகமற்ற முறையில் இவை நடக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன். ஒரே ஒரு உதாரணம், காஞ்சிபுரத்தில் வரதராஜபெருமாள் கூட்டுறவு சொசைட்டியில் நடந்த ஒரு விஷயத்தை மட்டும் அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். அங்கு 28 இலட்சம் ரூபாய் மோசடி நடந்தது. ஆனால் அதை வெளிப்படுத்திய தொழிலாளர்கள்மீது கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு நடைபெறக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே உடனடியாக கூட்டுறவு தேர்தல்களைக் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து நெசவாளர்களுக்குக் குறைந்த பட்சக் கூலி சம்பந்தமாகக் கூற விரும்புகிறேன். இது 1983–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கொண்டுவரப்பட்டு, மே மாதத்தில் அது அமல்படுத்தப்படும் என்று கூறினார்கள். ஆனால் இன்று வரை அது அமல்படுத்தப்படவில்லை. 1986-87 மற்றும் 88 காலக் கட்டங்களில் மார்க்சிஸ்ட்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தி.மு.க. ஆகிய கட்சிகள் சேர்ந்து மிகப் பெரிய கிளர்ச்சி நடத்தியதன் விளைவாக 1988-ல் ஆளுநர் ஆட்சிக் காலத்தில் 30—6—1988-ல் ஒரு பிரிலிமினரி நோட்டிபிகேஷன் அந்தச் சட்டத்திற்குக் கொடுக்கப்பட்டது. பின்னர் இந்த அரசு வந்த பிறகு 26—6—1989-ல் அதற்கு பைனல் நோட்டிபிகேஷன் கொடுக்கப்பட்டு அமல்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் அது இன்னமும் அமல்படுத்தப் படவில்லை. ஆனால் அதற்கு நேர்மாறாக கைத்தறித் துறை இயக்குநர் கூட்டுறவுத் துறையில் இந்தக் கூலிச் சட்டத்தை அமல்படுத்தினால் கைத்தறியே நசித்துவிடும் என்று சொல்லி அதை அமல்படுத்த முடியாது என்று கறாராக மறுத்துக்கொண்டு இருக்கிறார். 66 சதவீதத்துக்கு மேல் உள்ள கைத்தறி நெசவாளர்கள் இருக்கக் கூடிய இந்த துறையில் இந்த கூலிச் சட்டம் அரசாங்கத்தால் இயற்றப் பட்டு, இந்த கட்சியின் ஆட்சி வந்தபிறகு கூட பைனல் நோட்டிபிகேஷன் போடப்பட்ட சட்டம். இதை லெவல் படுத்த முடியாது என்று சொன்னால், தனியார் துறையில் இதை எப்படி அமல் படுத்த முடியும் ? எனவே இது வேலியே பயிரை மேயக் கூடிய கதையாக இருக்கிறது என்பதை இந்தச் சமயத்திலே சுட்டிக் காட்டுகிறேன்.

அது மட்டுமல்லாமல், இந்த வருடம் ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியன்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோவையிலே சித்திராவில் ஒரு பங்ஷனில் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

'To the demand for increasing wages for handloom weavers in the co-operative, he said, that the official committee would be constituted in every district to study the demand.''

ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகாரிகளைக் கொண்ட குழு போடப்பட்டு அந்த டிமான்ட் பற்றி ஸ்டடி பண்ணுவதற்காக ஏற்பாடு செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் அங்கே பேசி இருக்கிறார்கள். அது அன்றைக்கு இந்து பத்திரிகையிலே வெளி வந்து இருக்கிறது. நான் சொல்கிறேன், இது டிமான்ட் அல்ல. இது ஒரு சட்டம். இதை அமல்படுத்த வேண்டும் என்று கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் போராடிக் கொண்டு வருகிறார்கள். அதற்காக இயக்கங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அனைத்துச் சங்கங்களைச் சேர்ந்தவர்களும் இதைக் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இதைப் பரிசீலிக்க

வேண்டிய தேவையே இல்லை. உடனடியாக குறைந்த பட்சக் கூலிச் சட்டம் அமலுக்கு வர வேண்டும் என்று நான் இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்லாமல் இடையிலே இப்படிப்பட்ட கிளர்ச்சி களைப் பார்த்த உடனே அரசாங்கம் 10 சதவீதம் உயர்த்திக் கொள்ளலாம் என்று ஒரு அறிவிப்புச் செய்தது. அந்த 10 சதவீதத்தை உயர்த்திக் கொடுக்காத காரணத்தினால் தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கை மாவட்டம் காஞ்சிபுரம், ஆகிய இடங்களில் மிகப் பெரிய கிளர்ச்சிகளை நடத்தியபோது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலையிட்ட பிறகு தான் ஒரு சில இடங் களில் அந்த 10 சதவீதம் கூலி உயர்வுச் சட்டம் அமலாகக் கூடிய நிலை ஏற்பட்டது. இருப்பினும் அச்சட்டம் பூராவும் எல்லா இடங்களிலும் அமலாக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது.

தொழிற்சாலைச் சட்டங்கள் தமிழகத்தில்தான் நேர்த்தி யாகச் செயல்படுகிறது என்று கடந்த மார்ச் 28-ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிய போது, மற்ற மாநிலங்களை விட இங்கே தான் நேர்த்தியாகச் செயல்படு கிறது என்று சொன்னார்கள். இப்படித்தான் செயல்படுகிறதா என்று கேட்கக் கூடிய நிலைமையில் இந்தச் சட்டங்கள் பூராவும் இருக்கும் காட்சியைப் பார்க்க முடிகிறது. கைத்தறி தொழி லாளர் நலச் சட்டங்கள் கூட்டுறவு சங்கங்களில் உள்ள தொழி லாளர்களுக்கு விதி விலக்கு அளித்து இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு என்ன கூறினார்கள் என்று சொன்னால், அதிகாரிகள் அதிகமாகத் தேவைப்படுகிறார்கள் என்று தான் கூறினார்கள். ஆனால் நூற்றுக்கு 70 சதவீதம் அந்தக் கூட்டுறவு தொழிலில் இருக்கக் கூடிய நெசவாளர்களுக்கு தொழிலாளர் நலச் சட்டத்திலிருந்து விதி விலக்கு கொடுத்து விட்ட பிறகு எப்படி அது அமுலாகும் ? மற்றவர்கள் அதை எப்படி அமல் படுத்துவார்கள் ? இப்படிப்பட்ட விதி விலக்கு கூடாது என்று சொல்லி தொ.மு.ச., சி.ஐ.டி.யூ., ஏ.ஐ.டி.யு.சி., போன்ற தொழிற் சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் எல்லாம் சேர்ந்து இயக்கங்களை நடத்தி இருக்கிறார்கள் என்பதை இந்தச் சமயத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

10-40 மணி

அடுத்து நூற்பாலைகள் குறித்து சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆண்டு ஒன்றைத் தவிர அனைத்து ஆலைகளிலும் நஷ்டம் என்று கூறப்பட்டது. இந்த ஆண்டு 2-ஐத் தவிர 16 ஆலைகளில் லாபம் என்று கூறுகிறார்கள். அந்த நூற்பாலைகளில் எல்லாம் சர்வீஸ் கண்டிஷன் யூனிபார்மாக இருக்க வேண்டும். லீவு வசதிகள், கேன்டீன் வசதிகள் தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டும். அதிக உற்பத்தி செய்வதற்கு மெய்ன்டினன்ஸுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். கடந்த காலங்களில்



இப்படிப்பட்ட நூற்பாலைகளில் நஷ்டம் வந்தது. அதை அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் தனியார் துறையில் இருக்கும் ஆலைகளில் கொள்ளை லாபம் கிடைத்து இருக்கிறது. இந்த நஷ்டத்திற்கு அடிப்படையான காரணம், இது பூராவும் மிஸ்மேனேஜ்மெண்டுதான் என்பதை நான் இந்தச் சமயத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன் றைக்கு பருத்தி விலை, சன்ன இழை பருத்தி ஒரு குவிண்டாலுக்கு விலை ஆயிரம் ரூபாய்க்கு வீழ்ந்திருக்கிறது. இன்னும் கூட வீழக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படியிருந்தும் கூட நூல் விலை உயர்ந்திருக்கிறது. ஆகவே, இந்த விலை வீழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, ஏராளமாகப் பருத்தி பேல்களை வாங்கி ஸ்டாக் செய்து விட்டால் எதிர் காலத்திலே இங்கே குறைந்த விலையில் நூல் கொடுக்க வசதியாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படு கிறேன்.

கூட்டுறவு மில்களை ஆரம்பித்ததன் நோக்கமே கைத்தறிக்குக் குறைந்த விலையில் நூல் கொடுப்பதற்காகத்தான், இலாபத் திற்காக அல்ல. இந்த நூற்பாலைகளை நவீன மயமாக்கப் போகிறோம் என்று அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். இங்கே கொள்கைக் குறிப்பிலேயும் கூட இருக்கிறது. அது நல்லது தான். ஆனால், அதன் பெயரால் தொழிலாளர்களின் வேலைக்கு உலை வைத்து விடாதீர்கள் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பனியன் தொழில், 1988–89-இல் 400 கோடி ரூபாய்க்கு மேல் அன்னியச் செலாவணியை ஈட்டிய தொழில், இப் பொழுது 1994-க்குள் 1,000 கோடி ரூபாய் அன்னியச் செலா வணியை ஈட்டுவதற்கான ஒரு திட்டம் தயாரித்திருக்கிறார்கள். ஆனால், அதில் இருக்கக் கூடிய கஷ்டம் என்னவென்று சொன் னால், பனியன் செய்வதற்காக நூல்களைப் புக் செய்து விட்டு வந்தால், பம்பாயிலேயோ அல்லது மற்ற இடங்களிலேயோ அது இரண்டு மாதங்களுக்குள் உடனே நூல் விலை உயர்ந்து விடுகிறது. எனவே தான் குறைந்த பட்சம் ஆறு மாத காலத் திற்காவது அந்த நூலின் விலை உயராமல் பாதுகாத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்தால் இந்தப் பனியன் தொழிலை அதிகமாக அபிவிருத்தி செய்வதற்கு வாய்ப்பு உண்டு. அதே சமயத்தில் இது அன்னியச் செலாவணியை ஈட்டக் கூடிய தொழில் என்பதையும் நான் இந்தச் சமயத்தில் நினைவுபடுத்த விரும்பு கிறேன்.

அடுத்து, பட்டு. தேவையான பட்டு இங்கே கிடைப்பதில்லை. நேற்றைய தினம் கூட அதிகமான பட்டுப் பூச்சிகளை வளர்த்து, பட்டை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய திட்டத்தை அந்த துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நாம் இன்றைக்கு சென்ட்ரல் சில்க் போர்டிலேயிருந்துதான்

வாங்குகிறோம். கர்நாடகத்தில் அதிகமாகப் பட்டு உற்பத்தி ஆகிறது. எனவே, இங்கேயே அதிகமான பட்டைத் தயாரிப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். சென்ட்ரல் சில்க் போர்டிவிடத்திலே நாம் அதிகமாகப் பேசி இன்னும் கொஞ்சம் கன்செஷன் அல்லது ரிபேட்டையாவது, அந்தப் பட்டுக்கு வாங்கி இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு உரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இன்றைக்கு பட்டுத் துணிக்கு அதிகக் கிராக்கி இருக்கிறது என்பதை கோவாப்டெக்ஸ்-இல் விற்பனையாவதிலிருந்தே தெரிந்து கொள்ள முடியும். காஞ்சீபுரம், ஆரணி, கும்பகோணம், திருபுவனம், தென்னார்க்காடு மாவட்டத்திலே மோட்சகுளம், சிறுவந்தாடு ஆகிய இப்படிப்பட்ட இடங்களிலே ஒரு இலட்சம் பேர் பட்டு நெசவிலே ஈடுபட்டிருக்கிறார்கள். நல்ல பட்டுத் துணியை அதிகமாக விரும்புகிறார்கள். ஆகவே, இதைத் தயாரிப்பதற்கு வேண்டிய மூலப் பொருட்கள் இங்கேயே கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும்.

'அடுத்தது ஜரிகை. காஞ்சீபுரத்தில் ஒரு தொழிற்சாலை இருக்கிறது. ஆனால் அது சரியாகச் செயல்படவில்லை. இங்கே கில்ட் கொடுத்துத்தான் ஜரிகையைக் கொண்டு வருகிறார்கள். சூரத்திலேயிருந்து வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. காஞ்சிபுரத்திலுள்ள அந்தத் தொழிலை நல்ல முறையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தது நல்ல சாயம். டை தயாரிக்கும் நிறுவனங்களுக்கு ஏற்பாடு செய்து இந்தக் கைத்தறித் தொழிலை அதிகமாக விருத்தி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நகர்ப்புற வளர்ச்சி மானியத்தின் மீது சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன். நகர்ப்புற வளர்ச்சிக்கு அன்றைக்குக் கூட கூறியிருக்கிறேன். பல நகரங்களில் ஏராளமான அரிசனக் காலனிகள் இருக்கின்றன. ஸ்லம் கிளியரன்ஸ் திட்டத்தை நகர்ப்புறங்களுக்குக் கொண்டு வரும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

லே அவுட்டை அப்ரூவ் செய்யாமல் விற்று விடுகிறார்கள். ஜனங்களும் வாங்கி விடுகிறார்கள். அப்படி வாங்கியவர்கள் பிறகு வீடு கட்ட முடியாமல்—அதிலும் குறிப்பாக மத்திய தரப் பகுதியினர் கஷ்டப்படுகிறார்கள். லே அவுட்களுக்கு உடனடியாக அப்ரூவல் கொடுக்க டைரக்டர் ஆப் டவுன் பிளானிங், எம்.எம்.டி.ஏ., ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும். பத்து வருஷங்கள் ஆகிவிட்டால் அரசே அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்றும், 1-1-1989 வரையுள்ள அன் அப்ரூவ்ட் லே அவுட்களை அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும்



என்று அரசு கடந்த ஆண்டு கூறியுள்ளது. ஆனால் அப்படி எடுக்கவில்லை. மேலும் அன் அப்ரூவ்ட் லே அவுட்தான் வளர்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நகர்ப்புறங்களில் ரோடு போடுவதற்கு உலக வங்கி கடனுதவி செய்கிறது. அதையும் பெற்றுக் கொண்டு, டெவலப்மென்ட் சார்ஜ் என்ற பெயரில் மக்களிடம் வசூலிப்பது ஏன்? இது சரியல்ல.

நகர்ப்புறங்களில் நவீன கழிப்பறை கட்டுவதற்கு அதிக மானியம் ஒதுக்கப்பட வேண்டும். ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு மூலம் பலயிடங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டு இதுவரையில் முடியாமல் இருக்கின்ற சூழ்நிலை பல இடங்களிலும் இருக்கின்றன.

10-45 மணி.

பல்வேறு நகரங்களில் இருக்கிறது. ஸ்லம் கிளியரன்ஸ் போர்டிற்கு இந்த வேலைகளை விடும்போது அவர்கள் கான்ட்ராக்டர்கள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் இடத்தில் மட்டும் கான்ட்ராக்டர்கள் தனியாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதனால் காலம் கடத்தப்படுகிறது. இவைகளில் எல்லாம் தலையிட்டு, இப்படிப்பட்ட இடங்களில், வேலை பாதி முடிந்திருக்கிற இடங்களில், கட்டப்பட்டதும் பாழாகி விடும் என்பதால், அப்படிப்பட்ட நிலைமை இருக்கிற காரணத்தால், அவற்றை முதலில் எடுத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பூர் நகர் மேம்பாடு பற்றி குறிப்பிட விரும்புகிறேன். திருப்பூர் பனியனைப் பற்றி ஏற்கனவே நான் குறிப்பிட்டிருக்கிறேன். 1994 ஆம் ஆண்டிற்குள் 1,000 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி ஈட்டக் கூடிய அளவிற்கு இருக்கிறது என்று குறிப்பிட்டேன். அங்கே அடிப்படை வசதிகள் ஒன்றும் கிடையாது. ஆறு ஏற்றுமதி மையங்களுக்கு மத்திய அரசு இது வரையில் அந்த நகரங்களை வலுப்படுத்துவதற்கு, அபிவிருத்தி செய்வதற்கு 200 கோடி ரூபாய் செலவழித்து இருக்கிறது. ஆனால் திருப்பூருக்கு அல்ல. இப்படி முக்கியமான ஏற்றுமதி கேந்திரமாக இருக்கிற திருப்பூர் நகரத்தை மத்திய அரசு மானியம் மூலமும், மாநில அரசு மானியம் கொடுத்தும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மின்சாரம், பாதைகள், பாதாள சாக்கடை, குடிநீர்-வடிகால் வசதி போன்ற இவைகளை எல்லாம் செய்தால், நிச்சயமாக அவர்கள் போட்டிருக்கிற இலக்குப்படி 1,000 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி ஈட்டக் கூடிய திருப்பூர் நகரத்திற்கு அந்த வருவாயிலிருந்து மத்திய அரசு மானியம் கொடுப்பது சுலபமாக இருக்கும். நாட்டில் ஏற்றுமதி செய்யப்படுவதில் ஆறில் ஒரு பகுதி, இன்னும் சொல்லப் போனால் ஐந்தில் ஒரு பகுதி என்று சொல்லக் கூடிய அளவிற்கு அந்த நகரம் வளர்ந்து கொண்டு இருக்கிறது என்பதைஇந்தச் சமயத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. சி. கோவிந்தராஜன்] [1990 ஏப்ரல் 6

சென்னை மாநகரில் போக்குவரத்து மேம்பாட்டிற்கு 12 கோடி ரூபாய் செலவில் 17½ கிலோ மீட்டர் தூர உள்வட்ட சாலை அமைக்க 1976 ஆம் ஆண்டில் வேலை துவங்கப்பட்டது. இன்று வரையில் அந்த வேலை 14 ஆண்டுகள் ஆகியும் நடைபெறாமல் உள்ளது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். இதை உடனடியாக செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

துரித ரெயில் திட்டம் 1983 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்தில் மூன்றில் ஒரு பகுதி கூட இன்னும் முடிவு பெறவில்லை. 125 கோடி ரூபாய் தேவைப்படும் இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு போதுமான நிதியை ஒதுக்கீடு செய்து தரவில்லை. இந்தத் திட்டத்திற்கு அதிக ஒதுக்கீடு கொடுக்க வேண்டுமென்று கோரி, அங்கேயிருந்து பெறுவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறு மற்றும் நடுத்தர நகரங்களை ஒருங்கிணைத்து வளர்ச்சித் திட்டம் ஒன்று இருக்கிறது. அந்தத் திட்டம் போடப்பட்டிருந்தாலும், நடைமுறையில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தை ஒருங்கிணைத்து செயல்படுத்துகிற அளவிற்கு எல்லா நகரங்களிலும் ஏற்பாடு செய்ய வேண்டும். திட்டம் திட்டமாக இருக்கிறதே தவிர பல்வேறு நகரங்களில் இது நடைபெறுவது இல்லை. நான் நெல்லிக்குப்பம் பற்றியே கூற முடியும். அந்த நகரத்தில் நகர்மன்றத் தலைவராக, சேர்மனாக நான் இருக்கிறேன். இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறதே தவிர, அதற்கு வேண்டிய எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கு, நிதி ஒதுக்கப்படுவதற்கு அரசாங்கத்தை நாடி வர வேண்டிய நிலைமையும், அரசாங்கம் ஐ.யூ.டி.பி. போன்ற நிறுவனங்களை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிற நிலைமையும் இருப்பதால் இவைகளை எல்லாம் துரிதமாக முடிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குறிப்பாக ஒன்றை நான் கூற விரும்புகிறேன். 24 ஆம் தேதி கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் ஒரு மறியல் போராட்டத்தை, ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அரசாங்கம் போட்ட சட்டத்தை அரசாங்கமே நடைமுறைக்கு கொண்டு வர முடியாத நிலைமை இருக்கிறது. கைத்தறி இயக்குநர் மறுப்பதும், அமைச்சர் அவர்கள் குழு போட்டு பரிசீலிக்கப் போகிறேன் என்று சொல்வதும், தொழிலாளர்களுக்கு மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிற காரணத்தால், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் சட்டத்தை அமல்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, பேசக் கிடைத்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.



3. தகவல் கோரல்.

(ஆ) வினா நேரம் முடிவுற்ற பின் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குறித்த நடைமுறைகள்—தொடர்ச்சி.

திரு.சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். இப்போது நமது அவையில் இருக்கிற பிரதான எதிர்க் கட்சிகளாகிய இரண்டு கட்சிகளைச் சார்ந்தவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். நான் உள்ளே வரும் போது அவர்கள் வெளியே சென்றார்கள். கேட்ட போது பேரவைத் தலைவர் ஒரு விஷயத்தையும் அவையில் பேசுவதற்குக் கூட அனுமதிக்க மாட்டேன் என்கிறார்கள். ஜீரோ அவரிலே கூட சில விஷயங்களைச் சொல்வற்கு அனுமதியளிக்க மாட்டேன் என்கிறார்கள். அது மட்டுமல்லாமல், 4, 5 நாட்களுக்கு முன்னாலே சில பிரிவிலேஜ் தீர்மானங்களைக் கொடுத்திருந்தோம். வரும்போதெல்லாம் அவையில் கேட்டால், வீட்டிலே வைத்து விட்டு வந்து விட்டேன், கொண்டு வரவில்லை என்று சொல்கிறார்கள். இங்கே அந்தப் பிரச்சினையை எழுப்ப அனுமதிக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள். வேறு பல பத்திரிகைகளில் வந்த உடனே.. .. .. .. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வளாகத்தில் கேட்டதை எல்லாம் இங்கே சொல்லாதீர்கள். இந்த அவையில் உரிமை மீறல் ஏதாவது இருந்தால் அதைச் சொல்லுங்கள். அறையில் பேச வேண்டியதை எல்லாம் இங்கே பேசாதீர்கள்.

திரு. சோ. அழகர்சாமி ; தலைவர் அவர்களே, அவையிலே உறுப்பினர்களுக்கு சில விஷயங்களை கிளப்புவதற்கும், சொல்வதற்கும் அனுமதி அளிப்பது இது வரையில் முறையாக இருந்து வந்திருக்கிறது. ஜீரோ அவரில் பிரச்சினையை கிளப்புவதற்கு .. .. .. .. .. .. ..

10.50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்கள் பேசுகிறபோது நீங்கள் அவையில் இருந்தீர்களா? (குறுக்கீடு). ஒரு சிறிய கேள்வி. பேரவை முன்னவர் பேசுகிறபோது, நீங்கள் இந்த அவையிலே இருந்தீர்களா என்று கேட்டேன். இல்லாததால்தான் நீங்கள் மறுபடியும் அதைப்பற்றிப் பேசுகிறீர்கள். இதுபற்றி ஏற்கெனவே இரண்டு பேர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி அதன் தொடர்பாக அவை முன்னவர் அவர்கள் சொல்லியாகிவிட்டது, நானும் சொல்லியாகிவிட்டது. தயவு செய்து, ஏற்கெனவே இருக்கிற அவைக் குறிப்பை மீண்டும் படித்துப் பார்த்து விட்டு பிறகு கேளுங்கள். ஏற்கெனவே பேசியாகிவிட்டது அதைப்பற்றி. நீங்கள் அவைக்கு பின்னாலே வந்துவிட்டு, பிறகு அதையே திருப்பிப் பேசுவது என்பது முறையாக இருக்காது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே இந்த அவையிலே உள்ள ஒரு முறை எப்படி இருந்திருக்கிறது என்று சொன்னால், ஜீரோ ஹவரிலே கிளப்புகிற விஷயங்களை தங்களுடைய அறையிலே வந்து தனியாகக் கேட்டு, அனுமதி அளித்த பிறகு தான் கிளப்புகிற வழக்கம் இது வரையில் இல்லை, எனக்குத் தெரிந்த மட்டிலே தாங்கள் தலைவராக வந்த பிறகு தான் இந்த நடைமுறை இருக்கிறதே தவிர ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனிக்க வேண்டும். இது தொடர்பாக ஏற்கனவே இரண்டு பேர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி, நானே தீர்ப்புச் சொல்லி, அவை முன்னவர் அவர்களும் விளக்கம் சொல்லிவிட்டார்கள். நீங்கள் இப்போது அவைக்கு வந்ததினாலே, மறுபடியும் இதைப்பற்றிக் கிளப்புகிறீர்கள், எனவே அது முறையாக இருக்காது. நாம் இதைப்பற்றி மறுபடியும் அறையிலே பேசுவோம். பிறகு முடிவு எடுப்போம்.

## 6. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும் —தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண். 26—கைத்தறியும் துணித்தொழிலும் —தொடர்ச்சி.

### (ஆ) கோரிக்கை எண். 34—நகர்ப்புற வளர்ச்சி—தொடர்ச்சி.

திரு. செ. இராமலிங்கம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் 26-வது மானியக் கோரிக்கையாகிய கைத்தறி மற்றும் துணி நூல் துறையின்கீழ் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தக் கைத்தறித் தொழில் தமிழகத்தில் வேளாண்மைக்கு ஒப்ப மிகப் பழமையான, தொன்மையான தொழிலாக நாம் குறிப்பிடலாம். கிராமப்புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவிற்கு அகற்றியிருக்கக்கூடிய தொழில் கைத்தறித் தொழிலாகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஆனால் கடந்த ஆட்சிக் காலத்தில், அ.இ.அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது சிலருடைய சுயநலத்தின் காரணமாக இந்தத் துறை நலிவு அடைந்த ஒரு துறையாக ஆகியிருக்கிற நிலைமையை இன்றைய தினம் நம்மால் பார்க்க முடிகிறது. கடந்த காலத்தில் செய்த முறைகேடுகள் எல்லாம், இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு. பல்வேறு முற்போக்குத் திட்டங்களின் வாயிலாக, மீண்டும் இன்றைய தினம்





சீர் செய்யப்பட்டிருக்கிறது. கைத்தறித் துணி உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியத் துணைக் கண்டத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்றிருப்பது உண்மையிலே பாராட்டத்தக்கதாகும்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கு வழங்குகின்ற சலுகைகள் அனைத்தையும் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், பல்லாயிரக் கணக்கான கைத்தறி நெசவாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய தொகுதி. ஏறத்தாழ 20-க்கும் மேற்பட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அங்கே இருக்கின்றன. அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே எல்லாம் கடந்த காலத்தில் ஏற்பட்டிருக்கின்ற, செய்யப்பட்டு இருக்கின்ற ஊழல்களையும், முறைகேடுகளையும் இந்த அரசு உடனடியாக ஒரு கமிஷனை நியமித்து, விசாரிக்க வேண்டுமென இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் நெசவாளர்கள் தாங்க முடியாத கொடுமைகளை எல்லாம் அனுபவித்தார்கள். நெசவாளர்களுக்கு பாவு கொடுத்தால், பட்டுத் தரமாட்டார்கள், பட்டு கேட்கும்போது, 15 நாட்கள் கழித்து வா என்று சொல்வார்கள். ஜரிகை கேட்டால் இன்னும் ஒரு வாரம் கழித்து வா என்று அலைய விடுவார்கள். இப்படி அலைக்கழிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான நெசவாளர்கள் கூட்டுறவுத் துறையே வேண்டாம் என வெறுத்து, பலர் தனியாரிடம் அடிமைகளாக நெசவு செய்ய வேண்டிய அவல நிலைமைகள் எல்லாம் முந்தைய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டது. அந்த நிலையை இன்றைய தினம் அடியோடு மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் பல முற்போக்குத் திட்டங்களை இங்கே அறிவித்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இன்றைய தினம் கடந்த கால ஆட்சி செய்த முறைகேடுகளின் காரணமாக திருபுவனத்தில் உள்ள சூப்பர் மற்றும் காமராஜர் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் 11 பேர்களை பணி நீக்கம் செய்வதற்காக முன்னறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இது அங்கேயிருக்கின்ற தனி அதிகாரியினுடைய தன்னிச்சையான ஒரு முடிவு. இந்த முடிவு கூட ஏதோ நிதிநிலையைக் கருத்தில் கொண்டு செயல்படத் தொடங்கி இருப்பார்களா என்றால், அதுவும் கிடையாது. ஒரு உள்நோக்கத்தோடு சீனியாரிட்டியைக் கூட கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் தனி அதிகாரியால் எடுக்கப்பட்ட பணி முடிவு

[திரு. செ. இராமலிங்கம்] [1990 ஏப்ரல் 6

என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முடிவை மாற்றி, அதற்கு ஒரு தடையாணையை வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

10-55 மணி.

என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஏறத்தாழ 20 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இன்றையதினம் லாபகரமாக இயங்கிக் கொண்டு இருக்கிற ஒரே ஒரு கூட்டுறவுச் சங்கம் திருப்புவனம்பட்டு கூட்டுறவு சங்கம். ஏனைய சங்கங்கள் எல்லாம் அ. தி. மு. க. ஆட்சிக் காலத்தில் அடியோடு சூறையாடப்பட்ட நிலையில் இன்றையதினம் இருந்துக் கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் திருப்புவனம் திருவள்ளுவர் பட்டு கூட்டுறவு சொசைட்டியை எடுத்துக் கொள்ளலாம். அதில் நியமனத் தலைவராக இருந்தவர் அன்றைய அண்ணா தி.மு.க.—வின் ஒன்றிய செயலாளர். இன்றையதினம் தஞ்சை மாவட்டத்தினுடைய அ.தி.மு.க.-வின் இணை செயலாளராக இருப்பவர் அந்த கூட்டுறவுச் சங்கத்தினுடைய நிர்வாகியாக இருந்தார். அவருடைய பதவி காலத்தில் ஏறத்தாழ 40 இலட்சம் ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறது. எனவே தான் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இது பற்றி விசாரிப்பதற்கு ஒரு கமிஷன் நீங்கள் கட்டாயம் அமைக்க வேண்டும். இப்படி கொள்ளை அடிக்கப்பட்ட பணத்தை மீண்டும் சங்கத்திற்கே கொண்டு வருவோமேயானால் நிச்சயமாக இன்றையதினம் தேவையான அளவுக்கு ஒவ்வொரு சங்கத்திற்கும் நிதி ஆதாரம் கிடைக்கும். எனவே அந்த நடவடிக்கையில் உடனடியாக நீங்கள் ஈடுபட வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கூட்டுறவுத் துறை அதிலும் குறிப்பாக இப்படிப்பட்ட நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் எல்லாம் எந்த அளவுக்கு சிறப்பாக இயங்கின என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். ஆனால் அப்படி சிறப்பாக இயங்கிய அந்த நிர்வாகத்தின் மீது பாரதி கமிஷன் என்ற கமிஷனைப் போட்டு இல்லாத குற்றச்சாட்டுகளையெல்லாம் சொல்லி அன்றையதினம் பொறுப்பிலே இருந்த ஆளும் கட்சிக்காரர்களை அவமானப்படுத்தினார்கள். ஆனால் அந்தக் குற்றச்சாட்டுகள் ஒன்று கூட நீதி மன்றத்திலே நிரூபிக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 6] [திரு. செ. இராமலிங்கம்]

அதேபோல இன்றையதினம் இன்னொன்றையும் இங்கே தெரிவிப்பது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். நெசவுத் தொழிலுக்கு நேரிடை எதிரியாக இருப்பது விசைத்தறிகள். கைத்தறிக்கு என 22 ரகங்கள் இன்றையதினம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் சில முதலாளிகள் விசைத்தறியில் உற்பத்தி செய்து அவைகளை கைத்தறி என்று சொல்லி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வியாபாரம் செய்கிறார்கள். இவற்றால் கைத்தறித் தொழில் அடியோடு நலிவு அடைகிறது என்ற நிலைமையை நம்மால் உணர முடிகிறது. எனவே இதற்கு ஒரு சில வரன்முறைகளை நீங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் பலர் அனுமதி இல்லாமல் கணக்கில் அடங்காத விசைத்தறிகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் உடனே தடை செய்ய அல்லது ஆய்வு செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். முந்தைய அ தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பல நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நியமனத் தலைவர் நூலை வாங்குவார்கள், அதிக விலைக்கு விற்பார்கள். மீண்டும் கோ—ஆப்டெக்ஸ் மூலம் தள்ளுபடி காலத்தில் அங்கே இருக்கிற புடவைகள் வேட்டிகளை விலைக்கு வாங்கி வந்து மீண்டும் அந்த கூட்டுறவுச் சங்கங்களில் வைத்து விற்பனை செய்வார்கள். இப்படிப்பட்ட அவல நிலைமை அலங்கோலமான நிலை முந்தைய ஆட்சிக் காலத்தில் இருந்தது. இப்படிப்பட்ட ஒழுங்கீனங்களெல்லாம் இன்றையதினம் இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு அகற்றப்பட்டிருக்கிறது. நான் உள்ளபடியே நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். அவர்களால் எடுக்கப்பட்ட துரிதமான நடவடிக்கையின் காரணமாக இன்றையதினம் இந்த சங்கங்கள் ஓரளவிற்கு சீர் செய்யப்பட்டிருக்கின்றன.

குஜராத் மாநிலத்தில் இன்றையதினம் சூரத் நகரில் கைத்தறித் துணிகளையெல்லாம் ஒட்டு மொத்தமாக சேகரித்து மார்க்கெட்டிங் காம்பிளக்ஸ் அமைத்திருக்கிறார்கள். வெளிநாட்டு உள்நாட்டு வியாபாரிகளை எல்லாம் வருகை தரச் செய்து பல்வேறு ரகங்களை அவர்களுக்கு காண்பித்து கைத்தறித் துணிகள் இப்போது அங்கே வேகமாக விற்பனை செய்யப்படுகிறது. அதே போன்ற முறைகளை தமிழ்நாட்டிலும் பெரிய நகரங்களில் ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் இருக்கிற கூட்டுறவுச் சட்டங்களில் இருக்கிற ஒருசில நடைமுறைக்கு ஒத்து வராத பிரிவுகளின் காரணமாக பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் ஸ்தம்பித்து போய்க் கொண்டு இருக்கிறது என்ற நிலைமையை நம்மால் பார்க்க முடிகிறது. (குறுக்கீடு)

திரு. பா. அப்துல் சமத் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் கைத்தறி துணி மானியக் கோரிக்கை நடைபெறுவதால் கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களான எங்களுக்கு ஒரு கைக்குட்டையாவது கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் கைத்தறித் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திலே சென்று அவர்கள் விலைக்கு வாங்கினால் நெசவாளர்களுடைய துணி தேக்கத்தைப் போக்க முடியும், இந்த மேலான உதவியை மாண்புமிகு உறுப்பினர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

11-00 மணி

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில், அதிலும் குறிப்பாக பட்டுப் புடவைகள் ஒரு பக்க பார்டர் உடையவைகளை மட்டும் தயார் செய்யவேண்டும் என்று அங்கே அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. அதனால் தென் மாவட்டங்களைத் தவிர, வேறு இடங்களில் அவைகளை வியாபாரம் செய்ய முடிவதில்லை. ஆனால் காஞ்சீபுரத்தில் இரண்டு பக்கமும் பார்டர் உள்ள பட்டுச் சேலைகள் தயார் செய்யப்படுகின்றன. அதற்கு ஆந்திரா மற்றும் வட மாநிலங்களில் நல்ல மார்க்கெட் உள்ளது. எனவே, புதிய தறிகள் இயக்குவதற்கு, இரண்டு பக்க பார்டர்கள் நெய்யக் கூடிய அளவுக்கு குடந்தைப் பகுதியில் குறிப்பாக, திருவிடைமருதூர் பகுதியில் உள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு நீங்கள் அனுமதி வழங்க வேண்டுமென இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

புதிய தறிகள் இயக்குவதற்கு நபார்டு நியமித்துள்ள நிதியளவாகிய, தறி ஒன்றுக்கு 10 ஆயிரம் என்பது போதுமான நிதியுதவி அல்ல. 'இன்-அடிக்வேட் பைனான்ஸ்'. தஞ்சை மாவட்டத்தில் இயங்கி வரும் பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏறத்தாழ 32 ஆகும். அதில் மிகவும் பழமையாக இருக்கின்ற திருபுவனம் கூட்டுறவுச் சங்கம் கூட இலாபகரமாக இயங்கி கொண்டிருந்தாலும், கடந்த காலத்தில் அதிலும் பல்வேறு முறைகேடுகளைச் செய்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் விசாரித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தச் சங்கம் ஒன்றுதான் ஆண்டு முழுவதும் நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. 1988 ஆம் ஆண்டு இந்தச் சங்கத்தினுடைய உற்பத்தி ரூ. 684.92 இலட்சம் ஆகும். இந்தச் சங்கத்திற்கு காசுக் கடன்



பெறுவதற்கான தகுதி ரூ. 328 இலட்சம் ஆகும். தறி ஒன்றுக்கு ரூபாய் 30,625 காசுக் கடன் கிடைக்கிறது. ஆனால் நபார்டு நிதியுதவி தறி ஒன்றுக்கு ரூபாய் 10,000 மட்டுமே வழங்கிக் கொண்டிருக்கின்றது. எனவே, நபார்டு நிதி உதவியை ரூபாய் 10,000-லிருந்து ரூபாய் 30,000-க்கு உயர்த்தி ஆணை வழங்கப்படவேண்டுமென இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, இந்தச் சங்கத்திற்கும் தொடர்ந்து நிதிநிலைப் பற்றாக்குறையின் காரணமாக புதிய உறுப்பினர்களுக்கு இன்றைய தினம் தறி வழங்கமுடியாத ஒரு நிலைமை இருக்கிறது. எனவே, தேவையான அளவிற்கு நிதியாதாரத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாடு மாநில பட்டு உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு விற்பனை இணையம், காஞ்சீபுரம், கர்நாடகா பட்டு இணையத்திலே ரொக்கத்திற்கு மட்டுமே இன்றையதினம் பாவுப் பட்டு வழங்கவேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. ஆனால் பட்டுப் புடவைகளைக் கொள்முதல் செய்யும் கோ-ஆப்டெக்ஸிற்கு கடனில் சப்ளை செய்ய வேண்டிய, சரக்குகளைக் கொடுக்கவேண்டிய ஒரு நிலைமை உள்ளது. விற்பனைக்கு வழங்கப்படும் அரசு ரிபேட் பல ஆண்டுக் காலமாக, பல மாதக் கணக்கில் இன்றையதினம் சங்கங்களுக்கு வராமல் பாக்கியுள்ள ஒரு நிலைமை இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட பாக்கித் தொகைகளை எல்லாம் உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் தங்களுக்குத் தேவையான பட்டை, தமிழ்நாடு மாநில பட்டு உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு விற்பனை இணையத்திலோ அல்லது கர்நாடகா பட்டு விற்பனை இணையத்திலோ தான் வாங்கவேண்டும் என்று இருப்பதால் இன்றைய தினம் சங்கங்களுக்குத் தேவையான "கோரா" போன்ற பொருட்களை, பட்டு போன்றவைகளை உடனடியாக வாங்க முடிவதில்லை. எனவே, தேவைப்படுகின்ற நேரத்தில் வெளி மார்க்கெட்டில் குறைந்த விலைக்குக் கிடைக்குமானால், அப்படி வாங்கிக் கொள்வதற்கு நீங்கள் அனுமதி வழங்க வேண்டும் என்று பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பட்டு அனைத்தையும் தமிழ்நாட்டிலேயே விற்பனை செய்து தமிழ்நாட்டில் பட்டு உற்பத்தியினை அதிகரிக்க வழிவகை செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள உண்மையான பட்டு உற்பத்தியாளர்கள் பட்டுப்புழுவிலிருந்து தயாரிக்கும் பட்டினை மட்டும் நீங்கள் தவறாமல் கொள்முதல் செய்து, அதை மட்டுமே பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முழுமையாக விற்கவேண்டும். பட்டு முறுக்கேற்றும் ஆலை முதலாளிகள், வியாபாரிகள் ஆகியோரை தமிழ்நா[illegible]

[திரு. செ. இராமலிங்கம்] [1990 ஏப்ரல் 6

பட்டு விற்பனை இணையத்திலிருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் தயாராகும் பட்டு போக எஞ்சிய தேவைகளுக்கு பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள், கர்நாடகா பட்டு வாரியத்திலோ, கர்நாடகா பட்டு விற்பனை இணையத்திலோ, அல்லது தனிப்பட்ட வியாபாரிகளிடத்திலோ, கொள் முதல் செய்ய நீங்கள் அனுமதி வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

11-05 மணி

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஆயிரக்கணக்கான நெசவாளர் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களில் பலருக்கு குடியிருக்க வீட்டு மனைகள் இல்லாத ஒரு அவல நிலையில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எவ்வாறு நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு மனைச் சட்டத்தைக் கொண்டு வந்து ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கினார்களோ, அதேபோல் 1971 ஆம் ஆண்டு சட்டத்தைப் போல நெசவாளர்களுக்கும் குடியிருப்பு மனைப் பட்டா வழங்க இந்த மாமன்றத்தில் ஒரு சட்டத்தை கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் வெவ்வேறு குடும்பங்களில் இருந்தவர்கள் எல்லாம் இந்த கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பணியில் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்கள். எனவே நெசவாளர் குடும்பத்தினருக்கு மட்டுமே இந்த கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் வேலை என்ற அளவுக்கு அல்லது முன்னுரிமை என்ற அளவுக்கு நீங்கள் ஆணை பிறப்பிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நான் இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அழிந்து போகும் என்று கருதி அச்சப்பட்டு உருவாக்குவது தான் சரணாலயம். ஆனால் அழிந்துவிட்டதோ என்ற ஏக்கப் பெருமூச்சோடு எழுப்பப்படுவது நினைவாலயம். முந்தைய அரசு கைத்தறித் தொழிலுக்கு ஏற்படுத்தியது நினைவாலயம். இன்று எங்கள் ஆட்சியில் ஏற்படுத்தியது பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு எல்லாம் ஒரு நல்ல வாழ்வுக்கு வசதி செய்து ஏற்படுத்தி இருப்பது சரணாலயம் என்று கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த மானியங்கள் மீது என்னுடைய சுருக்கமான சில கருத்துக்களை அவையின் முன் வைத்து விடைபெறுகிறேன். வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூற விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 6] [திரு. எம். அப்துல் லத்தீப்]

பொதுவாக கைத்தறித் துணியைப் பொறுத்தவரையில் இது ஆண்டாண்டு காலமாக ஆயிரம் ஆண்டு காலமாக தமிழகத்திலே பொருளாதாரத்தினுடைய அச்சாணியாக நம்முடைய கிராமப்புற மக்களுடைய பொருளாதார வாழ்வுக்கு அடிப்படையாக விளங்கி வந்து இருக்கிறது என்பதை நாம் நன்கு அறிவோம். இடைக்காலத்தில் அதில் ஏற்பட்டுவிட்ட தொய்வு நம்முடைய கிராம மக்களுடைய பொருளாதாரத்திற்கு மிகப் பெரிய கேள்விக் குறியாக அமைந்துவிட்டது என்ற நிலையில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தினுடைய அரசியல் வானில் உதயம் ஆகிய உடனே குறிப்பாக தமிழகத்தினுடைய கிராமப் பொருளாதாரத்திற்கு ஆக்கம் சேர்த்திட வேண்டுமெனில் உழவும் ஆக்கம் பெறவேண்டும், நெசவுத் தொழிலும் நெறி முறைகளோடு நம்முடைய பாரம்பரியத்திற்கு ஏற்ப தொய்வின்றி நடைபெற வேண்டும் என்பதற்கு அவர்கள் முதல் குரல் கொடுத்தார்கள். அதற்காக தன்னுடைய வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்தார்கள். கடை வீதிகளில் கைத்தறித் துணியை தோளின் மீது சுமந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறியை விற்றதன் வாயிலாக அந்தத் தொழிலுக்கு புதிய ஒரு தெம்பை ஏற்படுத்தி அந்தத் தொழிலினுடைய அவசியத்தை தமிழகம் உணர்ந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

11-10 மணி

கூட்டங்களில் கூட மாலை அணிவிக்கப்பட்ட காலம் ஒன்று இருந்தது. மாலை நேரங்களில் மாலையாக கூட்டங்களில் அணிவிக்கப்பட்டு வந்தன. ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் அதனை மாற்றி மாலைகள் அணிவிக்க கூடாது கைத்தறித் துண்டுகள்தான் அணிவிக்கவேண்டும் என்ற புதிய ஒரு விருப்பத்தை வெளியிட்ட காரணத்தால் தான் மாலைகளுக்குப் பதிலாக கைத்தறித் துண்டுகள் போடுகின்ற பழக்கம் தமிழகத்தில் உருவானது. இன்றைக்கு எங்குபார்த்தாலும், எந்தக் கூட்டத்திற்கு போனாலும் கைத்தறித் துண்டு அணிவிப்பது நம்முடைய மரபு வழி வந்த ஒரு பழக்கம் என்ற அளவிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே, கைத்தறித் துணி, கைத்தறித் தொழில், நெசவுத் தொழில், இந்தத் தொழிலுக்கு முறையான ஆக்கத்தைத் தந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொருளாதார சிந்தனையினுடைய விளக்கமாக நெசவுத் தொழிலினுடைய ஏற்றமும் அதிலும் குறிப்பாக கைத்தறித் துணிக்கு நாம் அளிக்க வேண்டிய உற்சாகமான உதவிகளும் அடுத்தபடியாக அமைந்திருக்கிறது என்று சொன்னால் அதை இன்றைக்கு நாடு ஏற்றுக்கொள்ளும். இந்தத் தொழிலிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரப்படி ஏறக்குறைய 30 இலட்சம் நெசவாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள் மாநிலம் முழுவதும் பொதுவாக பரவி இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இந்தத் தொழில் தென்புல மாவட்

டங்களிலும் வட புல மாவட்டங்களிலும் மிகவும் முக்கியமான தொழிலாக இன்றைக்கு இருந்துகொண்டு வருகிறது. என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வடாற்காடு மாவட்டம், செங்கை-அண்ணா மாவட்டம், இந்த மாவட்டங்களையெல்லாம் எடுத்துக் கொண்டால் கிராமங்களிலே நெசவுத் தொழில் செய்கின்ற மக்கள் இல்லாத கிராமங்கள் இல்லையோ என்ற அளவிற்கு பரவலாக இந்தத் தொழில் கிராமப் பொருளாதாரத்திற்கு அச்சாணியாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் இதற்குக் காரணம், இந்தத் தொழில், விசைத் தறி என்று எடுத்துக்கோண்டால் அதிலே தொழிலாளர் முனைவு என்பது இல்லை. ஆனால் கைத்தறியிலே எடுத்துக்கொண்டால், 'லேபர் ஓரியண்டட்' தொழிலாளர் முனைவு தொழில் என்ற அடிப்படையில் இது மற்ற தொழில்களைவிட ஆட்சியாளர்களுடைய அணைப்பை, பார்வையைப் பெற தகுதியுடைய தொழில் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக மத்திய அரசாங்கத்தினுடைய— நான் இன்றைக்கு இருக்கிற அரசாங்கத்தைச் சொல்லவில்லை— மரியாதைக்குரிய மாண்புமிகு ராம் நிவாஸ் மிர்தா அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு செயல்பட்ட நேரத்தில் அவர்கள் இந்தத் தொழிலை எவ்வளவு தூரம் அலைக்கழித்தார்கள், அதனால் நாடு முழுவதும் எவ்வளவு கொந்தளிப்பு ஏற்பட்டது என்பதை நான் விளக்கத் தேவையில்லை. நூல் விலையை ஏற்றினார்கள். பகுதிக்குப் பகுதி ஒரு விலை என்ற அளவிற்கு அவர்கள் ஏற்றினார்கள். அப்படி ஏற்றிய காரணத்தினாலே பாரம்பரியமான நம்முடைய நூல் ஏற்றுமதியும், கைத்தறித் துணி ஏற்றுமதியும் எவ்வளவு பாதிக்கப்பட்டது என்பதும் அதனால் எவ்வளவு பேர் வேலை இழந்து நின்றார்கள் என்பதும் இன்றைக்கு வரலாற்றினுடைய ஒரு பகுதியாகும். தமிழகத்திலேகூட அதனால் பலபேர் வேலை இழந்தார்கள். வடபுலத்திலே முக்கியமான கைத்தறித் தொழில் கேந்திரங்களாக விளங்கக்கூடிய பல ஊர்களிலே பேராட்டங்கள் நடைபெற்று துப்பாக்கிச் சூடுகள் நடந்து பலபேர் உயிரிழக்கக்கூடிய சூழ்நிலைகள் எல்லாம் உருவானது. வடபுலத்திலே குறிப்பாக, மகாராஷ்டிரா மாநிலத்திலே தானே போன்ற நகரங்களிலே, மலோராம் போன்ற நகரங்களிலே, பர்வலி போன்ற நகரங்களிலே, நாம்பேடு, ஔரங்காபாத் போன்ற நகரங்களிலே எல்லாம் பெருந்த ஊர்வலங்களும் துப்பாக்கிச் சூடுகளும் நடந்து, இந்தத் தொழிலைவிட்டு பலபேர் நகரங்களுக்கு ஓடிவிட்டார்கள். இன்றைக்கு மீண்டும் அந்தத் தொழில் புத்துணர்வு பெறுவது என்பது அரிது அரிது என்று சொல்லக்கூடிய அளவிற்கு கடந்த காலத்தில், மத்திய அரசாங்கத்திலே பொறுப்பு ஏற்றிருந்தவர்கள் இந்தத் தொழிலை அடிப்படையாக நசுக்கினார்கள் என்பது வரலாறு. அதற்கு மாறாக இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற கொள்கை



விளக்கக்குறிப்புகள், புள்ளிவிவரங்கள் கொஞ்சம் உற்சாகம் ஊட்டுவதாக அமைந்திருக்கிறது என்று நான் சொல்ல விரும்பு கிறேன். பொதுவாக நாம் பார்க்கும்போது, இன்றைக்கு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற, அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிற சலுகைகளெல்லாம் போதுமான வைகளாக இருப்பதாக இன்னும் நான் கருதவில்லை. இன் றைக்குக் கூட தறியாளர்கள் பிறருடைய தறியைப் பெற்றுத் தான் அதிலே கூலியாட்களாக.. வேலை செய்யக்கூடியவர் களுடைய எண்ணிக்கைதான் கிராமங்களிலே இன்றைக்கும் அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது.

11-15 மணி

மாஸ்டர் வீவர்ஸ்கள் இன்றைக்கும் அந்தத் துறையில் ஆள் பவர்களாகத்தான் இருக்கிறார்கள். அரசாங்கத்திடம் இன் றைக்கு இருக்கின்ற புள்ளிவிவரங்கள் எப்படி இருந்தாலும், இருக்கிற சூழ்நிலையை எப்படி தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளமுடியும், வேண்டும் என்பதிலே மிக வல்லவர்களாக விளங்கக் கூடியவர்கள். ஏழை நெசவாளர் கள் இன்றைக்கும் எப்படி சூறையாடப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள் என்பதிலே யாருக்கும் இருவேறு கருத்துக்கள் இருக்கமுடியாது என்று நான் கருதுகிறேன். வேண்டுமானால் அரசாங்கத்திற்குக் கிடைக்கின்ற புள்ளி விவரங்கள் அவர்கள் ஏற்படுத்தியிருக்கின்ற கூட்டுறவுச்சங்கங்கள், அந்தச் சங்கங்களின் வாயிலாகத்தான், நெசவாளர்கள் துயர்துடைக்கின்ற வழங்கு கின்ற சலுகைகள், ஆகியவைகளைப் பெறுவதற்கு மிக உற் சாகமாக இருக்கிறதே தவிர, கிராமங்களிலே இருக்கின்ற நெசவாளர்கள் இன்றைக்கும் ஊரிலே இருக்கிற பெருந் தனக்காரர்கள், பெரும் பணக்காரர்கள் இவர்களுடைய தயவை நாடித்தான் இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவைகளைக் கருத்தில் கொண்டு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த வகை யில் நெசவாளர்களின் குறைகளைத் தீர்க்க வேண்டும். இடைத்தரகர்களை நீக்க வேண்டும். மாஸ்டர் வீவர்களை சுரண்டுகிற இடைநிலை மட்டங்களை எல்லாம் தடுக்க வேண்டும் என்பதை அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்போது இருக்கிற புதிய முறைப்படி, புதிய தறிகளை கூட்டுறவின் கீழ் கொண்டு வருவதால் பயன்உண்டா என்பதையும் சிந்திக்க வேண்டும். தறிகள் எல்லாம் கொள்கை அளவில் கூட்டுறவின் கீழ் கொண்டுவர முடிவெடுத்திருப்பதாக இங்கே கொடுக்கப்பட் டிருக்கிற கொள்கை விளக்கப் புத்தகத்தில் சொல்லப்பட்டி ருக்கிறது. தறியாளர்களுக்கு உதவிகளும் செய்வதாக அறி விக்கப்பட்டிருக்கிறது. பருத்தித் தறிகளுக்கு ரூ. 200-ம் கம்பளித் தறிக்கு ரூ. 300 என்றும், பாலியஸ்டர் தறிக்கு

[திரு. எம். அப்துல் லத்திப்] [1990 ஏப்ரல் 6

ரூ. 1,000 என்றும், கூட்டுறவு முறையில் வழங்கப்படும் என்றும், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் யார் யார் இடம் பெறுகிறார்களோ அவர்களுக்குத்தான் இந்த உதவிகள் வழங்கப்படும் என்றும் கூறியிருக்கிறார்கள். அதிலே ஒரு ஆபத்தும் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப்பற்றியும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதைப் பற்றி சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொளகிறேன். பொதுவாக இந்தத் துறையில் அப்படி இருக்கக் கூடியவர்கள் ஏதோ Commercial advent-rism or profit acventerism என்று சொல்லக் கூடிய அளவுக்குக் கிராமங்களில் காரியங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எதற்கு அதிகமாக மானிய உதவி கிடைக்கிறதோ அந்த விஷயத்தில் அவர்கள் கவனம் செலுத்தி அதிலே ஆட்களை அதிகமாகப் புகுத்தத் தயாராக இருப்பார்கள், எனவே பாலியஸ்டர் தறிக்குத் தேவையான ஆட்களை ஏராளமாகக் கொண்டுவந்து 1000 ரூபாய் கிடைக்கிறது என்பதால் பருத்தித் தறியை விட்டுவிட்டு, பாலியஸ்டர் தறிக்கு கொண்டு வந்துவிடுவார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதற்கு வரைமுறை வைக்கவேண்டும். அந்த அடிப்படையில் எந்தெந்த ஊர்களில் பாலியஸ்டர் உற்பத்தி செய்யமுடியும் எந்த அளவுக்கு அங்கே செய்யமுடியும், அதிலே ஈடுபடக்கூடியவர்கள் யார், அவர்கள் அந்தத் தொழிலை முன்னேற்ற ஏற்பாடு செய்வார்களா, அவர்களின் பின்னணி என்ன என்பதைப் பற்றியும் சிந்தித்துப் பார்த்துத்தான் இந்த முறைகளைக் கையாள வேண்டுமே தவிர, பருத்தித் தறிக்கு ரூ. 200, கம்பளித் தறிக்கு ரூ. 300, பாலியஸ்டருக்கு ரூ. 1000 என்று ஒட்டு மொத்தமாகச் சொன்னால், இடையிலே இருப்பவர்களுடைய எண்ணம் இப்படித்தான் போகும். கூட்டுறவுச் சங்கத்தில் அதிகமான உறுப்பினர்களைச் சேர்த்ததாகக் காட்டி, 10 பேர் இருந்தால் 10 ஆயிரம், 100 பேர் இருந்தால் லட்ச ரூபாய் என்ற அளவுக்கு முயற்சி செய்வார்கள், ஆகவே அதைப்பற்றிச் சிந்தித்து செயலாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நம்முடைய தமிழ்நாட்டிலே ஏறத்தாழ 4.27 லட்சம் தறிகள் இருப்பதாக நமக்குக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. 1981-ம் ஆண்டுக்குப் பிறகு எடுத்த கணக்குகளின்படி, இன்றைக்கு நம்மிடம் 4.27 லட்சம் தறிகள் இருப்பதாகவும் அதிலே 2.85 லட்சம் தறிகள் கூட்டுறவுத் துறையில் இருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு உலகம் முழுவதும் கூட்டுறவு என்பது—அது நெசவுத் தொழிலாக இருந்தாலும், விவசாயத் தொழிலாக இருந்தாலும், கூட்டுறவிலே இருக்க வேண்டுமென்று சிந்திக்கின்ற ஒரு காலமாக இப்போது இருக்கின்றது



1990 ஏப்ரல் 6] [திரு. எம். அப்துல் லத்திப்]

11-20 மணி

கூட்டுறவுத் தத்துவம் என்பது மிகச் சிறப்புக்குரிய ஒரு தத்துவம்தான், ஆனால் இந்தத் துறை எந்த அளவுக்கு நம்முடைய நாட்டில் வெற்றி பெற்றிருக்கிறது? அந்தக் கூட்டுறவுத் தத்துவம் வெற்றி பெற்றிருந்தாலும் நடைமுறையில் எவ்வளவு தூரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். நம்முடைய பிரதான நோக்கம் எதுவாக இருக்கவேண்டும் என்றால், நாம் எல்லாவற்றையும் கூட்டுறவுத் துறையாக மாற்றி விட்டோம் என்பதில் மார்தட்டிக்கொள்வதில் பயன் இல்லை. யாருக்கு உதவி கிடைக்கவேண்டுமோ, யாருடைய வாழ்விலே விளக்கேற்றி வைக்க விரும்புகிறோமோ அவர்கள் வரையில் நாம் எதிர்பார்க்கிற அல்லது நாம் கொடுக்கிற சலுகைகள் போய்ச் சேருகின்றனவா, அவர்கள் முறையாகப் பயன் அடைகிறார்களா என்பதுதான் முக்கியமானதே தவிர, இவ்வளவு தறியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களிலே 2.7 இலட்சம் தறியாளர்கள் இன்றைக்குக் கூட்டுறவுத் துறையில் சேர்ந்து விட்டார்கள் என்று சொன்னால் எனக்குக் கொஞ்சம் அச்சம் ஏற்படுகிறது. இன்றைக்குக் கூட்டுறவுத் துறையில் கொஞ்சம் தோல்வி அடைந்துவிட்டோம் என்பதுதான் என்னுடைய கருத்து. அந்தக் கூட்டுறவுச் சங்கத்தை நடத்தக்கூடியவர்கள் எல்லாம் எந்த அளவுக்கு நாம் கொடுக்கிற மானியங்களை முறையாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு வரலாறு இருக்கிறது.

தமிழ்நாட்டினுடைய கூட்டுறவுத் துறை வரலாற்றை எடுத்துக்கொண்டால் அது எந்தத் துறையாக இருந்தாலும் அதிலே ஊழல்கள் நடந்திருக்கின்றன, ஊதாரித்தனங்கள் நடந்து இருக்கின்றன. இறுதியாக கணக்குகளே காட்டப்படாமல் அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளுக்குப் பல சங்கங்கள் ஆளாகியிருக்கின்றன. இறுதியிலே அந்தச் சங்கங்கள் எல்லாம் கலைக்கப்பட்டு விட்டன. அப்படி கலைக்கப்படுவதன் காரணத்தால் அரசாங்கத்திற்கு இவ்வளவு கோடி ரூபாய் நஷ்டம் என்ற வரலாற்றைத் தவிர கூட்டுறவுத் துறையில் இன்றைக்கு வேறு வகையில் எது சிறந்து விளங்குகிறது என்பது தெரியவில்லை. வேண்டுமானால் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தைப் பற்றி கொஞ்சம் சொல்வார்கள். அது மிகவும் இலாபகரமாக இயங்குகிறது. 1989–90 ஆம் நிதியாண்டில் ஏறக்குறைய 150 கோடி ரூபாய்க்கு விற்பனை நடந்திருக்கிறது என்றெல்லாம் நீங்கள் சொல்லலாம். ஆனால் இதில் இருக்கக்கூடிய ஒளிமயமான பகுதியை மட்டும் பார்க்காமல் ஒளி காட்டுகிற பகுதிக்குப் பின்னால் என்ன இருக்கிறது என்று பார்த்தால் உங்களுக்குத்தெரியும். அதில் எவ்வளவு இருள் நிறைந்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். எனவே,

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1990 ஏப்ரல் 6

நான் ஏதோ "கோ-ஆப் டெக்ஸ்" பற்றிச் சொல்லும் போது, கோ-ஆப் டெக்ஸைத் தனிமைப் படுத்திச் சொல்கிறேன் என்று தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நினைக்கக் கூடாது. பொதுவாக கோ-ஆப்பரேட்டிவ் சொசைட்டி என்றால் அது கோ-ஆப்பரேட்டிவ் ராபரீஸ் என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. நீங்கள் எல்லாம் என்னை மன்னிக்கவேண்டும் இந்த வார்த்தையைப் பயன்படுத்துவதற்காக.

"Co-operative Societies mean co-operative robberies
To commit robberies, several people join together.

என்ற அளவுக்கு வருமேயானால் அதுவும் குறிப்பாக கிராமப் பொருளாதாரத்திற்கு மிகப் பெரிய ஆதாரமாகத் திகழ்கிற இந்த நெசவுத் தொழிலில் ஏழை எளியவர்களாக, வாடிக் கொண்டிருக்கின்ற, வதங்கிய வயிற்றைப் பெற்றிருக்கின்ற அந்த ஏழ்மையின் சின்னமாக விளங்குகின்ற நெசவாளி, அவனுக்குக் கிடைக்கவேண்டிய பயன்களை எல்லாம் இடைத்தரகர்கள் சாப்பிடுகிறார்கள். கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரிலே அங்கே கூட்டுக்கொள்ளை நடந்துகொண்டிருக்கிறது. அதைக் கட்டுப் படுத்துவதற்கு இன்றைக்கு இருக்கிற சட்டம் போதுமான வகையில் பயன்படவில்லை என்ற அளவுக்குத்தான் நாமெல்லாம் கவலைப் படுகிறோம். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது இந்த மாநிலத்தில் 181 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இவைகளை எல்லாம் நன்கு கண்காணித்து, நாம் எதிர்பார்க்கிற பயன் நெசவாளர்களுக்குக் கிடைக்கிற வகையில் நீங்கள் நடவடிக்கை மேற்கொண்டு அதில் வெற்றி அடைவீர்கள் என்று சொன்னால் இந்தச் சங்கங்களைப் பொறுத்தவரையில் மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற நோக்கம் நிறைவேறும்; அரசும் முழு திருப்தியைப் பெற முடியும். இல்லையெனில் இதனால் தீமைகள்தான் விளையுமே தவிர நன்மைகள் விளையாது என்று உறுதியாக நான் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். குறிப்பாக இந்த 181 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 21 சங்கங்கள்தான் ஆதிதிராவிடர்களுக்கு எனவும், பெண்களுக்கு 10 சங்கங்கள் எனவும் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. சமுதாயத்தில் வருமானங்களை அதிகமாக்குவதற்கு மட்டுமல்ல; சமுதாயத்தில் ஒரு கூட்டுறவு உணர்ச்சி ஏற்பட வழி செய்யவேண்டும். சமுதாயத்தில் இன்றைக்கு இருக்கிற ஏற்றத்தாழ்வு அகலவேண்டும்.



1990 ஏப்ரல் 6] [திரு. எம். அப்துல் லத்தீப்]

11-25 மணி

குறிப்பிட்டவர்கள் குறிப்பிட்ட தொழிலைத்தான் செய்ய வேண்டும், குறிப்பிட்டவர்கள் குறிப்பிட்ட இடத்தில்தான் வாழ வேண்டும் என்ற அளவுக்கு இருக்கிற இன்றைய சமுதாய அமைப்பை மாற்றுவதற்கு நம்முடைய தொழில் முறைகளும் அடிப்படையாக இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு நாம் செயலாற்ற வேண்டும். எனவே 21 சங்கங்கள்தான் ஆதிதிராவிடர்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து, ஆதிதிராவிடர்களுக்கு இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை இன்னும் அதிகமாக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் ஆதிதிராவிடர்கள் என்றால் குறிப்பிட்ட தொழில்களைத்தான் செய்யக்கூடியவர்கள் என்ற நிலை மாறி அவனும் நெசவுத் தொழில் செய்கிறான், உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்கிறான் உடுப்பதற்கு வழி வகுக்கிறான். ஆதிதிராவிடன் கூட துணியை நெய்து மற்றவர்களுக்கு வழங்குகிறான் என்ற பெருமையைச் சேர்த்திடும் வகையில் ஆதிதிராவிடன் இந்த தொழிலுக்குத்தான் பிறந்தவன் என்பதல்ல, அவர்களிடத்திலே திறமை இருக்கிறது, அவன் எத்தொழிலும் செய்வதற்கு ஏற்புடையவன், அவனிடத்திலே அந்த தகுதி இருக்கிறது என்பதனை நிலை நாட்டும் வகையில் 181-லே என்னைக் கேட்டால் 81 தொழிற்சங்கங்கள் ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கித் தருவதுகூட ஏற்புடையதாக இருக்கும். அதே நேரத்தில் பெண்களுக்கு எல்லாத் துறைகளிலும் 30 சதவிகிதம் என்று சொல்லிவிட்டார்கள். ஏன் இதிலேகூட ஒரு 30 சதவிகிதம் ஒதுக்கித் தாருங்களேன். 181 கூட்டுறவுச் சங்கங்களில் பெண்களுக்கு பத்தே பத்து என்று வைத்திருக்கிறீர்கள்? பத்தே பத்து என்றால் பத்துமா? இல்லை. எனவே தயவுசெய்து அதை உயர்த்துங்கள். ஓரளவுக்கு உங்கள் கொள்கைப்படி 30 சதவிகிதமாவது அவர்களுக்கு உயர்த்தித் தாருங்கள். நான் பார்த்திருக்கிறேன். பெண்கள் நெய்கின்ற துணி இருக்கின்றதே அது ரொம்ப நேர்த்தியாக இருக்கிறது. அவர்களுடைய அந்த உடற்கூறுகள் அவர்களுடைய விரல்கள் எல்லாம் இருக்கின்றனவே அவை ஆண்களை விட மிக நளினமான முறையிலே இருக்கின்றன. இந்த கைத்தறித் துணி மட்டுமல்ல. நெய்யும் தொழிலைச் செய்யும்போது அது நெய் வடியும் தன்மையில் அந்தத் துணி அமைந்துவிடுகிறது. அது அவர்களுடைய கையிலே ஏற்றியிருக்கின்ற இயற்கையான கை வண்ணம். எனவே அவர்களுக்கு அதிக வாய்ப்பு தாருங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

அடுத்து, நகர்ப்புற வளர்ச்சி ஏனென்றால் நான் நகர்ப்புறம், சென்னையினுடைய சட்டமன்ற உறுப்பினர். அதைப் பற்றி பேசவில்லை.

(குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் திரு. நூர்முகமது ஒரு விளக்கம் கேட்கிறார்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கைத்தறியினுடைய வண்ணம் எதைப் பொறுத்தது என்று விளக்கினார். நான் ஒரு சந்தேகத்தைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். கைத்தறித் துணியினுடைய வண்ணமும் அழகும் அதை நெய்கின்றவர்களுடைய அழகைப் பொறுத்தது அல்லது திறமையைப் பொறுத்தது என்பதை அவர்கள் தெளிவுபடுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய எண்ணத்தையும் பொறுத்தது, அவர்களுடைய திறமையையும் பொறுத்தது. ஒரு பெண் ஒரு சேலையை நெய்யும்போது, தனக்கு வேண்டிய துணியைத்தான் நெய்கிறேன் என்ற உணர்வோடு நெய்தால் அந்த எண்ணமே தனி எண்ணம். ஆண் நெய்யும் போது வேறு எண்ணம் வருகிறது. எனவே குறிப்பாக பெண்களுக்குரிய துணிகளைப் பெண்களே நெய்யும்போது அந்த எண்ணம் மிகவும் சிறப்பாக உரிய எண்ணமாக, சுய உணர்வுள்ள ஒரு எண்ணமாக இருக்கிறது. ஆகவே அந்த எண்ணம் இருக்கின்ற காரணத்தினாலேயே திறமையும் அதிகமாக வெளிப்படுகிறது. நான் எண்ணும் வண்ணம் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அளவுக்கு அவர்களுடைய கற்பனை அவருடைய வயதிற்கு ஏற்ப இருக்கும். என்னுடைய கற்பனை என்னுடைய வயதிற்கு ஏற்ப இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்த கோ-ஆப்டெக்ஸிலே பெண்கள்தான் கைத்தறி ஆடைகள் அணிந்து அழகாக காட்சி தந்து பெண்களைத் தான் விளம்பரத்தில் காண்பிக்கின்றார்கள். அது பெண்களுக்கு என்று தனிப்பட்ட முறையிலே கொடுக்கப்பட்ட சலுகை, அதே போல் ஆண்களுக்கு அதனுடைய ஆடை அலங்காரத்தை காண்பிப்பதற்கு அப்படி ஒரு வழி வகை செய்வதற்கு அந்தத் துறை பின்பற்றுவதற்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை சொல்வார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனை நல்ல யோசனை. அதுவும் குறிப்பாக தங்கபாண்டியன் போன்ற ஒரு ஆண் அழகனை தேர்ந்தெடுத்து அவர்களுக்கே அந்த கைத்தறித் துணியை உடுத்தி நாம் நிற்க வைத்து விடலாம். எனவே, அவர்களுடைய யோசனையை நானும்



வலியுறுத்துகிறேன். அதிலே தவறு இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆண்களுக்குக் கூட அப்படி ஒரு உடையை கொடுத்து ஆண் உருவிலேகூட செய்யலாம். ஏனென்றால் இது இயற்கை........

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது உறுப்பினர் என்று குறிப்பிடுகின்றபோது குறைந்த வயதுடையவர் என்பதால் அப்படிப்பட்ட எண்ணத்திலே சொல்லியிருக்கிறார் என்று சொன்னார்கள். வயதிலே அதிகமானவர்கள்தான் இந்த விஷயத்திலே அனுபவம் அதிகம் ஆனவர்களாக இருக்கின்றார்கள். எனவே தான் என்னைக் காட்டிலும் பெண்கள் நெய்வதிலே அதிகமான அக்கறை எடுத்து இங்கே விளக்கினார் என்று நான் கருதுகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுபவம் அதிகம் என்று சொன்னால் அதிலேயே ஊறித் திளைத்து இவ்வளவுதானா என்று தெரிந்து விட்டவர்கள்தான் அனுபவித்து சொல்லியிருக்கிறார்கள். எனவே அதைப் பற்றியே யாருமே சிந்தித்துகொண்டு இருப்பதில்லை புதியவர்கள் எது எது என்று தெரியாதவர்கள் அதைப் பற்றி சிந்தித்துக்கொண்டு இருப்பார்கள் என்று ஆர்வத்திலேதான் நான் சொன்னேனே தவிர வேறல்ல. எனவே நான் அதைப்பற்றியும் கேட்டுக் கொள்கிறேன்.

11-30 மணி

நான் இந்த நகர்ப்புற வளர்ச்சியை பற்றி சொல்கிறேன். பயங்கரமான ஒரு சூழ்நிலையை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கின்றது. இந்த சென்னை நகரம் அப்படித்தான் போய்க் கொண்டிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்திலே நான் ஒரு எச்சரிக்கையாகவே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு, தமிழகத்தை எடுத்துக்கொண்டால், 434 நகர்ப்புறங்களில் மட்டும் வாழ்கிறார்கள். மாநிலத்தினுடைய பெரு நகர் என்று பார்க்கும்போது சென்னையிலே வாழ்பவர்கள் அதிகம் பேர், ஜனநெரிசல் இங்கே தான் அதிகம். கிராமப்புறங்களில் இருக்கிற மக்கள் பல்வேறு காரணங்களால், தொழில் இல்லாதது, தொழில் கற்க, கிராமப்புறங்களில் ஏற்பட்டிருக்கிற புதிய சிந்தனை போன்ற பல்வேறு காரணங்களால் எல்லோரும் நகரில் வாழ, குறிப்பாக சென்னை நகரை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். இதனால் ஏற்படக்கூடிய பாதகமான நிலையை இப்போதே நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இல்லையென்றால், மிகப் பெரிய பொருளா

தாரச் சிக்கல், சமுதாயக் கொந்தளிப்பே சென்னை நகரில் ஏற்படக்கூடிய அபாயம் இருக்கிறது. ஏற்கெனவே இங்கே வாழ்பவர்களுக்கு குடிநீர் இல்லை. குடிநீருக்கு தவம் கிடக்கிறார்கள் மக்கள். யார் யாரோ எதற்கெல்லாமோ தவம் கிடக்கிறார்கள். பகீரதன்கூட பல்லாண்டுகள், கற்பகோடி வருஷங்கள் தவம் இருந்தான். அதன் பயனாக கங்கையே இவ்வுலகம் வந்தாள் என்பது வரலாறு. ஆனால் சென்னை நகர மக்கள் இன்றைக்கு குடிக்க, குளிக்க தண்ணீர் இல்லாமல், இன்னும் சொல்லப்போனால் ஏதாவது தேவைக்கு அவசரமாக வேண்டுமென்றால், தண்ணீர் அப்பேர்பட்ட நேரத்தில் இல்லையென்றால் மிகப் பெரிய அபாயமான கட்டத்தை பரிதாபமாக கடக்க வேண்டிய காலக் கட்டத்தில் சென்னையில் வாழ்கிற மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கொசுத் தொல்லை, சுகாதார வசதியின்மை, ரோடுகளில் நெரிசல், அடிக்கடி ஆபத்துக்கள், விபத்துக்கள், காலேஜ்களில் இடம் இல்லை, பள்ளிகளில் இடம் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை சென்னை நகரில் இருப்பதோடு கூட 1950-ல் ஒரு கிரவுண்ட் வீட்டுமனை விற்கப்பட்ட விலை என்ன, இன்றைக்கு விலை என்ன என்பதைப் பற்றி எல்லாம் சிந்திக்க வேண்டும். ஏராளமாக குடிசைகள் ஏற்பட்டிருப்பதால் நகரில் ஏற்பட்டிருக்கிற விளைவுகளை எல்லாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு புற நகரங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். உதாரணமாக மறைமலையடிகள் நகர். முதன் முறையாக இந்த அவையில் இந்த மறைமலையடிகள் நகர் என்கிற பெயரை நான் உச்சரிக்கிறேன். யாரும், தயவுசெய்து, தவறாக ஒன்றும் நினைக்க வேண்டாம். புறநகர் பகுதியாக அது இருப்பதால் உச்சரிக்கிறேன். வேறு யார் யாரோ அந்தப் பெயரை தவறாக உபயோகப்படுத்தினார்கள். நான் இங்கே தேவைக்கு உச்சரிக்கிறேன். சென்னை நகரை ஒட்டி அது இருக்கிறது. அதுபோல சென்னை நகரை ஒட்டி நிறைய நகர்களை ஏற்படுத்த வேண்டும். சென்னை நகரிலுள்ள குடிசைகள் பற்றி அதற்குரிய டிஸ்கசன போது பேசுகிறேன். இன்றைக்கு அர்பன் டெவலப்மென்ட் ஸ்கீம் என்று வருகிறபோது மறைமலை நகரில் மட்டும் 1,992 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதனால் சென்னை நகரிலுள்ள ஜனத் தொகையில் ஒரு பகுதி அங்கே போயிருக்கிறது. இதேமாதிரி கும்முடிப்பூண்டி வரை, இந்தப் பக்கம் செம்பரம்பாக்கம் அல்லது பூந்தமல்லி வரை, ஏன் ஸ்ரீபெரும்புதூர் வரை கூட போகலாம். இப்படி புறநகர் பகுதிகளைத் தேர்ந்தெடுக்கும்போது மின்சார ரெயில் ஓடும் பகுதிகளாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்தால் ஜனத்தொகை நெரிசல் சென்னையில் குறைவதோடு அங்கே வாழ்கிற மக்களும் கஷ்டப்பட மாட்டார்கள். அந்த மாதிரி திட்டங்களை வகுக்க வேண்டும்.



அடுத்தபடியாக, குடிசை மாற்று வாரியத்திற்காக அல்லது சென்னை நகர வளர்ச்சிக்காக கடந்த காலத்தில் ஒதுக்கப்பட்ட தொகையைப் பார்த்தோமேயானால் பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களுக்கு எல்லாம் 100 கோடி ரூபாய், 150 கோடி ரூபாய் என்கிற அளவுக்கு வழங்கினார்கள். சென்னைக்கும் ஒதுக்கப்பட்டது. ஆனால் அப்போது சென்னைக்கு அதை ஏன் அளிக்கவில்லை அல்லது அங்கிருந்து ஏன் அதை முறையாக கேட்டுப் பெறவில்லை என்பது என்னுடைய கேள்வி. அதை இப்போதாவது பெற வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு. மத்தியிலே இருப்பவர்கள், கேட்டால் தான் கொடுப்போம் என்கிற ஒரு நிலை, ஓர் உணர்வு அவர்களிடம் இருப்பதால் அதற்கேற்ப ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும். அழுத பிள்ளைக்குத் தான் பால் கிடைக்கும். அந்த அளவில் இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதுபோல மாநகராட்சிகளுக்கான தேர்தல் முடிந்தவுடன் சில நல்ல காரியங்கள் எல்லாம் இங்கே நடைபெறும் என்று எதிர்பார்க்கிறேன். அப்போது மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் அதைப் பார்த்துக் கொள்வார்கள். அந்தப் பெரும் சுமை நம்முடைய தலையிலே வைக்கப்பட்டிருக்கிறது. இன்று சென்னை நகரத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வேலை என்ன என்றால், விளக்கு எரியவில்லையா, சாக்கடை எடுக்கவில்லையா, ட்ரெயினேஜ் சரியில்லையா, தண்ணீர் வரவில்லையா, ரோட் சரியாக இல்லையா, எல்லாவற்றையும் பார்க்க வேண்டியது தான் அவர்கள் வேலை. அதற்காக சீக்கிரம் மாநகராட்சித் தேர்தல்களை நடத்தி, எங்கள் தலையிலே சுமத்திய சுமையை அவர்கள் தலையில் வைக்க வேண்டுமென்று நினைக்கிறோம். அதற்கு வருங்காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

11-35 மணி

மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். மிகப் பெரிய ஒரு பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் புறநகர் பஸ் நிலையங்களை நிறைய ஏற்படுத்த வேண்டும். இங்கே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். எல்லா பஸ்களும் சென்னை நகரத்திற்கு வர வேண்டும், இங்கே மத்திய பஸ் நிலையத்திலிருந்துதான் போக வேண்டுமென்ற நிலையை மாற்றி, தெற்கேயிருந்து வருகிற பஸ்களுக்கு தெற்கேயுள்ள புறநகர்ப் பகுதியில் ஒரு பஸ் ஸ்டாண்டும், வடக்கேயிருந்து வருகிற பஸ்களுக்கு வடக்குப் பகுதியில் ஒரு பஸ் ஸ்டாண்டும் ஏற்படுத்தி, தேவையில்லாமல் வருகின்ற வாகனங்களைத் தடுத்து நிறுத்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1990 ஏப்ரல் 6

இன்றைக்கு சென்னை நகரில் இரும்பு வியாபாரம், எஃகு வியாபாரம், காயிலான் கடைகள் இருக்கின்றன. அவைகள் சென்னையிலே இருந்து கொண்டு, எவ்வளவோ துன்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. நானும், மாண்புமிகு அமைச்சர் திரு. கோ. சி. மணி அவர்களும் இரண்டு தினங்களுக்கு முன்பு என்னுடைய தொகுதியில் ஒரு பகுதியைப் பார்க்கச் சென்றோம். எங்களால் நம்ப முடியவில்லை. அங்கே தெருவிலே கடைகள் வந்து சேர்ந்துவிட்டன. இன்றைக்கு கொத்தவால் சாவடியை வேறு இடத்திற்கு மாற்றி இருக்கிறார்கள். அதைப்போல இவைகளையும் அகற்றிட ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இவைகள் எல்லாம் வளர்ந்து வருகிற சென்னை நகரிலே இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு மிகப் பெரிய பூதாகாரமான பிரச்சினைகள் உருவாக்க இருக்கின்றன. அதற்கு, முன்னாலே தடுப்பு நடவடிக்கையாக இவைகளைப் பரவலாக்க வேண்டும். வியாபாரத்தைப் பரவலாக்க வேண்டும். பஸ் ஸ்டாண்டுகளைப் பரவலாக்க வேண்டும், குடியிருப்புகளை பரவலாக்க வேண்டும், கல்லூரி—பள்ளிகளைப் பரவலாக்க வேண்டும் என்கிற திட்டம் இருந்தால் ஓரளவுக்கு நம்முடைய பிரச்சினைகளைத் தீர்த்து, நகரம் விரிவு அடைவதற்கும், முன்னேற்றம் அடைவதற்கும், வளர்ச்சி அடைவதற்கும் வழி வகுக்கும் அதற்கு இந்த அரசு உரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நேரமில்லாத காரணத்தால் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நேரம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்து மணித் துளிகளில் முடிப்பதாக எனக்கு வாக்குறுதி அளித்திருக்கிறீர்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்திப் அவர்கள் நேரமில்லை என்று சொன்னார்கள். அதற்கு பதில் சொன்னேன். கைத்தறித் துறை, நகர்ப்புற வளர்ச்சி ஆகிய இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களை முன்னிலைப்படுத்திப் பேச ஆசைப்படுகிறேன். தேசிய முன்னணி ஆட்சி மத்தியில் வந்தவுடன் நகர்ப்புற சொத்துக்களுக்கு உச்சவரம்பு கொண்டு வருவோம் என்று சொல்லி இருக்கிறார்கள். வந்த பிறகு சொல்லியிருக்கிறார்கள். அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுத்திருக்கிறார்கள். இன்னும் அது பற்றிய முழுமையான



1990 ஏப்ரல் 6] [திரு. பி. எச். பாண்டியன்]

கொள்கை விளக்கத்தை, எந்த அடிப்படையில் முழுவதும் நகர்ப்புற சொத்து உச்சவரம்பு வரப் போகிறது என்பதைத் தெளிவுபடுத்தவில்லை. ஆகவே நம்முடைய அரசு, தேசிய முன்னணி அரசோடு தொடர்பு கொண்டு, இந்தியாவில் எப்படி நகர்ப்புற சொத்து உச்சவரம்பு கொண்டு வரலாம் என்பதற்கான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

11.40 மணி

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு லட்சக் கணக்கான மக்கள் நகரத்தில் தொழிலைத் தேடி, பிழைப்பைத் தேடி உள்ளே வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி வருகின்ற காரணத்தால்தான் ஜன நெருக்கடி அதிகமாகி, இருக்கக் கூடிய சிறிய கட்டிடங்கள் எல்லாம் இன்றைக்கு உடைக்கப்பட்டு, பெரிய பெரிய மாடிக் கட்டிடங்களாக உயர்ந்து கொண்டிருக்கின்றன. 40, 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஓட்டு வீடுகளை வாங்கி, முக்கியமான இடங்களில் அதைத் தரைமட்டமாக்கி, பெரிய பெரிய மாடிக் கட்டிடங்களை எழுப்பக்கூடிய கட்டாயத்திற்கு வந்திருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன், சென்னையில் நிலத்தின் மதிப்பும், நிலத்தின் விலையும் இன்றைக்கு அதிகமாகப் போய்விட்டது. காரணம் 50 பாடிகள், 50 வீடுகள், 50 ஃபிளாட்ஸ் சேர்த்துக் கட்டுகின்ற காரணத்தினால் தான் நிலத்தின் மதிப்பு இன்றைக்கு அதிகமாகப் போய் இருக்கிறது. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், அதிமாக இடங்கள் இருக்கின்றன. இது பம்பாய் நகரம் அல்ல. பம்பாய் கடல் சூழ்ந்த நகரம் ஆகையினால் அங்கு பரப்புள்ள இடங்களில் வீடு கட்ட முடியாததால் மாடி வீடுகள் கட்டுகிறார்கள். சென்னையைப் பொறுத்தவரையில் இது தேவையில்லாத ஒரு பிரச்சினை. இன்றைக்கு பொருளாதார நெருக்கடியை வெளியிலே இருந்து வந்தவர்கள் சாதாரண நடுத்தர மக்களிடையே ஏற்படுத்தி இருக்கின்றார்கள். வெளியிலே இருந்து வந்தவர்கள் தான் இன்றைக்கு இந்த மாநில மக்களினுடைய உரிமையையே, சொத்து உரிமையையே பறித்து விட்டார்கள். இங்கு இருக்கக் கூடியவர்களுக்கு நிலம் கிடையாது ; ஃபிளாட்ஸில் ஆகாயத்தில் போய் வாழக்கூடிய ஒரு நிலையை உருவாக்கி இருக்கின்றார்கள். பல ஆண்டுகளாக இது நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து ஆக வேண்டும். வேண்டுமானால் நகரத்தை இங்கே இருந்து செங்கல்பட்டு வரை இன்னும் தள்ளிக் கொண்டு விஸ்தரிப்புச் செய்யலாம். அப்படிப் புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கும்போது அரசாங்கம் அந்த நிலையை எடுக்க வேண்டும் ; அந்த ஆலோசனையைச்

சொல்ல வேண்டும். இங்கே இனிமேல் வீடு கட்ட முடியாது; இந்த இடத்தில் மட்டும் நாங்கள் உங்களுக்கு அனுமதி தருகிறோம் என்று சொல்லலாம். அப்படிச் சொல்லாமல் இருப்பீர்களேயானால் இன்னும் அதிகமான உயரமான கட்டிடங்கள் வந்து சுற்றுப்புறச் சூழலே அழிந்து போகக்கூடிய அளவுக்கு நிலைமை உருவாகிவிடும். ஆகவே அந்த நிலையைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

லே-அவுட்களில் அப்ரூவ்டு மற்றும் அன்-அப்ரூவ்டு என்று இரண்டு வகை இருக்கின்றன. இன்றைக்கு சென்னை நகரத்திலே அப்ரூவ்டு கிரவுண்டாக இருந்தால் ஒரு விலை இருக்கிறது; அன்-அப்ரூவ்டு ஆக இருந்தால்—அவர்கள் 'நாட்-அப்ரூவ்டு' என்று சொல்வதில்லை—ஒரு விலை இருக்கிறது. அப்ரூவ்டு லே-அவுட்டில் ஒரு கிரவுண்டு, அன்-அப்ரூவ்டு லே-அவுட்டில் ஒரு கிரவுண்டு வாங்குகிறார்கள். அன்-அப்ரூவ்டு லே-அவுட்டிலே வாங்கி எல்லோரும் இப்போது வீடு கட்டுகிறார்கள். அதிலே வீடு கட்டியவர்கள் எப்படியாவது அரசாங்கத்திடம் கருணை பெற்று அதை சரிக் கட்டிவிடலாம், லீகலைஸ் பண்ணி விடலாம், ரெகுலரைஸ் பண்ணிவிடலாம் என்ற ஒரு நிலையில் இன்றைக்கு தவறுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களை எல்லாம் சர்வே எடுத்து, எந்தெந்தப் பகுதிகளில் இப்படி காலி இடங்கள் இருக்கின்றன, எங்கெங்கே அப்ரூவ்டு லே-அவுட்டுகள் வாங்கலாம், எங்கெங்கே அப்ரூவ் பண்ணுவதற்கு தகுதி இல்லை என்பதை அரசாங்கம் சர்வே எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே முன் வைக்கின்றேன்.

ஏற்கெனவே நான் நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தில் பேசும்போது எனது கருத்தை அன்றைக்கே சொல்லிவிட்டேன். அனுமதி இல்லாமல் கட்டப்படக்கூடிய பெரிய பெரிய மாடிக் கட்டிடங்களுக்கு நீதிமன்றத்தில் தடை இருக்குமானால் அந்தத் தடையை நீக்குவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுங்கள்; நீதிமன்றத்தில் தடை இல்லை என்றால் நீங்களே உங்களுடைய அதிகாரிகளை விட்டு நோட்டீஸ் கொடுக்கச் சொல்லி அவைகளை உடைத்து விடுங்கள், தகர்த்து எறியுங்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி இருந்தால் தான் அரசாங்கம் என்ற ஒரு மரியாதை இருக்கும்; சட்டம் என்ற ஒரு மரியாதையும் இருக்கும். இன்றைக்கு மரியாதை குறைந்து கொண்டே போகிறது. சட்டத்தை மதிப்பதே கிடையாது. சட்டத்தினால் உருவாக்கப்பட்ட நிறுவனங்களையும் யாரும் மதிப்பது கிடையாது; அரசாங்கத்தை மதிப்பது கிடையாது என்ற நிலை மாற வேண்டும். தவறு செய்பவர்களுக்கு ஒரு எச்சரிக்கை கொடுக்கலாம். இனிமேல் அதைச் செய்யாதீர்கள் என்று எச்சரிக்கை கொடுக்கலாம். மீண்டும் மீண்டும் அதை நாங்கள் செய்வோம்; செய்தால், என்ன





நடவடிக்கை அரசாங்கத்தால் எடுக்க முடியும் என்ற நிலை அவர்களுடைய உள்ளத்தில் எழுந்து கொண்டு இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்று சென்னை நகர வளர்ச்சி தடைபடுவதற்குக் காரணம் என்னவென்றால் சாலைகள் தான். முதலில் சாலையைப் போடுகிறார்கள். நல்ல சாலை போடப்பட்ட 3 மாத காலத்தில் தொலைபேசி டிபார்ட்மென்ட் வந்து, அத்துறையைச் சேர்ந்தவர்கள் தோண்டுகிறார்கள்: கேட்டால் லைன் போடுகிறேன் என்பார்கள். பிறகு மீண்டும் அந்தச் சாலை நிரப்பப்படும். பின்னர் நகராட்சியிலிருந்து வருவார்கள்; நாங்கள் சாக்கடைத் திட்டத்தின் கீழ் தோண்டுகிறோம் என்பார்கள், பிறகு வாட்டர் போர்டை சேர்ந்தவர்கள் வருவார்கள். இப்படி அவர்கள் தோண்டித் தோண்டி, சாலைகள் மோசமான நிலையில் இருக்கின்றன. அவர்களுககு இடையில் கோ-ஆர்டினேஷன் இல்லை. நகர்ப்புறத்தில் இருக்கிற எல்லாத் துறைகளும், அலுவலர்களும் ஒன்றாக ஒருங்கிணைந்து செயல்படுவார்களேயானால் இதனால் இழப்பு ஏற்படாது. இப்பொழுது நகரம் முழுவதும் எங்கு பார்த்தாலும் குண்டும் குழியுமாக இருப்பதற்குக் காரணம் அந்த அலுவலர்கள், துறைகள் எல்லாம் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்காததுதான் என்பதை நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன். ஒரு சாலையைப் போட்டு விட்டால் அதை 10 ஆண்டுக் காலத்திற்கு தோண்டக் கூடாது. ஒரு கேபிளை போட்டுவிட்டால் 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு தோண்டக் கூடாத நிலைக்கு நல்ல கேபிளாகப் பார்த்துப் போட வேண்டும். தொலைபேசித் துறையானாலும், நம்முடைய அரசின் சாக்கடைத் திட்டத்தின் கீழ் செயல்படுகிற துறைகள் ஆனாலும் அவைகள் எல்லாம் ஒருங்கிணைந்து நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

11-45 மணி

அடுத்து, நெசவாளர்கள் பிரச்சினை. இன்றைக்கு நெசவாளர்கள் எந்த அளவுக்கு அல்லலுக்கு ஆளாகி இருக்கிறார்கள்? இன்றைக்கு மோட்டா இரக நூல் மூலம் [illegible] நெசவு செய்து வருகிறவர்களுக்கு பல்வேறு குறைபாடுகள் இருந்து கொண்டு இருக்கின்றன. அவையே தொழிலாக வைத்திருப்பவர்களுக்கு அந்த மூலப் பொருள்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. நலிந்தவர்களுக்குக் குரல் கொடுப்பதற்கு, அவர்கள் வேகமாகச் செயல்படுவதற்குக் குரல் கொடுக்க இன்றைக்கு எதிர்க் கட்சிகளே இல்லை. இன்றைக்கு நெசவாளர் பிரச்சினைகளைப் பற்றிப் பேசக்கூடிய இந்தக் கால கட்டத்தில் நம்முடைய எதிர்க்கட்சிகள் அவர்களுக்காக இல்லை. அதற்காக அந்தச் சாதாரண

நலிந்த மக்களை விட்டு விடக் கூடாது. என்னுடைய தொகுதியில் நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். கள்ளக்குறிச்சி, வீரவநல்லூர், சேரன்மாதேவி, பத்தமடை, புதுக்குடி ஆகிய இடங்களில் அதிகமாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நெசவாளர்களுக்கெல்லாம் கிடைக்க வேண்டிய மானியம் சரியாகப் போய்ச் சேருகிறதா, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நூல்கள் சரியாகப் போகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய நெசவாளர்களுக்குப் போய்ச் சேர வேண்டியதை யாராவது தடுத்திருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டாமா? பேசி விட்டு விடக் கூடாது. இந்த அவையிலே பேசியதே போதும் என்று விட்டு விட்டால், தவறு செய்பவர்கள் செய்து கொண்டேதான் இருப்பார்கள். சென்ற முறை பேசும் பொழுது பல்வேறு குறைபாடுகளைச் சொன்னீர்கள். சாதாரண, சாமானிய நெசவாளர்களுக்குப் போய்ச் சேர வேண்டிய மானியம் போய்ச் சேரவில்லை என்றால் சம்பந்தப்பட்டவர்கள் யார் காரணமோ அவர்கள் மீது நடவடிக்கையை சட்டத்தின்படி எடுக்க வேண்டும். காரணம், அவர்களுக்காக வாதாடுவதற்கு வேறு இடம் இல்லை. நெசவாளப் பெருமக்கள் ஒன்று சேர முடியாது. தமிழகம் முழுவதும் பரவிக் கிடக்கின்றார்கள். அவர்களின் சார்பிலே நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த நெசவாளப் பெருமக்களுக்குப் போய்ச் சேர வேண்டிய மானியம் போய்ச் சேர்ந்திருக்கிறதா? சேராமல் இருந்தால் நீங்கள் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் இங்கே வெளியிட்டதைப் போல அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். நடவடிக்கை என்றால், பேசினால் மட்டும் போதாது. அந்தப் பணம் வர வேண்டும். எங்கே போயிற்றோ அந்தப் பணம் வர வேண்டும். டீக் கடைக்குப் பணம் வர வேண்டும்; பார்பர் ஷாப்புக்குப் போன பணம் வர வேண்டும். போன தடவை அதைத்தானே சொன்னீர்கள். அதாவது போகஸ் சொசைட்டியிலே, அப்பொழுது விலாசத்தில் பார்க்கும் பொழுது அங்கே டீக்கடை இருக்கிறது என்று போன தடவை சொன்னீர்கள். அந்த டீக்கடைக்குப் போன அந்தப் பணம் வர வேண்டும் அல்லவா? பேசி விட்டுப் போனதிலே பிரயோஜனம் கிடையாது. ஆகவே, அந்தச் சாதாரண, சாமானிய நலிந்த மக்களுக்குப் போய்ச் சேர வேண்டிய நன்மைகளை மீட்டு நாம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். போன தடவை அந்த நன்மைகள் அவர்களுக்குக் கிடைக்காத காரணத்தால் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பைச் சரிக்கட்ட வேண்டும். நெசவாளப் பெருமக்களுக்கு கூட்டுறவு முறையில் தமிழகம் முழுவதும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும். இலவசமாகக் கட்டிக் கொடுங்கள் என்று நான் சொல்ல மாட்டேன். அந்தப் பணத்தையெல்லாம் மீட்டு, குறைந்த வட்டியில்—இல்லாவிட்டால் வட்டியே இல்லாமல் நெசவாளப் பெருமக்களுக்கு நீங்கள்



வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும். அந்தச் சாதாரண மக்கள் நெய்யக் கூடிய அந்தத் துணியைத்தான் இன்றைக்குக் கோவாப்டெக்ஸில் வைத்து இலவச வேட்டி, சேலை எல்லாம் வழங்கக் கூடிய சூழ்நிலையில் அரசு இருக்கிறது. ஆகவே ஆடை கொடுத்த மக்களைப் பாதுகாக்க வேண்டாமா? தமிழக மக்களின் மானத்தைக் காப்பதற்கு, பாதுகாப்பதற்குத் துணி நெய்த அவர்களைப் பாதுகாக்க வேண்டாமா? நான் அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், இந்த நலிந்த மக்களுக்குச் சட்டத்தை மீறிப் போயாவது நன்மைகளைச் செய்யுங்கள். அந்த நலிந்த மக்களுக்கு, பணம் எவ்வளவு இருந்தாலும், அரசாங்கத்தில் வேறு துறைக்குப் போகக் கூடிய பணத்தைக் கூட திருப்பி இந்தத் துறையில் சம்பந்தப்பட்ட நெசவாளத் தொழிலாளிகள்—அவர்கள் முதலாளிகள் அல்ல, தொழிலாளிகள்தான், பத்து நாட்களுக்கு ஒரு முறைதான் அவர்கள் பாவை நெய்து கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில் பாவே கிடைப்பதில்லை. அந்த அளவிற்குக் கஷ்டப்படுகிறார்கள். தமிழகத்திலுள்ள ஒட்டு மொத்தமான நெசவாளப் பெருமக்களின் உணர்வை நான் இங்கே தெரிவிக்கிறேன்; என்னுடைய தொகுதி மக்களின் உணர்வையும் தெரிவித்திருக்கிறேன். ஆகவே, நீங்கள் அவர்களுக்கு இந்த நன்மைகளைச் செய்யுங்கள் என்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எம்.எம்.டி.ஏ. அதைப்பற்றி ஒன்றைச் சொல்ல வேண்டும். ரூல்ஸை வயலேட் செய்தவர்களை, அதை மீறியவர்களை நீங்கள் சட்டப்படி என்ன நடவடிக்கை எடுப்பீர்களோ அதை நீதிமன்றத்தில் எடுங்கள். நேற்றையதினம் அமைச்சரவர்கள் சொன்னார்கள். எல்லோரும் தடை ஆணை வாங்கி வைத்திருக்கிறார்கள் என்று. அத்தனை தடை ஆணைகளையும் ஒன்றாகக் கட்டி உங்கள் அரசாங்க வக்கீலிடம் சொல்லி, நீங்கள் நீதிமன்றத்தில் முறையிடச் சொல்லுங்கள். அவர்கள் உடனே தடை உத்தரவை நீக்கி விடுவார்கள். நானும் என்னால் முடிந்த அளவிற்கு வேண்டுமானால் உதவி செய்கிறேன். நீக்கச் சொல்கிறேன். ஏனென்றால் பொது நோக்கோடு நிச்சயமாக அதை நீதிமன்றம் நீக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

ஆகவே, இந்த மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களை வெளியிடுவதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி சொல்லி, அமர்கிறேன், நன்றி ,வணக்கம்.

11-50 மணி

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தானைத் தலைவரும், தன் பேச்சால், உயிர் மூச்சால், எண்ணத்தால், எழுத்தால், தமிழையும், தமிழகத்தையும், தமிழக மக்களையும் காத்து,

அவர்களின் நலனுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தியாக பிம்பமாகத் திகழும், மக்கள் சிந்தனையாளர், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், இந்த அவையில் வைத்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

எல்லா தரப்பு மக்களின் மனதையும் ஈர்க்கிற வகையில் உள்ள நிதிநிலை அறிக்கையை நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள். நெசவாளர் குடும்பத்தில் பிறந்த நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சட்டமன்ற உறுப்பினராகி, கைத்தறி மானியத்தின் மீது பேசுகிற வாய்ப்பு பெற்றதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

உலகத்திலேயே குறைந்த வருவாய் உள்ள தொழில் கைத்தறி நெசவுத் தொழில் ஒன்றுதான். இந்தத் தொழிலில் குடும்பத்திலைவரும், பெற்றோர், மனைவி, மக்கள் அனைவரும் சேர்ந்து கூட்டுத் தொழிலாக செய்யக்கூடிய தொழில்தான் நெசவுத் தொழில். ஆனால் வருவாய் மிகக் குறைவு. இதை முற்றிலும் உணர்ந்த காரணத்தால் தான் தமிழகத்தினுடைய முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் நெசவாளர்களுக்காக தானே முன்நின்று பல போராட்டங்களை நடத்தி இருக்கிறார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்கள் முன்பு ஏழு ஆண்டுக்காலம் முதல்வராக இருந்தபோது நெசவாளர்களுக்கு கிடைத்த நன்மைகள், இடையில் 13 ஆண்டுக் காலம் எந்தவொரு நன்மையும் கிடைக்காமல் கேட்பாரற்று, புறக்கணிக்கப்பட்ட சமுதாயமாக இந்த நெசவாளர் சமுதாயம் இருந்தது. மீண்டும் கழக அரசு அமைந்த பிறகு டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு தான் இந்த நெசவாளர்களைப் பற்றி புலனாய்வு செய்யப்பட்டது.

ரிபேட் கொடுத்தால்தான் கைத்தறி துணிகளை விற்பனை செய்ய முடியும் என்ற நிலை இருந்ததால், கலைஞர் அவர்கள் முன்பு முதலமைச்சராக இருந்தபோது, ஆண்டிற்கு 90 நாட்கள் ரிபேட் கொடுக்கப்பட்டு வந்தது. கடந்த 13 ஆண்டுகளாக இருந்த ஆட்சியில் ஆண்டிற்கு 30 நாட்கள் மட்டும் ரிபேட் கொடுக்கப்பட்டு வந்தது. இதனால் பலகோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறி ஜவுளிகள் முடங்கிக் கிடந்தன. அதனால் பல்லாயிரக்கணக்கான நெசவாளர் குடும்பங்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் வறுமையில் வாடிக் கொண்டிருந்தார்கள். மீண்டும் கழக அரசு அமைந்த பிறகு ஆண்டிற்கு 90 நாட்கள் ரிபேட் அறிவித்து, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கைத்தறி ஜவுளிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டும் 90 நாட்கள் ரிபேட் கொடுக்கப்படுவது நிதிநிலை அறிக்கையில்





அறிவித்ததைக் கண்டு தமிழக முதலமைச்சர் அவர்களையும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களையும் நெசவாளர் சமுதாயம் நெஞ்சார வாழ்த்திக் கொண்டிருக்கிறது. இளம் வயதானாலும், முதிர்ந்த அனுபவத்தோடு இந்தத் துறையை திறம்பட நடத்தி வரும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களை மக்கள் பாராட்டுகிறார்கள்.

நான் கடந்த நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போது நெசவாளர்களின் நிலையைப் பற்றி இந்த அவையில் பேசும் போது, காப்புறுதி நிதித் தொகை 3,000 ரூபாய் வழங்கப்படுவதை 10,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்தேன். அதை தாய் உள்ளத்தோடு ஏற்று, இந்த நிதி நிலை அறிக்கையில் ரூபாய் 10,000 தருவதாக அறிவித்துள்ள முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின்கீழ் ஹட்கோ கடனுதவியோடு ரூபாய் 14,800 வழங்கப்பட்டு வந்தது. அதை முதல்வர் கலைஞர் அவர்கள் 25,000 ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள். அதை மனதாரப் பாராட்டுகிறேன். ஏழை நெசவாளர்கள் அடிநிலம் வாங்குவதற்குக் கூட வசதி வாய்ப்பு இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, அடிநிலத்திற்கு 5,000 ரூபாய் மேற்படி கடனுதவியுடன் சேர்த்து வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும். மொத்த மதிப்பில் 50 சதவீதம் மானியமாகவும், 50 சதவீதம் கடனாகவும் வழங்குவதோடு, வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு உறுப்பினர்கள் வசம் ஒப்படைக்கும் தேதியிலிருந்து ஹட்கோ கடனுக்கு வட்டி வசூலிக்கப்பட வேண்டும். கடன் வழங்கப்பட்ட காலத்திலிருந்து வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு ஒப்படைக்கும் காலம் வரையில் உள்ள வட்டித் தொகையை அரசே ஏற்றுக் கொள்ள முன் வர வேண்டும்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசால் அனுமதிக்கப்பட்ட ரிபேட் மானியம் உரிய நேரத்தில் அந்தந்த நிதியாண்டில் வழங்கப்பட வேண்டும். காலதாமதம் ஏற்படுவதால், கூட்டுறவுச் சங்கங்களில் நடைமுறை மூலதனம் பாதிக்கப்பட்டு, அதனால் நெசவாளர்களுக்கு தொழில் பாதிக்கப்படுகிறது. அதைத் தவிர்க்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

கேரளா அரசால் நெசவாளர்களுக்கு வழங்கப்படுவது போல, 60 வயதான நெசவாளர்களுக்கு உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. ஆர். ஜி. தனபாலன்] [1990 ஏப்ரல் 6

11–55 மணி

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் எட்டாம் வகுப்பு தேறிய ஏழைப் பெண்களுக்கு ரூபாய் 5 ஆயிரம் நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. மலைவாழ் மக்கள் பழங்குடியினருக்கு ஐந்தாம் வகுப்பு தேறிய ஏழைப் பெண்களுக்கு மேற்படி நிதி உதவி கிடைக்கிறது. அதைப் போல ஏழை நெசவாளர்கள் குடும்பத்திலே பிறந்த பெண்களுக்கு, ஐந்தாம் வகுப்பு தேறியிருந்தால் அவர்களுக்கும் மேற்படி திருமண உதவி கொடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள கைத்தறி நெசவாளர் குடும்பங்களின் வீடுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

தமிழகத்தில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளன. கடந்த கால அரசின் மெத்தனப் போக்கினால், 17 கூட்டுறவு நூற் பாலைகள் நட்டத்தில் இயங்கின. சேலத்தில் உள்ள ஒரே ஒரு நூற்பாலை மட்டும் இலாபத்தில் இயங்கியது. கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, அனைத்து நூற்பாலைகளும் லாபத்தில் இயங்குகின்றன.

தமிழ்நாட்டில் செயற்கை பட்டு நூற்பாலை மேட்டுப் பாளையத்தில், சவுத் இந்தியா விஸ்கோஸ் என்ற ஒரு ஆலை மட்டும் உள்ளது. வட மாநிலங்களில் ஆறு செயற்கைப் பட்டு நூற்பாலைகள் உள்ளன. எல்லா ஆலைகளும் தனியார் வசம் உள்ளன. அதனால் செயற்கை பட்டின் விலை கடந்த வருடம் 70 சதவீதம் வரை உயர்ந்தது. இதனால் நெசவாளர்களுக்கு பெரிய பாதிப்பு ஏற்பட்டது. இன்றுள்ள நிலையிலும் செயற்கைப் பட்டின் விலை 70 சதவீதம் அதிகமாக உள்ளது. எனவே தமிழக அரசு கூட்டுறவுத் துறையிலே செயற்கைப் பட்டு ஆலை ஒன்றை நிறுவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதை நெசவாளர்கள் அதிகமாக வாழும் சேலம் மாவட்டத்திலே அமைத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதில் தனிக் கவனம் செலுத்தி, தமிழக முதல்வர் அவர்களும், கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தமிழ்நாட்டில், துணிகள் டையிங், பிரிண்டிங், மற்றும் ப்ராசஸிங் செய்யக்கூடிய ஆலை கூட்டுறவுத் துறையிலே ஈரோட்டிலே ஒன்றே ஒன்று உள்ளது. அதைப்போல சேலத்திலேயும், மதுரையிலேயும் அமைத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 6] [திரு. கே. ஆர். ஜி. தனபாலன்]

தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள நரிமணத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள புவனகிரியிலும் இன்னும் பல இடங்களிலும் பெட்ரோலியம் அதிகமாக இருக்கின்றது. பெட்ரோலியக் கச்சாப் பொருட்களிலிருந்துதான் பாலியஸ்டர் நூல் தயாரிக்கப்படுகிறது. ஆகவே தமிழக அரசு தஞ்சை மாவட்டத்திலே பாலியஸ்டர் நூல் தயாரிக்கின்ற ஆலை ஒன்றை துவக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நூற்பாலைகளிலும், கோன் நூல் உற்பத்தி அதிகமாகத் தயாரித்து, வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதால், இங்கே நூல் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதனால் விலையேற்றமும் ஏற்படுகிறது. எனவே 50 சதவீத சிட்டா நூலும், 50 சத கோன் நூலும் தயாரிக்க வேண்டும் என்று அனைத்து நூற்பாலைகளுக்கும் ஆணை பிறப்பிக்க மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை நூற்பாலைகளில் முழுக்க முழுக்க கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்தில் உள்ளவர்களுக்குத்தான் வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். அரசு வேலைவாய்ப்புகளில், நெசவாளர் குடும்பத்தினருக்கு குறிப்பிட்ட சதவீதம் முன்னுரிமை வழங்க வேண்டும். வரும் நிதி ஆண்டில் கைத்தறி நெசவாளர்களுக்கு இரண்டாயிரம் தறிக்கூடத்துடன் கூடிய வீடு கட்டும் பணியை மேற்கொள்ளவும், அதற்காக 5 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்ததையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளிலே 12 கூட்டுறவு நூற்பாலைகளை நவீன மயமாக்க 31 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதைப் பாராட்டுகிறேன். விவசாயிகளுக்கு விவசாயக் கூட்டுறவு வங்கி இருப்பது போல், கைத்தறி நெசவாளர்களுக்கும் நெசவாளர் கூட்டுறவு வங்கி அமைத்துக் கொடுக்கும்படி அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கும், கைத்தறி நல வாரியம் அமைத்திட இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், நெசவாளர் குடும்பப் பிள்ளைகளுக்கு பழங்குடி மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கும் சலுகைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மொத்தத்தில் இந்த நிதி நிலை அறிக்கையையும், இந்த மானியக் கோரிக்கையையும் பாராட்டி, வரவேற்கிறேன், நன்றி, வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

*திரு. எஸ். எஸ். கருப்பசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு வழங்கியமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கைத்தறி விற்பனையின் பேரில் 90 நாட்களுக்குத் தள்ளுபடித் தொகையான ரூ. 27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூ. 1.5 கோடி செலவில் கைத்தறிகளை நவீனமயமாக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. கைத்தறி நெசவாளர்கள் காப்புறுதித் திட்டத்தின்கீழ் 1.48 இலட்சம் நெசவாளர்களுக்கு காப்புறுதித் தொகை என்பது ரூபாய் 3 ஆயிரத்திலிருந்து நடப்பு ஆண்டில் ரூபாய் 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**12-00 மணி**

வீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சி வாரியத்தின் நிதி உதவியுடன் ரூபாய் 5 கோடி மொத்த செலவில் நெசவாளர்களுக்கு 2,000 தறிக்கூடத்துடன் அமைந்த வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி மாதம் 15 ஆம் தேதி முதல் கைத்தறி நெசவாளர்களுக்கு 10 சதவீதம் வரையிலும் கூலி உயர்த்திக் கொடுக்கப்பட்டுள்ளது. நெசவாளர்களின் துயர் துடைக்கும் இந்த நிதிநிலை அறிக்கையை அளித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு கைத்தறி நெசவாளர்கள் சார்பிலும் என் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலே உள்ள 4.27 இலட்சம் கைத்தறிகளை நம்பியுள்ள நெசவாளர்கள் மற்றும் அவர்களைச் சேர்ந்துள்ள சுமார் 30 இலட்சம் பேர்களுடைய வாழ்வை மேலும் வளம் பெறச் செய்வதற்கு என்னுடைய கருத்துக்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகத்தில் மொத்தம் உள்ள 4.27 இலட்சம் கைத்தறிகளில் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள அங்கத்தினர்களின் இல்லங்களில் இயங்கும் தறிகள், கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டத்தில் உள்ள அங்கத்தினர்களின் இல்லங்களில் இயங்கும் தறிகள், தொழில் இயல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இயங்கும் தறிகள், மாஸ்டர் வீவர்களிடத்தில் தொழில் பெற்று நெசவாளர்களுடைய வீடுகளில் இயங்கும் தறிகள், மாஸ்டர் வீவர்களால் அமைக்கப்பட்டு உள்ள நெசவு பட்டறைகளில் இயங்கும் தறிகள், நூல் கொள் முதல் விலையையும் உற்பத்தி செய்யப்படும் துணிகளை விற்பனை செய்யும் விலையையும் ஒப்புக் கொண்டு இயங்கும் கான்ட்டிராக்ட் தறிகள், நெசவாளர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் நூல் கொள்முதல், துணி உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல்





மூலம் இயங்கும் தறிகள் என 7 பிரிவுகளாக உள்ளன. இந்த 7 பிரிவுகளில் கூட்டுறவுத் துறைகளின் பொறுப்பில் 3 பிரிவுகளும், மாஸ்டர் வீவர்களின் பொறுப்பில் 2 பிரிவுகளும், தனிப்பட்ட நெசவாளர்களின் சொந்தப் பொறுப்பில் 2 பிரிவுகளும் இயங்கி வருகின்றன. அதில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தொழில் இயல் நெசவாளர்களுடைய கூட்டுறவுச் சங்கங்களில் இயங்கும் 2.85 இலட்சம் தறிகளில் தற்போது நடைமுறை மூலதனம் (வொர்க்கிங் கேப்பிடல்) பற்றாக்குறை காரணமாக சுமார் 66 சதவீதம் வேலை தான் நெசவாளர்களுக்கு கொடுக்க இயலுகிறது. அது போல கூட்டுறவு அல்லாத மற்ற 4 பிரிவுகளில் உள்ள 1.42 இலட்சம் தறிகளில் 60 சதவீத வேலை தான் கிடைத்து வருகிறது. மாநிலத்தில் உள்ள 1,677 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2.85 இலட்சம் தறிகளுக்கு 115 கோடி ரூபாய் நடைமுறை மூலதனக் கடன் என்று வழங்கப்பட்டுள்ளது. அதில் தறி ஒன்றுக்கு 4 ஆயிரம் ரூபாய் ஈவு வருகிறது. நடைமுறை மூலதன குறைவினால் நெசவாளர்களுக்கு 66 சதவீதம் (மூன்றில் இரண்டு பங்கு) வேலைதான் பிரதமச் சங்கங்களால் கொடுக்க இயலுகிறது. மூன்று பங்கு முழுமையாக வேலை கொடுப்பதற்கு தறி ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாய் வீதம் மேலும் 57 கோடி ரூபாய் நடைமுறை மூலதனத்தைக் கடனாக பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி உதவிட வேண்டுமாய் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு ஆக்டின் கீழ் வராமல் இயங்கும் 1.42 இலட்சம் தறிகளில் உள்ள நெசவாளர்களுக்கு பாதுகாப்பும் நல்வாழ்வும் விரைவில் கிடைக்க கூட்டுறவு சங்க அமைப்பில் அவர்களை இந்த நிதி ஆண்டுக் காலத்திற்குள் அங்கத்தினர்களாக சேர்த்து அவர்களுக்கும் வளமான நல்வாழ்வு வழங்க தமிழக அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன். தனியார் நெசவு ஆலைகளில் வீவிங் மில்ஸ்-இல் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவது போல 189 தொழில் இயல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இயங்கும் தறிகளில் வேலை செய்யும் 18,900 நெசவாளர்களுக்கு நிரந்தரப் பணி, பணி பாதுகாப்பு, தகுந்த வேலை மாத ஊதியம், போனஸ், வருங்கால வைப்பு நிதி ஆகியவைகள் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமாய் தமிழக அரசை வேண்டுகிறேன்.

தேங்கிக் கிடக்கின்ற துணிகள் மட்டும் அல்லாமல் தொடர்ந்து உற்பத்தியாகும் துணிகளுக்குத் தேக்கம் இல்லாமல் சீராக விற்பனை செய்வதற்கு தீபாவளிப் பண்டிகை, பொங்கல் பண்டிகைகளுக்குத் தலா 15 நாட்களும், ரம்ஜான், கிறிஸ்துமஸ் கைத்தறி வார விழா, பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் ஆகிய சமயங்களில் தலா பத்து நாட்களும் ஆக மொத்தம் 70 நாட்களும், பண்டிகை

டி 2 53-88—12

D
V 24,31/1.90
143802

[திரு. எஸ். எஸ். கருப்பசாமி] [1990 ஏப்ரல் 6

அல்லாத பிப்ரவரி, மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு, நவம்பர் ஆகிய 6 திங்களில் பிரதி மாதம் 1 ஆம் தேதி முதல் 5 ஆம் தேதி வரை 5 நாட்கள் வீதம் 30 நாட்கள், ஆக மொத்தம் ஆண்டுக்கு 100 தினங்கள் மொத்த, ரொக்க விற்பனை பேங்க் மூலம் அனுப்பப்படும் மொத்த விற்பனை, சில்லரை விற்பனை ஆகியவற்றிற்கு 20 சதவீதம் தள்ளுபடி மானியம் வழங்க வேண்டுமாய் பணிவுடன் வேண்டுகிறேன்.

12–05 மணி

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பெருத்த நட்டத்திலே இயங்கி வருவதால், அவைகளின் நிர்வாகச் செலவுகளில் 50 சதவிகிதம் அரசு மானியம் வழங்கி பாதுகாப்பு அளிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். உற்பத்தியாகக்கூடிய துணிகளை, அடக்க விலையிலிருந்து 7 சதவிகித இலாபத்தில் விலையை நிர்ணயம் செய்து, கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்வதை உயர்த்தி, 10 சதவிகித இலாபத்தில் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்து, பிரதம நெசவாளர் சங்கங்களில், துணிகளைக் கொள் முதல் செய்ய வேண்டுமென்றும், அப்படி கொள்முதல் செய்த நாளிலிருந்து, 12 சதவிகிதத்திற்கும் குறைவில்லாத வட்டி, கோ-ஆப்டெக்ஸால் கொடுக்கப்பட வேண்டுமென்றும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசின் சீரிய முயற்சியால், தமிழகத்திலே கூட்டுறவு நூற்பாலைகள், கணிசமான இலாபத்தில், கடந்த ஓராண்டுக் காலமாக இயங்கி வருகிறது. நெசவாளர்கள் நலன் கருதி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, கூட்டுறவு நூற்பாலைகளின் அடக்க விலைக்கு ''காஸ்ட் பிரைசி''ல், நூல் சப்ளை செய்து உதவிட வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 2 ஆண்டுகளில், கைத்தறிக்குத் தேவையான சாய மருந்துகள் மற்றும் கெமிக்கல் பொருட்கள், 60 சதவிகிதம் உயர்ந்துள்ளதைத் தடுத்து, நியாயமான விலைக்குக் கிடைக்க தமிழக அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

நெசவாளர்களின் நலன் கருதி, பருத்தி சிட்ட நூலுக்கு விதிக்கப்படும் 2 சதவிகித விற்பனை வரியையும், ''ஸ்டேபிள் ஃபைபர்'' நூலுக்கு விதிக்கப்படும் 5 சதவிகித விற்பனை வரியையும் ரத்து செய்து உதவிட வேண்டுகிறேன்.

அயல் நாடுகளுக்கு பருத்தி நூல் ஏற்றுமதி செய்ய மத்திய அரசு கடந்த 3 ஆண்டுக் காலமாக அனுமதித்து வருகிறது. எனவே பருத்தி நூலின் விலை கடந்த 3 ஆண்டுக் காலங்களில் இரட்டிப்பு மடங்குக்கு மேல் உயர்ந்திருக்கிறது. எடுத்துக் காட்டாக 1987 ஆம் ஆண்டில் 2-க்கு 17 (2/17) பருத்தி சிட்ட நூல்



1990 ஏப்ரல் 6] [திரு. எஸ். எஸ். கருப்பசாமி]

5 கிலோ கொண்ட கட்டு ஒன்று 100 ரூபாய்க்குக் கிடைத்து வந்தது. இன்று அதன் விலை, 210 ரூபாய் ஆக உயர்ந்துள்ளது. எனவே, அயல்நாடுகளுக்கு பருத்தி நூல் ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதித்து வருவதை, ரத்து செய்ய, மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த, 2 வருட காலத்தில் கிலோ ஒன்றுக்கு 40 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை நார்ப்பட்டு, ஆர்ட் சில்க் விலைகள் உயர்ந்துள்ளன. குறிப்பாக, நமது நாட்டில், ''நேஷனல் ரயான் கார்ப்பரேஷன்'', ''இன்டியன் ரயான் கார்ப்பரேஷன்'', ''செஞ்சுரி மில்ஸ்'', ''விஸ்கோஸ்'', ''திருவான்கூர் ரயான்'' போன்ற நார்ப்பட்டு தயார் செய்யும் 7 மில்களும் ஒரு சிண்டிகேட் அமைத்து, அவ்வப்போது விலையைத் தாறுமாறாக, தங்கள் இஷ்டப்படி உயர்த்தி வருகிறார்கள். இதைத் தடுத்து, ஒரு சீரான முறையில் விலை நிர்ணயம் செய்ய மத்திய அரசை, தமிழக அரசு வலியுறுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

ஆர்ட் சில்க் யார்ன், நார்ப்பட்டு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி வரியை முழுமையாக ரத்து செய்யவும், கைத்தறிக்குத் தேவையான நார்ப்பட்டுக்களை தாராளமாக இறக்குமதி செய்யவும், மத்திய அரசை, தமிழக அரசு வலியுறுத்த வேண்டுகிறேன்.

1985 ஆம் ஆண்டு, மார்ச் மாதத்தில் மத்திய அரசு, கைத்தறி ரக ஒதுக்கீட்டுச் சட்டம், 22 ரகங்களுக்குப் பிறப்பித்தது. அதனை எதிர்த்து, விசைத்தறியாளர்கள் சம்மேளனம் சென்னை உயர்நீதிமன்றத்திலும், டெல்லி உச்சநீதிமன்றத்திலும் கைத்தறி ரக ஒதுக்கீட்டுச் சட்டம் அமலாக்குவதை நிறுத்தி வைக்க உத்தரவுகள் பெற்றுள்ளது. இந்த வழக்கு குறித்து, உச்சநீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று, வழக்கு நிலுவையில் உள்ளது. கைத்தறி நெசவாளர்களைக் கடுமையாக பாதிக்கக்கூடிய இந்தத் தடையுத்தரவை ரத்து செய்து, கைத்தறி ரக ஒதுக்கீட்டுச் சட்டத்தை, திறமையுடன் செயல்படுத்த, துரிதமான நடவடிக்கை எடுக்க, மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்படி வேண்டிக் கொள்கிறேன்.

1978 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு முடிய 11 ஆண்டுகளில் எனது தொகுதியிலுள்ள அருப்புக்கோட்டை நகரிலுள்ள, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால், தனிப்பட்ட வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்த பருத்தி நூல், ''ஸ்டேபிள் ஃபைபர்'' மற்றும் நார்ப்பட்டு, ஆர்ட் சில்க், கொள் முதல் பில்களை சரிபார்த்து, பினாமி பில்களைக் கண்டுபிடித்து, மேல் நடவடிக்கை எடுக்கவும், அப்படிப்பட்ட நூல் கொள்முதல் பினாமி பில்களை வைத்து கணக்குகள் எழுதி, நெசவாளர்களுக்கு

[திரு. எஸ். எஸ். கருப்பசாமி] [1990 ஏப்ரல் 6

நூல் சப்ளை செய்ததாகவும், நெசவு கூலி கொடுத்து ஜவுளிகள் உற்பத்தி செய்ததாகவும், அந்த ஜவுளிகளை 20 சதவிகித ரிபேட்டில் விற்பனை செய்ததாகவும், பினாமியாக கணக்கு எழுதி பல கோடி ரூபாய் தள்ளுபடித் தொகைகளை கூட்டுறவு அதிகாரிகள் துணையுடன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மோசடி செய்ததை வசூல் செய்ய தீவிர, சட்ட பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

**12–10** மணி

எனது சாத்தூர் தொகுதியில், அருப்புக்கோட்டை நகரிலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் ஐந்து வருடங்களாக நூல், ஸ்டேப்பிள் மற்றும் நார்ப்பட்டு, அங்கத்தினர்களுக்கு சப்ளை செய்ததாக பொய்யான, போர்ஜரி விநியோகக் கணக்குகளை எழுதி அங்கத்தினர்களை மோசடி செய்த கூட்டுறவு நெசவாளர் சங்கத் தலைவர்கள் மீது இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட அங்கத்தினர்கள் கண்ணீர் வடிக்கிறார்கள். இதன் மீது தகுந்த உடனடி நடவடிக்கை எடுத்து அங்கத்தினர்களைக் காப்பாற்றியருளும்படி மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள அருப்புக்கோட்டையில் 9,119 கைத்தறிகள் உள்ளன. 104 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், ஆறு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழ் 4,374 கைத்தறிகள் உள்ளன. ''மாஸ்டர் வீவர்ஸ்' பொறுப்பிலுள்ள இரண்டு பிரிவுகளில் 1,760 தறிகளும், தனிப்பட்ட நெசவாளர்கள், சொந்தப் பொறுப்பிலுள்ள இரண்டு பிரிவுகளில் 1,587 தறிகளும், இயங்காமல் இருக்கும் (ஐடில் லூம்ஸ்) தறிகள் 569-ம் உள்ளன. கூட்டுறவுத் துறை பொறுப்பில் உள்ள 4,374 தறிகளுக்குக் கூட பிரதம கூட்டுறவு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கடுமையான நிதியாதாரங்கள் பற்றாக்குறையின் காரணமாக நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை கொடுக்க முடியாத நிலை உள்ளது. சுமார் 60 சதவிகித வேலைதான் கிடைத்து வருகிறது.

மேலும், சுமார் 50 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் முடங்கிப்போய் டார்மன்டாக ஆகியுள்ளன. எனவே, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள அங்கத்தினர்கள் அனைவருக்கும் முழுமையாக வேலை கிடைக்கச் செய்வதற்கு நடை



1990 ஏப்ரல் 6] [திரு. எஸ். எஸ். கருப்பசாமி]

முறை மூலதனக் கடன், (ஓர்க்கிங் கேபிட்டல்) இரண்டு கோடி ரூபாய் வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்து அமர்கிறேன், வணக்கம்.

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (இ) விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்வது பற்றி முதலமைச்சர் டெல்லியில் நடத்திய பேச்சு வார்த்தை குறித்து.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் (குறுக்கீடு) தமிழகத்து மக்கள் எல்லாம் மிகப் பெரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு இருக்கக்கூடிய காவிரித் தண்ணீர்ப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைக்காக டெல்லி சென்று திரும்பி வந்திருக்கிறார்கள். நல்ல செய்தியைக் கொண்டு வந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்திலே இங்கே பதிலளிக்கும்போது விவசாயிகளுடைய கடன் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக டெல்லிக்குச் சென்று வெற்றியோடு திரும்பி வருவதற்கு வாழ்த்தி அனுப்புங்கள் என்று கேட்டார்கள். நாமும் வாழ்த்தி அனுப்பினோம். அந்த விவசாயிகளுடைய கடன் பிரச்சினையைத் தீர்ப்பதற்குமான முடிவோடு இந்த இரண்டு நல்ல செய்திகளையும், காவிரித் தண்ணீர்ப் பிரச்சினையையும், விவசாயிகளுடைய கடன் பிரச்சினையையும் தீர்ப்பதற்கு நல்ல செய்தியோடு வந்திருக்கிறார்களா என்பதை உங்கள் மூலமாக நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

## 8. விதி 110-இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

### (அ) காவிரி நீர்ப்பிரச்சினை பற்றி டெல்லியில் நடைபெற்ற பேச்சு வார்த்தை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 110-ன் கீழ் காவிரிப் பிரச்சினை குறித்த டெல்லி பேச்சுவார்த்தைகள் பற்றியும், நெய்வேலி நிலக்கரி ''royalty'' குறித்தும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரு அறிக்கைகளை அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து நேற்றையதினம் மத்திய நீர் வளத்துறை அமைச்சர் மாண்புமிகு மனுபாய் கொட்டாடியா அவர்கள் இப்பிரச்சினையிலே சம்பந்தப்பட்ட 4 மாநிலங்களின் முதலமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டியது பற்றியும், அதிலே நானும் மற்ற மாநில முதலமைச்சர்களும் கலந்து கொண்டது பற்றியும் இந்த அவையின் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றையதினம் காலையில் நான்கு மாநில முதலமைச்சர்கள், பொதுப்பணித்துறை அமைச்சர்கள், அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நான் பேசும் பொழுது 22 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட பிரச்சினை காவிரி நதி நீர்ப் பிரச்சினை என்றும், பிரச்சினை ஆரம்பித்த போது கர்நாடக மாநில முதல்வராக இருந்த வீரேந்திர பாட்டீல் அவர்களும், அப்போது தமிழக பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த நானும் —— —— மீண்டும் இப்போது இரண்டு மாநில முதல்வர்களாக இருந்து பேச வந்திருப்பதாகவும்— ஆனால் 22 ஆண்டுகளாகப் பிரச்சினை தீராமல் இருப்பதாகவும், இதுவரை 24 முறை முதலமைச்சர்கள் மட்டத்திலும், அமைச்சர்கள் மட்டத்திலும் கூட்டங்கள் நடைபெற்றிருப்பதாகவும், இது 25-ஆவது கூட்டம் என்றும் கூறியதோடு 1970 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17 ஆம் தேதியிலேயே இப்பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று, தமிழக அரசின் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளதையும் சுட்டிக் காட்டி—இப்போது மீண்டும் 1980-ல் இது குறித்து உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று இருப்பதால் இன்றைய பேச்சுவார்த்தையில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கிடைக்காவிட்டால் நடுவர் தீர்ப்புக்கு இதனை விடுவதை விட தமிழக அரசுக்கு வேறு வழியில்லை என்பதையும் உறுதியாகவும், திட்டவட்டமாகவும் தெரிவித்தேன்.

12-15 மணி

அடுத்து, கர்நாடக மாநிலத்தின் சார்பாக முதலமைச்சர் மாண்புமிகு திரு. வீரேந்திர பாட்டீல் அவர்கள் பேசும்போது மீண்டும் ஒரு முறை பேச்சு வார்த்தை மூலமே முயற்சி செய்யலாம் என்றும் அதுவும் வெற்றி பெறாவிட்டால் பின்னர் நடுவர் மன்றத்திற்கு செல்லலாம் என்றும் தெரிவித்தார். அடுத்து மத்திய அமைச்சரின் விருப்பத்தின் பேரில் 4 மாநில முதலமைச்சர்களும், அமைச்சர்களும் மட்டும் அமர்ந்து ஒரு சில முக்கிய அதிகாரிகள் துணையோடு பேசினோம். அப்போது கர்நாடகமும் தமிழ் நாடும் இதில் முக்கியப் பங்கு பெற்று இருப்பதால் அவர்களிடையே கருத்து ஒற்றுமை ஏற்படுவது அவசியம் என்ற கருத்து



வலியுறுத்தப்பட்டது. காவிரிப்பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டும் என்று தஞ்சை விவசாயிகள் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருப்பதும், அந்த வழக்கில் தமிழக அரசு தன்னையும் இணைத்துக்கொண்டு நடுவர் தீர்ப்புக் கோரி வாதாடுவதும் இந்த அவை உறுப்பினர்கள் அறிந்த ஒன்றாகும். இந்தப் பிரச்சினையிலே உச்ச நீதிமன்றம் தனது முடிவினைத் தெரிவிப்பதற்கு — — ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதிக்குள் மத்திய அரசு, சம்பந்தப்பட்ட அரசுகளோடு கலந்து பேசி உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்று கெடு விதித்துள்ளது. எனவே, நான் தொடர்ந்து கூறும்போது கர்நாடக அரசு விரும்புவது போல் மீண்டும் ஒரு முறை பேச்சு வார்த்தை நடத்துவதற்கு நாங்கள் தயார்; ஆனால் அந்தப் பேச்சுவார்த்தை உச்ச நீதிமன்றம் கெடு விதித்துள்ள ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதிக்குள் நடைபெற்று ஒரு முடிவு தெரிந்தாக வேண்டும் என்று கூறினேன்.

என்னுடைய கருத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டதின் அடிப்படையில், வரும் 19 ஆம் தேதி மாலையில் தமிழக அரசின் சார்பில் நானும், கர்நாடக அரசின் சார்பில் வீரேந்திர பாட்டீல் அவர்களும், சென்னையிலேயே சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவது என்றும், இரு மாநில பேச்சு வார்த்தை வெற்றி பெறுமேயானால், அடுத்த நாளான 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாளன்று மாலை சென்னையிலே மத்திய அமைச்சர் கொட்டாடியா, கேரள, புதுவை மாநில முதல் அமைச்சர்களும் கலந்துகொண்டு தமிழக, கர்நாடக முதல்வர்களோடு பேசி, இறுதி முடிவு காண்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இதனையொட்டி 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19 ஆம் தேதி காலை சட்டமன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும், 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் தேதி காலை சட்டமன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் கலந்துரையாடி கருத்துக்களைப் பெறவிருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**(ஆ) நெய்வேலி பழுப்பு நிலக்கரி எடுப்பதற்காக ''ராயல்டி'' கொடுக்க மத்திய அரசு இசைவு தெரிவித்துள்ளது குறித்து.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அடுத்து, நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி எடுப்பதற்குக் கொடுக்க வேண்டிய ராயல்டி தொகை. நெய்வேலி பழுப்பு நிலக்கரி வாரியம் 1956 ஆம் ஆண்டிலிருந்து பழுப்பு நிலக்கரி எடுத்துக்கொண்டிருந்தாலும் அதற்காகக் கொடுக்க வேண்டிய ராயல்டி தொகை மாநில அரசுக்கு கொடுக்கப்படாமல் இருந்தது. ராயல்டிக்குப் பதிலாக

இலாபத்தில் ஒரு பங்கு கொடுப்பதாக தமிழக அரசுடன் ஒரு ஒப்பந்தத்தைச் செய்திருந்தது. இந்த ஒப்பந்தம் 1976 இல் காலாவதியாகும் வரையில் இந்த வாரியம் இலாபம் சம்பாதிக்க வில்லை. அதன் பிறகு இலாபம் கிடைக்கும் கட்டம் வந்தபோது அந்த ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கவில்லை. அதே நேரத்தில், எடுத்த பழுப்பு நிலக்கரிக்கு ராயல்டியும் கொடுக்கவில்லை.

இந்த அரசு இப்போது பொறுப்பேற்ற பிறகு மத்திய அரசுடன் தொடர்புகொண்டு 1956 ஆம் ஆண்டு முதல் ராயல்டி கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியதின் பேரில் மத்திய அரசு நம்முடைய கோரிக்கையைப் பரிசீலிக்க ஏற்றுக்கொண் டிருந்தது. நான் நேற்று டெல்லி சென்றிருந்தபோது மத்திய அமைச்சர் திரு. ஆரிப் முகமது கான் அவர்களுடன் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி, ராயல்டி தொகைக்காக பழைய பாக்கி யைக் கொடுப்பதுடன், பாக்கித் தொகைக்கு வட்டியும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். நம்முடைய கணக்கின் படி 1956 முதல் 1989 ஆம் ஆண்டு வரை நமக்குக் கொடுக்க வேண்டிய ராயல்டி தொகை 23.36 கோடி ரூபாய். இதில் ரூ. 7.09 கோடி தமிழ்நாடு மின்வாரியம் நெய்வேலி லிக்னைட் வாரியத்திற்குத் தரவேண்டிய தொகை என்று அவர்கள் கணக் கிட்டிருந்தார்கள். எனவே பாக்கித் தொகை 16.27 கோடி ரூபாய் தான் என்று முதலில் மத்திய அரசு செல்லியிருந்தாலும் கூட அந்தத் தொகைக்கு வட்டி கொடுக்க வேண்டும் என்ற நம்மு டைய கோரிக்கையில் நியாயம் இருப்பதை நேற்று நான் நேரில் சந்தித்து வலியுறுத்தியதின்பேரில், அதனை ஏற்று நிகர மொத்த மாக ரூ. 30 கோடி கொடுப்பதற்கு மத்திய அமைச்சர் இசைவு தெரிவித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

12-20 மணி

இனிமேல் நடப்பு ஆண்டிலிருந்து டன் ஒன்றுக்கு 2 ரூபாய் 50 காசு ராயல்டி தொகையாகக் கொடுப்பதற்கும் ஒப்புக் கொண்டு இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

### 3. தகவல் கோரல்——தொடர்ச்சி.

### (இ) விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்வது பற்றி, முதலமைச்சர் டெல்லியில் நடத்திய பேச்சு வார்த்தை குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர் களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர். திரு. வீரையன் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினை குறித்து கேட்டார்கள் ஏற்கெனவே இந்த அவையில் நம்முடைய வரவு-செலவுத் திட்ட பொது விவாதம் நடைபெற்ற நேரத்தில் நான் ஒன்றைக்குறிப்





பிட்டு இருந்தேன். விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் குறித்து மத்திய அரசு அறிவித்து உள்ளதையொட்டி மாநில அரசுகள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் அது குறித்து மத்திய நிதி அமைச்சரோடு டெல்லியிலே கலந்து பேசுவேன் என்றும் நான் குறிப்பிட்டு இருந்தேன். அதன் காரண மாக நேற்று, எப்படியும்அவரைச் சந்தித்தே தீரவேண்டுமென்று இரவு 9-30 மணிக்கு மேல் மத்திய நிதி அமைச்சர் அவர்களைச் சந்தித்து ஒரு மணி நேரம் அவர்களிடத்திலே உரையாடி, மத்திய அரசு நியமித்த நிதிக்குழு—கடந்த காலத்திலே நிதிக் கமிஷன் செய்து இருக்கின்ற சிலதவறுகளையெல்லாம் சுட்டிக் காட்டி, அவைகளைப் பரிசீலிப்பதாக மத்திய நிதி அமைச் சர் அவர்கள் என்னிடத்திலே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். கடன் நிவாரணத்தைப் பொறுத்தவரையில் எந்தெந்த நிபந்தனை களின் அடிப்படையிலே கடன் நிவாரணம் மத்திய அரசின் சார் பாக அறிவிக்கப்பட்டிருக்கிறதோ மாநிலங்களிலும் கூட்டுறவு வங்கிகளின் மூலமாக அதே அடிப்படையில், அதாவது எந்தெந்த அடிப்படையிலே மத்திய அரசு இந்தக் கடன்களை 10 ஆயிரம் ரூபாய் கடன்களைத் தள்ளுபடி செய்ய முன்வந்திருக்கிறதோ, அதே அடிப்படையிலே, கூட்டுறவுக் கடன் பாக்கிகளைத் தள்ளு படி செய்ய மாநிலங்கள் முன் வந்தால், அவைகளுக்கு நிதியுதவி தேவைப்பட்டால் அதுபற்றி மத்திய அரசு கவனிக்கும் என்று நிதி அமைச்சர் தெரிவித்து இருக்கின்றார். எனவே, நாம் அது குறித்த புள்ளிவிவரங்களைச் சேகரித்து, அதற்கான நிதியுதவியை மத்திய அரசிடத்திலே கோரவிருக்கிறோம். அவர்களும் அதிலே இணக்கமாக இருப்பார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

### 6. மானியக் கோரிக்கைகள், 1990–91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண். 26—கைத்தறியும் துணித் தொழிலும் —தொடர்ச்சி.

### (ஆ) கோரிக்கை எண். 34—நகர்ப்புற வளர்ச்சி—தொடர்ச்சி.

*திரு. கோ பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மன்றத்திலே வைக்கப் பட்டிருக்கின்ற கைத்தறித் துணி, நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல விழைகின்றேன். குறிப்பாக நகர்ப்புற வளர்ச்சி, நம் கட்டுக் கடங்காமல் கடந்த காலங்களிலே போய்க்கொண்டிருக்கிறது. இதற்காக பல புதிய சட்டங்களும் அதற்கான இலாக்காக்களும் அதிக அளவிலே இருந்தாலும் இன்றையதினம் அந்த நகர்ப்புற

[திரு. கோ. பூவராகன்] [1990 ஏப்ரல் 6

வளர்ச்சி நம் கையிலே இல்லை. தனிப்பட்டவர்கள், ரியல் எஸ்டேட் நடத்துகின்றவர்கள், பெரும் பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் அவர்களுக்கு ஏற்றார்போல் இந்த வளர்ச்சியைப் பயன்படுத்திபல இடங்களிலே இன்றையதினம் அவர்கள் வளர்ந்திருப்பதை நாம் அறிகிறோம். சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இது நடைபெறவில்லை. இதற்காக, நம்முடைய புதிய அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு குழுவை அமைத்தார்கள். சென்னை நகரத்தில் முறை தவறி கட்டப்பட்ட கட்டிடங்கள் அதிகமாக, சட்டதிட்டங்களுக்கு உட்படாமல் அவர்கள் இஷ்டம்போல் கட்டப்பட்ட இடங்களுக்கு ஒரு குழு அமைத்து அதை எவ்வாறு சீரமைப்பது என்பது பற்றி ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்தக் குழு எவ்வளவுதூரம் பணியாற்றி, எந்த அளவுக்கு அறிக்கை வைத்து, இந்த அரசுக்கு அளித்து, இந்த அரசு அதன்மேல் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் பதில் உரையில் கூறுவார்கள் என்று கருதுகிறேன். இப்போது இருக்கின்ற சூழ்நிலையிலே சென்னை நகரத்திலே, தண்ணீர் பிரச்சினை மட்டுமல்ல இட வசதிக்கும் மிக நெருக்கடியான ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக, அவ்வப்போது, இந்தமாதிரி மானியக் கோரிக்கைகள் வருகிறபோது, பெரிய திட்டங்கள் வெளியிடுகின்றபோது, நகரத்தினுடைய வளர்ச்சி பற்றி நாம் பேசுகின்றோம்: குறிப்பாக, பக்கிங்காம் கால்வாயை சீர் செய்ய வேண்டும் ; கூவம் நதியை நீர் செய்ய வேண்டும் : அதன் ஓரங்களிலேயுள்ள பலவிதமான ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் : அதை போக்குவரத்துக்குப் பயன்படுத்த வேண்டும் : உலக வங்கியிலேயிருந்து கடனுதவி பெற்று அல்லது வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து எல். ஐ. சி. போன்ற நிறுவனங்களிலிருந்துநிதியுதவி பெற்று அதனை சீரமைத்து நல்லவிதமாக பயன்படுத்த, நகரம் ஒரு நல்ல சூழ்நிலையிலே இருக்க வேண்டுமென்று அவ்வப்போது நாம் அறிவிப்பு செய்கிறோம்.

12-25 மணி

எந்த அளவுக்கு இந்த ஓராண்டு காலத்திலே இந்த இலாகா முயற்சி செய்திருக்கிறது, எந்தெந்த முயற்சிகள் வெற்றி பெற்றிருக்கிறது? எந்தெந்த நிறுவனங்கள் அதற்காக உதவி அளிக்க முன் வந்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் பதிலுரையாக அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு நகரத்திலே ஏற்படுகின்ற வளர்ச்சியை ஒட்டி இதையொட்டி இருக்கிற பல கிராமங்கள் விவசாய நிலங்களாக இருந்தவை எல்லாம் இன்றைய தினம் வளர்ச்சி ஏற்பட்டு ஆங்காங்கு ரியல் எஸ்டேட்காரர்கள் மனைகளைப் போட்டு கட்டிடங்களை எழுப்பியிருக்கிறார்கள். ஒரு இடம் வளர்ச்சி பெறப்போகிறது என்று அறிவித்தவுடனேயே, நிலத்தின் விலை அங்கே உயர்ந்து விடுகிறது. கிழக்குக் கடற்கரை சாலையை விரிவு படுத்தப்



1990 ஏப்ரல் 6] [திரு. கோ. பூவராகன்]

போகிறோம் என்று அறிவித்த உடனேயே அந்தக் பகுதியில் கொட்டிவாக்கத்திலேயிருந்து சோளிங்கர் வரையில் பார்த்தால் சாலையில் இரண்டு பக்கத்திலேயும் பெரு வாரியான வீடுகள் வந்து விட்டன. யாருடைய அனுமதியின் பேரில் அந்தக் கட்டிடங்கள் எழுப்பபட்டிருக்கின்றன? எப்படி அந்த இடங்களில் பெரிய பெரிய பங்களாக்கள் வந்திருக்கின்றன? இங்கே இருக்கிற இலாக்கா என்ன செய்து கொண்டிருக்கிறது? அனுமதியில்லாமலேயே ஆயிரக்கணக்கான இடங்களை வளைத்துப்போட்டு பெரிய பங்களாக்கள் எப்படி உருவாகியிருக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும். அந்த இடங்களில் தண்ணீர் வசதிகள் இல்லாத சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இப்போது சென்னையிலிருந்து விழுப்புரம் வரையில் இரண்டு வழி ரயில் பாதை, நான்கு வழி சாலைப் பாதை வரவிருப்பதைப் யொட்டி, செங்கற்பட்டு வரையிலும், அதற்கு மேலும் கூட, சாலையின் இரண்டு பக்கங்களிலும் பெருவாரியான நகர அமைப்புகள் வந்திருக்கின்றன. எம்.எம்.டி.ஏ. அல்லது ஹவுசிங் போர்டு ஏற்பாடு செய்து புதிய நகரம் உருவாக்க இருக்கிறார்களா என்றால் இது வரையில் ஒன்றும் இல்லை. முன்பு ஆரம்பிக்கப்பட்ட மறைமலை நகர் ஏற்பாடு செய்த போது, சென்னை நகரத்திற்கு வெளியில் 5 பகுதிகளாகப் பிரித்து, சாட்டிலைட் டவுன் ஒன்றை உருவாக்க வேண்டுமென்று திட்டம் இருந்தது. ஒரு நகரப் பகுதிக்கு 5 கோடி ரூபாய் முதல் 50 கோடி ரூபாய் வரை கொடுக்க வேண்டுமென்று அதனால் சென்னை நகரத்தின் நெருக்கடியைத் தவிர்க்கலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மறைமலை நகருக்குப் பிறகு ஏன் எந்த ஒரு பெரிய முயற்சியும் எடுக்கப் படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள் என்று நம்புகிறேன். இன்றைய தினம் நெருக்கடியைத் தவிர்க்க என்ன ஏற்பாடுகளை ஹவுசிங் போர்டு, எம்.எம்.டி.ஏ. செய்திருக்கின்றன? மறைமலை நகரில் அதிகமான விலைக்கு மனைகள் விற்கப்படுகின்றன. எப்படி அந்த விலையை அவர்கள் கொடுப்பார்கள்? ஏன் அந்த மனை விலை ஏற்றப்பட்டது என்று அறிவிக்க வேண்டும். புதிய இடங்களைத் தேர்ந்தெடுக்கின்ற போது, எல்லா வசதிகளும் வாய்ப்புகளும் இருக்கிறதா என்று பார்த்து அங்கே இருக்கிற நடுத்தர, ஏழை மக்களுக்கு கட்டிடங்களைக் கட்டி, வசதிகளைப் பெருக்கிக் கொடுத்தால், சென்னை நகரத்தில் நெருக்கடி குறையும் சந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால் இருக்கின்ற பழைய கட்டிடங்களை உடைத்து, அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டும்போது, எந்த விதியையும் அவர்கள் பின்பற்றுவதில்லை. விதிகளை மீறிக் கட்டினால், ஒரு நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது. அதை எதிர்த்து அவர்கள் நீதி மன்றத்திற்குப் போய் தடை வாங்குகிறார்கள். ஆனால் அப்படி வாங்கப்பட்ட தடைகளை எதிர்த்து, எத்தனை வழக்குகளை அரசாங்க வழக்கறிஞர்கள் போட்டிருக்கிறார்கள் என்று பார்த்தால் ஒன்றும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். தடை வாங்கி விட்டால் பல வருடங்

களாக தடையிலேயே போய்க் கொண்டிருக்கிறது. தடையை மீறி அவர்கள் வேலை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். பல இடங்களில், சென்னையில் எப்படிக் கட்டிடங்கள் வந்தன? அதற்கு யார் பொறுப்பு என்று பார்த்தால் பொதுவாக ரியல் எஸ்டேட்காரர்கள் தான் வளர்ந்திருக்கிறார்கள். ஒன்று அதிகாரிகள் அவர்களுக்கு ஒத்தாசையாக இருக்க வேண்டும், அல்லது வேறு மாதிரியாக இருக்க வேண்டும், ஆகவே நமது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவர்கள் உதவியாக இல்லை என்பது தான் எனது குற்றச்சாட்டு.

அதே போல, வேலூர் செல்கிற வழியில் சாலைகள் எல்லாம் பெருவழிச் சாலைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. பெருவாரியான இடங்களில், நகரப்புற முன்னேற்றத்திற்காக எடுத்த திட்டம் எல்லாம் அங்கே தண்ணீர் வசதியில்லாமல் இருக்கின்றன. ஆகவே தண்ணீர் வசதி, சாலை வசதி செய்து கொடுத்து, சிறப்பான முறையில் அந்த மனைகளை உருவாக்கினால் பெருவாரியான மக்கள் அந்தப் பகுதியில் போய் வாழ சந்தர்ப்பம் இருக்கும். சென்னை நகரத்தையொட்டி இருக்கிற இடத்தை எல்லாம் நீங்கள் எடுக்கவில்லை என்று சொன்னால், நமது திட்டங்கள் சரியாக நிறைவேறாது. நமது திட்டப்படி நடக்கிறதா, அதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன, எந்த அளவுக்கு அந்தத் துறை முயற்சிகள் எடுத்து புதிய நகரங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதெல்லாம் நீங்கள் இங்கே கொடுத்து இருக்கிற அறிக்கையில் இல்லை என்பதை இந்த சமயத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

12-30 மணி

அதேபோன்று திருச்சி, கோவை, மதுரை, சேலம், திருநெல்வேலி போன்ற பெரிய நகரங்களை ஒட்டியிருக்கின்ற பகுதிகளின் வளர்ச்சிக்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கிறது? அங்கேயும் ரியல் எஸ்டேட்காரர்கள் தான் வளர்ந்து வருகிறார்கள். எனவே இந்த இலாக்காவைச் சேர்ந்தவர்கள் அங்கே போய் புதிய இடங்களைக் கண்டு பிடித்து நகர மக்களுக்குப் புதிய வசதிகளைச் செய்து கொடுத்து நல்ல முறையில் கட்டடங்களைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்யவில்லை என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

சென்னை மாநகரத்தில் இருக்கின்ற கொத்தவால் சாவடியை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டும் என்றும் அதற்காகக் கட்டடங்கள் எல்லாம் கட்டியிருக்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். அதை எவ்வளவு நாட்களுக்கு கட்டிக் கொண்டிருப்பார்கள்? கட்டிக்கொண்டே இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். லாரிகள் எல்லாம் சென்னை நகருக்கு வருவதால் போக்குவரத்திலே தடை ஏற்படுகிறது என்றும் அதிலே பலவிதமான சங்கடங்கள் ஏற்படுகின்றன என்றும் சொல்லி லாரிகளை நிறுத்துவதற்காக





ஒரு இடத்தை தேர்ந்தெடுத்து அந்த இடத்தில் புதிய அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லி ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டன. ஆனால் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்றால், அங்கே போய்ப் பார்த்தால் மண்ணை அடித்து வேலி போட்டிருக்கிறார்கள் அவ்வளவுதான். ஓராண்டு காலத்தில் வெறும் மண்ணை அடித்து வேலி மட்டும் போட்டால் மீதி வேலைகளை முடிக்க இன்னும் எத்தனை வருஷங்கள் ஆகும்? என்ன செய்ய ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்? எந்த ஆண்டில் அது முடிய இருக்கிறது. திட்டங்களைப்பொறுத்தவரையில்இப்படியே போய்க்கொண்டிருந்தால், காலத்தோடு செய்யாமல் போய்க் கொண்டே இருந்தால் பிறகு விலையேற்றம் ஏற்பட்டு அதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்ற சூழ்நிலை எல்லாம் வரும் அல்லவா? எனவே அதைத் தவிர்க்க என்ன ஏற்பாடு செய்ய இருக்கிறீர்கள்?

அடுத்து மொத்தமாக இரும்பு வியாபாரம் செய்கிறவர்களுக்கான தனியான ஏற்பர்டு செய்யப்பட்டு அவர்கள் எல்லாம் அங்கே போக வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்னும் அது ஏற்பாட்டிலேயே இருக்கிறது. இப்படி ஏற்பாட்டிலேயே எத்தனை வருஷம் இருக்க வேண்டும்? என்ன முயற்சி செய்தீர்கள் அந்த இலாகாவில்? பணம் இல்லை என்று சொன்னால் பணம் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். நாம் ஃபினான்ஷியல் டார்கெட்டை மட்டும்தான் பார்க்கிறோம். அதாவது இந்த வருஷம் 100 கோடி ரூபாய் என்று கொடுத்தால் அதைச் செலவு செய்யப் பார்க்கிறோம். ஆனால் ஃபிசிக்கல் டார்கெட்டைப் பார்ப்பது இல்லை. அதாவது இந்த ஆண்டுக்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது என்றால் அதைச் செலவழித்துவிட்டு பணம் பற்றவில்லை என்று சொல்கிற நிலைமையிலேதான் இருக்கிறோமே தவிர பிசிக்கல் டார்கெட்டைப் பார்ப்பது இல்லை. அதைப் பார்ப்பதற்கு என்ன ஏற்பாடு இருக்கிறது? மூன்று மாதத்திற்கு ஒருமுறையாவது செலவழிக்கப்பட்ட பணத்திற்கும், நடைபெற்ற வேலைக்கும் ஒத்து வருகிறதா என்று பார்ப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து நீங்கள் பார்க்கலாம் எப்படியெல்லாம் குடிசைகள் வருகின்றன என்று. குடிசைகள் மட்டும் வரவில்லை. கோவளத்திற்குப் போகிற வழியில் பார்த்தால் வீராணம் பைப்களை எல்லாம் பார்க்கலாம், வீராணம் பைப்பை எல்லாம் நாம் உருவாக்கிக் கொண்டு வந்து போட்டோம். ஆனால் அங்கே என்ன டிசைனிலே வீடு இருக்கிறது என்பதைப் பாருங்கள்? ஒரு பக்கத்திலே சமையல் அறை, ஒரு பக்கத்திலே நல்ல காற்று வசதி, ஜன்னல்கள் அப்புறம் அடுத்த பைப்பிலே குடியிருப்பு என்று இந்தமாதிரி எல்லாம் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த பைப்புகள் எத்தனை வருஷமாக அங்கே கிடக்கின்றன. அதற்கு என்ன ஏற்பாடு செய்ய வேண்டும்? ஏன் ஏற்பாடு செய்திருக்கக்கூடாது? அல்லது அவர்களுக்காவது வீற்று

விடலாம். அந்த பைப்பை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூடச் சொல்லி வசூல் செய்யலாம். ஒரு வேளை அந்த வசூல் நடக்கிறதோ என்னவோ தெரியாது. பல இடங்களில் அப்படி நடந்தாலும் நடக்கலாம். கிழக்குக் கடற்கரைச் சாலையிலே அப்படியெல்லாம் இருக்கின்றன. எங்கள் பக்கங்களிலே அதாவது வடலூர் பக்கத்திலே கூட அந்தமாதிரி குடியிருப்புகள் நடக்கின்றன. பல இடங்களில் இப்படி அதைக் குடியிருப்பு இடமாக மாற்றி விட்டார்கள். அந்த பைப்பை சில இடங்களில் நெய்வேலிக்கு விற்பனை செய்திருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். மேலும் இந்த மானியத்தில் அதைப்பற்றி பேச விரும்பவில்லை. தனிப்பட்ட நிலை வருகிற போது அதைப் பற்றிச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து நகர வளர்ச்சி என்கிறபோது சென்னை மாநகர வளர்ச்சி என்று மட்டுமல்லாமல் டவுன்சிப், முனிசிபாலிட்டி என்று நகர எல்லையில் இருக்கின்ற அவற்றையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு நகர அமைப்பு என்கிற போது அதனுடைய வளர்ச்சிக்கு உதவுகிற போது பஸ் ஸ்டாண்டுக்கு, மார்க்கெட்டுக்கு கம்யுனிட்டி செண்டர் என்பதற்கு இது போன்ற வகைகளுக்கு எல்லாம் நாம் பணம் கொடுக்கிறோம்; கடன் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். இப்படி மொத்தத்தில் எல்லா நகருக்கும் என்று நீங்கள் அளிக்கவில்லை என்று சொன்னாலும் கூட, வளர்ந்து வருகின்ற நகரம், முக்கியமாக வியாபார ஸ்தலங்களை ஒட்டி இருக்கின்ற இடங்களுக்கும் இதை உடனடியாக நீங்கள் அளிக்க வேண்டும். அப்படி அளிப்பதன் மூலம் பஸ் போக்குவரத்து லாரி போக்குவரத்து; அங்கே வியாபார முன்னேற்றம், அதையொட்டி அந்த நகராட்சிக்கு நல்ல வருமானம் என்ற இப்படிப் பட்ட நிலைமைகளை உருவாக்க வேண்டும். அந்த வகையில் அதைக் கொடுத்து உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இந்தச் சமயத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து அர்பன் டெவலப்மெண்ட், ரூரல் டெவலப்மெண்ட் என்று இரு பிரிவுகள் இருக்கின்றன. ரூரல் என்ற அளவில் எடுத்துக் கொண்டால் அங்கே நிறைய பாப்புலேஷன் இருக்கிறது. 40 சதவீதத்திற்கு மேல் நகர்ப்புறத்தை ஒட்டி வாழ்கின்ற மக்கள் தொகையினை மனதில் கொண்டு நகரப்பகுதியின் வளர்ச்சிக்காக நாம் நல்லவிதமாக திட்டமிட்டு உடனடியாக அவற்றை நிறைவேற்றுவதற்கு அந்தந்த ஆண்டிலேயே அந்தந்தப் பணத்தைச் செலவு செய்து சிறப்பான முறையில் நல்ல முறையில் செயலாற்றுவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

12-35 மணி

அடுத்து கைத்தறி பற்றி சொல்கிறேன். விவசாயத்திற்கு அடுத்து கைத்தறி துறை இருக்கிறது. ஏராளமான பேர்களுக்கு



வேலை கொடுக்கிறோம். லட்சக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்கிறது. அது வேலை வாய்ப்பை தேடிக் கொடுக்கிறது. சுதந்திரம் பெற்று எவ்வளவோ ஆண்டுகள் ஆகியும் கூட விவசாயத்திலே இருக்கின்ற அளவுக்கு உள்ள கஷ்டங்கள் இந்த நெசவுத் தொழிலில் இருக்கின்ற கூலிகளுக்கும் இருக்கின்றது. நெசவுத்தொழில் செய்கின்றவர்களும் கஷ்டப்படுகிறார்கள். அந்த கஷ்டத்தைப் போக்குவதற்கு என்ன முயற்சி? என்ன ஏற்பாடு? அவர்களுக்கு நல்வாழ்வுக்கு என்ன திட்டம் வைத்திருக்கிறோம்? இதெல்லாம் சில சமயங்களிலே, கைத்தறித் தொழில் சர்க்கரை ஆலை போன்ற தொழில்களிலே ஈடுபட்டிருந்தவர்களுக்கு, 5 ஆண்டுக்கு ஒரு தடவை, 10, 20 ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஒரு சைக்கிளிங் வருகின்றது. அதாவது விலை ஏற்றம், விலை இறக்கம் என்று வருகிறது. அப்படியே சில நேரங்களில் ஸ்தம்பித்து விடுகிறது. சில நேரங்களில் பார்த்தால் அப்படியே லாபம் வருகின்ற அளவிலே இருக்கும். அந்த நிலை எந்தெந்த வருடத்திலே வருகிறது என்பது தெரிகின்றபோது அதற்கு என்ன ஏற்பாடு என்று நம்மிடம் கணக்கு இருக்கிறதா என்று பார்த்தால், ஒன்றும் கணக்கு இல்லை. கைத்தறித் துணியைப் பொறுத்த அளவிலே அந்தத் துணிகள் விற்பனை ஆகக்கூடிய இடங்கள் எப்படி இருக்கின்றன. கைத்தறித் துணிகளில் எந்த ரகங்கள் விற்பனையாகின்றன. அவர்களுக்கு எந்தெந்த காலங்களிலே நூல்களோ அவர்களுக்கு வேண்டும் என்கின்ற உபகரணங்களோ கொடுப்பதற்கு அந்த துறையைச் சேர்ந்தவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்களா என்று பார்க்கும்போது அதற்கான முயற்சி எடுக்கப்படவில்லை. ரிபேட் கொடுப்பது, ரிபேட் எடுப்பது இருக்கிறது. ஏதோ எடுக்கிறார்கள். அந்த ரிபேட் கணக்கெல்லாம் நான் பார்க்க விரும்பவில்லை. அது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதிலே பல சரியான முறையில் இல்லை என்பதை மட்டும் இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ள வேண்டும். முதல்வர் அவர்கள் இங்கே இருப்பதாலே சொல்கிறேன். சில்க் போர்ட். அது பம்பாயிலே இருப்பவர்களின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. அதனாலே நம்முடைய இங்கே இருக்கும் பெருவாரியான பட்டு தயாரிப்பவர்கள், உடுப்பவர்கள், பட்டு நெசவிலே ஈடுபட்டு இருப்பவர்கள் நிறைய பேர்கள் இருக்கின்றார்கள். கூடுமானவரையில் ஒரு ஜோனல் ஆபீஸ் இங்கே சென்னையிலே, காஞ்சிபுரத்திலே வைப்பதற்கு மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். எதற்கு வேண்டுமானாலும் அவர்கள் வைக்கிற விலைதான். அவர்கள் கொடுக்கிற நூல் தான். அவர்கள் கொடுக்கின்ற பட்டுதான். அவர்கள் என்ன விலை வைக்கிறார்களோ அப்படிதான். அதே போலத்தான் டிசைன். அந்த டிசைன் கூட நம் இஷ்டத்திற்குப் பண்ண முடியாது. அவைகளை எல்லாம் கட்டுப்பாட்டிலே வைத்திருக்கின்றார்கள். உரிய நேரத்திலே உரிய அளவிலே இதை எல்லாம் நீங்கள் தலையிட்டு நம்முடைய பகுதிக்கு, நெசவுத் தொழிலிலே பட்டுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு இங்கே ஜோனல் டைரக்ரேட் ஒன்று வைக்க வேண்டும். அந்த

[திரு. கோ. பூவராகன்] [1990 ஏப்ரல் 6

போர்ட் ஒன்று வைப்பதற்கு புதிய அரசை மத்தியஅரசை நீங்கள் வற்புறுத்த வேண்டும் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்து அமைகிறேன்.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கைத்தறித் துணியை எடுத்துக்கொண்டால் எந்த அரசும் செய்யாத பல சாதனைகளை கழக அரசு செய்துள்ளது.

1974ஆம் ஆண்டு முதல் நெசவாளர்களுக்குக் காப்புறுதித் திட்டத்தைக் கொண்டு வந்தது கழக அரசு. சென்ற ஆண்டு வரை காப்புறுதித் திட்டத்தில் மூவாயிரம் வழங்கிவந்ததை இந்த ஆண்டு முதல் பத்தாயிரமாக அளிக்க வரவு செலவுத் திட்டத்தில் கூடுதலாக 30.45 இலட்சம் ஒதுக்கி அறிவித்து உள்ளதற்காக நெசவாளர்களின் சார்பில் கழக அரசுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் கைத்தறி அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு வரை 30 நாட்களுக்கு மட்டும் ரிபேட் கொடுத்து வந்ததை நீக்கி நடப்பு ஆண்டிலிருந்து 90 நாட்களுக்கு 20 சதவிகிதம் தள்ளுபடிக்கு 27 கோடி ரூபாயை நிதி ஒதுக்கீடு செய்த கழக அரசைப் பாராட்டுகின்றேன்.

கைத்தறிகளை நவீனமாக்க 1.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ததையும் பாரா: டி வரவேற்கிறேன்.

வரும் ஆண்டில் வீட்டு வசதி நகர்ப் பகுதி வளர்ச்சி வாரியத்தின் நிதி உதவியுடன் ரூ. 5 கோடி மொத்த செலவில் இரண்டாயிரம் தறிக்கூடத்துடன் அமைந்த வீடு கட்டும் பணியை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்ததை வரவேற்கிறேன்.

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகத்தில் தற்பொழுது பிணையக் கடன் உச்ச வரம்பு மூவாயிரமாக இருப்பதை ஏழை பிரிவு நெசவாளர்களுக்கு இட உதவி அளிக்கும் வண்ணம் ரூ. 5,000 ஆக உயர்த்தப்படுவதை வரவேற்கிறேன்.

நடப்பு நிதி ஆண்டில் நெசவாளர்களுக்கு தின்காரை மேற்கூரைகளுடன் கூடிய வீடுகள் ரூபாய் இருபத்தையாயிரம் மதிப்பீட்டில் ஹட்கோ நிறுவன கடன் மற்றும் அரசு மானியம்பெற்று வீடு கட்ட உத்தேசித்துள்ளதை வரவேற்கிறேன்.

முந்தைய அரசின் நெசவாளர் சங்கங்களுக்கு தேவையான அனைத்து நூல்களும் தனியாரிடம் கூட்டுறவு நிறுவனத்துடனும் பலவாறு கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையை மாற்றி அமைத்து நெசவாளர் சங்கங்களும் கூட்டுறவு நூற்பு ஆலையிலேயே நூல் கொள்முதல் செய்ய உத்தரவு பிறப்பித்ததையும், இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்



1990 ஏப்ரல் 6] [திரு. ஏ. சுப்பு]

கீழ் தேவைப்படும் வேட்டி சேலைகள் அனைத்தையும் நெசவாளர் சங்கத்திடம் கொள்முதல் செய்கிறது. இதனால் நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு கிடைப்பதுடன் நெசவாளர் சங்கங்களுக்கு நல்ல முறையில் செயல்பட வாய்ப்புள்ளது. இதனையும் கழக அரசு பதவி ஏற்றுக்கொண்டபொழுது தமிழ் நாட்டில் உள்ள 18 கூட்டுறவு நூற்பு ஆலைகளில் சேலம் கூட்டுறவு நூற்பு ஆலையை தவிர. அனைத்து நூற்பு ஆலைகளும் நட்டத்தில் இயங்கி வந்தன. மாண்புமிகு முதலமைச்சரின் ஆணைக்கு இணங்க மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் தீவிர முயற்சியின் காரணமாக இரண்டு நூற்பாலைகளைத் தவிர, 16 நூற்பாலைகள் இலாபத்தில் இயங்கி வருகிறது. இந்த மகத்தான சாதனை புரிந்ததற்காகவும் கழக அரசைப் பாராட்டுகிறேன்.

12–40 மணி

காஞ்சீபுரத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு ஜரிகை ஆலையில் முந்தைய ஆண்டுகளை விட 1989–90 ஆம் ஆண்டு அதிக இலாபம் ஈட்டிக் கொடுத்ததையும் பாராட்டுகின்றேன். காஞ்சீபுரத்தில் இயங்கிவரும் கூட்டுறவு ஜரிகை ஆலையைப்போல் சேலம் மாவட்டத்திலும் ஒரு கூட்டுறவுத் துறை ஜரிகை ஆலை நிறுவ தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை நெசவாளர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் உற்பத்தி ஆகும் ஜனதா ரகங்களை 7 சதவிகித இலாபத்தில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்கிறது. இதில் பேக்கிங் மற்றும் அனுப்பி வைக்கும் கட்டணம் 2 சதவிகிதமாகிறது. அதில் 5 சதவிகிதம் மட்டுமே சங்கத்திற்கு இலாபம் கிடைக்கிறது. சங்கங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படும் ஜனதா ரகங்களுக்கு பத்து சதவிகித இலாபம் கிடைக்க அரசு அனுமதி வழங்கியும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அதை வழங்க மறுத்து வருகிறது. எனவே, அரசு முன்பு ஆணை பிறப்பித்தவாறு 10 சதவிகித இலாபம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியில் உள்ள 7 பட்டு கைத்தறி நெசவாளர் சங்கங்களில் சுமார் 1.5 கோடி மதிப்புள்ள பட்டு சேலைகள் விற்பனையாகாமல் தேங்கியுள்ளது. இதனால் சுமார் 1,500 பட்டு நெசவாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். உடனடியாக கோ-ஆப்டெக்ஸ் மூலம் பட்டு சேலைகளை கொள்முதல் செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஜனதா ரகங்கள் நெய்யும் கைத்தறி நெசவாளர்களுக்கு கூலி உயர்வு கொடுக்க ஆவன செய்ய வேண்டுகிறேன். விசைத்தறிக்கு தனி வாரியம் அமைத்து விசைத்தறி நெசவாளர்களை காப்பாற்

றும்படி அரசைக் கேட்டுக்கொள்கிறேன். எல்லா கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூல்களில் 50 சதவிகிதம் நூலை மானிய விலையில் வழங்க அரசை கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசால் வழங்கப்படும் மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஐந்தாயிரம் ரூபாய் எட்டாம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு வழங்கப்படுகிறது. ஏழை நெசவாளர் குடும்பப் பெண்களுக்கு ஐந்தாம் வகுப்பு வரை படித்து இருந்தால் போதும் என்று மாற்றம் செய்ய அரசு முன்வர வேண்டுகிறேன். இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்கள் கைத்தறித்துறை தனி அலுவலர்கள் நிர்வாகத்தில் இயங்கி வருகிறது. ஒவ்வொரு தனி அலுவலருக்கும் இரண்டு, மூன்று சங்கங்கள் அவர் பொறுப்பில் உள்ளதால் அவர் முறையாக சங்கங்களுக்குச் சென்று பணி ஆற்றாத காரணத்தால் சங்கங்களில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, சங்கங்களின் நிர்வாகத்தைக் கவனிக்க நெசவாளர்களைக் கொண்ட நிர்வாகக் குழு நியமிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்குத் தேவையான பில் புத்தகம் மற்றும் பேரேடுகள் ஆகியவற்றை கூட்டுறவு அச்சகங்களின் மூலமாகவே வாங்க அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஆணை பிறப்பிக்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன். இதனால், கூட்டுறவு அச்சக தொழிலாளர்களும் பயன்பெறுவார்கள். பருத்தி விலை குறைவாக இருந்தும் நூல் விலை மிக மிக அதிகமாக உள்ளது. இதை மத்திய அரசிடம் எடுத்துக்கூறி நூல் விலையைக் குறைக்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

விசைத்தறி தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களும், கைத்தறி நெசவு தொழிலாளர்களே. கைத்தறியைப் பாதிக்காத அளவுக்கு விசைத்தறி தொழிலுக்கும் மானியமளித்து விசைத்தறியாளர்களையும் காப்பாற்ற அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

சேலம் கூட்டுறவு நூற்பாலை தொடர்ந்து இலாபத்தில் இயங்கிக் கொண்டிருப்பதால் அதன் கிளை நூற்பாலையாக இராசிபுரத்தில் ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

உத்திரமேரூர் தொகுதியில் உள்ள காஞ்சி காமாட்சிஅம்மன் கூட்டுறவு நூற்பு ஆலை நலிவடைந்துள்ளது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நவீனப்படுத்த வேண்டும். இராசிபுரம் நகராட்சியில் குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக, எனது தொகுதிக்கு உட்பட்ட வெண்ணந்தூர்



பேரூராட்சியிலும், நாமகிரிப்பேட்டை பேரூராட்சிகளிலும் பேருந்து நிலையம் அமைத்துக் கொடுக்க ஆவனச் செய்யுமாறு அரசை வேண்டிக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்காக மாண்புமிகு தலைவருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், வணக்கம்.

12-45 மணி

*திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே சமர்ப்பித்திருக்கின்ற கைத்தறித் துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியங்கள் குறித்து சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு நம்முடைய நாட்டிலே விவசாயத்திற்கு அடுத்தபடியாக பெரும்பாலான மக்கள் நம்பி வாழக்கூடிய கைத்தறி சம்பந்தமாகத் தொடர்ந்து நாம் பல்வேறு உதவிகளைச் செய்துவந்தாலும் கூட, அந்தக் கைத்தறியை நம்பியிருக்கிற மக்களுடைய வாழ்க்கை இன்றைக்கும் மிக மோசமான நிலையில் இருக்கிறதென்பதை நாம் பார்க்கத் தவறக்கூடாது. கைத்தறியை நம்பி இன்றைக்கு வாழ்க்கை நடத்தும் நெசவுத் தொழிலாளர்களுக்கு மாதத்தில் 25 நாட்களுக்கு கூட வேலை கிடைக்காமல் இருப்பது மட்டுமல்ல, வேலை கிடைக்கக்கூடிய நாட்களில் கூட அவர்கள் ஊதியமாக 7, 8 ரூபாய்க்கு மேலே பெற முடியாத நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஜனதா சேலை, ஜனதா வேட்டி நெய்யக்கூடிய அதிகமான பணியைக் கொடுத்தாலும்கூட, அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் அவர்கள் வாழ்க்கையை நடத்தப் போதுமானதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போக்குவதற்கான தீவிரமான நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் இன்றைக்கு ஏறக்குறைய 4¼ இலட்சம் தறிகள் இருக்கின்றன. கொஞ்சம் கொஞ்சமாக அந்த தறிகள் குறைந்து கொண்டே வருகின்றன. ஏனென்றால் அது கட்டுப்படியாகாதது மட்டுமல்ல, அதை நம்பி இருக்கக்கூடிய மக்கள் அந்தத் தொழிலைத் தொடர்ந்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கும் கைத்தறிகளில் பெரும் பகுதி, கூட்டுறவுகளில் உறுப்பினர்களாக இருந்து செயல்பட்டு வருகின்றன. அந்தக் கூட்டுறவுகள் சம்பந்தமாக கடந்த காலத்திலே பல்வேறு முறைகேடுகள் நடந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் கூறும் போது கூடக் கூறினார்கள். அது சம்பந்தமாக உரிய பல நடவடிக்கைகளை எடுத்து, கூட்டுறவுச் சங்கங்கள் சீராகச் செயல்பட ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு இன்றைக்கு காஞ்சீபுரத்தில் உள்ள ஸ்ரீவரதராஜ சுவாமி பட்டு கூட்டுறவு சங்கம் இன்றைக்குச் செயல்

படவில்லை. அந்தச் சங்கம் முறையாகச் செயல்பட வேண்டுமென்று அதைச் சேர்ந்த உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்து, உண்ணாவிரதப் போராட்டத்தையும், வேறுபல போராட்டங்களையும் நடத்தி வருகிறார்கள். கடைசியாகக் கைத்தறித்துறை உதவி இயக்குநர் சென்று, அங்கே பல்வேறு முறைகேடுகள் நடந்திருப்பதைக் கண்டு, 18 இலட்சம் ரூபாய் பெருமானமுள்ள பட்டு நூலை எடுக்கக் கூடாது என்று சீல் வைத்துவிட்டார்கள். 5 இலட்சம் பெருமானமுள்ள ஜவுளியையும், கைத்தறித் துணிகளையும் எடுக்கக்கூடாது என்று சீல் வைத்திருப்பதாகக் கூறுகிறார்கள். எனவே, சமீப காலமாக, அவர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படும் நிலைமை இருக்கிறது. அது சம்பந்தமாக துரிதமான நடவடிக்கை எடுத்து, விசாரணை செய்து, சரியான தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்தி, இந்த மாதிரி சங்கங்கள் செயல்படுவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். பல இலட்சக்கணக்கான ரூபாய் மோசடி நடந்திருப்பதாகக் கூறுகிறார்கள். அது யார் தவறு என்று கண்டுபிடித்து, உரியவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அந்தச் சங்கம் சரியான முறையில் நடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து இன்றைக்கு நிர்வாகத்திற்கு நியமனம் செய்யப்படுகிறது. அந்த நியமனம் செய்யக்கூடிய முறை கூடாது. அது சரியல்ல என்பது என்னுடைய கருத்து. இன்றைக்கு புதிதாகச் சங்கங்களைத் துவங்கும்போது, குறிப்பிட்ட காலம்வரை அந்த நிர்வாகத்தை நியமனம் பண்ணுவதாக இருந்தது. பல ஆண்டுகளாக இப்படி நியமனம் செய்யக்கூடிய, அரசுக்கு வேண்டிய கட்சிக்காரர்களை நியமனம் செய்யக்கூடிய போக்கு, குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்களை அறவே அழிந்து விட்டது. ஆகவே, அந்த முறையை நீங்கள் கைவிடவேண்டும்.

12-50 மணி

அது மட்டுமல்லாமல், இன்றைக்குப் புதிதாக 411 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். தறி இருந்து, சேர்க்க வேண்டிய ஆட்களாக இருந்தால் சேர்க்கலாம். கவலை இல்லை. புதிதாக, நிர்வாகத்தைக் கைப்பற்ற வேண்டுமென்ற நோக்கத்திற்காக, சேர்க்கப்படுகிற முறைகளை எல்லாம் தவிர்க்க வேண்டும். நியாயமான உறுப்பினர்களைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபை அமைத்து, முறையாக அந்தச் சங்கங்கள் செயல்படுவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



இது சம்பந்தமாக, ஏற்கனவே, ராஜா சுப்பிரமணியம் கமிட்டியினுடைய பரிந்துரைகள் பல கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பரிந்துரைகளை எல்லாம் சரியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா?, இல்லையென்றால் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய துரித நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரிபேட் கொடுக்கிறோம். அப்படி ரிபேட் கொடுப்பதை 90 நாட்களாக உயர்த்தியிருக்கிறார்கள். அந்த ரிபேட் கொடுப்பதை 90 நாள் என்றோ, 30 நாள் என்றோ ஒரு குறிப்பிட்ட காலம்தான் கொடுக்கப்படும் என்று வைத்திருப்பதன் காரணமாக, அந்த ரிபேட் காலத்தில் பல்வேறு பெயர்களிலே வியாபாரிகள், வர்த்தகர்கள், அந்தத் துணிகளை வாங்கி, பின்னாலே விற்கிறார்கள். ரிபேட் என்று சொல்லக் கூடிய அந்த முறையிலே மாற்றம் கொண்டு வரலாமா, எப்படி கொண்டு வருவது என்று யோசனை செய்து கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதுவரை அந்த ரிபேட் முறை இருக்கும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதுசரிதான். ஆனால், அந்த ரிபேட் கொடுக்கின்ற முறை, வருடம் பூராவும் இருக்கவேண்டும்; காலம் முழுமைக்கும் ரிபேட் கொடுக்கக்கூடிய முறையிலே சீர்திருத்தம் பண்ண முடியுமா ? வருடம் பூராவும் ரிபேட் கொடுக்கிற முறையைக் கொண்டு வரமுடியுமா என்று பார்க்கவேண்டும்.

அது மட்டுமல்லாமல், ரிபேட் பணம் முழுவதும் காலாகாலத்திலே அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போய் சேர்வதில்லை. முன்பு தேங்கிய பணம் சென்ற ஆண்டு கொடுக்கப்பட்டதாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, உடனுக்குடன் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரிபேட் தொகை கொடுத்தால் தான் அவர்கள் அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க முடியும். இப்பொழுது அந்தத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருப்பதற்கு அது ஒரு காரணம். தொடர்ந்து அங்கு தறிகளை இயக்கக் கூடிய முறையிலே அந்தச் சங்கங்கள் திறமையாக இல்லை., ஆகவே, காலாகாலத்திலே அந்த ரிபேட் அந்தச் சங்கங்களைச் சென்றடைவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே மாதிரியாக, இன்றைக்குக் கைத்தறி சம்பந்தப்பட்டமட்டிலே, நூல் விலைகள் எல்லாம் உயர்ந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. அந்த நூல் விலை உயர்வின் காரணமாக மட்டுமல்லாமல், பல கைத்தறிச் சங்கங்களிலே துணிகள் தேங்கியிருக்கின்றன. துணிகள் தேங்குவதன் காரணமாக, மேலும் நூல் வாங்க முடியாமல் அந்தத் தொழில்கள் நடக்க முடியவில்லை.

நியாயமான ஊதியம் வழங்கப்படாததால் அந்தத் தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் பார்த்துப் பேசியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால் அவர்கள் எல்லாம் வேறு பல இயக்கங்களில் ஈடுபடக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் அந்தச் சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி கூட்டுறவு நூற்பாலைகள் சிறப்பாக நடக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு எங்களுடைய சங்கம் உட்பட, அனைத்துச் சங்கங்களும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அதற்கு ஏற்பாடு செய்து, தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளைக் கொடுத்து, கூட்டுறவு நூற்பாலைகளைச் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எட்டயபுரம் பாரதி கூட்டுறவு நூற்பாலை சிறப்பாக இயங்கி, பல்வேறு பரிசுகளையும் பெற்றிருக்கிறது. அந்த நூற்பாலைத் தொழிலாளர்கள் கூட சில குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதைப்போல தேனி கூட்டுறவு நூற்பாலை, இராமநாதபுரம் கூட்டுறவு நூற்பாலை அறந்தாங்கி கூட்டுறவு பஞ்சாலை ஆகியவையும் சிறப்பாகச் செயல்பட்டுவந்தாலும் தொழிலாளர்களுக்கு குறைந்த ஊதியம் தான் வழங்கப்படுகிறது. வேறு பல மில்களில் உள்ள தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதுபோன்று உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அது சம்பந்தமாக விவாதித்து, நியாயமான உரிமைகளை அளித்து, அந்தக் கூட்டுறவுப்பஞ்சாலைகள் எல்லாம் சிறப்பாக நடக்க ஏற்பாடு செய்வதற்கு சம்பந்தப்பட்ட சங்கங்களைச் சேர்ந்த தலைவர்களை அழைத்துப் பேசி, தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நகர்ப்புற வளர்ச்சி சம்பந்தமாக பல்வேறு பிரச்சினைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. சென்னையை எடுத்துக்கொண்டால் பல்வேறு இடங்களில் பல மாடிக் கட்டிடங்களைக் கட்டி வருகிறார்கள். அதனால், 400 அடி, 500 அடி, ஆழத்திற்கு போர் போட்டு தண்ணீர் எடுக்கிறார்கள். அதன் காரணமாக பக்கத்திலே இருக்கிற வீட்டுக்காரர்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல் போய்விடுகிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் என்ன ஏற்பாடுகளை வைத்திருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு இடங்களில் உழைக்கின்ற மக்கள் வாழும் பகுதியில் மேம்பாடுகள் செய்யப்படாமல் மிகவும் மோசமாக இருக்கிறது. அப்படிப்பட்ட பகுதிகள் மிகவும் பள்ளமாக இருக்கின்றன. பள்ளமாக இருக்கிற காரணத்தால் பலவிதமான சுகாதாரக் கேடுகள்



ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட மோசமான நிலைமைகளை போக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து, அந்தப் பகுதிகளை மேம்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய கொத்துவால்சாவடியில் இருந்த வியாபாரிகளை கோயம்பேடு பகுதிக்கு மாற்ற ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அது சம்பந்தமாக ஏற்பாடுகளைச் செய்து அவர்களுக்கு ஒரு சதுர அடிக்கு 350 ரூபாய் என்று நிர்ணயம் செய்து நிலம் கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள் அந்தப் பகுதிக்குப் போய்வர தூரம் அதிகமாக இருப்பதால் போய்வர வசதியில்லை; ஆகவே, பக்கத்திலே எங்களுக்கு வீட்டுமனை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலையும் அதிகமாக இருக்கிறது; அதைக் குறைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து துரித இரயில் போக்குவரத்திற்கான வேலைகள் வேகமாக நடைபெறுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சில வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், இதிலே பெருத்த தாமதம் ஏற்படுகிறது என்பது உண்மை. தாமதத்தைத் தவிர்த்து, துரிதமாகப் பணிகள் நடைபெற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, நான் ஏற்கனவே சொன்னமாதிரி, கைத்தறித் துறையில் இருக்கின்ற தொழிலாளர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்; அவர்களுடைய பிரச்சனையிலே அதிகக் கவனம் செலுத்தி, மாதத்தில் 25 நாள் வேலை கிடைக்கவும் உற்பத்தி செய்கிற துணிகளை மாநிலக் கூட்டுறவுச் சங்கம் கொள்முதல் செய்து விற்பனை செய்வதற்கும், தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி, நியாயமான உரிமைகள் கிடைப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

13—00 மணி

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணிநூல் துறை, நகர்ப்புற வளர்ச்சித்துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு நல்ல ஆக்கப் பூர்வமான கருத்துக்களை வழங்கியதற்காக நான் முதற்கண் நன்றியறிதலை உரித்தாக்கிக் கொள்கிறேன். கைத்தறித் துறையைப் பொறுத்த அளவில் தமிழகத்தில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக நெசவுத் தொழில் பிரதானத் தொழிலாக இன்றைய தினம் நடைபெற்றுக்

[திரு. சோ. அழகர்சாமி] [1990 ஏப்ரல் 6

ஆகவே, மாநிலக் கூட்டுறவுச் சங்கம், 3 மாதமோ, அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேலோ தேங்கியிருக்கிற துணிகளைக் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கையை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கியிருக்கிற துணிகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக விற்பனை ஆகாமல் இருப்பதை எல்லாம் மாநில கைத்தறிச் சங்கம் கொள்முதல் செய்து பல்வேறு வகையிலே நாம் விற்பனைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதைச் செய்தால்தான் தொடர்ந்து அவர்களுக்கு வேலை கொடுக்க முடியும். ஏனென்றால், அந்தத் தொழில் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து கொண்டு வருகிறது. குறைந்து கொண்டு வருவதன் காரணமாக இருக்கிற தொழில்களைப் பாதுகாக்க வேண்டும். அவர்களுக்கு வேறு வேலை தெரியாது, ஆகவே. அவர்களைப் பாதுகாக்க தகுந்த நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று. கேட்டுக்கொள்கிறேன். விசைத் தறியிலே, கைத்தறியிலே பணியாற்றக் கூடிய தொழிலாளர்களுக்குச் குறைந்த பட்ச நியாயமான கூலி நிர்ணயம் செய்து, அந்தக் கூலிக் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அந்தத் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறவர்கள் ஓரளவு நிலைக்க முடியும். அந்தத் தொழில் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து கொண்டு வருகிறது. இருக்கிற வரையில் பாதுகாப்பதற்கு அந்தக் காரியங்களையெல்லாம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, துணிநூல் தொழில் சம்பந்தமாக, கொள்கைக்குறிப்பிலே முதலாவதாகவே ஒன்று சொல்லப்படுகிறது. 'கடந்த சில ஆண்டுகளில் நாடு முழுவதும் துணி நூல் பஞ்சு விலை உயர்வினால் நலிவு அடைந்துள்ளது, என்று சொல்லப்பட்டிருக்கிறது. 24 ஆம் பக்கத்தில்,......தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பஞ்சாலைகளிலே 21 நூற்பாலைகள் தொழிலாளர் பிரச்சினை. நிதி வசதி பற்றாக் குறை மற்றும் தவறான நிர்வாகம் போன்ற காரணங்களுக்காக மூடப்பட்டிருந்தன' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுதான் உண்மையே தவிர, பஞ்சு விலை உயர்வினால் தொழில்கள் எல்லாம் நசிந்து விட்டன என்று சொல்லக் கூடிய வாதம் சரியல்ல. அது முதலாளிகள் சொல்லக்கூடிய வாதமாகும். பஞ்சுக்கு விலை போதவில்லை என்று விவசாயிகள் போராடுகிறார்கள். அது மட்டுமல்லாமல், தமிழகத்திற்கு வேண்டிய 12 இலட்சம் பேல்களுக்கு பதிலாக உற்பத்தியே $4\frac{1}{2}$ இலட்சம் பேல்கள்தான். அவ்வளவுதான் தமிழகத்திலே பஞ்சு உற்பத்தி ஆகிறது. ஆகவே, அந்த வாதம் சரியான வாதம் அல்ல. தவறானமனேஜ்மெண்ட்தான் காரணமே தவிர, பஞ்சாலைகள் நசிந்துபோயிருப்பதற்கு பஞ்சு விலைகள் காரணம் அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 6] [திரு. சோ. அழகர்சாமி]

அடுத்து, இன்றைக்கு பல நூற்பாலைகள் நீண்டநாட்களாக மூடிக்கிடக்கின்றன. மூடிக்கிடக்கின்ற நூற்பாலைகளைத் திறப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால் இதுவரையில் ஒன்றிரண்டு நூற்பாலைகளே திறக்கப்பட்டிருக்கின்றன. மற்ற நூற்பாலைகள் அனைத்தும் திறக்கப்படாமல் அந்தத் தொழிலாளர்கள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். அந்த நூற்பாலைகளை எல்லாம் விரைவிலே திறப்பதற்கு, அந்தத் தொழிலாளர்களுடைய கஷ்டத்தைப் போக்குவதற்கு என்ன செய்யலாம் என்று ஆலோசிக்க வேண்டும். நீங்கள் மூடிய ஆலைகளைத் திறக்க வேண்டுமென்று முயற்சி எடுத்துக் கொண்டாலும் கூட ஏறத்தாழ இன்னும் 30 ஆலைகள் தமிழ் நாட்டில் மூடியே இருக்கின்றன. அந்த ஆலைகளை விரைவில் திறப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

12-55 மணி

மற்றொன்று, தமிழ்நாட்டிலே பல புதிய கூட்டுறவு நூற்பாலைகள் திறக்கப்பட்டு, 5, 6 ஆண்டுகள் ஆகிவிட்டன. எட்டயபுரம், தேனி, இராமநாதபுரம், அறந்தாங்கி பகுதிகளில் கூட்டுறவு நூற்பாலைகள் தொடங்கப்பட்டு 5, 6 ஆண்டுகள் ஆகிவிட்டன. கூட்டுறவு நூற்பாலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட காலம் முடிந்து, ஏறத்தாழ 4, 5 இலாபகரமாக நடக்க ஆரம்பித்தவுடனே அந்தத் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியம், நியாயமான முறையில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டுமென்று சட்டத்திலே இருந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்தாமல் இருக்கிறார்கள். அப்படி நடைமுறைப்படுத்தாமல் இருப்பவர்களுக்கு எடுத்துச் சொல்லி, நடைமுறைப்படுத்த தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நீதிபதி வரதன் அவர்களுடைய லேபர் கோர்ட் தீர்ப்பு ஒன்று இருக்கிறது. இரண்டு வருடங்களில் 480 நாள் ஒருவர் பணியாற்றியிருந்தால் அவரை நிரந்தரமாக்குவது மட்டுமல்லாமல் நிரந்தரமான தொழிலாளர்களுக்கு உரிய அத்தனை சலுகைகளையும் உரிமைகளையும் வழங்க வேண்டுமென்று அந்தத் தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையிலே உரிமைகளும் சலுகைகளும் தொழிலாளர்களுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அது மட்டுமல்ல, கூட்டுறவு நூற்பாலைகள் ஆரம்பிக்கப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேலாகி, இலாபகரமாக ஓடக்கூடிய கூட்டுறவு நூற்பாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியம் வழங்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களுக்கு

[திரு. ச. தங்கவேலு] [1990 ஏப்ரல் 6

இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளினுடைய நிர்வாகத்தை நேரிலே கண்டறிவதற்காக மகாராட்டிரத்திலேயிருந்து மாண்புமிகு கைத்தறி அமைச்சர் பிரகாஷ் அவாட் அவர்கள் அந்தத் துறையினுடைய செயலாளரோடு தமிழகத்திற்கு வருகை புரிந்தார்கள். அந்த அமைச்சரும், அந்தத் துறைச் செயலாளரும் இந்த அரசு பொறுப்பேற்று குறுகிய காலத்திற்குள் இந்தக் கூட்டுறவு நூற்பாலையெல்லாம் இலாபத்தில் இயக்கியிருக்கிறீர்களே, எந்த முறையில் நீங்கள் நிர்வாகத்தை ஏற்படுத்தினீர்கள். எப்படிப்பட்ட முறையில் நிர்வாகத்தை நீங்கள் செம்மைபடுத்தி இப்பொழுது இலாபத்திற்குக் கொண்டு வந்தீர்கள் என்பதைப் பற்றி எங்களிடத்திலே நேரிலேயே கேட்டார்கள். இன்னும் சொன்னார்கள், 43 கூட்டுறவு நூற்பாலைகள் எங்கள் மாநிலத்தில் இருக்கின்றன; 13 கூட்டுறவு நூற்பாலைகள்தான் இலாபத்திலே இயங்குகின்றன; மீதம் உள்ளவைகளை எங்களால் இலாபத்தில் இயக்க முடியவில்லை என்ற கருத்தை எங்களிடத்திலே சொன்னபொழுது, எங்களுடைய துறை அதிகாரிகளின் மூலமாகவும், நானும் நேரிலே அந்த அமைச்சருக்கும், அந்த துறை அதிகாரிகளுக்கும், தமிழகத்திலே எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றி தெளிவு படுத்தியிருக்கிறோம்.

அதைப் போலவே, அசாம் மாநிலத்திலுள்ள கைத்தறி அமைச்சர் மாண்புமிகு ஆர். என். கலீதா அவர்களும் இந்தக் கைத்தறி துறையினுடைய நடவடிக்கைகளையும், ஆலை நிர்வாகத்தையும் பற்றிக் கேட்டறிவதற்காகத் தமிழகத்திற்கு வருகை தந்து, இந்த நிர்வாகத்தைப் பாராட்டிச் சென்றிருக்கிறார்கள்.

இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளை, பல ஆண்டுக் காலமாகச் சீரமைக்கின்ற திட்டம் நடக்கவில்லை. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் நிதிநிலை அறிக்கையிலே, இப்படிப்பட்ட 18 கூட்டுறவு நூற்பாலைகளில் 12 கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்தும் திட்டத்தில், 31 கோடி ரூபாயை நிதிநிலைமை அறிக்கையிலே இன்றைக்கு வெளியிட்டிருக்கிறார்கள். இதன் மூலம், எட்டயபுரத்திலுள்ள பாரதி கூட்டுறவு நூற்பாலை, இராமநாதபுரம் மாவட்டம் கூட்டுறவு நூற்பாலை அண்ணா கூட்டுறவு நூற்பாலை, தேனி, தர்மபுரி கூட்டுறவு நூற்பாலை போன்ற பகுதிகளில் விரிவாக்கத் திட்டம் நடைபெற உள்ளன. இந்தத் திட்டம் விரைவிலே அமல் படுத்தப்பட்டு, இன்னும் ஆயிரம் தொழிலாளர்களுக்குப் புதிதாக வேலை வாய்ப்பு கொடுக்க இந்த அரசின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனபதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 6] [திரு. ச. தங்கவேலு]

மிசேரியர் நூற்பாலை 6,000 கதிர்களிலேயிருந்து 12,000 கதிராக விரிவாக்கும் பணி தற்போது நடைபெறுகிறது.

இங்கே கருத்துச் சொன்ன உறுப்பினர்களெல்லாம், நூல் விலை உயர்வைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஆனால், கூட்டுறவு நூற்பாலையின் மூலம் மானிய விலையிலே வெளிச் சந்தையை விடக் குறைந்த விலையிலே நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல்களை நாங்கள் வழங்குகின்றோம். ஆனால், வெளிச்சந்தையில் ஏறுகின்ற நூல் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை. மத்திய அரசுதான், தனியார் ஆலைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். முன்பு பொறுப்பேற்றிருந்த மத்திய ஜவுளி அமைச்சர் ராம் நிவாஸ் மிர்தா அவர்களிடம் நாம் நேரிலே சொன்னேன். தனியார் ஆலைகள் 50 சதவீதம் சிட்ட நூல்கள் கைத்தறிக்குத் தேவையான நூலை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற இலக்கு இருக்கிறது. தனியார் ஆலை கடைப்பிடிப்பதில்லை. இதை அமல் படுத்த வேண்டும் என்ற குறிப்பை நான் எடுத்துச் சொன்னேன். அதேபோல், நூலை எசன்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்ட் என்ற அத்தியாவசியப் பொருள்களின் நிலைக்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக நூல் விலையைக் குறைக்க முடியும் என்று அன்றைய தினம் எடுத்துச் சொன்னேன். தொடர்ந்து மத்திய அரசின் மூலம் இந்தக் கருத்தை வலியுறுத்தி மீண்டும் நூல் விலையைக் குறைப்பதற்கு உரிய நடவடிக்கை இந்த அரசின் மூலம் எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

13-10 மணி

இரண்டாவது, துணி உற்பத்தி, தமிழகத்திலே 1987-ஆம் ஆண்டு கணக்குப்படி 4.27 இலட்சம் கைத்தறி இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. தற்போது 2.85 லட்சம் கைத்தறிகள் கூட்டுறவு அமைப்பில் இருக்கின்றன. தமிழகத்தில் 1677 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பருத்தி மற்றும் பாலியஸ்டர் ரகங்கள் 1,410 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பட்டுத் துணி உற்பத்தி செய்கிற சங்கங்கள் 117, செயற்கைப் பட்டு உற்பத்தி செய்யும் சங்கங்கள் 150 தற்போது நடைபெற்று வருகின்றன. இந்தச் சங்கங்களுக்கு தொடர்ந்து நூல் வழங்குவதற்கு முறையான அமைப்பு கடந்த காலங்களில் இல்லை. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தான் ஒவ்வொரு வட்டத்தின் சார்பிலும் உதவி இயக்குநர் மூலமாக எந்தெந்த சங்கத்திற்கு எந்த ரக நூல் தேவையென்ற குறிப்பை, கணக்கை எடுத்து, அந்த குறிப்பின் மூலமாக, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் அதிகாரிகள் மூலமாக, இருவரையும் ஒருங்கிணைந்த இந்த நூல் விநியோகத்தை கடைபிடிக்க வேண்டுமென்ற உத்தரவை இந்த அரசு வந்ததற்கு பிறகு தான் நாங்கள் உருவாக்கி, அத்தனை நெசவாளர் சங்கங்களுக்கும் சீரான நூல் விநியோகம் செய்யப்படுகிறது.

[திரு. ச. தங்கவேலு] [1990 ஏப்ரல் 6

கொண்டிருக்கிறது. தமிழகத்தில் நெசவுத் தொழில் மட்டும் 30 இலட்சம் மக்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டு இந்த அவையில் மானியக் கோரிக்கைகள் மூலமாக நெசவுப் பெரு மக்களுக்கு நல்ல பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டு இந்த அரசின் மூலமாக அமல்படுத்தப்பட்டு இருக்கின்றது. இந்த ஆண்டும் இந்த மானியக் கோரிக்கைகள் மூலமாக நெசவாளப் பெருமக்களுக்கு பல்வேறு நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றது என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்.

கைத்தறித் துறையைப் பொறுத்த அளவில் அதை 3 பகுதியாகப் பிரிக்கலாம். ஒன்று நூல் உற்பத்தி, இரண்டாவது துணி நெசவு, மூன்றாவது துணி விற்பனை. நூல் உற்பத்தியைப் பொறுத்த அளவில் தமிழகத்தில் உள்ள 1677 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவைப்படுகின்ற நூல்கள், எந்தெந்த இரக நூல்கள் தேவைப்படுகின்றதோ அவைகளை அந்தந்தப் பகுதி மக்களுக்கு வழங்குவதற்கு அரசின் மூலம் இன்றையதினம் பராமரிப்பிலிலுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் சீரான விநியோகம் தற்போது நடைபெறுகின்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்பு பொறுப்பேற்ற நேரத்தில் 13 கூட்டுறவு நூற்பாலைகள்களை நிர்மாணித்தார்கள். அதற்குப் பின்னர் 5 கூட்டுறவு நூற்பாலைகள் நிர்மாணிக்கப்பட்டன. இந்த 18 நூற்பாலைகளும் நெசவாளர் சங்கங்களுக்கு வேண்டிய நூல்களை வழங்குவதற்கும், மீதமுள்ள நூல்களை வெளியில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்குவதற்கும், விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்குவதற்கும் தான் நிர்மாணிக்கப்பட்டன. இந்த அரசு பொறுப்பேற்ற சனவரி மாதத்தில் இந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளின் நிர்வாகத்தை எடுத்துப் பார்க்கின்றபோது கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்ற பல்வேறு நடைமுறைச் சீர்கேடுகளின் காரணமாகத்தான் அவைகள் 35 கோடியே 79 இலட்ச ரூபாய்க்கு ஒட்டுமொத்தமான நஷ்டத்தில் நடைபெற்றன. இந்த அரசு பொறுப்பேற்ற 1989 சனவரி மாதம் அந்தக் கூட்டுறவு நூற்பாலைகளில் ஒட்டுமொத்தமாக ரூ. 33 இலட்சம் நஷ்டம் இருந்தது. பிப்ரவரியில் ஒட்டுமொத்தமாக ரூ. 42 இலட்சம் நஷ்டம் இருந்தது. மார்ச் மாதத்தில் பல்வேறு நடவடிக்கைகள் மூலமாக அந்த நஷ்டத்தை 5 இலட்சம் ரூபாய் குறைத்து, ஏப்ரல் மாதத்திலிருந்து தொடர்ந்து லாபத்திலே இயக்கி இருக்கிறோம். முதன் முதலிலே சேலம் கூட்டுறவு நூற்பாலை தான் லாபத்தில் இயங்கியது. இன்றைய தினம் 2 நூற்பாலைகள் தவிர மற்ற நூற்பாலைகள் அனைத்தும் லாபத்தில் இயங்குகின்றன என்றால், கடந்த காலங்களில் ஏற்பட்ட நிர்வாகச் சீர்கேடுகளை அகற்றிய காரணத்தினால்



1990 ஏப்ரல் 6] [திரு. ச. தங்கவேலு]

தான் லாபம் கிடைத்தது. அதோடு மட்டுமல்லாமல் நல்ல தரமான பஞ்சுகளைக் கொள்முதல் செய்து அந்த நூற்பாலைகளுக்கு வழங்கி இருக்கின்றோம். தரமான நூல்களை அந்த ஆலைகளின் மூலம் உற்பத்தி செய்து இருக்கின்றோம். என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஓராண்டுக் காலத்தில் அந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளும் 7 கோடி 14 இலட்ச ரூபாய் லாபத்தை ஈட்டி இருக்கின்றது. அந்த ஆலைகளில் மொத்தப் பெரு நஷ்டம் 35 கோடியாக இருந்ததை 28 கோடியாகக் குறைத்து இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் கூட்டுறவு ஆலைகளின் மூலம் விநியோகம் செய்கின்ற அந்த நூல்கள் வெளிச் சந்தையில் குறைந்த விலையில் கோ-ஆப்டெக்ஸ் நிர்ணயிக்கின்ற விலையிலே இன்றைக்கு நெசவாளர்கள் சங்கங்களுக்கு வழங்குகின்றோம். கடந்த ஓராண்டுக் காலத்தில் வெளிச் சந்தையிலுள்ள விலைக்கும் கோ-ஆப்டெக்ஸ் நிர்ணயித்து உள்ள விலைக்கும் வித்தியாசம் 8 கோடி ரூபாய். இந்த வித்தியாசத்தை நெசவாளர்கள் சங்கங்களின் மீது சுமத்தாமல், நெசவாளப் பெருமக்களின் துயரைத் துடைப்பதற்காக அந்த 8 கோடி ரூபாயை கூட்டுறவு நூற்பாலைகளே இன்றைக்கு ஏற்றுக்கொண்டு இருக்கின்றது.

13–05 மணி

கூட்டுறவு நூற்பாலையிலே பணியாற்றும் அந்தத் தொழிலாளர்களின் நலன்களைக் காப்பதற்காக இந்த அரசின் மூலம் போனஸ் வழங்கும் திட்டம் கடந்த ஆண்டுகளில் இருந்தாலும் கூட, போனஸ் வழங்கும் திட்டம் இந்தப் பழைய நூற்பாலைகளுக்கு 13 நூற்பாலைகளுக்கு 8.33 சதவீதம் போனஸ் கொடுக்கின்ற அந்தத் திட்டம் இருந்தால்கூட, வருகை அடிப்படையில், கருணை அடிப்படையில் ஒரு நாள் வருகை தந்ததற்கு மூன்று ரூபாய் வீதம் போனஸாக வழங்கி இருக்கிறோம்.

புதிய ஐந்து மில்களுக்கு அந்தப் போனஸிலே இடம் இல்லாவிட்டாலும் கூட, வருகை அடிப்படையில் ஒரு நாளைக்கு 2 ரூபாய் 50 காசு வீதம் போனஸாக வழங்கி இருக்கிறோம்.

ஒட்டு மொத்தமாக இந்த ஓராண்டுக் காலத்தில் 2 கோடியே 44 இலட்சம் ரூபாய் தொழிலாளர்களுக்குப் போனஸாக வழங்கியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நூற்பாலையின் மூலம் வெளியிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு இந்த ஓராண்டுக் காலத்தில் 9,344 பேல்கள் நூல்கள் இங்கே கைத்தறியாளர்களுக்கு வழங்கியிருக்கின்றோம்.

[திரு. ச. தங்கவேலு] [1990 ஏப்ரல் 6

அதைப் போல தள்ளுபடி மானியம், துணித் தேக்கத்தைப் போக்கினால்தான், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள துணியை விற்பனை செய்தால் தான் அந்த சங்கங்கள் சீராக இயங்க முடியும். அந்த அடிப்படையில் இந்த நெசவாளர் சங்கங்களுக்கு தள்ளுபடி மானியம் வழங்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் கைத்தறி துணிகளை வாங்குபவர்களுக்கு 90 நாட்கள் 20 சதவீதம் மானியத்தோடு வழங்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். இது பல்வேறு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சீராக இயங்குவதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல இந்த அரசு பொறுப்பேற்ற நேரத்தில் கைத்தறி சங்கங்களுக்கு வரவேண்டிய தள்ளுபடி மானியத் தொகை, 26.15 கோடி ரூபாய் பல ஆண்டுக்காலமாக வராமல் இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு மூன்று மாதங்களில் இந்தப் பணம் வழங்கப்படும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் மூன்று மாதங்களில் 26.15 கோடி ரூபாயும், மேலும் தள்ளுபடி மானியமாக இதுவரையில் 60 கோடி ரூபாயும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இன்றையதினம் வழங்கப்பட்டிருக்கிறது. இது கைத்தறித் துறையின் மிகப் பெரியசாதனையாகும். என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதியின் மூலமாக சங்கங்கள் சீராக, நல்ல வேகத்தோடு, உற்பத்தியை பெருக்குவதற்கு வழிவகை பெறும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பை வழங்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். அரசின் மூலம், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட வேண்டிய சீருடை துணிகள் கடந்த காலங்களில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கப்படாமல், தனியாரிடம் கைத்தறி துணி என்ற பெயரால் மில் துணிகள் வாங்கப்பட்டது. கடந்த நான்கு ஆண்டுக்காலத்தில் 16 கோடி ரூபாய் கைத்தறி துணி என்ற பெயரால் தனியாரிடமிருந்து மில் துணி வாங்கப்பட்டது. ஆனால் நம்முடைய முதலமைச்சர் இன்றைக்கு ஒரு உத்தரவைப் பிறப்பித்து இருக்கிறார்கள். பள்ளி சீருடைகளுக்கும், போக்குவரத்து, காவல்துறை அதிகாரிகளுக்கும் வழங்குகிற சீருடைகளுக்கும், கைத்தறித் துறை மூலமாகவும், கதர்த் துறை மூலமாகவும் வாங்கப்பட வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பித்ததன் காரணமாக, தமிழகத்தில் தொடர்ந்து நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க இந்த உத்தரவை வழங்கி இருக்கிறார்கள். இந்த ஆண்டு சீருடைக்காக மட்டும் கைத்தறித் துறை சார்பில் 6 கோடி ரூபாய்க்கு துணிகளை நாங்கள் வழங்கி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 6] [திரு. ச. தங்கவேலு]

அடுத்து இலவசமாக சேலை, வேட்டி வழங்கும் திட்டம், தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை காலங்களில் 83 லட்சம் குடும்பங்களுக்கு இலவசமாக சேலை, வேட்டி வழங்கும் திட்டத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தத் திட்டத்தில் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக சேலை, வேட்டி வழங்கினாலும், கூட, இந்தத் திட்டத்திற்குப் பின்னால் இருக்கிற ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட நெசவாளர்கள் கடந்த ஓராண்டு காலத்தில் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

துணி உற்பத்தியில் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு அதிகமான முன்னேற்றத்தை காட்டியிருக்கிறோம். கடந்த ஆண்டு 203 கோடி ரூபாய்க்கு பட்டு, பருத்தி, பாலியஸ்டர் ரகம் போன்ற துணிகளை உற்பத்தி செய்தார்கள். இந்த ஓராண்டு காலத்தில் 216 கோடி ரூபாய்க்கு உற்பத்தி செய்து, சென்ற ஆண்டை விட 13 கோடி ரூபாய்க்கு அதிகமான துணியை உற்பத்தி செய்திருக்கிறோம்.

13-15 மணி

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராசன் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். கூலி உயர்வைப் பற்றி சொன்னார்கள். நெசவாளர்களைப் பொறுத்த வரையில் கூட்டுறவு அமைப்புகளின் கொள்கையின்படி உறுப்பினர்களாக நெசவாளர் அனைவரும் சங்கத்தில் சகஉரிமையாளர் ஆவார்கள்: ஆனால் நெசவாளர்கள் சங்கத்தைப் பொறுத்தவரையில், முதலாளி தொழிலாளி என்ற பேச்சுக்கே இடம் இல்லை. கைத்தறித் துணியின் விலை, நூல் விலை, சாய விலை, நெசவுக் கூலி இவைகளை உள்ளடக்கித்தான் கைத்தறித் துணியினுடைய விலை அமைகிறது. இந்தக் கைத்தறித் துணியை வெளிச் சந்தையில் விற்பதற்கு அந்தந்த மாவட்டங்களைப் பொறுத்த வரையில், அந்தந்த ரகங்களுக்கு ஏற்ப, நெசவாளர்களுடைய வேண்டுகோளுக்கு ஏற்ப, எந்தெந்த ரகங்கள் விரைவாக விற்பனை அடைகிறதோ, அதற்கேற்றாற்போலத்தான் பல்வேறு கூலி உயர்வுகள் எல்லாம் வழங்கப்பட்டு இருக்கின்றன. இன்றைய தினம் ஜனதா ரகத்திற்கு 10 சதவீதம் கூலி உயர்வும், பருத்தித் துணிக்கு 10 சதவீத கூலி உயர்வும் பட்டு ரகங்களுக்கு 10 சதவீத கூலி உயர்வும், கைலி ரகங்களுக்கு 10 சதவித கூலி உயர்வும் இன்றைக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன.

[திரு. ச. தங்கவேலு] [1990 ஏப்ரல் 6

அதேபோல் காமராஜர் மாவட்டத்தில் ராஜபாளையத்தில் மட்டும் மருத்துவத் துணி உற்பத்தி செய்கின்ற அந்த சங்கத்தில் உள்ள நெசவாளர்களுடைய சிறப்புத் தன்மையைக் கருதி, அந்த நெசவாளர்களுக்கு 15 சதவீத கூலி உயர்வு வழங்கப்படும்.

அதேபோல் பட்டு நெசவாளர்களுக்கு ஒரு நாளைக்கு குறைந்தது 50 ரூபாய் வரையிலும் வருவாய் கிடைக்கிறது. பருத்தி நெசவிலே ஈடுபடுகிற நெசவாளர்களுக்கு ரூபாய் 15 முதல் 20 வரையிலும் தற்போது அவர்களுக்குக் கூலி கிடைக்கிறது. ஆகவே, குறைந்தபட்சக் கூலி, அகவிலைப்படி அமுல்படுத்தவில்லை என்று இங்கே சிலர் குறிப்பிட்டார்கள். இங்கே அறிவித்துள்ள குறைந்த பட்ச அகவிலைப்படி, துணியின் விற்பனையை பெருமளவில் பாதிக்கும், சங்கங்களுடைய பொருளாதார நிலைமை கெட்டு, அந்தச் சங்கங்கள் நலிந்துவிடக் கூடாது என்றுதான் கைத்தறித் துறையினுடைய இயக்குநர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அரசிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கைத்தறித்துறை அமைச்சர் கூறும்போது நெசவாளர்கள் கூலி விகிதம் பற்றிச் சொன்னார்கள். ஒன்றை மட்டும் நான் கூறி அமைகிறேன். நெசவாளர்களுக்கு உதவக் கூடிய முறையில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, கொண்டு வந்த ஊதிய, பஞ்சப்படி சம்பந்தப்பட்ட சட்டம் ஏன் அமுலாக்கப் படவில்லை என்ற விஷயத்தோடு, கொண்டு வந்த சட்டம் இப்போது கைத்தறி நெசவைப் பாதிக்கும் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. அதை அமுலாக்க வேண்டும் என்ற முறையில் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, இந்த குறைந்தபட்ச கூலி உயர்வு அமுல்படுத்துகின்ற நேரத்தில் சங்கங்களுடைய நிதி நிலைமை பாதிக்கக்கூடாது என்ற கருத்தின் அடிப்படையில் இயக்குநர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து விரைவில் அரசின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ.வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டத்தை அரசு நிறைவேற்றியதற்குப் பிறகு அதை நடைமுறைப்படுத்தாமலே அது பாதிக்கும் என்ற முடிவுக்கு வந்து, அதற்காக அதை நிறுத்தி வைப்பது என்பது எந்த வகையிலும் நியாயமாகாது. எனவே, அதைப் பரிசீலித்ததற்குப் பிறகு, நடைமுறைக்குக் கொண்டு வருவதைவிட அதை நடைமுறைப்படுத்தச் சொல்லுங்கள். பரிசீலித்து பின்னாலே முடிவு



1990 ஏப்ரல் 6] [திரு. கோ. வீரையன்]

எடுக்கக்கூடிய காலத்திலே முடிவு எடுக்கலாம். அரசு நிறைவேற்றிய சட்டத்தை நடைமுறைப்படுத்தப் போகிறதா இல்லையா என்பதை இப்போது அமைச்சர் அவர்கள் மூலமாக தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து அம்சங்களையும் வைத்து பரிசீலனை செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் இந்தக் கைத்தறித் துறையில் உள்ள வேலை வாய்ப்பைப் பொறுத்தவரையில், நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்புக்களை வழங்குகிறோம். அகில இந்திய அளவில், கைத்தறித் துறைகளை ஆய்ந்த போது, கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக உள்ள வேலை நாட்கள் 194. ஆனால் தமிழகத்தில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 269 நாட்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் இப்போது கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்கின்ற துணிகளை 50 சதவீதம் கொள்முதல் செய்து விற்பனை செய்கிறது. மீதமுள்ள 50 சதவீதம் கிளை நிலையங்கள் மூலமாக, முகவர் நிலையங்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது. இந்த கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தைப் பொறுத்த வரையில், 20 இடங்களில் துணியிருப்பு வைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 294 இடங்களில் இந்த கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் விற்பனை செய்கிறோம். வெளி மாநிலங்களில் 206 இடங்களில் இந்த விற்பனை நிலையங்கள் இன்றைக்கு இருக்கின்றன.

13-20 மணி

அதேபோல் துணித் தேக்கத்தைப் போக்குவதற்கு அரசின் மூலமாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் மட்டும் கடந்த காலங்களில் 117 கோடி ரூபாய் அளவிற்கு துணித் தேக்கம் இருந்தது. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 70 கோடி ரூபாய் பெருமானம் உள்ள துணி தேக்கம் இருந்தது. அந்த துணி தேக்கத்தைப் போக்குவதற்காகத்தான் முதல் கட்டமாக இந்த அரசு பொறுப்பேற்ற நேரத்தில் கைத்தறி வார விழா நடைபெற்றது. சென்னை மற்றும் 16 நகரங்களில் இந்தக் கைத்தறி வார விழா நடைபெற்றது. அதே 16 நகரங்களில் தான் கடந்த காலங்களில் கடந்த அரசு இருந்த போது இந்த விற்பனையை நடத்தியது. ஆனால் 1987 ஆம் ஆண்டு நடைபெற்ற கைத்தறி வார விழாவினுடைய மொத்த விற்பனை 18 கோடி ரூபாய். 1988 ஆம் ஆண்டு கைத்தறி வார விழாவினுடைய விற்பனை 20 கோடி

ரூபாய். இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பின்னால் 25 கோடி ரூபாய்க்கு துணிகளை விற்பனை செய்திருக்கிறோம். என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல தீபாவளி பண்டிகை காலத்தில் 1988 ஆம் ஆண்டு 42 கோடிக்கு துணி விற்பனை நடைபெற்றிருக்கிறது. இந்த அரசு வந்ததற்கு பின்னால் 56 கோடி ரூபாய்க்கு தீபாவளி நேரத்திலே விற்பனையை எட்டி இருக்கிறோம்.

பொங்கல் நேரத்திலே கடந்த ஆண்டு 14 கோடி ரூபாய்க்கு விற்பனை ஆனது. இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பின்னால் 20 கோடிக்கு விற்பனையை அதிகரித்திருக்கிறோம். கோவாப்-டெக்ஸ் நிறுவனத்தைப் பொறுத்த அளவில் ஒவ்வோர் ஆண்டும் பெரும் அளவில் நட்டமும், சில வருடங்களில் சொற்ப லாபமுமே கடந்த 10 ஆண்டுக் காலமாக ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பின்னால் லாபத்திலே இயங்க வைத்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த காலங்களில் 1984-85 ஆம் ஆண்டு 7 கோடியே 79 லட்சம் ரூபாய்க்கு நஷ்டம். 1985-86 ஆம் ஆண்டு 23 லட்சம் ரூபாய்க்கு லாபம். 1986-87ல் 13 லட்சம் ரூபாய் லாபத்தை ஈட்டி இருக்கிறது. ஆனால் கடந்த 1988 ஆம் ஆண்டு இந்த கோவாப்டெக்ஸ் நிறுவனம் மட்டும் 2 கோடியே 46 லட்சம் ரூபாய் நஷடத்தை ஈட்டியிருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்ற ஒரு வருட காலத்திற்குள் இந்த கோவாப்டெக்ஸ் நிறுவனம் இன்றைக்கு 3 கோடி ரூபாய்க்கு லாபத்தை ஈட்டி இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கோவாப்டெக்ஸ் நிறுவனத்தில் கடந்த காலத்தில் ஏற்பட்ட ஒட்டு மொத்த நஷ்டத்தை 10 கோடியிலிருந்து 7 கோடியாக இந்த ஓராண்டு காலத்திலே குறைத்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவாப்டெக்ஸ் விற்பனையை அதிகப்படுத்துவதற்காக இப்போது இந்த ஓராண்டு காலத்தில் நவீன படுத்தும் திட்டத்தின் கீழ் ஈரோடு, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி, ஹைதராபாத், பெங்களூர் போன்ற இடங்களில், அந்த நவீனப் படுத்தும் திட்டத்தின் அடிப்படையில் பட்டு மாளிகை திறக்க இருக்கிறோம். வருகிற ஆண்டில் தஞ்சாவூர், மதுரை, பெங்களூர், நாகர்கோவில், பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் பட்டு மாளிகையை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இன்னும் இந்த ஆண்டில் 70 விற்பனை நிலையங்களை 2 கோடி ரூபாய் செலவிலே நவீனப்படுத்த திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் அறிவித்ததைப் போல சென்னை, கடலூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் போன்ற இடங்களில் சேமிப்பு கிடங்கு 2 கோடியே 41 லட்சம் ரூபாயில் கட்டப்



பட்டு வருகிறது. விரைவில் இந்த ஆண்டு அவைகள் எல்லாம் திறக்கப்பட இருக்கின்றன. அதேபோல கொள்முதலைப் பொறுத்த வரையில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிகமாக இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த ஆண்டு 72 கோடி ரூபாய் என்று இருந்த கொள்முதலை இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பின்னால் 105 கோடி ரூபாயாக உயர்த்தி இருக்கிறது. விற்பனையைப் பொறுத்த அளவிலே கடந்த ஆண்டு 100 கோடியாக இருந்ததை இந்த ஆண்டு 171 கோடியாக விற்பனையை ஒரு ஆண்டுக் காலத்தில் உயர்த்தியிருக்கிறது. ஏற்றுமதியைப் பொறுத்த அளவில் கடந்த ஆண்டு 75 லட்சம் என்று இருந்ததை இந்த ஆண்டு 109 லட்சமாக உயர்த்தி இருக்கிறது. அதேபோல புதுப் புது ரகங்களை—இந்த துணி தேக்கத்தைப் போக்குவதற்கு பல்வேறு நவீன ரக துணிகளை 12 ரகங்களை அறிமுகப்படுத்தி ஒவ்வொரு ரகத்திலும் 100—க்கு மேற்பட்ட டிசைன்களை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். வருகிற நாகரீகத்திற்கு ஏற்றாற் போல் வண்ண வண்ண துணிகளை உற்பத்தி செய்வதன் மூலமாக துணித் தேக்கத்தை போக்க முடியும் என்ற கருத்தின் அடிப்படையில் இந்தத் திட்டத்தை நாம் ஓராண்டு காலத்தில் விரிவுபடுத்தியிருக்கிறோம்.

கூட்டுறவிலே உள்ள விசைத் தறிகளைப் பொறுத்த வரையில் கடந்த காலங்களில் பல்வேறு இடங்களிலே இந்த நிறுவனம் சரியாக இயங்க முடியாமல் இருந்தது. இலவச சேலை வேட்டி திட்டத்தின் அடிப்படையில் இந்த விசைத் தறிக்கூடங்களை கூட்டுறவில் உள்ளவை எல்லாம் இயங்குவதற்கு அரசின் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறோம்.

நமது மாநிலத்தைப் பொறுத்த அளவிலே 2 லட்சம் விசைத் தறிகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கைத்தறியைப் பாதிக்காத வகையில் விசைத்தறி வளர்ச்சி ஊக்கப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கைத்தறி அபிவிருத்திக் குழுவின் மூலம் கடந்த ஆண்டு 2,800 கைத்தறி நெசவாளர்களுக்கு 3 கோடியே 86 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டது. இந்த நடப்பு ஆண்டில் 4 கோடியே 50 லட்சம் ரூபாய்க்கு கடனாக வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

13—25 மணி

அதேபோல், பட்டு ரகத்திற்கு தேவைப்படுகின்ற ஜரிகை ஆலை, காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்டது. ஆனால், அந்த ஜரிகை ஆலை, பல்வேறு சீர்கேடுகளின் காரணமாக, நிர்வாகப் போக்கின் காரணமாக, மிகவும் நஷ்டமான நிலைமையிலே, பல்வேறு இயந்திரங்கள் எல்லாம் ஓடாத நிலைமையில் இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், அந்த ஆலையை நவீனப்படுத்துகின்ற வகையில், இன்றைக்கு 8.5 லட்ச ரூபாய் மதிப்பீட்டிலே துவக்கப்

படுகின்ற திட்டம் விரைவிலே நடைபெற இருக்கிறது. அதே போல் இயங்காமல் இருந்த அந்த இயந்திரங்கள் எல்லாம் இன்றைக்கு இயக்கப்பட்டு, 2 முறை வேலைவாய்ப்பு இருந்ததை, 3 முறையாக—3 ஷிப்டுகளாக பல்வேறு தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்காக நாம் உருவாக்க இருக்கிறோம். இந்த ஆண்டுதான் 13,71,000 ரூபாய் அதிகமான தொகையை லாபமாக ஈட்டி வந்திருக்கிறோம்.

நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட, நெசவாளர் பெருமக்களுக்கு வீடு கட்டுகின்ற திட்டத்தைப் பற்றி சொல்லும்போது, கடந்த காலங்களில், ஓடு போட்ட வீடுகள், ஒரு தறி உள்ள வீடுகளாகத் தான் அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டது. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையின்படி, 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 2 ஆயிரம் வீடுகள், 2 தறி உள்ளடக்கிய கான்கிரீட் வீடுகளாக, அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படவிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், நெசவாளர் பெருமக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையிலே, காப்புறுதித் திட்டம், 3 ஆயிரம் ரூபாயிலிருந்து, 10 ஆயிரம் ரூபாய்க்கு உயர்த்துவதற்கு, நிதிநிலை அறிக்கையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதோடு இணைத்து அந்தக் காப்புறுதித் திட்டம் 55 வயது வரையில் என்று வரம்பு இருந்ததையும் 58 வயது வரையிலும், அந்தத் திட்டத்தின் மூலம் நெசவாளர் பெருமக்கள் பயன்பெறலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியார் மாவட்டத்தில், 2-க்கு 17 நூல் ரகங்கள்—பெட்ஷீட் ரகங்களுக்கு, தேவைப்படுகிறது. அதன் காரணமாகத்தான், ஈரோட்டில், சென்னிமலைப் பகுதியில், 19 லட்சம் ரூபாயிலே, ஒரு நூல் டப்ளிங் யூனிட் என்று சொல்லத்தக்க அளவில், 2-க்கு 17 ரக நூலை உற்பத்தி செய்கின்ற அந்த நிறுவனம் நிர்மாணிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், நெசவாளர்களுக்கு, தேவைப்படுகின்ற பாவு ஓடும் ஆலை, திருச்சி மாவட்டம் மணமேட்டில், 3.8 லட்சம் ரூபாயிலே நிர்மாணிக்கப்படும். காஞ்சிபுரத்திலும், சென்னையிலும் வடிவமைப்பு நிலையங்கள் இருக்கின்றன. தென் மாவட்டத்திலுள்ள நெசவாளர்களுடைய தேவையை மனதில் கொண்டு, திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில் 1.75 லட்ச ரூபாயில் வடிவமைப்பு மையம் அமைக்கப்படும். மேலும் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விசைத் தறிகளுக்குப்



பயன்படக்கூடிய 2 விசைத்தறி சேவை மையங்களும் நிறுவப்படும். அதேபோல், கூட்டுறவு அமைப்புக்கு இல்லாமல் வெளியே இருக்கின்ற நெசவாளர்களுக்கு, தற்போது தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் மூலம், அந்தக் கழகத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றவர்களுக்கு, கச்சாப் பொருட்கள் வாங்க இந்த ஆண்டு முதல் தொடங்கப்படும். . நூல் மற்றும் சாயப் பொருட்கள், இதன் மூலம் வாங்கடபடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தருகின்ற திட்டம், ஆயுள் காப்புறுதித் திட்டம் ஆகியவை இந்த நிறுவனத்தின் மூலம், இந்த ஆண்டு முதல் நடைமுறையில் கொண்டு வரப்படும். இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்களையெல்லாம் இந்த அரசின் மூலம் நெசவாளர் பெருமக்களுக்கு வழங்கி இருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள், நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களெல்லாம், நெசவாளர்களுடைய துயர்களை எண்ணி, துணிகளின் தேக்கத்தைப் போக்குவதற்காக, தங்களுடைய தோள்களிலே கைத்தறித் துணிகளைச் சுமந்து, கடந்த காலங்களிலே அவர்களுக்காக பாடுபட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முதலமைச்சர்தான், இன்றைக்கு பொறுப்பேற்றிருக்கிறார்கள். இந்த அரசின் மூலம், நெசவாளர் பெருமக்களுக்கு நல்ல பாதுகாப்பு கிடைக்கும் என்பதை நான் எடுத்துச் சொல்லி, இன்னும் பல்வேறு திட்டங்களை எல்லாம், அடுக்கடுக்கான திட்டங்களையெல்லாம், அணி அணியாக இந்தத் துறையின் மூலம் அவர்களுக்கு அளிக்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் ...............

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற வளர்ச்சிக்குப் போவதற்கு முன்னதாக, கைத்தறித் துறையை முடித்துவிட்டார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தினுடைய கைத்தறி சம்பந்தமான கொள்கையை அரசாங்கம் உருவாக்குகிறதா, அல்லது, கைத்தறித் துறை இயக்குநர் உருவாக்குகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன். காரணம், குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தை 83-லிருந்து அமல்படுத்தவில்லை என்பதால், தொடர்ந்து கிளர்ச்சிகள் செய்தோம் நாம் எல்லோரும் சேர்ந்துதான்.

அந்த அடிப்படையிலே 1988-இல் ஆளுநர் ஆட்சி 'பிரிலிமினரி நோட்டிபிகேஷன்' கொடுத்தது. இந்த அரசு வந்த பிறகு இப்போதுதான் 3 மாதத்திற்கு முன்னதாக 26–6–89-இல் அதற்கு பைனல் நோட்டிபிகேஷன் கொடுத்து இந்தச் சட்டத்தை அமல்படுத்தவேண்டுமென்று நிர்ணயித்து விட்டபிறகு—அப்போது இந்தக் கைத்தறித் துறை இயக்குநர் எங்கே சென்றிருந்தார்? — இதை அமல்படுத்தாமலேயே, இது கைத்தறித் தொழிலைப் பாதிக்கும் என்று முடிவுக்கு வரும் போது.இதையெல்லாம் யோசித்துத் தானே அரசு முடிவு எடுத்து, இப்படிப்பட்ட அந்தச் சட்டத்திற்கு முழு உருவம் கொடுத்து 26–6–89-இல் தானே வந்தது? அதற்குள்ளேயே அதற்கு மாற்றம் தேவை என்று சொன்னால், அதனால்தான் நான், கேட்கிறேன், அமைச்சர் அவர்கள் கூட இங்கே சொன்னார்கள். கைத்தறித் துறை இயக்குநர் இப்படிக் கூறுகிறார் என்று ஆகவேதான் இந்தக் கொள்கையை உருவாக்குவது அமைச்ரவையா, அல்லது கைத்தறித் துறை இயக்குநரா என்பதை அறிய விரும்புகிறேன்.

13–30 மணி

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக நான் ஏற்கெனவே பதிலளித் திருக்கின்றேன். அரசின் மூலம் உங்களுடைய கருத்தை மையமாக வைத்து பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கோவிந்தராஜன் அவர்கள், அனுபவம் மிக்க சட்டமன்ற உறுப்பினர். தொழிற்சங்கவாதி சட்டத்தினை உருவாக்குவது அமைச்சரவைதான் என்பதை அவரே ஒப்புக்கொண்டு இருப்பார்கள். அதைச் சொல்வதற்குப் பதிலாக, கைத்தறித் துறை இயக்குநருக்கு அரசாங்கம் ஆணை யிடுவதைத்தான் அவர் நிறைவேற்றுகிறாரே தவிர, அவர் ஒன்றும் சட்டத்தையோ, அரசாங்கத்தினுடைய கொள்கை யையோ வகுக்க முடியாது. அவருக்கு ஏற்கனவே அது தெரியும். இருந்தாலும் இதை விளக்கமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, பாளையங் கோட்டை பகுதிகளில் கைத்தறி நெசவு அதிகமாக நடை பெறுகிறது. அங்கே பேட்டை கூட்டுறவு நூற்பாலை ஒன்று இருக்கின்றது. ஆனால் நூல் தட்டுப்பாடு—நெசவு செய்வதற்கு



நூல் தட்டுப்பாடு, திருநெல்வேலி, பாளையங்கோட்டையில் அடிக்கடி ஏற்படுகிறது. ஆகவே, பேட்டையிலுள்ள அந்தக் கூட்டுறவு நூற்பாலையிலுள்ள நூல்களை, முன்னுரிமை கொடுத்து, திருநெல்வேலி, பாளையங்கோட்டையிலுள்ள கைத் தறியாளர்களுக்கு முன்னுரிமை கொடுத்து விற்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய அரிய கருத்துக்களை மனதில் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துககொள்கிறேன்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேட்டை மில்லுக்குப் பணம் போட்டது, பல ஊர்களிலிருந்து, பல கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பணம் போட்டு ஆரம்பிக்கப்பட்டதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகவே, அதிலே பணம் போட்ட எல்லா ஊர்களுக்கும் இந்த சலுகை கொடுக்கப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு நூற்பாலை தமிழகத்தி லுள்ள அனைத்து நெசவாளர்களுடைய நன்மையைக் கருதித் தான் நிர்மாணிக்கப்பட்டது. ஆகவே, அனைத்து நெசவாளர் களுக்கும் அந்தச் சலுகை பொருந்தும்.

திரு. எம். சிரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு விசைத் தறிகளுக்கு அரசு தற்சமயம், அவர்களுடைய பொறுப்பிலே இருக்கும்படியான பகுதிகளில் சேலம் மாவட்டத்தில் ராசிபுரத்தில் இருக்கும் கூட்டுறவு விசைத் தறி, 100 தறிகள் இயங்குகின்றன. அது முழுமையும் இயங்காமல், உற்பத்தியில் பாதியாக உற்பத்தி செய்து அதன் காரணமாக அங்கு நஷ்டங்கள் அதிகமாக ஏற்பட்டிருக் கின்றன. அதை முழுமையும் இயங்கச் செய்து, அங்கே உற் பத்தியை பெருக்குவதன்மூலம் லாபகரமாக அதனை இயங்க வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்ன அந்தக் குறைபாடுகள் பற்றி அரசு அதிகாரிகள் மூலம் விரைவிலே நடவடிக்கை மேற் கொள்வோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

13-35 மணி

நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு நல்ல கருத்துக்களை இங்கே வழங்கியிருக்கின்றார்கள். நகர்ப்புற வளர்ச்சியைப் பொறுத்த அளவில், பொதுவாகவே கிராமப் புறங்களில் 80 சதவிகிதம் மக்கள் வசித்து வந்தார்கள். நகர்ப்புறங்களிலே 20 சதவிகிதம் மக்கள் தான் வசித்து வந்தார்கள். ஆனால் இன்றைய தினம் நகர்ப்புறத்தில் 20 சதவிகிதம் 40 சதவிகிதமாக இன்றைக்கு உயர்ந்திருக்கின்றது. ஆனால் பெருகி வருகின்ற மக்கள் தொகைக்கேற்ப அந்த நகரங்களை விரிவுபடுத்துகின்ற பல்வேறு நல்ல திட்டங்களை எல்லாம் இந்த அரசின் மூலமாக இன்றைக்கு நாம் உருவாக்கி அமல் படுத்தி வருகின்றோம். குறிப்பாக, நகரத்திலுள்ள மக்கள் தொகையைப் பொறுத்த அளவில் நகர மக்களில் சென்னை, கோவை, மதுரை, சேலம், திருச்சி போன்ற ஐந்து நகரங்களிலுள்ள நகர மக்கள் தொகையில் 45 சதவிகிதம் நகரத்திலுள்ள ஜனத் தொகையில் அடங்கியிருக்கின்றது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு தான், இந்த அரசு. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சிக் கொள்கை ஒன்றை உருவாக்கியிருக்கிறது. இதன் மூலம், பல்வேறு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கின்றன. சென்னைப் பெருநகரம், மற்றும் மாநிலத்திலுள்ள 9 பெரிய நகரங்கள்,—கோவை மதுரை, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய நகரங்களில், உலக வங்கி நிதியுதவியோடு, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் தற்போது நடைபெறுகிறது. அதே போல், அத்தியாவசிய மற்றும் அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்கு, உள்ளாட்சி மன்றங்களுக்குப் போதுமான நிதியாதாரத்தை உருவாக்குவதற்கு 167 கோடி ரூபாயில் நகராட்சி நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்கள் தற்போது நடைபெறுகின்றன. மைய மற்றும் மாநில அரசுகளின் சராசரி, நடுத்தர நகரங்கள் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் மூலம் செயல் படுத்தப்படுகிறது. மாநில அரசு நிதியை மட்டும் வைத்து, மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் நடைபெறுகிறது. நகர்ப்புறங்களின் வளர்ச்சிகளை வளப்படுத்த, வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள முழுமைத் திட்டம் ''மாஸ்டர் பிளான்'' மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் ''டெயில்டு டெவலப்மெண்ட் பிளான்ஸ்'' தயாரிக்கப்பட்டு நடை முறையிலே உள்ளன. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம், தமிழகத்தில் 632.6 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உலக வங்கி உதவியோடு, சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பூர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய 10 நகரங்களில், அமுல் படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், 70 ஆயிரம் ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய வீட்டு மனைகள் வழங்கப்பட உள்ளன. 94 ஆயிரம் குடிசை





வாழ் மக்களுக்கு நில உரிமை வழங்கல் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப் பட்டிருக்கின்றன. 10 நகரங்களில், சாலை மேம்பாட்டு வசதி, மற்றும் பாதசாரிகளுக்கு நிர்மாண வசதி, சென்னையில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு ஆயிரம் பேருந்துகள் வாங்கவும், பணிமனைகள், பேருந்து நிலையங்கள் கட்டுவதற்காகவும் பல்வேறு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

அதே போல், 1990 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் முடிய, இப்பணிகளுக்கு சுமார் 60 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. 17,928 மனைகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட உள்ளன. 10 ஆயிரம் குடிசை மக்களுக்கு மனைகளை மேம்படுத்தப்பட்டுள்ளன. 446 பேருந்துகள் ''பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால்'' வாங்கப்பட்டு, 357 பேருந்துகள் முழுமையடைந்து, ஊர்திகளாக பயன் பட்டுக் கொண்டிருகின்றன. 16 நகராட்சிகள், மாநகராட்சிகளுக்கு, திடக் கழிவு அகற்றுதல், கழிவு நீர் தொடர்பாக அந்த ஊர்திகளை வாங்குவதற்கு 1.47 கோடி ரூபாய் இன்றைக்கு விடுவிக்கப் பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில், இந்தப் பணிக்கு மட்டும் 90.41 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 1990–91 ஆம் ஆண்டுக்கு அடிப்படை வசதிகளுக்காக, 11 ஆயிரம் ஏழை மக்களுக்கு உதவுவதற்காக திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. குடிசைப் பகுதி மேம்பாட்டுக்காக, 20 ஆயிரம் குடும்பங்கள் பயன் பெறும். மேலும், பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு 350 பேருந்துகள் ''சேசிஸ்'' வாங்கப்பட உள்ளன. நகர்ப்புற வளர்ச்சித் துறையில் 45 நகராட்சிகளுக்கு, அடிப்படை வசதிகளை செய்வதற்காக 20 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்படும். பயன் படுகின்ற 10 நகரங்களில், புதிய சாலைகள், பாலங்கள் அமைக்கின்ற பணிகளுக்காக சுமார் 13 கோடி ரூபாய் இந்த ஆண்டு செலவிடப்படும்.

அதே போல், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில், ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியோடு குறைந்த பட்சம் 120 இலட்சம் ரூபாய், ஒவ்வொரு நகராட்சிக்கும் வழங்கப்படுகிறது. இதன் மூலம், கடைகள், அங்காடிகள், பேருந்து நிலையங்கள் எல்லாம் கட்டப்பட்டு வருகின்றன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 28 நகரங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்று இருக்கின்றன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10 நகரங்கள் பயன் பெற்று இருக்கின்றன. இராமநாதபுரம், அருப்புக்கோட்டை, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, மதுராந்தகம், சத்தியமங்கலம், இராமேஸ்வரம், ஆண்டிப்பட்டி, அரியலூர் மற்றும் தூத்துக்குடி போன்ற நகரங்கள் பயன் பெற்று இருக்கின்றன. ஆறாவது திட்டக் காலத்தில், ரூ. 1,800 இலட்சமும், ஏழாவது திட்டக் காலத்தில் இது வரையிலும், ரூ. 1,197 இலட்சமும் செலவிடப்

பட்டுள்ளது. ஆறாவது திட்டத்தில் 183 திட்டங்களில் 176 திட்டங்கள் முடிவடைந்திருக்கின்றன. ஏழாவது திட்டத்தில் 43 பணிகளில், 7 பணிகள் முடிவடைந்திருக்கின்றன. மீதமுள்ள பணிகள் விரைவிலே முடிக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல், இந்தப் பணிக்களுக்காக மட்டும் நகராட்சிகளுக்கு மட்டும் சுமார் 5.14 கோடி ரூபாய் இந்த இனங்களுக்காக விடுவிக்கப்படும். 1990-91 ஆம் ஆண்டுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் 4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்களை தமிழக அரசு நல்ல முறையில் செயல்படுத்துகின்ற காரணத்தால் இந்தத் திட்டத்தை மேலும் தமிழகம் ஊக்கத்தோடு செயல் படுத்துவதற்காக தனியாக தனிக் கவனம் செலுத்தி மத்திய அரசு இன்றைக்கு 4 பெரிய நகரங்களுக்கு ஒரு நகரத்திற்கு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாயில் அனுமதி வழங்கியிருக்கிறது. அந்த நகரங்கள் திருநெல்வேலி, திருப்பூர், கொடைக்கானல், சேலம் போன்ற 4 நகரங்களுக்கு தலா 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் வழங்கப்பட உள்ளது. அதே போல் மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மாநில அரசு முழுமையாக நிதி உதவி அளித்து வருகிறது. இதன் மூலம் ஒரு நகருக்கு 30 இலட்சம் ரூபாய் இன்றைக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. நகராட்சி மற்றும் பஞ்சாயத்துக்களில் 172 திட்டங்களுக்காக 745 இலட்சம் ரூபாய் கடன் உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. 7-வது திட்டத்தில் கூடுதலாக 149 நகரங்கள், பேரூராட்சிகள் இந்தத் திட்டத்தின் மூலம் 1,450 இலட்சம் ரூபாய் விடுவிக்கப்பட்டு இருக்கிறது. நடப்பு ஆண்டில் இந்த இனங்களுக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

13-40 மணி

அடுத்து நகர் ஊர் அமைப்பு வளர்ச்சி நிதியில் இந்த ஆண்டு 30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் குறைந்த வருவாய் உள்ள நகராட்சிகளுக்கு பல்வேறு திட்டங்கள் செயல் படுத்த சலுகை நிதி உதவி அளிக்க இந்தத் தொகை பயன் படுத்தப்படும். முழுமை பெறுகின்ற திட்டம் நகரத்தின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்தவும், வளர்ச்சிப் பணிகளை மேற் கொள்ளவும் முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசு தீவிரமாக அமல் செய்து வருகிறது. இதன் மூலம் இன்றைய வரை 39 முழுமைத் திட்டங்கள் அரசினுடைய இறுதி ஒப்புதலைப் பெற்றுள்ளன. மேலும் முழுமைத் திட்டங்களை செயலாக்கும் வகையில் புதிய சாலை அமைத்தல்; பூங்கா அமைத்தல், பேருந்து நிலையங்கள சட்டுதல் போன்ற உள்ளாட்சி திட்டங்களுக்கு புது நகரங்களையும் சேர்த்து நடப்பு ஆண்டில் 40 இலட்சம் ரூபாய் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் வழி வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அதேபோல் இந்தத் திட்டத்தில் நடப்பு ஆண்டில் 550 விரிவு அபிருத்தித் திட்டங்களை துவக்கி வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் 15 ஆண்டு காலத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை மனதில் கொண்டு இரண்டாம் முழுமைத் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது.

அதேபோல் மறைமலை புது நகர் உருவாக்குகிற திட்டத்தின் அடிப்படையில் 20 ஆண்டு காலத்தில் 3300 ஏக்கர் நிலப் பரப்பில் ஒரு லட்சம் மக்கள் வசிக்கின்ற வகையில் வடிவமைக்கப்பட்டதில் 1974 ஆம் ஆண்டு மறைமலை புதுநகர் திட்டம் அமல் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் அடிப்படையில் 1445 வீட்டு மனைகள் உருவாக்கப்பட்டன; 2700 வீடுகள் கட்டப்பட்டன; 4900 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்; 120 தொழில் மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.; 116 மனைகள் தொழில் நிறுவனங்களுக்காக அளிக்கப்பட்டுள்ளன; 40 தொழிற்சாலைகள் உற்பத்தியை துவக்கி இருக்கின்றன. இந்த ஆண்டு முடிய மட்டும் 17 கோடி ரூபாய் இந்த இனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில் இந்தப் பகுதியில் 63 ஏக்கர் நிலங்கள் அபிவிருத்தி செய்ய வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பணி பெரு நகர் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் மணலி புது நகர் உருவாக்குகிற திட்டம் 20 ஆண்டுகளில் 1450 ஏக்கர் பரப்பில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் 1974 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் 124 ஏக்கர் நிலப்பரப்பில் அபிவிருத்திப் பணிகள் முடியும் நிலையில் இருக்கின்றன. அட்கோ நிதி உதவியுடன் 1760 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த 1989-90 ஆம் ஆண்டு வரை இந்தத் திட்டத்திற்கு 1022 லட்சம் ரூபாய் இந்தப் பணிகளுக்காக செல்விடப்பட்டிருக்கிறது.

அதேபோல் சென்னை நகரத்தினுடைய வளர்ச்சியை கருத்தில் கொண்டு தான் கொத்தவால் சாவடியில் உள்ள நெருக்கடியைப் போக்குவதற்கு கோயம்பேடு பகுதியிலே அந்த வணிக வளாகம் உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு அந்தப் பணியில் 2,400 கடைகளை உள்ளடக்கி உள்ளது. பூ அங்காடியும், காய்கறி மற்றும் பல அங்காடியும், நவதானிய அங்காடியும், ஜவுளி அங்காடியும் இந்தப் பகுதியில் உள்ளடக்கி இருக்கும். இந்தத் திட்டத்தின் மதிப்பீடு 50 கோடி ரூபாயில் உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் 1991 ஆம் ஆண்டு பெரும் பகுதி கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணிகளுக்கு மட்டும் சுமார் 30 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதில் 14.3 கோடி ரூபாய் நிதியை அரசு கடனாக 1989-90 வரை அளித்துள்ளது.

13-45 மணி

மேலும் புறநகர் பேருந்து மற்றும் சுமை வண்டி நிலையம் அமைக்கின்ற திட்டம் நம்முடைய மாதவரம் பகுதியில் வண்டி நிலையம் அமைப்பதற்கு சுமை வண்டிகள் எல்லாம் அங்கே நிறுத்துவதற்கு 6 கோடி ரூபாயில் அந்தத் திட்டம் தீட்டப்பட்டு 80 ஏக்கர் நிலம் அதற்காக கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 8 ஏக்கரில் பேருந்து வளாகமும்; 42 ஏக்கரில் சரக்குப் பேருந்து வளாகமும் உருவாக்கப்படும். இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தால் சென்னை நகரிலுள்ள போக்குவரத்து நெரிசலை பெருமளவுக்கு குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்தத் திட்டம் 1991 ஆம் ஆண்டு மத்தியில் இந்த இரண்டு வளாகங்களும் செயல்படுகின்ற அளவிற்கு அரசின் மூலம் விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அதைப் போல, எஃகு மற்றும் இரும்பு மொத்த வியாபாரிகளுக்கு சாத்தாங்காடு பகுதியில் 203 ஏக்கர் நிலத்திலே, ஏற்படுத்தப்பட்ட திட்டம் தற்போது முடியும் தருவாயில் இருக்கிறது. இதனுடைய 1990-91 திட்ட மதிப்பு 1 கோடி ரூபாய். எஃகு மற்றும் இரும்பு வியாபாரிகளுக்காக அந்த இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பணியை 17 கோடி ரூபாய் திட்டத்திலே உருவாக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. அந்தப் பணி விரைவிலே முற்றுப்பெற்று, அதை விரைவிலே திறக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல, பல புதிய திட்டங்கள் நம்முடைய அரசின் மூலமாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பூவராகன் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். சாலை ஓரங்களின் இருபுறமும் உள்ள பகுதிகளைச் செப்பனிட்டு நகரத்தை விரிவாக்க வேண்டுமென்ற திட்டத்தை இங்கே நல்ல ஆலோசனையாக எடுத்துச் சொன்னார்கள். அந்த கருத்தின் அடிப்படையில் தான் இந்த அரசு மூன்று தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கின்ற பாதையில் உள் வட்ட வளைவுச் சாலை அமைக்கின்ற பணியில் மாதவரம் மற்றும் சுற்றுப் பகுதியில் குடியிருப்புப் பகுதியும் வணிக வளாகம் கட்டுகின்ற பணியும் ஒருங்கிணைந்த வளர்ச்சியிலே இந்தத் திட்டம் அரசின் மூலம் இன்றைக்கு உருவாக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்திற்கு முதற் கட்டமாக 20 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டிலே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

அதைப் போல துரித ரெயில் திட்டத்திலே பயன்படக் கூடிய, ரெயில் நிலையம் இருக்கின்ற பகுதிகளிலே வணிக வளாகம் கட்டுவதற்கும், அந்தப் பகுதிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளைத் தடுப்பதற்கும், அந்த உள்ளாட்சிகளுக்கு வருமானம் கிடைக்கின்ற



வகையில், பொது மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில், வணிக வளாகம் உருவாக்குவதற்கு 4.5 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த துரித ரெயில் திட்டம் இன்றைய மதிப்புப்படி 125 கோடி ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது. மத்தியிலே இருந்த அரசு, கடந்த காலங்களில் இந்தத் திட்டத்திற்கு நிதியைக் குறைவாக ஒதுக்கியதன் காரணமாக இந்தத் திட்டம் உரிய காலத்திலே முடிக்கப்படாமல் இருக்கிறது. ஆனால் கடந்த ஆண்டு, மத்திய அரசின் மூலம் 9.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டு இந்தத் திட்டத்திற்காக 14 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். இன்னும் நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் முயற்சியின் மூலமாக இந்தத் துரித ரெயில் திட்டத்தை விரைவிலே அமல்படுத்துவதற்கு மத்திய அரசின் மூலமாக அதிகமான நிதியைப் பெற்று, அந்தப் பணியை விரைவிலே முடிக்க இருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல, இந்த பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் இந்த ஆண்டு, சிறப்பாக, அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 5.56 கோடி ரூபாய் செலவில் விபத்து அவசர சிகிச்சை திட்டம் பற்றி நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே வெளியிடப்பட்டிருக்கிறது. அதன் மூலம் சென்னையில் மட்டும் அண்ணாநகர் பகுதி, டாக்டர் கலைஞர் நகர், தண்டையார்பேட்டை, பெரம்பூர் மற்றும் சைதாப்பேட்டை பகுதிகளிலே உள்ள அரசு மருத்துவமனைகளில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படும்.

அதைப் போல, நீண்ட நாள் கோரிக்கையான, சென்னையில் இராயபுரம் பகுதியில் மேம்பாலம் அமைக்கின்ற பணி பல ஆண்டுக் காலமாக முன்பிருந்த அரசு கவனத்தில் கொள்ளாமலேயே இருந்தது. இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய முயற்சியாலே இராயபுரம் பகுதியில், துறைமுகம் பகுதிக்கு மேம்பாலம் அமைக்கின்ற பணி குறித்து நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டு இருப்பதைப் போல 13.2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட பல்வேறு நல்ல திட்டங்களை எல்லாம் இந்த பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நீண்டநாள் தேவையைப் பொறுத்து, பெருகி வருகின்ற மக்கள் தொகைக்கு ஏற்ப, தொலை நோக்கோடு, பல்வேறு திட்டங்களை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் உருவாக்க இருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

13-50 மணி

அதைப்போல, இந்த விவாதத்தில் பங்கு கொண்டு பல்வேறு உறுப்பினர்கள் எல்லாம் நல்ல பல கருத்துக்களை இங்கே வழங்கி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் இங்கே பேசும்போது திருப்பூர் நகரத்தில் பனி

யன் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் 1,000 கோடி ரூபாய்க்கு மேல் ஏற்றுமதி செய்யும் அளவுக்கு அந்த நகரம் விரிவடைந்து இருக்கிறது. ஆனால் பல்வேறு அடிப்படை வசதிகள் இல்லாமல் இருப்பதால் அவைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். புறநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நகராட்சிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்வதற்காக ரூ. 2.05 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இது வரை முதல் கட்டமாக 18 லட்சம் ரூபாய் அளவுக்கு அதிலிருந்து விடுவிக்கப்பட்டு இருக்கிறது. அதே திட்டத்தின் அடிப்படையில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியோடு இந்த ஆண்டு 1 கோடியே 20 லட்சம் ரூபாய் திருப்பூர் நகரத்திற்கு அளிக்க இருக்கிறோம் என்பதை நான் அவருக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமலிங்கம் அவர்கள், நபார்டு திட்டத்தின்கீழ் கடன் உதவி பற்றி சொன்னார்கள். 10 ஆயிரம் ரூபாய் கடன் உதவி போதாது, அதை 15 ஆயிரமாக உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். அதை ரூ. 25,000 மாக உயர்த்தலாமா என்று அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதே நேரத்தில், ஜரிகை பட்டு கொள்முதல் செய்வதை ஒருமுகப் படுத்த வேண்டுமென்றும், சென்ட்ரலைஸ்டு பர்ச்சேஸ் கமிட்டி அமைக்க வேண்டுமென்றும் சொல்லி இருக்கிறார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் தரமான ஜரிகையும், தரமான கோராவும் கிடைப்பதற்கு, மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்கள், பெண்களுக்கு அதிகமாக நெசவுத் தொழில் வாய்ப்பில் பங்களிக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். நபார்டு மூலம், பத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும் என்று சொல்லி இருக்கிறோம். அவர்களுடைய கருத்துக்களையும் மனதில் கொண்டு, எதிர் காலத்தில் பெண்களுக்கு அத்தகைய வாய்ப்புகள் வழங்க கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெசவாளர் பெருமக்களில் அதிகமாகப் பெண்களே ஈடுபட்டு இருக்கிறார்கள். பெண்களும் கைத்தறித் தொழிலில் சம பங்கு கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களுக்குக் கூடுதலான வாய்ப்புக்கள் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருப்புக்கோட்டைப் பகுதியில் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக அமைப்பில் உள்ள குறைகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள்.



அதற்காக தனி குழு அமைத்து, வழக்குகள் தொடர்ந்து, அவைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கே தொழிலில் விடுபட்டிருக்கிற சங்கங்கள் கடந்த ஆட்சியின் போது பாதுகாப்பு இல்லாமல் இருந்ததாகச் சொன்னார்கள். அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கப்படும். மதுரையில் உள்ள கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் அவர்கள் தொழில் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் புறநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அடுக்கு மாடிக் கட்டிடங்கள் அனுமதி பெறாமல் கட்டியிருப்பதாகச் சொன்னார்கள். அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டிடங்களைக் கட்டியவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, ஏழை நெசவாளர்களின் ஏழ்மை நிலையைக் கருதி. நெசவாளர்களுக்கு சலுகைகள் கொடுக்க சட்டம் வர வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுடைய கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நெசவாளர்களின் நலனை எண்ணி, கள்ளிடைக்குறிச்சி பகுதியில் கடந்த ஆட்சியில் தேங்கிக் கிடந்த 25 லட்சம் ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்திருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன், புதுக்குடிபகுதியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தேங்கியிருந்த துணிகளையும் கொள்முதல் செய்திருக்கிறோம்.

இங்கே நல்ல பல கருத்துக்களையெல்லாம் வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ள உறுப்பினர்கள் அவைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. எம். அண்ணாமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை இங்கே அறிவித்தார்கள். தர்மபுரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஊத்தங்கரையில் உள்ளது. பணி தொடங்கப்பட்ட காலத்திலேயே திட்டகட்டுமான வேலைக்கு வேண்டி தண்ணீர் அளிக்கவும் திட்டமிடப்பட்டது. அதற்காக பாம்பையார் அணைக்கட்டுப் பகுதியிலிருந்து கிணறு தோண்டி தண்ணீர் கொண்டு வரலாம் என்றும் சொல்லப்பட்டது. என்றாலும், அந்தத் திட்டம் இன்றைய தினம்வரை அமல் படுத்தப்படாமல் இருப்பதால் நாள் ஒன்றுக்கு ரூபாய் 1,000-க்கு மேல் தண்ணீருக்காக செலவழிக்கப்படுகிறது. இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

13-55 மணி

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை விரைவில் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக உலக வங்கி உதவியோடு மேற்கொள்ளப்படுகிற திருப்பூர் இரயில்வே மேம்பாலம் விரிவாக்கத் திட்டம் குறித்து ஏற்கெனவே நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக பத்திரிகைகளிலே விளம்பரங்கள் கொடுக்கப்பட்டு காண்ட்ராக்டர்கள் தேர்வு செய்கின்ற அறிவிப்புகள் எல்லாம் வெளிவந்திருக்கின்ற நிலையில் அதற்கான நிதி எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதோடு அதற்கான வேலைகள் எப்போது துவங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரயில்வே மேம்பாலம் கட்டுகிற பணிகள் குறித்து அரசு அதிகாரிகள் மூலம் விரைவில் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் வரதராஜசுவாமி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் நடந்த முறைகேடுகள் பற்றி நான் எடுத்துக் கூறினேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அது சம்பந்தமாக நடவடிக்கைகள் அரசு என்ன எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தின் அடிப்படையில் காஞ்சிபுரம் வரதராஜசுவாமி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 28 இலட்சம் ரூபாய்க்கு பல்வேறு தவறுகள் நடைபெறுவதாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அது தற்போது வழக்கு மன்றத்தில் இருந்துகொண்டிருக்கிறது. அந்த வழக்கு முடிந்த பிறகு விரைவில் தவறு செய்தவர்கள் எவராக இருந்தாலும் உரிய நடவடிக்கை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் திருபுவனம் திருவள்ளுவர் பட்டுக் கூட்டுறவுச் சங்கத்தில் 41 இலட்சம் ரூபாய்க்கு முறை



கேடு நடைபெற்றதாக நான் இங்கே கூறியிருக்கிறேன். இது சம்பந்தமாக புலனாய்வு செய்வதற்காக காவல் துறையிலேயே கூட்டுறவுக்கு என்று ஒரு பிரிவு இருக்கிறது. இரண்டு ஆண்டுக்காலம் ஆகியும் இதுகுறித்து வழக்குக்கூட பதிவு செய்யப்படவில்லை. எனவே இது சம்பந்தமாக ஏதாவது அவையில் தெரிவிக்க முடியுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற, கடந்த காலங்களில் ஆட்சிப் பொறுப்பு இருந்த நேரத்தில் அந்தக் கூட்டுறவு அமைப்பில் உள்ள தலைவர்கள் பல்வேறு கையாடல்களை எல்லாம், ஊழல்களை எல்லாம் புரிந்திருக்கிறார்கள். அந்தந்தப் பகுதிகளில் அரசின் மூலம் பல்வேறு நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு இருக்கிறோம். 10 பேர்கள் வரையிலும் கைது செய்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள முறைகேடுகளைப் பொறுத்த வரையில் விரைவில் தனிக் குழுவின் மூலம் அனுமதி வழங்கி அந்தத் தவறுகளை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற முறைகேடு சம்பந்தமாக குற்றம் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். அவ்வாறு குற்றம் செய்தவர் மீது நடவடிக்கை எடுக்கின்ற அந்தக் காரியத்தைச் செய்யும்போது, அந்தக் குற்றத்தைக் கண்டுபிடித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்த தொழிலாளர்கள் மீதும் வழக்குகள் போடப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்தத் தவறுகளைக் கண்டுபிடிக்க உதவிய அந்தத் தொழிலாளர்களுக்கு பரிசு வழங்காவிட்டாலும் கூட அவர்கள் பாதிக்கப்படாமல் அந்த வழக்கிலிருந்து அவர்களை விடுவிக்க அரசு முன்வருமா, அந்த வகையில் அதுகுறித்தும் அரசு சேர்த்து கவனிக்குமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு அந்தத் தவறில் சம்பந்தம் இல்லை என்றால் அவர்கள் மீது வழக்கு இல்லை. ஆனால் அந்தத் தவறுகளுக்கு அந்தத் தொழிலாளர்கள் உடந்தையாக இருந்தால் நிச்சயமாக அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டி இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 26— கைத்தறியும் துணித் தொழிலும்;

திரு. கே. ஆர். சுந்தரம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொண்டதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 43,88,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

14-00 மணி

(ஆ) கோரிக்கை எண். 34—நகர்ப்புற வளர்ச்சி.

திரு. கோ. வீரையன் அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப்புற வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 1,13,58,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் (9-4-1990) திங்கட்கிழமை காலை 9 மணிக்குக் கூடும்.

**பின்னர் பேரவை பிற்பகல் 14-01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.**



## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

59. 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் மீதான வரி விதிப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 7—10—1989 ஆம் நாளிட்ட 2150 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் மீதான வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

77. கோரிக்கை எண். 26—கைத்தறி மற்றும் துணி நூல் துறை மீதான கொள்கையும், திட்டங்களும், 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

78. கோரிக்கை எண். 34—நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

79. கோரிக்கை எண். 22.—கால்நடைப் பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

80. '1989-90 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் நடவடிக்கைக் குறிப்பு' என்கிற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

81. 1989-90-ஆம் ஆண்டில் தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் நடவடிக்கைகள் பற்றிய ஆய்வறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

82. கைத்தறி மற்றும் துணி நூல் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1990-91 (ஆங்கிலம்).

83. கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1990-91 (ஆங்கிலம்).

84. பொதுக்கணக்குக் குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை 1989-90 (தமிழ்).

## இணைப்புகள்

*48-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.

## இணைப்பு-I

### கைத்தறி மற்றும் துணி நூல் துறைக்கான 1990-91 ஆம் ஆண்டிற்கான கொள்கையும் திட்டங்களும்.

முன்னுரை ;

தமிழகத்தின் கிராமங்களில் வேளாண்மைக்கு அடுத்து, நேர் முகமாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு அளிப்பதில் கைத்தறி, விசைத்தறி மற்றும் நூற்பாலைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. இவை மாநிலத்தின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் பெரும் பணி ஆற்றுகின்றன. நாட்டின் பிற பகுதிகளைப் போல், தமிழகத்தின் கைத்தறிகளும் குறைவான தொழில்நுட்ப கைத்திறன், குறைந்த ஊதியம் இவற்றைக் கொண்டு செயல் பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு கைத்தறித் தொழிலை பேணி பாதுகாத்து போற்றி வளர்ப்பதற்காக பல்வேறு முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மைய மற்றும் மாநில அரசுகள் இரண்டுமே கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவது என ஒருமித்து உறுதி பூண்டுள்ளது. கைத்தறி நெசவாளர்களின் நலனுக்கென செயல் படுத்தும் திட்டங்கள் கிராமப்புற வறுமையினை ஒழிப்பதிலும் பெரும்பங்கு ஆற்றுகின்றன.

ஏனைய சிறு கிராமத் தொழில்களைக் காட்டிலும் கைத்தறித் தொழில் அதிகமான வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய தொழிலாளர் முனைவு தொழில் ஆகும். இத்தொழில் கிராமப்புற மக்கள் நகர்ப்புறத்திற்கு குடி பெயர்ந்து செல்வதைத் தடுக்கும் உள்ளாற்றலை கொண்டதும் ஆகும். இத் தொழில் சுற்றுப்புற சூழ்நிலைக்கு எதிர்மறையான விளைவுகள் ஏற்படுத்தாதது மட்டுமின்றி குறைவான மரபுவழி ஆற்றல் மட்டுமே தேவைப்படும் தொழில் ஆகும். கைத்தறித் தொழிலின் வளர்ச்சி மற்றும் கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்வு இவைகளைக் கருத்திற் கொண்டு கைத்தறித் துறைக்கு புதிய வேகத்தை ஊட்டுவதற்கு மாநில அரசு விரும்புகிறது. கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு திறனை மேம்படுத்துவதற்கு தேவையான வினைமுறை திறனைக் கண்டு உணர்வதற்காக 8 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தறித் தொழிலுக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் நாடு முழுவதும் துணி நூல் தொழில் பஞ்சு விலை உயர்வினால் நலிவு அடைந்துள்ளது. இவ்வாண்டில் நூல் விற்பனையில் ஈட்டிய லாபத்தினால், இத்தொழிலின்





செயலாக்கம் திருப்திகரமாக உள்ளது. கடந்த காலத்தில் எப்போதும் இத்தகைய நிலை இத்தொழிலில் இருந்ததில்லை. பெரும்பாலான கூட்டுறவு நூற்பாலைகள் இவ்வாண்டு கணிசமான லாபம் ஈட்டி ஏற்கனவே அடைந்த குவிந்த நட்டத்தை கணிசமான அளவில் சரிக்கட்டின. இத்துடன் சில கூட்டுறவு நூற்பாலைகள் நவீனப்படுத்தும் திட்டங்களையும் செயல்படுத்த உள்ளது.

விசைத்தறித் தொழிலின் வளர்ச்சி, ஆலைத்துறையின் முன்னேற்றம் மற்றும் கைத்தொழிலின் வளர்ச்சி இவற்றோடு பின்னிப் பிணைந்தது மட்டுமின்றி நம் நாட்டின் பொதுவான துணித் தேவையைப் பூர்த்தி செய்வதிலும் பெரும் பங்கு வகிக்கின்றது. அண்மைக் காலமாக நெசவாளர்களின் செயல்பாடு அதிகமான உற்பத்தி செலவினால் திருப்திகரமாக இல்லை. தற்போது கைத்தறிகளின் உற்பத்தி சீராக குறைந்து வருகிறது. கைத்தறித் தொழிலின் மிக அதிகமான அளவில் வளர வாய்ப்புக் குறைவினால் துணி தேவையின் பெரும் பகுதியை பன்முகப்படுத்தப் பட்ட விசைத் தறித் தொழிலே பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. கடந்த காலத்தில் விசைத் தறித் தொழிலை வளர்ப்பதற்காக முறைப்படுத்த முயற்சி இல்லாதிருப்பினும் தற்போது சேவை மையங்கள் நிறுவுதல் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலமாக தேவையான கடன் வசதி கிடைக்கச் செய்தல் போன்ற முயற்சிகளினால் இத்துறையின் வளர்ச்சிக்கு உதவ தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது.

### 1, தறிகளைக் கூட்டுறவின் கீழ் கொணருதல் :

கைத்தறி நெசவாளர்களின் உற்பத்தியினை ஒருங்கிணைத்த அமைப்பில் கொணரும் பொருட்டு அவர்களை கூட்டுறவு அமைப்பின்கீழ் கொணருதல் அரசின் முக்கியக் கொள்கைகளில் ஒன்றாகும். மேலும் அரசு உதவிகள் அனைத்தும் நெசவாளர் கூட்டுறவு அமைப்புக்களின் வாயிலாக நெசவாளர்களுக்கு சென்று அடைவதைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. கூடுதலாக தறிகளைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொணரும் பொருட்டு நெசவாளர்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. ஒரு நெசவாளி கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக சேர்க்கப்படும் பொழுது அவர் பருத்தி தறிக்கு ரூ. 200-ம் பட்டு மற்றும் கம்பளம் தறிக்கு ரூ. 350-ம் பாலியஸ்டர் தறிக்கு ரூ. 1,000-ம் அதிகபட்ச பங்குத் தொகைக் கடனாக ஆரம்ப பங்கு மூலதனக் கடன் பெறத் தகுதியுள்ளவராகிறார். இக்கடன் தொகையில் 90 விழுக்காடு மைய மற்றும் மாநில அரசுகளினால் சமமாகப் பகிர்ந்து கொள்ளப் படுகிறது. தமிழகத்தில் உள்ள 4.27 இலட்சம் கைத்தறிகளில் 2.85 இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொணரப் பட்டுள்ளன. இதன் மூலம் தேசியக் குறியீடான 60 விழுக்காட்டிற்கும் மேலாக நமது மாநிலத்தில் 66 விழுக்காட்டிற்கு உயர்ந்

துள்ளது. கைத்தறிகளைக் கூட்டுறவின் கீழ் கொண்டு வருவதில் தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடம் வகித்த போதிலும் தறியற்ற பல ஏழை கைத்தறி நெசவாளர்கள் தனியாரிடத்தில் இன்றும் பணியாற்றி வருகின்றனர். எனவே அரசு (1) தறியற்ற நெசவாளர்களுக்கு பங்குத் தொகை உதவியும், (2) நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு பங்கு மூலதன உதவி என்ற வகையிலும் திட்டமிட்டு உதவி வருகின்றது.

இம்மாநிலத்தில் 28-2-1990 அன்று 1,677 பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. 1989-90 ஆம் ஆண்டில் 15,000 நெசவாளர்களை கூட்டுறவு அமைப்பின் கீழ்க் கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 39,000 நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொணரப்பட்டுள்ளனர். பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1989—90 ஆம் ஆண்டில் அரசு பங்கு மூலதனமாக ரூ. 50.00 இலட்சமும், கைத்தறி நெசவாளர்களுக்கு பங்குத் தொகைக் கடனாக ரூ. 15.00 இலட்சமும் அளிக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக முறையே 337 நெசவாளர் சங்கங்களுக்குப் பங்குத் தொகையாகவும், 7,200 நெசவாளர்கள் 200 கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக பங்குத் தொகை கடனும் பெற்று பயன் அடைந்துள்ளனர்.

2. தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் :

மாநில அரசு செயல்படுத்திவரும் முக்கியத் திட்டங்களில் தறியற்ற நெசவாளர்களின் நலனுக்காக தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பது ஒன்றாகும். பெரும்பாலான தறியற்ற நெசவாளர்கள் தறி முதலாளிகளின் வலுவான பிடியில் சிக்கி இன்னலுறுவதுடன் அன்றாட வாழ்க்கைக்கு வேண்டியவைகளுக்கு அவர்களையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. 1987 ஆம் வருடத்திய கைத்தறி கணக்கெடுப்பின்படி இருந்த மொத்த நெசவாளர்களில் 27.36 விழுக்காடு நெசவாளர்கள் தறியற்றவர்களாக உள்ளனர்.

அதாவது ஒரு இலட்சம் நெசவாளர்களுக்கு மேல் தறியற்ற நெசவாளர்களாக உள்ளனர். இவர்கள் தொடர்ந்து வேலை வாய்ப்பும் மற்றும் ஊதியமும் கிடைக்க வழிவகை செய்யும் நோக்கத்துடன் ஆண்டுதோறும் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் தற்சமயம் 181 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இதில் ஆதி திராவிடர்களுக்கென பிரத்தியேகமான 21 சங்கங்களும், மகளிருக்கென பிரத்தியேகமாக 10 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் உள்ளன.



3. நார்வே நாட்டு நிதியுதவியுடன் அமைக்கப்படும் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் :

கிராமப்புறங்களில் வாழும் தறியற்ற ஏழை மகளிர் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்து, அதன் மூலம் அவர்கள் வருவாய் பெற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற நன்னோக்கத்தின் அடிப்படையில், நார்வே நாட்டு நிதி உதவித் திட்டத்தின் கீழ் மகளிருக்கென 10 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமின்றி மேலும் 4 மகளிர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், 1990-91ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தால், கீழ்க் காணும் வகையில் நிதி உதவி அளிக்கப்படுகிறது—

| | ரூ. |
|---|---|
| (1) நிலம் கொள்முதல் செய்ய .. .. | 50,000 |
| (2) தொழிற்கூடம் கட்ட .. .. | 5,50,000 |
| (3) தறிகள் மற்றும் உபகரணங்கள் .. | 2,50,000 |
| (4) பயிற்சி .. .. .. .. | 1,50,000 |
| மொத்தம் .. | 10,00,000 |

மேற்குறிப்பிட்டுள்ள, 1989–90ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 10 மகளிர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில், 1,000 பெண் நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளது மட்டுமின்றி, மேலும், 400 பெண் நெசவாளர்கள், 1990–91இல் ஆரம்பிக்கப்படவுள்ள 4 மகளிர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்படவுள்ளனர்.

4. தறியற்ற ஏழை பெண் நெசவாளர்களுக்கு தறி வழங்குதல் :

மகளிர்க்கு, நிரந்தர வேலை வாய்ப்பளித்து, வருவாய் அளிக்கும் பொருட்டு மற்றொரு திட்டம் தீட்டப்பட்டு, அதன் அடிப்படையில், தறியற்ற, 1,000 மகளிர்க்கு தறிகள் வழங்கி, அவர்களை பல்வேறு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாக சேர்க்கவும் திட்டமிடப்பட்டது. இந்த 1,000 பெண் நெசவாளர்கள், தற்பொழுது இயங்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வழங்கப்போகும் தறியின் விலை ரூ. 2,500இல், ரூ. 1,000 மானியமும், ரூ. 1,500 கடனும் ஆகும். இதனை, மாதம் ஒன்றுக்கு ரூ. 25 வீதம் 60 மாதத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் ஒத்துழைப்புடன் ஏற்றுமதி இரகங்கள் உற்பத்தி செய்யும் பொருட்டு, மேலும், 4,000 தறியற்ற மகளிர்க்கு, தறிகள் வழங்கவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

5. பட்டு நெசவு :

மாநிலத்தில் காஞ்சீபுரம், ஆரணி, கும்பகோணம், சேலம் மற்றும் திருச்செங்கோடு பகுதியில் உள்ள 114 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 28,031 தறிகளைக் கொண்டு செயல்படுகின்றன. 1989–90 ஆம் ஆண்டு திட்டத்தில் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கென மட்டும் ரூ. 1.50 இலட்சம் கடனாகவும் ரூ. 0.50 இலட்சம் மானியமாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி ஒதுக்கீட்டில் இருந்து 28–2–1990 முடிய ரூ. 1.04 இலட்சம் கடனாகவும் மற்றும் ரூ. 0.17 இலட்சம் மானியமாகவும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மத்திய கொள்முதல் முறையில் பட்டு மற்றும் ஜரிகையை விநியோகம் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6 மாநில கைத்தறி உயர் மட்டக் குழு :

கைத்தறித் துறையில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு வழிகாட்ட மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் கைத்தறி வல்லுநர்கள் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் பிரமுகர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு மாநில கைத்தறி உயர் மட்டக் கூழு 1989 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

மாண்புமிகு கைத்தறி துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் இதுகாறும் இரண்டு கூட்டங்கள் கூட்டுப்பட்டு கைத்தறி நெசவாளர்களின் அன்றாட பல்வேறு பிரச்சினைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. இக் கூட்டங்களில் உறுப்பினர்கள் வழங்கிய கைத்தறி தொழில் வளர்ச்சிக்கான சீரிய கருத்துக்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சலுகை அடிப்படையில் நடைமுறை மூலதனம் அளித்தல்

தேசீய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் சலுகை அடிப்படையிலான நடைமுறை மூலதனத்தை பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச்சங்கம். மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக பெற்று வருகின்றது. பிரதம கைத்தறி நெசவாளர்



கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நடைமுறை மூலதனத்தை தேவையான அளவிற்கும் விரைவாகவும் கிடைக்கும் பொருட்டு வங்கி வட்டி விகிதத்தில் இருந்து 2½ சதவீதம் குறைந்த வட்டிக்கு, தேசீய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியினால் மறு நிதியுதவி அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 7½ சதவீதம் சலுகை வட்டி வீத சலுகை அடிப்படையில் நடைமுறை மூலதனத்தைப் பெற்று வருகின்றன. பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திக்காக நிதியுதவி வழங்கும் மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு மாநில அரசு 3 சதவீதம் வட்டி மானியம் வழங்குகிறது. மேலும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கொள்முதல் மற்றும் விற்பனைக்காக 1 சதவீதம் வட்டி மானியம் வழங்குகிறது. இக் காரணங்களுக்காக மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு அரசு ரூ. 150 இலட்சம் வட்டி மான்யம் அனுமதித்துள்ளது. 1989–90 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குறுகிய கால கடனாக ரூ. 190 கோடிக்கும் மேலாக தேசீய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியினால் வழங்கப்பட்டுள்ளது. தேசீய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி நாட்டிலுள்ள எல்லா மாநிலங்களுக்கும் அளித்துவரும் கைத்தறிக்கான நிதியுதவியில் 58 சதவீதத்திற்கும் மேலாக தமிழ்நாடு கைத்தறி பிரிவு பயன்படுத்தி வருகிறது. 1990–91 ஆம் ஆண்டிற்கு கூட்டுறவு கைத்தறிக்கு ரூ. 205 கோடி அளவுக்குக் கடன் வசதி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்திய கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்படும் நடைமுறை மூலதனக் கடன் வசூலாகாத பட்சத்தில் ஏற்படும் இழப்பில் 90 சதவிகிதம் அரசு ஈடு செய்கிறது. மிகுதியுள்ள 10 சதவிகிதத்தினை சம்பந்தப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளே ஏற்றுக் கொள்கின்றன.

8. நூல் விநியோகம் :

தமிழ் நாட்டில் உள்ள 4.27 இலட்சம் கைத்தறிகளுக்கு வருடந்தோறும் 1.87 இலட்சம் பேல் சிட்ட நூல் தேவைப்படுகிறது. வருடந்தோறும் கூட்டுறவு நூற்பாலைகளினால் சுமார் 80,000, பேல் சிட்ட நூல் 1,677 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. மாநிலத்தில் காணப்படும் சிட்ட நூல் தேவையினைக் கவனிக்கும் போது உரிய குறியீடு தேவைக்கும் அதிகமாக உள்ளது எனத் தெரிய வருகிறது. எனினும், சிலவகை ரக நூல்களில் அவ்வப்போது ஏற்படும் பற்றாக்குறை, நூல் விலை- ஏற்றம் ஆகியவற்றை மாநில

துணி நூல் கட்டுப்பாடு அலுவலர் என்ற வகையில், கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் அவர்கள் அவ்வப்போது உடனடி நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் தீர்த்து வைக்கின்றார்.

கூட்டுறவுத் துறையின் கீழ் உள்ள நெசவாளர்களுக்குத் திங்கள் தோறும், உரிய தேவை மற்றும் அச்சமயத்திலுள்ள சந்தை விலை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, கைத்தறி துணி நூல் இயக்குநர் அவர்கள் நிர்ணயம் செய்யும் சலுகை விலையில், தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் (கோ-ஆப் டெக்ஸ்) மூலம் நூல் விற்பனை செய்யப்படுகின்றது. மேலும், தேசிய கைத்தறி அபிவிருத்திக் கழகத்தின் மூலம் சலுகை விலையில், மாதாந்திர அடிப்படையில் கூட்டுறவுச் கைத்தறி வளர்ச்சித் திட்டங்களுக்கும் தனியார் நெசவாளர் சங்கங்களுக்கும் (Master weavers Association) முடிந்த வரையில் நூல் விற்பனை செய்யப்படுகின்றது. தனியார் நெசவாளர் சங்கங்களுக்கும் பல ரகங்களுடைய நூல் சுமார் 2,500 பேல்கள் கூட்டுறவுத் துறையிலுள்ள நேசவாளர்களுக்குரிய சலுகை விலையில் ஏப்ரல் 1989 முதல் பிப்ரவரி 1990 வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஜனதாரக தயாரிப்புகளுக்காக விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கும் விசைத்தறி கூடங்களுக்கும் கூட சலுகை விலையில் கோன் நூல் கொடுக்கப்படுகிறது.

தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனம், மாநில அரசின் வேண்டுகோளுக்கிணங்க வருடத்திற்கு 400 டன் செயற்கைப்பட்டு 50 சதவீதம் தீர்வை சலுகையில் கூட்டுறவு சங்கங்களிலும் வெளியிலும் உள்ள நெசவாளர்களுக்கு மாதாந்திர அடிப்படையில் கோ-ஆப்டெக்ஸ் மற்றும் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் கோயம்புத்தூர், மூலமாக கொடுக்க முன் வந்துள்ளது.

கைத்தறி நெசவாளர்களுக்கு தரமுள்ள நூல் அளிக்கும் வகையில் கூட்டுறவு நூற்பு ஆலைகளை நவீனப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், கூடிவரும் நூல் தேவையை ஈடு செய்யும் வகையில் உற்பத்தியாளர் கூட்டுறவு நூற்பாலை ஒன்று அமைப்பது அரசின் தீவிர ஆய்வில் உள்ளது.

9. தறிகளை நவீனப்படுத்துதல் :

கூட்டுறவு துறையின் கீழ் இயங்கும் கைத்தறிகளை நவீனப்படுத்துதல்/புதுப்பித்தல் திட்டத்தினை 1980-81 முதல் தமிழக அரசு அமுல்படுத்தி வருகிறது. இதன் பயனாக கைத்தறியில் உற்பத்தித் திறன் அதிகப்படுத்தப்பட்டு துணியின் தரமும் உயர்த்தப்படுவதுடன் கைத்தறி நெசவாளியின் ஊதியமும் அதிகரிக்கிறது. இத்திட்டம் மத்திய அரசின் நிதியுதவியுடன் 50 : 50 என்ற விகிதாச்சாரத்தில் மத்திய மாநில அரசு உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த உதவியில் 2/3 பங்கு கடனாகவும் 1/3 பங்கு மானியமாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டம் பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் மற்றும் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம் மூலமாக அங்கத்தினர்களின் நன்மைக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட சங்கங்கள் தறிகள் வாங்குவதற்கும், நவீன உபகரணங்கள் பெற்று விநியோகிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அங்கத்தினர்களுக்கு விநியோகித்து வருகிறது. மேலும், கடன் தொகையினை அங்கத்தினர்களுக்கு வழங்கும் கூலியிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.



மத்திய அரசு தறிகளை நவீனப்படுத்தும் திட்டத்திற்கு கீழ் குறிப்பிட்டுள்ளவாறு தொகையினை நிர்ணயம் செய்துள்ளது :—

| | ரூபாய். |
|---|---|
| புதிய தறி வாங்குதல் | 2,000 |
| புதிய ஜாக்கார்டு தறி/பகுதி தானியங்கி தறிகள்/ பெடல் தறி | 4,000 |
| ஏற்கெனவே உள்ள தறிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல் | 1,000 |

இத்திட்டத்தின் மூலம் இதுவரை 47,038 தறிகள் பயனடைந்துள்ளன. தறிகளை நவீனப்படுத்தும் திட்டம் தொடர் நடவடிக்கையாகும். இதனால், கைத்தறி நெசவாளியின் உற்பத்தி மற்றும் வாழ்க்கைத் தரமும், அதிகரித்துள்ளது. 1990–91-இல் ரூ. 1.50 கோடி மதிப்பில் 20,000 தறிகள் நவீனப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10. கைத்தறித் துணி உற்பத்தி நெசவாளர்களின் வருமானம் :

கைத்தறித் துணி உற்பத்தியில் தமிழ்நாடு இந்திய துணைக் கண்டத்தில் 3-ஆவது இடத்தை வகிக்கிறது. 1989–90-ஆம் ஆண்டில், கூட்டுறவுத் துறையின் கீழ் 136 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய அளவில் நாள் ஒன்றுக்கு தறி ஒன்று சுமார் 5.10 மீட்டர் துணி உற்பத்தி செய்வதாக கணக்கிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள கைத்தறிகளில் நாள் ஒன்றுக்கு 4.8 மீட்டர் துணி உற்பத்தி செய்யப்படுகின்றது. எனவே, கைத்தறியின் உற்பத்தியை கணிசமாகப் பெருக்குவது தற்போது இன்றியமையாததாகிறது. இதனைக் கருத்திற்கொண்டு படிப்படியாக கைத்தறியினை நவீனப்படுத்தி 8-ஆவது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதியில் நாளொன்றுக்கு 6.06 மீட்டர் உற்பத்தியை எட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**11. தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் கோ-ஆப்டெக்ஸ் :**

கோ-ஆப்டெக்ஸ் என புகழ் பெற்று விளங்கும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவு சங்க சட்டத்தின் கீழ் 1935-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ் நாட்டின் கைத்தறித் தொழிலை ஒருங்கிணைத்து அதனை வர்த்தக ரீதியாக வளர்த்துவது இதன் முக்கிய நோக்கமாக உள்ளது. இத்துடன் அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான மூலப் பொருட்களை முக்கியமாக நூலை வாங்கி விநியோகிப்பது, அவை உற்பத்தி செய்யும் கைத்தறி துணிகளுக்கு விற்பனை வசதி செய்து கொடுப்பதும் இதன் பணிகளாகும். 1989–90-ஆம் ஆண்டில் பிப்ரவரி 1990 முடிய கோ-ஆப்டெக்ஸ் நாடெங்கும் உள்ள அதன் 500 கிளை விற்பனை நிலையங்கள் மூலம் 450 வகை கைத்தறி துணிகளை ரூபாய் 150 கோடி அளவிற்கு விற்பனை செய்து சாதனை புரிந்துள்ளது. தமிழ் நாட்டிலுள்ள கைவினைத்திறன் மிக்க நெசவாளர்களால் நெய்யப்பட்ட சிறந்த வகைத் துணிகளை குறைந்த விலையில் மக்களுக்கு அளித்து வருகிறது. கோ-ஆப்டெக்ஸ், ஏழை எளிய மக்களின் துணித் தேவையை ஜனதா ரக சேலை, வேஷ்டி, லுங்கி ஆகியவற்றை வாங்கக்கூடிய விலையிலும் துணிகளையும், நடுத்தர வருவாய் குடும்பங்களுக்கு தேவையான வகைகளையும், வசதியானவர்களுக்கும் தேவைப்படக்கூடிய பட்டு வகைகளையும் ஆக எல்லா பிரிவு மக்களும் விரும்பும் வகையில் தேவையை பூர்த்தி செய்து வருகிறது.

1989–90 ஆம் ஆண்டில் பிப்ரவரி 1990 முடிய கோ-ஆப்டெக்ஸ் ரூ. 138 லட்சம் மதிப்புள்ள கைத்தறி துணிகளை ஏற்றுமதி செய்துள்ளது. கைத்தறிப் பிரிவின் தொழில் வடிவத்தை உயர்த்தவும் புதிய ரகங்களை கோ-ஆப்டெக்ஸ் மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோயம்புத்தூரில் புதிய வடிவமைப்புகளை உருவாக்கி அவற்றை கைத்தறி துணியில் அறிமுகப்படுத்தி கைத்தறி துணிகளுக்கு அதிக விற்பனை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் நெசவாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் பணியினை செய்து வருகிறது. இந்த வடிவமைப்பு நிலையங்கள் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான தொழில் நுட்ப புது அட்டை வடிவமைப்புகளை தயாரித்து கொடுத்து அவைகளின் உற்பத்தியில் புதிய ரகங்கள் உற்பத்திக்கு ஏதுவாக இருக்கின்றன.

கோ-ஆப்டெக்ஸ் பட்டு ரகங்கள் விற்பதற்கு எனவும் பட்டு ரகங்களை வாங்குவோர் விரும்பும் வகையில் எல்லா ரகங்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் விதமாகவும் சென்னை, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, பெங்களூர் மற்றும் ஹைதராபாத் போன்ற இடங்களில் பட்டு விற்பனைக்கென



தனி விற்பனைக் கூடங்களை உருவாக்கி வருகிறது. இவற்றின் விற்பனை உற்சாகமூட்டுவதாக இருக்கிறது. வீட்டுக்குத் தேவையான துணிகள் வாங்கும் விதமாகவும், பொட்டிக் அச்சிட்ட துணிகளுக்கெனவும் ஏற்கனவே செயல்பட்டு வரும் சில விற்பனை நிலையங்களை மாற்றி அமைத்தும் புதிய விற்பனை நிலையங்களைத் திறக்கவும் உத்தேசித்துள்ளது. மதுரையில் பிரத்தியேகமாக பட்டு கைத்தறி ரகங்களை விற்பதற்கு ஒரு கட்டிடம் அமைப்பது சம்பந்தமான வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அங்கு விற்பனை தொடங்கப்பட உள்ளது. கோ-ஆப்டெக்ஸ் மார்க்கெட் நிலவரங்கள், பல்வேறு ரகங்கள் விற்பனை, சங்கங்கள் உற்பத்தி, பணப் பட்டுவாடா, பணியாளர்கள் முன்னேற்றம், வடிவு அமைப்பு வண்ணம் போன்றவற்றில் கம்ப்யூட்டரை உபயோகப்படுத்தி அதன் உதவி கொண்டு தேவையான விபரங்களை உடனுக்குடன் எடுப்பதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது. சரக்கு இருப்பு கணக்கிடுதலிலும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு பண பட்டுவாடா செய்தலிலும் கடன் விற்பனை வசதியிலும் ஏற்கனவே கோ-ஆப்டெக்ஸ் கம்ப்யூட்டரை அறிமுகப்படுத்தியுள்ளது. 1990–91 ஆம் ஆண்டில் முன்னோடியாக விற்பனைப் பட்டியல்கள் தயாரிப்பதிலும் கம்ப்யூட்டரை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. வாங்குவோர் விற்பதற்கு ஏற்ப பல ரகங்கள் தரமான முறையில் கைத்தறி துணிகளின் உற்பத்திக்கு புதிய முறைகளைக் கையாளவும் அவற்றினை மேம்படுத்தவும் கம்ப்யூட்டரை உபயோகிக்க திட்டமிட்டுள்ளது.

**கோ-ஆப்டெக்ஸின் விற்பனை வசதிகள்:**

கோ-ஆப்டெக்ஸ் அதன் விற்பனையை அதிகப்படுத்தவும் நுகர்வோரைக் கவரும் வண்ணம் அதன் கிளை விற்பனை நிலையங்களை நவீனமயம் ஆக்கும் திட்டத்தை ஏற்கனவே மேற்கொண்டுளளது.

1989–90 ஆம் ஆண்டில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திலிருந்து ரூ. 133.72 லட்சம் மொத்த நிதி உதவியுடன் முதல் கட்டமாக தற்பொழுது 52 கிளை விற்பனை நிலையங்களை நவீனமயமாக்கியும் 2-வது கட்டமாக 11 விற்பனை நிலையங்களை நவீனமயமாக்கியும் வருகிறது.

திருநெல்வேலி, மதுரை, சேலம், கடலூர், கோயம்புத்தூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் ரூ. 241.24 லட்சம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் 6 கிட்டங்கிகளை கட்டி வருகின்றது. இக்கட்டுமானப் பணிகள் 1990 ஆம் ஆண்டில் முடிவடையும். கோஆப்டெக்ஸ் கல்கத்தாவிலும், ஹைதராபாத்திலும் 1989–90 ஆம் ஆண்டில் கைத்

தறி விற்பனை வளாகங்களில் விற்பனை நிலையங்கள் அமைத்துள்ளது. கல்கத்தா விற்பனை நிலையத்தில் ஏற்கனவே விற்பனைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. ஹைதராபாத்தில் விரைவில் விற்பனை தொடங்கப்படவிருக்கின்றது.

அகமதாபாத்தில் எல்லா மாநில தலைமைச் சங்கங்கள் இருக்கும் இடத்தில் கோ-ஆப்டெக்ஸ் ஒரு விற்பனை நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

1989–90 ஆம் ஆண்டில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் மாநில அரசு கோ-ஆப்டெக்ஸ்க்கு ரூ. 166 லட்சம் பங்கு மூலதனம் கொடுத்துள்ளது. மேலும் மத்திய அரசும் மாநில அரசும் சம பங்கு என்ற விகிதத்தில் 1989–90 ஆம் ஆண்டில் ரூ. 41.10 லட்சம் பங்கு மூலதனம் ஆக கோ-ஆப்டெக்ஸ்க்கு அளித்துள்ளது.

## 12. ஜனதா துணி திட்டம்:

கோ-ஆப்டெக்ஸ் மூலமாக ஜனதா துணி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் தேவையான ஜனதா ரகங்களை பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி செய்து வருகின்றன. ஜனதா துணி ரகங்கள் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு ஒன்றியம், கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மற்றும் அரசு துறைகள் வாயிலாக சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. ஜனதா ரகத் துணிகள் மத்திய அரசினால் நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் விற்கப்பட்டு வருகின்றன. 1989–90ஆம் ஆண்டில் சுமார் 600 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 50,000 தறிகள் ஜனதா உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டன. கூட்டுறவு நூற்பாலைகள் இவற்றிற்கு தேவையான நூலை உற்பத்தி செய்து வழங்கி வருகின்றன. 1989–90 ஆம் ஆண்டு இந்த மாநிலத்திற்கென நிர்ணயம் செய்யப்பட்ட 75 மில்லியன் சதுர மீட்டர் ஜனதா துணியில் 83 மில்லியன் சதுர மீட்டர் ஜனதா துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன. ரூ. 300-க்கு கீழ் மாத வருமானம் பெறும் 75 லட்சம் குடும்பங்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்பட்டதால் இந்த அளவிற்கு உற்பத்தி அளவினை எட்ட முடிந்தது. அதிக அளவு ஜனதா ரக உற்பத்தி செய்ததால் நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பளிக்க முடிந்தது. 1990–91 ஆம் ஆண்டிற்கு ஜனதா ரக உற்பத்தி 65 மில்லியன் சதுரமீட்டர் உற்பத்தி குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1990–91 ஆம் ஆண்டில் சுமார் ரூ 17.88 கோடி மானியத் தொகை மத்திய அரசிடம் இருந்து உற்பத்தி அடிப்படையில் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## 13. கைத்தறி துணிகள் ஏற்றுமதி:

தமிழக கைத்தறியில் ஏற்றுமதி செய்யும் வகையில் பலவித கைத்தறி ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மெட்ராஸ் செக் கட்டிடம் போட்ட லுங்கிகள் ரியல் மெட்ராஸ் கர்சிப், காஞ்சிபுரம் பட்டு சேலைகள் பூத்துவாலைகள், கரூர் சென்னிமலை திரைச்சீலைகள், தமிழகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் ரகங்களாகும். 1989 ஆம் ஆண்டிற்கு சுமார் ரூ. 630 கோடி மதிப்புள்ள கைத்தறி துணிகள் ஏற்றுமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் தமிழ்நாடு பெரும் பங்கு வகிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் ரூ. 138 லட்சம் அளவிற்கு அதன் பங்காக ஏற்றுமதி செய்துள்ளது. நடப்பு ஆண்டில் கூட்டுறவு அமைப்பின் கீழ் ஏற்றுமதியை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 14. ஏற்றுமதியாளர்களுக்கு அரசு பரிசு வழங்கும் திட்டம்:

தமிழக அரசு கைத்தறி துணி ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் தமிழகத்தில் உற்பத்தியாகும் கைத்தறி துணிகளின் ஏற்றுமதியை வெளிநாட்டுச் சந்தையில் அதிகரிக்கும் பொருட்டும் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு அரசு பரிசு வழங்கும் திட்டத்தினை 1–1–1975 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கைத்தறி பருத்தி துணிகள் கைத்தறி பட்டு துணிகள் கைத்தறி பருத்தி ஆயத்த ஆடைகள் போன்றவைகளில் அதிக அளவில் ஏற்றுமதி செய்த முதல் மூன்று ஏற்றுமதியாளர்களுக்கு பரிசுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 1984–85 ஆம் ஆண்டில் இருந்து கைத்தறி அலங்கார துணிவகைகளும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன:—

| | | |
|---|---|---|
| முதலாவது பரிசு | .. | வெள்ளி வெற்றிச் சின்னம். |
| இரண்டாவது பரிசு | .. | வெள்ளி வெற்றிக் கேடயம். |
| மூன்றாவது பரிசு | .. | தகுதிச் சான்றிதழுடன் ரூ. 200-க்கான பணமுடிச்சு. |

## 15. விற்பனை மேம்பாட்டுத் திட்டம்:

கடந்த 36 ஆண்டுகளாக சில்லறை மொத்த கைத்தறித் துணி விற்பனையின்மீது வேறுபட்ட விகிதங்களிலும் பல்வேறு காலவரை மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டும் அளிக்

[1990 ஏப்ரல் 6

(1) 1990–91 ஆம் ஆண்டில் கழகத்தின் மூலப் பொருள் வங்கி செயல்முறையை ஒழுங்குபடுத்தவும், சந்தையில் நூல் தேவை அதிகரித்து நெருக்கடி ஏற்படும் காலத்தில் நூல் வங்கி ஒரு ஆதாரமாக இருந்து, தமிழ் நாட்டில் கைத்தறி அதிக அளவில் மையமாக இருந்து வரும் இடங்களில் சீராக செயல்பட்டு நூல் தேவையினை முழுவதுமாக பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(2) இக்கழகம் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம், மூலமாக சாயம் மற்றும் ரசாயனப் பொருட்களை கொள்முதல் செய்து பிரதம நெசவாளர் கூட்டுறவு கழகங்களுக்கு விநியாகம் செய்யவும் ஏற்கனவே நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேலும் இத்திட்டத்தை கூட்டுறவின் கீழ் அல்லாத நெசவாளர்களுக்கும் கழகத்தின் மூலம் விரிவுப்படுத்த உத்தேசித்துள்ளது. தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலம் உற்பத்தியாளர்களிடமிருந்து சாயம் மற்றும் ரசாயனப் பொருள்களை குறைந்த விலையில் கொள்முதல் செய்து அதனை கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் தட்டுப்பாடின்றி கிடைக்கச் செய்வதே இதன் குறிக்கோளாகும்.

(3) ஆலை போன்ற அமைப்புகளின் உற்பத்தியுடன் கைத்தறி துணி போட்டியிட வேண்டுமானால் கைத்தறிகளை நவீனமாக்குதல் இன்றியமையாததாகும். பெரு அளவாடி நெசவாளர்கள் இன்னமும் கூட்டுறவின் கீழ் அல்லாதவர்களாக இருப்பதால் இதில் கழகம் ஒரு முக்கிய பங்கு வகிக்க வேண்டியுள்ளது. மேலும் இதற்காக கழகம் 5,000 கைத்தறிகளை நவீனமயமாக்கும் குறியீடு நிர்ணயித்துள்ளது. இந்நோக்கத்திற்காக மத்திய அரசு தேசிய வளர்ச்சி வங்கி மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) மற்றும் வணிக வங்கிகளிலிருந்து நிதியுதவி பெற உள்ளது.



1990 ஏப்ரல் 6]

(4) கழகத்தில் தற்பொழுது பிணையக் கடன் உச்ச வரம்பு ரூ. 3,000 ஆக இருப்பதை, ஏழை பிரிவு நெசவாளர்களுக்கு இடருதவி அளிக்கும் வண்ணம் ரூ. 5,000 ஆக. உயர்த்தப்படும். ஓரிரு தறிகளை வைத்துள்ள நெசவாளர்களுக்கு தன்னிச்சையாக செயல்பட இத்திட்டம் ஊக்கமளிக்கும்.

(5) பெருமளவில் விற்பனை ஆதரவை விரிவுபடுத்த கைத்தறி வளர்ச்சிக் கழகம் உத்தேசித்துள்ளது. எனவே, இக்கழகம் மத்திய அரசின் பல்வேறு துறைகளின் கைத்தறி துணி தேவைகளுக்கென தற்போது புதுடெல்லியில் இயங்கி வரும் " ACASH " நிறுவனத்துடன் இணைந்து செயல்படவுள்ளது.

(6) 1990–91 ஆம் ஆண்டில் கூட்டுறவில் அல்லாத நெசவாளர்களுக்கு ' ஹட்கோ ' நிறுவனத்தின் மூலமாக 1,000 வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

1990–91 ஆம் ஆண்டில் இக்கழகத்தின் செயல் திட்டங்கள் பன்முனைப்படுத்துவதன் மூலம் கைத்தறி அதிகமாக உள்ள பகுதிகளில் பெரிய அளவில் முனைந்து செயல்படும்.

18. தீவிர கைத்தறி வளர்ச்சி ஏற்றுமதி உற்பத்தி திட்டங்கள்:

கைத்தறி நெசவாளர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காகவும் அவர்களின் வறுமையை போக்கவும் காஞ்சிபுரம் ஈரோடு, சேலம், மதுரை ஆகிய இடங்களில் நான்கு கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டங்கள் மற்றும் கரூர், குறிஞ்சிப்பாடி ஏற்றுமதி உற்பத்தி திட்டங்களும், கைத்தறி துணி உற்பத்தி செய்வதற்கு ஏற்ற எல்லா உற்பத்தி வசதிகளையும் கொண்டு, அரசு ஏற்படுத்தியுள்ளது. ஆறு திட்டங்

களிலும் தறிகள் எண்ணிக்கை குறியீடு, திட்ட மதிப்பீடு தற்போதைய உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | | திட்ட மதிப்பீடு. | தறிகளின் எண்ணிக்கை 31-12-1989 முடிய. | உற்பத்தி 1-4-1989 முதல் 31-12-1989 வரை. |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்) | | |
| (1) | | (2) | (3) | (4) |
| 1. காஞ்சிபுரம் | .. | 79.54 | 4,262 | 11.98 |
| 2. ஈரோடு | .. | 105.80 | 715 | 5.56 |
| 3. சேலம் | .. | 55.49 | 3,673 | 6.36 |
| 4. மதுரை | .. | 61.85 | 2,255 | 14.10 |
| 5. கரூர் | .. | 40.75 | 1,061 | 8.79 |
| 6. குறிஞ்சிப்பாடி | .. | 32.12 | 1,475 | 3.40 |
| மொத்தம் | .. | 375.46 | 13,441 | 50.19 |



| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | | விற்பனை 1-4-1989 முதல் 31-12-1989 வரை. | குறியீடு 1989-90 உற்பத்தி. | குறியீடு 1989-90 விற்பனை. |
|---|---|---|---|---|
| | | (5). | (6) | (7) |
| | | (இலட்சம் மீட்டரில்.) | | |
| 1. காஞ்சிபுரம் | .. | 12.74 | 16.50 | 18.00 |
| 2. ஈரோடு | .. | 7.40 | 18.00 | 20.00 |
| 3. சேலம் | .. | 7.57 | 14.80 | 15.50 |
| 4. மதுரை | .. | 15.51 | 32.20 | 34.00 |
| 5. கரூர் | .. | 7.23 | 13.50 | 14.50 |
| 6. குறிஞ்சிபாடி | .. | 3.93 | 5.50 | 6.00 |
| மொத்தம் | ... | 54.30 | 100.00 | 108.00 |

தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்ட உ ப்பினர்களுக்கு தறிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் நவீன முறையில் உற்பத்தியை பெருக்க பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பாவு புனைப்பு பணியின் காரணமாக ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்க்கவும் மற்றும் தறிகளின் துணி உற்பத்தி திறன் மற்றும் ஒட்டு மொத்த உற்பத்தி ஆகியவைகளை பெருக்கவும் மேற்படி தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்களில் நீண்ட பாவு முறை அறிமுகப்படுத்தப்

[1990 ஏப்ரல் 6

தமிழ்நாடு கூட்டுறவு பதனிடும் ஆலையின் பணி மற்றும் நிதி நிலை செயலாக்சம் பின்வருமாறு:—

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | 1986—87. | 1987—88. | 1988—89. | 1989—90. (பிப்ரவரி முடிய) |
| | (கிலோ கிராம் இலட்சத்தில்) | | | |
| வெளுத்தல் | 17.43 | 20.57 | 14.31 | 9.25 |
| சாயமிடல் .. | 11.43 | 12.08 | 10.26 | 8.68 |
| அச்சிடல் .. | 10.10 | 17.29 | 9.20 | 7.66 |
| நூல் சாயமிடல் .. | 1.71 | 2.37 | 2.57 | 2.07 |
| பாலியெஸ்டர் .. | 3.76 | 5.95 | 5.66 | 3.20 |
| | | | | (டிசம்பர் 1989 முடிய) |
| வியாபார இலாபம் (பிப்ரவரி 1990 முடிய) (ரூபாய் இலட்சத்தில்). | 265 | 269.13 | 270.04 | 267.24 |
| மொத்தம் லாபம் .. | 57.90 | 57.65 | 58.74 | 34.17 |
| நிகர லாபம் .. | 27.35 | 26.93 | 24.73 | 13.58 |

20. தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரம்:

1971 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6 ஆம் தேதியில் தமிழ்நாடு சரிகை ஆலை, பொது நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு 23—1—1974-ல் உற்பத்தியை துவங்கியது



1990 ஏப்ரல் 6]

தரமான சரிகையை பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நியாயமான விலையில் வழங்குவது இதன் முக்கிய குறிக்கோளாகும். ஆலையின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு தொகை ரூ. 20 லட்சம். இது ரூ. 100 வீதம் 20,000 சம பங்குகளாகும். அரசின் பங்குத் தொகை ரூ. 13.20 இலட்சம் ஆகும். சரிகை உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்கள் தங்கம், வெள்ளி இழை மற்றும் பட்டு நூல் ஆகும். வெள்ளி இழை சூரத்திலிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. பட்டுநூல் தமிழ்நாடு பட்டு வளர்ச்சி இணையம், காஞ்சிபுரம் மற்றும் கர்நாடகா பட்டு விற்பனை கழகத்திலிருந்தும் தங்கம் தங்கக் கட்டுப்பாடு அலுவலர், பம்பாய் அனுமதியுடனும் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. முக்கிய மூலப்பொருளான வெள்ளி இழையை 1990-91-ம் ஆண்டில் இவ்வாலையிலேயே தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஜனவரி 1990-லிருந்து ஆலையில் 3-வது பணிமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தற்போது உற்பத்தியாகும் 1220 மார்க்கிற்கு மேல் மாதம் ஒன்றுக்கு 500 மார்க்குகள் உற்பத்தி அதிகரித்துள்ளது. பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தேவையை முழு அளவில் பூர்த்தி செய்ய ஆரணி மற்றும் கும்பகோணத்தில் சிறிய அளவில் சரிகை ஆலை அமைப்பது அல்லது ஏற்கனவே உள்ள ஆலையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

மேலும் 1990-91 ஆம் ஆண்டில் சரிகை ஆலையின் உற்பத்தியை இருமடங்காக்க ரூ. 8.50 லட்சத்தில் 16 நூற்பு மற்றும் 10 தட்டையாக்கும் இயந்திரங்களும் நிறுவப்படவுள்ளன. சரிகை மற்றும் பட்டு ஆகியவைகளின் தரத்தை சோதனை செய்யும் முறையான பரிசோதனை சாலை உள்ளது. 1990-91 ஆம் ஆண்டில் இந்த சோதனை சாலையை நவீன

[1990 ஏப்ரல் 6

முறையிலுள்ள இயந்திரங்களை நிறுவி, விரிவுபடுத்த ரூ. 2.50 லட்சத்திற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் சூரத் வியாபாரிகளிடமிருந்து பெறும் சரிகையை சோதனை சாலைகளுக்கு அனுப்பி வைத்து தரத்தை சோதனை செய்து கொள்ளுகின்றார்கள்.

கடந்த 3 ஆண்டுகளில் உற்பத்தி மற்றும் விற்பனை

| வருடம். | உற்பத்தி (மார்க்குகளில்). | விற்பனை (மார்க்குகளில்). | நிகர லாபம். | நட்டம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் லட்சத்தில்) | |
| 1986–87 | 14,417 | 14,417 | 213.62 | +2.99 |
| 1887–88 | 14,500 | 14,500 | 268.71 | +6.48 |
| 1988-89 | 8,408 | 8,171 | 170.04 | +1.47 |
| 1-4-1989 முதல் 28-2-1990 வரை, | 13,318 | 13,488 | 292.97 (வரிக்குப்பின்) | +13.73 |

21. நெசவாளர் நலத் திட்டங்கள்:

(1) தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம்,

கூட்டுறவு அமைப்பின் கீழ் செயல்பட்டு வரும் கைத்தறி நெசவாளர்களுக்கு பயனளிக்கும் வகையில் 15–11–1975 முதல் கூட்டுறவு கைத்தறி மற்றும் நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சேர்க்கப்படும் ஒவ்வொரு நெசவாளர் அங்கத்தினரும், தான் ஈட்டும் ஊதியத்தின் ஒவ்வொரு ரூபாய்க்கும் ஆறு காசுகள் வீதம் இத்திட்டத்தில் சந்தாவாக செலுத்தி வருகின்றார்கள். மேலும், மாநில அரசு தன் பங்காக ரூபாய்க்கு மூன்று காசுகள் வழங்குகிறது. இது தவிர ஒவ்வொரு ஆண்டும் இத்



1990 ஏப்ரல் 6]

திட்டத்தில் சேர்ந்துள்ள தொகை மீது மாநில அரசால் 7 சதவீத வட்டி வழங்கப்பட்டு இத்தொகை ஒவ்வொரு நெசவாளரின் சேமிப்புக் கணக்கிலும் சேர்க்கப்பட்டு திட்ட நிதியில் கணக்கு வைத்துக் கொள்ளப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் சேமிக்கப்பட்டுள்ள தொகை உறுப்பினர்கட்கு அவர் தம் 55-வது வயதில் திட்டத்தினின்றும் ஓய்வு பெறுகின்றபொழுது திரும்ப வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஆய்வு காப்பீட்டுக் கழகத்தின் குழு காப்பீட்டுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சந்தா செலுத்தி வரும் உறுப்பினர், மரணமடைய நேர்ந்தால், ஆய்வு காப்பீட்டுக் கழகம் உறுப்பினரின் வாரிசுதாரருக்கு ரூ. 3,000 வழங்குகிறது. அரசு, இதற்கென ஆய்வு காப்பீட்டுக் கழகத்திற்கு வருடத்திற்கு நபர் ஒன்றுக்கு ரூபாய் 15 வீதம் பிரிமியம் செலுத்துகிறது. இது தவிர கோ-ஆப்டெக்ஸ்-ம் மரணமடைந்த உறுப்பினரின் வாரிசுதாரருக்கு ரூ. 2,000 வழங்குகிறது. ஆக, ஒரு நெசவாளர் மரணமடைய நேரிட்டால், அவரது குடும்பம் ரூ. 5,000-மும் மற்றும் திட்டத்தில் அவரது கணக்கில் சேர்ந்துள்ள தொகையையும், இத்திட்ட நிதியிலிருந்து பெறுகிறது. ஒரு உறுப்பினர் தனது 20-வது வயதில் இத்திட்டத்தில் உறுப்பினராகச் சேர்ந்து தொடர்ந்து சந்தா செலுத்தி வந்தால் அவர் தனது 55-வது வயதில் ரூ. 50 ஆயிரம் வரை பெற வாய்ப்புள்ளது. தற்சமயம் இத்திட்டத்தின் கீழ் 1.48 லட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். தற்சமயம் அரசு திட்டத் தொகையான ரூபாய் 3 ஆயிரத்தை, ரூ. 10 ஆயிரமாக உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது.

21. (2) மத்திய சிக்கனத் திட்டம்.

கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம், நெசவாளர்களுக்கு பயனளிப்பதை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசின் திட்டத்தினை முன்மாதிரியாகக் கொண்டு 1985–86 ஆம் ஆண்டில் மத்திய அரசு ''மத்திய சிக்கன சேமிப்பு திட்டம்'' என்ற இத்திட்டத்தினை இந்தியா முழுவதும் அமுல்படுத்தியது. இத்திட்டம் ஏற்கனவே சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு

மேலும் சிறு கூடுதல் சலுகைகளை அளிக்கிறது. இத் திட்டத்தின் கீழ் மாநில அரசுக்கு இணையாக, ஒவ்வொரு உறுப்பினரும் ஈட்டும் ஊதியத்தின் ஒவ்வொரு ரூபாய்க்கும் 3 காசுகள் வீதம் ஒரு உறுப்பினருக்கு ஆண்டுக்கு ரூ. 90 என்ற உச்சவரம்புக்குட்பட்டு அல்லது அவ்வப்போது அறிவிக்கப் படும் அளவிற்கு ஏற்ப மத்திய அரசால் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. மத்திய அரசால் ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப்படும் தொகையினை ஒவ்வொரு நிதியாண்டின் ஆரம்பத்திலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு தக்க வாறும் மாநில அரசின் ஒதுக்கீட்டிற்கு தக்கவாறும் பகிர்ந் தளிக்க மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு. இந்த வகையில் 1989–90 ஆம் ஆண்டு ரூ. 66.10 இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது.

21. (3) கைத்தறி நெசவாளர் வீடு மற்றும் தொழிற்கூடத் திட்டம்.

கூட்டுறவு துறையில் உள்ள நெசவாளர்களின் மேம்பாட் டினை கருத்தில் கொண்டு இரண்டாவது ஐந்தாவது திட்ட காலத்தின் தொடக்கத்தில் நெசவாளர் வீட்டு வசதி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இரண்டாவது மற்றும் மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலங்களில் மாநில அரசுக் கடன் மற்றும் மானயம் பெற்று ரூ. 1.00 கோடி மதிப் புள்ள 2,683 வீடுகள் 32 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூல மாக கட்டப்பட்டன. கைத்தறி நெசவாளர்களின் வீட்டு வசதியினை கருத்தில் கொண்டு இத்திட்டம் 1979–80 ஆம் ஆண்டில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு 3,027 வீடுகள் 44 நெச வாளர் காலனிகள் மூலமாக ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் கட்டப்பட்டன. இவ்வாறு புதுப்பிக்கப்பட்ட திட்டம் ஹட்கோ நிறுவனத்தின் கடன் மற்றும் மாநில அரசின் மான்ய உதவியால் செயல்படுத்தப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலமுதல் (1985—86) மத்திய அரசும் இத்திட்டத்தின் கீழ் பங்கு கொண்டு ஒரு வீட்டிற்கு ரூ. 2,500 மத்திய அரசு மான்யம் அளித்தது. இதுதவிர மாநில அரசும் மான்யமாக ரூ. 2,500 வழங்குகிறது. எனவே, நடைமுறையில் உள்ள இத்திட்டத்தின்



கீழ் ரூ. 15,000 மதிப்புள்ள வீடுகள் ரூ. 5,000 அரசு மான்யம் பெற்றும் ரூ. 10,000 ஹட்கோ நிறுவன கடன் வசதி பெற்றும் கட்டப்படுகின்றன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 1985—86 முதல் 1988—89 வரை 4,227 வீடுகள் 50 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கட்டுமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் 2,327 வீடுகள் கட்டி முடிக்கப்பெற்று கடைசி தொகுதி யில் சுமார் 1,900 வீடுகள் கட்டுமானப்பணியில் வெவ்வேறு நிலை களில் கட்டப்பட்டு வருகின்றன.

நடப்பு நிதி ஆண்டில் திண்காரை மேற்கூறைகளுடன் கூடிய வீடுகள் ரூ. 25,000 மதிப்பீட்டில் ஹட்கோ நிறுவன கடன் மற்றும் அரசு மான்யம் பெற்று கட்ட உத்தேசிக்கப்பட் டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டு முதல் ஊரக பகுதிகளில் உள்ள நெச வாளர்களின் வீடுகளில் தொழிற்கூடம் அமைத்து நெசவாளர் களின் வீடுகளை மேம்படுத்தவும் முக்கியத்துவம் அளிக்கப்பட உள்ளது. ஒரு தொழிற்கூடத்தின் மதிப்பு ரூ. 3,000 ஆகும்.

மேலும் நகரப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு 'வீடு மரா மத்து மற்றும் புதுப்பித்தல் பணிகள்' திட்டத்தின்கீழ் ஹட்கோ நிறுவன கடன் மற்றும் அரசு மான்யம் பெற்று மேம்படுத்தப் படும். இத்திட்டத்தின்கீழ் ஒரு வீட்டிற்கு ஹட்கோ கடன் ரூ. 3,000-மும் அரசு மான்யம் ரூ. 1,000-மும் பெற்று ரூ. 4,000 நிதி வசதி அளிக்கப்படுகிறது.

21. (4) 1ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி சிறார்களுக்கு தமிழ்நாடு அரசின் சத்துணவு திட்டத்தின் கீழ் இலவச சீருடை வழங்கும் திட்டம் 1989–90.

1985–86 ஆம் ஆண்டிலிருந்து, 1-லிருந்து 8-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு, தமிழ்நாடு அரசின் சத்துணவு திட்டத்தின்கீழ் இலவசமாக சீருடை வழங்கும் திட்டம் அமுலில்

நூல்களை முறையாகவும், கட்டுப்பாட்டு விலையிலும் விநியோகம் செய்தல் என்ற குறிக்கோளினை அடைய ஏதுவாக இத்திட்டம் அமைந்தது. தற்சமயம் தமிழ்நாட்டில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் 4.59 இலட்சம் கதிர்களுடன் மொத்தம் 12,225 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்து இயங்கி வருகின்றது. மேற்கண்ட 18 கூட்டுறவு நூற்பாலைகளில் மிசேரியர் கூட்டுறவு நூற்பாலை உள்ளிட்ட 13 கூட்டுறவு நூற்பாலைகள் 1958-65 ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்டு உற்பத்தியைத் துவங்கின. மீதம் உள்ள 5 கூட்டுறவு நூற்பாலைகள் 1984 ஆம் ஆண்டு துவக்கப்பட்டவை. மேற்குறிப்பிட்ட 18 கூட்டுறவு நூற்பாலைகளின் மொத்தம் மாதமொன்றுக்கு 16,000 பேல்கள் (கோன் மற்றும் சிட்ட) நூல் 10ஆம் நெம்பர் முதல் 100ஆம் நெம்பர் வரை உற்பத்தி ஆகின்ற இந்த, உற்பத்தியானது தமிழ் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு கூட்டுறவு துறையின் மூலம் கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் அவர்களால் அவ்வப்பொழுது நிர்ணயிக்கப்படும் சலுகை விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. தமிழக அரசினால் சமீப காலத்தில் வெளியிடப்பட்ட அரசாங்க ஆணையில் மேற்படி கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூல்களை முன்னுரிமை அடிப்படையில் முறையே தமிழ்நாடு கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் மற்றும் தொடக்க கூட்டுறவுச் சங்கங்கள் அடுத்தப்படியாகக் கூட்டுறவு துறையில்லாத நெசவாளர்கள் கடைசியாக விசைத்தறியாளர்கள் என்று வரிசையில் விநியோகம் செய்ய வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

1985ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்திய அரசின் துணி நூல் கொள்கையில் புதிய கூட்டுறவு நூற்பாலைகள் தொடங்கப்படுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

23. கூட்டுறவு நூற்பாலைகளின் புதுப்பித்தலும் புனருத்தாரணமும்.

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளில் தென் ஆற்காடு, ஸ்ரீவில்லிபுத்தூர், மதுரை, வட ஆற்காடு, தஞ்சாவூர் மற்றும் காஞ்சிபுரம் காமாட்சியம்மன்



கூட்டுறவு நூற்பாலைகள் ஜவுளித் துறையில் நிலவிய மந்த நிலையின் காரணமாகவும் உரிய தருணத்தில் புதுப்பித்தல் செய்யாமையாலும் நலிவடைந்துள்ளன. இக்கூட்டுறவு நூற்பாலைகளை நலிவடைந்த நிலையிலிருந்து மேம்படச் செய்ய நிதி நிறுவனங்களிடம் அணுகி நீண்டகால கடன்களை மாற்றியமைக்கப்பட்ட முறையில் திரும்ப செலுத்தும் கடன்களாக மாற்றிடல், அபராத வட்டியினைத் தள்ளுபடி செய்தல் போன்ற இடருதவிகள் கோரப்பட்டன. இக்கூட்டுறவு நூற்பாலைகளை மற்றும் நலிவடைந்த கூட்டுறவு நூற்பாலைகளை சுமார் 31.8 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கும் இடருதவிக்கான முன்மொழிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் உதவியுடன் செய்யப்பட உள்ள இப்புதுப்பித்தல் ஆலைகளின் உற்பத்தி திறனையும் இலாபத்தினையும் நூலின் தரத்தினை உயர்த்துவதன் மூலம் அடைய வாய்ப்பளிக்கும். இதில் மாநில அரசின் பங்கு 20 விழுக்காடு என்ற அளவில் ரூ. 6.36 கோடியாகும்.

மேலும் இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையை ரூ. 658 இலட்சம் செலவில் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இவ்வாலையின் செயல்திறன் உறுதிப்படவும், அப்பகுதியிலுள்ள ஆதி திராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகள் பெருகவும் வாய்ப்புக்கள் உள்ளன.

முத்தேனந்தத்தில் உள்ள சோமசுந்தர சூப்பர் நூற்பு ஆலையை 1978ஆம் ஆண்டு முதல் அரசு ஏற்று நடத்தி வருகிறது. 3,260 கதிர்த் திறன்களை உடைய இந்த ஆலை மிகவும் பழமையானது. இந்த ஆலையினை கூட்டுறவு நூற்பாலையாக மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் இந்த ஆலையினை இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் உதவியுடன் ரூ. 177.81 இலட்சம் செலவில் புதுப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர, பாரதி கூட்டுறவு நூற்பாலை எட்டயபுரம், அண்ணா கூட்டுறவு நூற்பாலை, தேனி, மற்றும் தர்மபுரி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலைகளின் தேவைக்கேற்ப விரிவாக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

[1990 ஏப்ரல் 6

மிசேரியர் கூட்டுறவு நூற்பாலையானது 12,000 கதிர் திற னுக்கு விரிவுபடுத்தி இயக்கப்பட உள்ளது.

நல்ல திறமையான மேலாண்மையாலும், நிதிக் கட்டுப்பாட் டினாலும் கூட்டுறவு நூற்பாலைகளின் செயல் திறன் 1988—89 ஆம் ஆண்டு ரூ. 1,513.34 இலட்சம் நட்டமாக இருந்த நிலமை 1989—90 பிப்ரவரி வரை ரூ. 1,188.49 இலட்சம் பண இலாப மாக மாற்றப்பட்டுள்ளது. இது, நெசவாளர்களுக்கு சலுகை விலையில் நூல் வழங்கப்பட்ட போதிலும் பெறப்பட்ட பண இலாபமாகும். பஞ்சு கொள்முதலும், நூல் விற்பனையும் கைத் தறி மற்றும் துணி நூல் இயக்ககத்தினால் கண்டிப்பாக கண் காணிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் நல்ல முடிவுகள் பெறப் பட்டுள்ளன.

கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் ஒன்றினை அமைத்து அதன் மூலம் பஞ்சும், நூற்பாலைகளுக்கு இயந்திரங்கள் வாங்க வும் நூல் விநியோகம் செய்யவும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

அவ்வப்பொழுது தேய்ந்து போன இயந்திரங்களை உடனுக் குடன் மாற்றப்பட்டு நூலின் தரம் எந்த விதத்திலும் பாதிக்கப் படாதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

21. மூடப்பட்ட பஞ்சாலைகளைத் திறத்தல் :

தமிழ்நாட்டில் 444 பஞ்சாலைகள் உள்ளன. இதில் 23 நூற்பு மற்றும் நெசவு ஆலைகளும் அடங்கும். மொத்தம் 74.65 இலட்சம் கதிர்களும், 9,122 தறிகளும் இந்த ஆலைகளில் உள்ளன. இந்தப் பஞ்சாலைகளில் சுமார் 2.21 இலட்சம் தொழி லாளர்கள் ஈடுபட்டுள்ளனர். பிப்பரவரி 1990-இல் 21 நூற் பாலைகள் தொழிலாளர் பிரச்சினை, நிதி வசதி பற்றாக்குறை



1990 ஏப்ரல் 6]

மற்றும் தவறான நிர்வாகம் போன்ற காரணங்களுக்காக மூடப் பட்டிருந்தன. இவ்வாறு மூடப்பட்ட நூற்பாலைகளின் பாதிக் கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 9,500 ஆகும்.

மூடப்பட்ட நூற்பாலைகளைத் திறப்பதற்கும் அவற்றின் செயல் திறனை புத்தாக்கம் செய்வதற்கும் உரிய வழி வகைகளை ஆராய்ந்து அறிய தொழில் வல்லுநர் ஒருவர், நிதி வல்லுநர் தொழிலாளர் துறை மற்றும் தென்னிந்திய பஞ்சாலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு நிலைக் குழு அமைக் கப்பட்டுள்ளது நிலைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் மாநில அரசானது நலிவடைந்த நூற்பாலைகளுக்கு மின் வெட்டி லிருந்து விலக்கும் விற்பனை வரி செலுத்துவதை மூன்று ஆண்டு களுக்கு நிறுத்திவைக்க அனுமதி வழங்கி வருகிறது.

கீழ்க்கண்ட நூற்பாலைகள் அரசின் பொறுப்புறுதியைப் பெற்றுள்ளன :—

(1) ஜோதி நூற்பாலை, கோவை.

(2) ஸ்ரீஹரி நூற்பாலை, கோவை.

(3) ஜெயலட்சுமி நூற்பாலை, கோவை.

அரசு கீழ்க்கண்ட நூற்பாலைகளை ''நிவாரணம்'' பெறும் நிறுவனங்களாக அறிவித்துள்ளது :—

(1) ஜோதி நூற்பாலை, கோவை.

(2) ஸ்ரீஹரி நூற்பாலை, கோவை.

(3) ருக்மணி நூற்பாலை, மதுரை.

அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளினால் கடந்த ஓராண்டில் கீழ்க்கண்ட நூற்பாலைகள் மீண்டும் திறக்கப் பட்டுள்ளன :—

(1) தமிழ்நாடு நூற்பாலை, அவினாசி.

(2) வாசுதேவா நூற்பாலை, கோவை.

(3) ஆர்.வி. நூற்பாலை லிமிடெட், கோவை.

(4) பாலாஜி நூற்பாலை, சேலம்.

(5) ருக்மணி நூற்பாலை, சிலைமான், மதுரை.

(6) சற்குணா நூற்பாலை, கோவை.

(7) பாலாஜி ஸ்பின்னர்ஸ், கோவை.

(8) அமராவதி சாயமிடும் நிறுவனம், உடுமலைப்பேட்டை.

(9) தெய்வசிகாமணி நூற்பாலை, கோவை.

இதற்கிடையில் அரசு மூடப்பட்ட 17 நூற்பாலைகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட 10,336 தொழிலாளர்களுக்கு நிதி நிவாரணமாக நபர் ஒருவருக்கு ரூ. 250 வீதம் மொத்தம் ரூ. 25,84,000 தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

வங்கிகள் மற்றும் மூடப்பட்ட நூற்பாலைகளின் தொழிலாளர் சங்கங்களுடனும் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் விளைவாக நூற்பாலைகளை விரைவில் திறப்பதற்காக அனைத்து உதவிகளையும் வழங்க இவர்கள் முன்வந்துள்ளனர். இதன் மூலம் சில நூற்பாலைகள் விரைவில் திறக்கப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு அரசானது மூடப்பட்டுள்ள ஆறு நூற்பாலைகளின் நிர்வாகத்தினை மேற்கொள்ள தொழில் வளர்ச்சி மற்றும் ஒழுங்குபடுத்துதல் சட்டம் 1951-ன் படி இந்திய அசாங்கத்திற்கு கருத்துரு அனுப்பியுள்ளது. இதன் தொடர்பாக இந்திய அரசாங்கத்தின் ஒப்புதல் எதிர் நோக்கப்படுகிறது.



25. விசைத் தறிகள் :

நமது நாட்டில் துணி உற்பத்தியில் விசைத்தறி தொழில் பெரும் பங்கு வகிக்கிறது. இன்றைய துணித் தேவையில் 50 சதவீதம் துணிகள் விசைத்தறி மூலம் பெறப்படுகின்றது. புதிய துணி நூல் கொள்கையில் விசைத்தறிக்கு முறையான வழிவகை செய்துள்ளதின் மூலம் விசைத்தறியின் பங்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் வரை விசைத்தறிகளை மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது. மத்திய அரசு மாநில அரசிற்குக் குறைந்த விசைத்தறிகளை ஒதுக்கீடு செய்ததால் பதிவு செய்யப்படாத விசைத்தறிகள் அதிக அளவில் இருந்தன. 1986-ன் துணி நூல் கட்டுப்பாடு ஆணையின்படி பதிவு செய்யப்படாத விசைத்தறிகளை ஒழுங்கு செய்யும் நோக்கத்துடன் விசைத்தறிகளை பதிவு செய்யும் அதிகாரங்கள் மாநில கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளன. அதன்படி தமிழ்நாட்டில் உள்ள விசைத்தறிகளுக்கு பதிவுச் சான்றிதழ்களை கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் அளித்து வருகிறார். விசைத்தறி பதிவு செய்ய விரும்புவோர் ஒரு தறிக்கு ரூ. 250 வீதம் பணம் செலுத்தி விசைத்தறிகளை நிறுவிக் கொள்ளலாம். இதுபோல் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழ்கள் ஐந்து ஆண்டு காலங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். அதற்கு மேல் இதனைப் புதுப்பிக்க வேண்டும்.

இதுவரை தமிழக அரசு 1,81,665 விசைத்தறிக்கு பதிவுச் சான்றிதழ் வழங்கியுள்ளது. 1986 துணி நூல் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் மாநில அரசிற்கு எல்லா வகையான விசைத்தறிகளுக்கும் பதிவுச் சான்றிதழ்கள் வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. விசைத்தறிகளுக்கு பதிவுச் சான்றிதழ் வழங்கும் விதிமுறைகளை தளர்த்தியதால் விசைத்தறிகளை நிறுவுவதற்கு எந்த விதமான இடர்ப்பாடும் இல்லை. விசைத்தறிகளை எளிதாக

நிறுவ முடிகிறது. தமிழ்நாட்டில் சேலம், பெரியார், கோயம்புத்தூர், திருச்சி, காமராஜர் மற்றும் மதுரை போன்ற மாவட்டங்களில் விசைத்தறிகள் அதிகமாக உள்ளன. 1981 விசைத்தறி கணக்கெடுப்பின்படி ஐந்து லட்சத்திற்கு மேல் மக்கள் தொகை உள்ள நகரத்தில் விசைத்தறிகள் நிறுவுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது என்ற நிபந்தனையை தவிர புதிய விசைத்தறிகள் நிறுவுவதற்கு எவ்விதமான தடையும் இல்லை.

தற்போது துணி ஆலைகளுக்கு ஈடாக விலை உயர்ந்த துணிகளை உற்பத்தி செய்யும் பணியில் விசைத்தறித் தொழில் ஈடுபட்டுள்ளது.

விசைத்தறி பணிமையம் நிறுவுதல் :

தறிகளை நவீன மயமாக்கல், நல்ல முறையில் தறிகளை பராமரித்தல், நூல் எண் மதிப்பீட்டு மற்றும் விசைத்தறி துணிகளின் தர மதிப்பீடு, விசைத்தறி உற்பத்தியில் புதிய வடிவமைப்பு மற்றும் பொருளாதாரத்தில் முன்னேற்றம், இதற்கான நவீன மாற்றம் உற்பத்தியில் கொண்டு வருதல் போன்ற வகையில் விசைத்தறி பணி மையம் செயலாற்றி வருகிறது. மேலும் கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட இரகங்கள் தவிர மற்ற இரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கவும், விசைத்தறித் துறையில் தொழில் நுட்ப விளக்கம் அளித்தல், நல்ல நிர்வாகத்தில் இயக்கவும், விலை மற்றும் கச்சாப் பொருள் கழிவினை தேவையான அளவில் குறைக்கவும் இம்மையம் வழிகாட்டியாக இருந்து வருகிறது.

மத்திய அரசு கட்டுப்பாட்டின் கீழ் ஈரோட்டில் ஒரு விசைத்தறி பணி மையம் இயங்கி வருகிறது. மேலும் இந்த ஆண்டில் விசைத்தறி நெசவாளர்கள் அதிகம் உள்ள பகுதிகளான



சேலம் மற்றும் தமிழ்நாட்டில் தென் பகுதியிலும் இரண்டு விசைத்தறி பணி மையங்கள் ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவ அரசு உத்தேசித்துள்ளது.

விசைத்தறிகளின் வளர்ச்சி கைத்தறிகளின் வளர்ச்சியினை பாதிக்காவண்ணம் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

26. விசைத்தறிக் கணக்கெடுப்பு :

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும், எத்தனை விசைத்தறிகள் உள்ளன. இவை மூலம் உற்பத்தி செய்யப்படும் ரகங்கள் விற்பனை முறை, நிதி வசதிகள், வேலையாட்களின் எண்ணிக்கை, விசைத்தறி நெசவாளர்களின் வருமானம், விசைத்தறி தனியே நடத்தப்படுகின்றதா/ கூட்டுறவு முறையில் உள்ளதா அல்லது கூலி அடிப்படையில் இருக்கின்றதா என்பன போன்ற அனைத்து விபரங்களையும் சேகரிக்கும் நோக்கத்துடன் மத்திய அரசு அந்தந்த மாநில அரசுகளை விசைத்தறிக் கணக்கெடுப்புப் பணியினைத் தொடங்க அறிவுறுத்தியது. இதனடிப்படையில் தமிழகத்தில் 1989ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் நாள் முதல் விசைத்தறி கணக்கெடுப்புப் பணி தொடங்கப்பட்டு முடிவடைந்துள்ளது. கணக்கெடுப்பு படிவங்களைத் தொகுக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இது விரைவில் முடிக்கப்பட்டு மாநில அளவிலான விபரங்கள் துணிநூல் ஆணையருக்கு அனுப்பப்படும். மாநில அரசு தமிழ்நாட்டில் விசைத்தறி தொழில் வளர்ச்சிக்கான பல திட்டங்களைத் திட்டுவதற்கு இவ்விசைத்தறி கணக்கெடுப்பு விபரங்கள் மிக்க உதவியாக இருக்கும்.

27. கைத்தறி ரக ஒதுக்கீடு—கொள்கை செயலாக்கப் பிரிவு நிறுவுதல்:

கைத்தறிக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் மத்திய அரசு 1985 ஆம் ஆண்டு கைத்தறி (ரக ஒதுக்கீடு) சட்டத்தின் கீழ் கைத்தறியில் மட்டும் உற்பத்தி செய்வதற்கென 22 ரகங்களை ஒதுக்கீடு செய்துள்ளது. இதனை எதிர்த்து

[1990 ஏப்ரல் 6

விசைத்தறி பிரிவினைச் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் விசைத் தறிச் சங்கங்கள் சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்தும் டெல்லியிலுள்ள உச்ச நீதிமன்றத்திலிருந்தும் தடை உத்திரவு பெற்றுள்ளனர். இதே மாதிரியான நிறுத்த ஆணைகள் இதர மாநிலங்களிலுள்ள நீதி மன்றங்களில் பெறப்பட்டுள்ளதால் மத்திய அரசும் மாநில அரசுகளும் இந்த வழக்கில் ஒரே விதமான தீர்ப்பு பெறும் பொருட்டு உச்ச நீதி மன்றத்திற்கு மாற்றம் செய்வித்துள்ளது. இதனை உச்ச நீதிமன்றம் (மனுவினை) ஏற்றுள்ளது. இந்த வழக்குகள் குறித்து ஒரு பகுதி விசாரணை நடைபெற்று வழக்கு நிலுவையிலுள்ளது. தமிழ்நாடு அரசைப் பொறுத்தமட்டில் இதுவரை ஏழு நீதிப் பேராணை (ரிட்) மனுக்கள் உச்ச நீதி மன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதற்கிடையில் மத்திய அரசு கைத்தறித் தொழிலுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையிலும் கைத்தறி ரக ஒதுக்கீடு ஆணையை செயலாக்கவும் ஒரு செயலாக்கப் பிரிவினை புது டில்லியை தலைமையிடமாகக் கொண்டு டில்லி, பூனா, கோயம்புத்தூர் ஆகிய மூன்று இடங்களில் மண்டல அலுவலகங்கள் நிறுவியுள்ளது. மைய அரசினைப் பின் பற்றி கைத்தறி ஒதுக்கீட்டு ஆணையை இந்த வருடம் அமுல் படுத்தும், பொருட்டு தமிழக அரசு சென்னையை தலைமையிடமாகவும் விசைத்தறிகள் குவிந்துள்ள இடங்களைக் கிளைகளாகக் கொண்டும் விசைத்தறி செயலாக்கப் பிரிவினை நிறுவி கைத்தறி ரக ஒதுக்கீடு திட்டத்தை திறமையுடன் செயல் படுத்த பரிசீலித்து வருகின்றது.

28. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் :

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் 1969 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 5,00 இலட்சம் மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 1,54 இலட்சம் ஆகும். தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் கீழ்க்காணும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது :—

(1) நலிவுற்ற ஆலைகளை நிர்வகித்தல்,



1990 ஏப்ரல் 6]

(2) கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வேண்டிய பருத்தி மற்றும் இயந்திரங்களை கொள்முதல் செய்தல்,

(3) விசைத்தறிக் கூடங்களை அமைத்தல் மற்றும் நிர்வகித்தல்,

(4) விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தொழில் நுட்பம் மற்றும் நிதியுதவிகள் வழங்குதல்,

(5) விசைத்தறிக் கூடங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணி ரகங்களுக்கு விற்பனை வசதி செய்து தருதல்.

மேலும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் தற்சமயம் முத்தானந்தலிலுள்ள சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலையை நிர்வகித்து வருகிறது. தவிர பஞ்சாலைக் கழக அலுவலர்கள் கீழ்க்கண்ட இரு நூற்பாலைகளின் அன்றாட நிர்வாகப் பணிகளைக் கவனித்து வருகின்றனர் :—

(1) ஜோதி மில்ஸ், கோவை.

(2) ஸ்ரீஹரி மில்ஸ் பிரைவேட் லிமிடெட், கோவை.

''இலவச வேட்டி சேலைகள்'' வழங்கும் முதலமைச்சரின் திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழை எளியோர்களுக்கு தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், 2.63 கோடி ரூபாய் மதிப்புள்ள சேலை மற்றும் வேட்டிகளைக் கொள்முதல் செய்து வழங்கியுள்ளது.

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் கடந்த மூன்று ஆண்டுகளின் செயல்திறன் குறித்த விபரங்கள் பின்வருமாறு :—

[அளவு மதிப்பு: மீட்டர் இலட்சத்தில்.
ரூபாய் இலட்சத்தில்.]

| | 1986—87. | 1987—88. | 1988—89 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| துணி உற்பத்தி .. .. | 25.24 | 25.95 | 32.07 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| துணி கொள்முதல் / மாற்றுதல். | 24.27 | 12.02 | 20.73 |
| மதிப்பு ரூபாய் .. | 104.62 | 84.48 | 157.04 |
| துணி விற்பனை அளவு .. | 54.58 | 34.96 | 90.89 |
| மதிப்பு ரூபாய் .. | 348.57 | 249.17 | 787.85 |
| சோமசுந்தரம் சூப்பர் [நூற்பாலைக்கு பருத்தி கொள்முதல் (இலட்சம் பேல்கள்]. | 0.025 | 0.044 | 0.045 |
| மதிப்பு ரூபாய் .. | 54.40 | 167.40 | 174.74 |
| சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலை நூல் உற்பத்தி (இலட்சம் கிலோவில்). | 3.30 | 6.17 | 6.09 |
| நூல் விற்பனை அளவு .. | 3.23 | 6.06 | 6.22 |
| மதிப்பு ரூபாய் .. | 87.34 | 203.68 | 237.99 |
| நிகர லாபம்/நட்டம் .. | (—)29.38 | (—)71.48 | (—) 3.51 |
| கூட்டுறவு நூற்பாலைகளுக்கு பருத்தி கொள்முதல் (லட்சம் பேல்களில்). | 1.48 | 2.45 | 1.13 |
| மதிப்பு ரூபாய் ... | 3,893.00 | 10,241.00 | 5,006.00 |
| இயந்திரம் / உபரிகள் கொள்முதல் ரூபாய். | ... | 170.72 | 48.48 |



## இணைப்பு—II.

### மானியக் கோரிக்கை எண் 34
### நகர்ப்புற வளர்ச்சி

நாட்டில் நகர்ப்புறப் பகுதிகளை பரவலாகக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேற்பட்டோர் 434 நகர் மையங்களில் வாழ்கின்றனர். 16 மில்லியன் நகர்ப்புற மக்கள் தொகையில் 13.4 மில்லியன் மக்கள் முதல்நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகரங்களிலும் அதைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். மீதமுள்ள 2.6 மில்லியன் மக்கள் பல்வேறு சிறு நகரங்களில் வசிக்கின்றனர். சென்னை, கோவை, மதுரை, சேலம் மற்றும் திருச்சி ஆகிய ஐந்து பெரிய நகர்ப் பகுதிகளில் மட்டும், நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்கள் தொகையில் 45 விழுக்காடு உள்ளனர்.

2. நடப்பு நூற்றாண்டு முடிவில், தமிழ்நாட்டின் நகர்ப்புற மக்கள் தொகை 30 மில்லியன் கொண்டதாக, அதாவது மாநில மொத்த மக்கள் தொகையில் அரைப்பங்கு கொண்டதாக, இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடைசியாக எடுக்கப் பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது மாநில மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்காக இருந்த இத்தொகை தற்போது 40 விழுக்காட்டை நெருங்கியுள்ளது. நகர்ப்புற மக்கள் தொகையின் உயர்வில் இயற்கையான உயர்வு ஒரு சிறு துளி மட்டுமே. ஆனால் குறிப்பிடும்படியான உயர்வு கிராமப் புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு குடியேறும் மக்கள் தொகையே. இந்திய நாடு முக்கியமாக கிராமப்புற விவசாய சமுகத்தையே கொண்டது என்ற குறிப்பான அனுமானத்தில், ஐந்தாண்டுத் திட்டங்கள் நாட்டில் உருவாக்கப்பட்டன. என்றாலும், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலாகிலும் மேற்கூறிய அனுமானத்தை மறு

[1990 ஏப்ரல் 6

பரிசீலனை செய்யும் தருணம் வந்துள்ளது. ஏனெனில், இந் நூற்றாண்டு இறுதியில் தமிழ்நாடு 50 விழுக்காடு நகர்ப்புற மக்கள் தொகை கொண்டதாக நாட்டிலேயே நகர்ப்பகுதிகளை அதிகமாகக் கொண்ட மாநிலங்களில் முதன்மையானதாகத் திகழும். எனவே, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி முனைப்பை உருவாக்கும் அவசியம் எழுந்துள்ளது. இதற்கென பல்வேறு அடிப்படை வசதிகளைப் பெருக்க முதலீடு மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திட்டம் ஆகியவற்றை பெரும் நகர்ப் பகுதிகளான கோவை, மதுரை, திருச்சி, சேலம், வேலூர், திருப்பூர் ஈரோடு, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் ஒரு இலட்சத் திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட மற்ற நகரங் களிலும், உருவாக்குவது அவசியமாகிறது. இது தவிர, பெருகி வரும் மக்கள் பெருக்கத்தால் தேவையான அளவிற்கு அமைத்துக் கொடுக்கப்படாமல் உள்ள, மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படும் அடிப்படை வசதிகளை குறைந்த பட்ச தரத்தில் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில், சென்னைப் பெருநகர் பகுதி யில் அமைத்துக் கொடுப்பதும் அவசியமாகிறது.

3. இவை தவிர, பெருகி வரும் மக்கட் தொகைக்கேற்ப அத்தியாவசியமான அடிப்படை மேம்பாடுகளைச் செய்து கொடுக்கத் தேவையான நிதி உதவிகளை, சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கு செய்து கொடுப்பதும் அவசியமாகிறது. இதற்கென கிராம மட்டம் மற்றும் நகர் மட்டம் ஆகிய இரு நிலைகளிலும் பல்வகைப்பட்ட திட்டங்களை வரையத் தேவை ஏற்பட்டுள்ளது. மேலும் ஒழுங்குபடுத்தப்பட்ட மேம்பாட்டை நகர்ப் பகுதிகளில் உறுதி செய்ய வளர்ச்சிக் கட்டுப்பாடு முறை களையும், அவைகளைச் செயல் படுத்த விதிமுறைகளையும் உருவாக்குவது அவசியமாகிறது. மேற் கூறப்பட்ட முனைப்பு களை செயல் வடிவத்தில் கொண்டுவர தமிழ்நாடு அரசு பின் வரும் செயல் திட்டங்களை உருவாக்கியுள்ளது:—

(1) சென்னை பெருநகர் பகுதி மற்றும் மாநிலத்திலுள்ள 10 பெரிய நகர்ப் பகுதிகளில் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் 'தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்';



1990 ஏப்ரல் 6]

(2) அத்தியாவசிய மற்றும் அடிப்படை வசதிகளை உரு வாக்க உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டு 167.20 கோடி ரூபாய் கொண்ட ''நகராட்சி நகர்ப் புற மேம்பாடு நிதி'' ஒன்றை உருவாக்குவது ;

(3) மத்திய அரசின் நிதி உதவியுடன் சிறு மற்றும் நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவது ;

(4) மாநில அரசின் நிதியால் மட்டும் செயல்படுத்தப் படும் மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ; மற்றும்

(5) நகர்ப் பகுதிகளில் வரையறுக்கப்பட்ட வழியில் மேம்பாடுகளை முறைப்படுத்தி வழிநடத்த முழுமைத் திட்டம், விரிவு வளர்ச்சித் திட்டம் மற்றும் புதுநகர் வளர்ச்சித் திட்டம் ஆகியற்வறை உருவாக்குவது.

மேற்கூறிய பணிகள், சென்னை பெருநகர் பகுதியைப் பொறுத்த வரையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழு மத்தாலும், மாநிலத்தின் எஞ்சிய பகுதிகளில் நகர்- ஊரமைப்பு இயக்கத்தாலும் செயல்படுத்தப்படுகின்றன.

நகர்—ஊரமைப்பு இயக்ககம்.

பெரும் கொள்கைக் குறிக்கோள்கள் :

1971-ஆம் ஆண்டின் நகர்—ஊரமைப்புச் சட்டத்தை நிர்வகிப் பது மற்றும் இச்சட்டத்தில் உள்ளடங்கிய பல்வேறு வித திட்டங்களை உருவாக்குவது மற்றும் செயல்புடுத்துவதில் உள்

ளூர் திட்டக் குழுமங்களுக்கு உதவுவது ஆகியவை நகர்-ஊரமைப்பு இயக்ககத்தின் பெரும் குறிக்கோள்களாகும். இவை ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் திட்டமிடப்பட்ட நகர்ப்புற, மையங்களின் வளர்ச்சியையும், இப்பகுதியில் மக்கள் வாழும் பகுதி சுத்தமாகவும், பணியாற்ற ஏதுவாகவும் மற்றும் வாழ்வதற்கு ஏற்ற சுற்றுப்புறத்தைக் கொண்டதாக அமைவதையும் உறுதி செய்யும். தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்; தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் மற்றும் பொது சுகாதாரச் சட்டம் ஆகியவற்றில் உள்ள, தனியார் நிலப் பகுதிகளில் ஏற்படும் குடியிருப்பு மற்றும் தொழில் பகுதி வளர்ச்சிகளை முறைப்படுத்தவும், தொழில்பகுதி மற்றும் குடியிருப்புப் பகுதிகளை அறிவிக்கை செய்வதும் மற்றும் கட்டிட விதிகளின் கீழ் கட்டிடங்களை முறைப்படுத்துவதும் ஆன பணிகளும் இந்த இயக்ககத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### நீண்டகால மற்றும் குறுகியகால செயல்திட்டங்கள் :

1971 ஆம் ஆண்டின் நகர்-ஊரமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும் கொள்கைக் குறிக்கோள்களில் வெற்றியை, (1) மண்டல திட்டங்கள், (2) முழுமைத் திட்டங்கள், (3) புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் (4) விரிவு வளர்ச்சித் திட்டங்கள் மூலமாக, அடைய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மண்டல திட்டப் பகுதிகளுக்கென அறிவிக்கை செய்யப்பட்ட மண்டல திட்டங்கள் வளர்ச்சி மையங்களையும், பெரிய செய்தித் தொடர்பு வழிகளையும், அப்பகுதியில் அடங்கியுள்ள தொழில் மற்றும் விவசாயப் பகுதிகளை வரையறுப்பது மற்றும் ஏனைய வளர்ச்சித் துறைகளையும் கண்டறியும். உள்ளூர் திட்டப் பகுதிகளுக்கான முழுமைத் திட்டங்கள், மற்ற பலவழி முறைகளுடன், அப்பகுதியிலுள்ள நிலத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும், பல்வேறு தேவைக்கென நிலங்களை ஒதுக்கீடு செய்வது மற்றும் தனிப்படுத்துவது ஆகியவற்றையும், முறையான திட்ட வளர்ச்சியை அடையத் தேவையான பெரும் செய்தித் தொடர்பு வழிகளையும் மற்றும் விரிவு வளர்ச்சித் திட்டங்களுக்கான பகுதிகளைக் கண்டறிவது ஆகியவற்றையும் அளிக்கும். புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் ஓசூர், சித்தோடு, குறிச்சி, பல்கலைநகர், நாவல்பட்டு, மாமல்லபுரம் போன்ற வளர்ந்து வரும் புதிய தொழில் பகுதிகள் மற்றும் சுற்றுலா நகரங்களுக்காக உருவாக்கப்படுகிறது. விரிவு வளர்ச்சித் திட்டங்கள் நகர்ப்புற மையங்களில் குறிப்பிட்ட ஒரு பகுதிக்கானது. இத்திட்டம், வளர்ந்து வரும் அல்லது மிகச் சமீப காலத்தில் முன்னேற்றம் அடையவுள்ள பகுதிகளுக்கானது. இத்திட்டங்கள், குடியிருப்புப் பகுதி, சாலைகள் விளையாட்டு மைதானங்களுகான பகுதி, பள்ளிகள் மற்றும் ஏனைய நிலப்பயன்பாடு ஆகியவற்றுக்கான விரிவான செயல் திட்டங்களை அளிக்கும்.



### (1) மண்டல அமைப்பு திட்டங்கள் :

1970 ஆம் ஆண்டுகளின் இடைப்பட்ட காலங்களில் பல மண்டலத் திட்டங்கள் இத்துறையால் தயாரிக்கப்பட்டன. மாவட்டம் முழுமைக்கும் ஒரு கட்டமைப்புத் திட்டமாக செயல்படுத்துவதற்காக தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும், ''மாவட்டத் தொலை நோக்குத் திட்டங்களை'' தயாரிக்கும் பணியில் இத்துறை தற்போது ஈடுபட்டுள்ளது. இம்முயற்சி ஓராண்டிற்குள் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதே சமயத்தில் இருபது பெரிய நகரங்களுக்கு கட்டமைப்புத் திட்டங்கள் தயாரிக்கும் முயற்சிகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத் திட்டங்கள், சென்னை மாநகருக்கென சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் தயாரிக்கப்பட்ட கட்டமைப்புத் திட்டத்தின் மாதிரி அமையும்.

### (2) முழுமைத் திட்டம் மற்றும் புதுநகர் வளர்ச்சித் திட்டம் :

திட்டத்தின் முதன்மைக் கருவியாக விளங்குவது உள்ளூர் திட்டக் குழுமங்களும், புதுநகர் வளர்ச்சிக் குழுமங்களுமாகும். இவ்வாறு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினைத்

[1990 ஏப்ரல் 6

தவிர, 106 நகரக் குழுமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பான்மையான குழுமங்களின் எல்லை, உள்ளாட்சி மன்றங்களின், நகரப் பஞ்சாயத்துகளின் எல்லையுடன் முடிவடைகின்றன. இவற்றுள் 18 குழுமங்கள், பல நகராட்சிப் பகுதிகளையும், பேரூராட்சிப் பகுதிகளையும் மற்றும் ஊராட்சிப் பகுதிகளையும் உள்ளடக்கிய கூட்டு உள்ளூர்த் திட்டக் குழுமங்களாகும். இவை கோவை, மதுரை, சேலம் மற்றும் திருச்சி போன்ற நகரங்களின் சுற்றுப்புறப் பகுதிகளின் வளர்ச்சிக்கு உதவும். நிபுணர்கள் மற்றும் தொழில் முறை வல்லுநர்களின் உதவி பெறாத உள்ளூர் திட்டக் குழுமங்களுக்கு, சிறப்பான அனுபவம் வாய்ந்த இத்துறை, தேவையான அனைத்து உதவிகளையும் வழிகாட்டி முறைகளையும் அளித்து வருகிறது.

மிகவும் வேகமான நகர வளர்ச்சியினைக் கொண்டுள்ள பகுதிகளுக்கு, சிறப்பு அதிகாரங்களைக் கொண்ட, புதுநகர் வளர்ச்சிக் குழுமங்கள் அமைக்கப்படுகின்றன. உள்ளூர் திட்டக் குழுமங்கள் போல் அல்லாமல் புதுநகர் வளர்ச்சிக் குழுமங்கள், தீவிர வளர்ச்சிப் பணிகளை மேற் கொள்வதுடன், நிதி ஆதாரங்களையும் திரட்டலாம். இவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள புதுநகர் வளர்ச்சிக் குழுமங்கள், ஒரு புறம் மிகவும் வேகமான தொழில் வளர்ச்சியைக் கொண்ட ஓசூர் நகரத்தையும், மறுபுறம் வரலாற்று முக்கியத்துவமும் கலாச்சார பெருமையும் வாய்ந்த, முன் யோசனையற்ற சுயநலத்திற்காக வணிகப் பயனாக எளிதில் மாற்றுதற்குரிய மாமல்லபுரத்தை மறுபக்கமும் உள்ளடக்கியதாகும். இக் குழுமங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்து அவற்றை அமுலாக்குகின்றன.

125 நகரப் பகுதிகள் உள்ளூர் திட்டப் பகுதிகளென அறிவிக்கப்பட்டு, அவற்றுள் 106 பகுதிகளுக்கு உள்ளூர் திட்டக் குழுமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. முழுமைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டதற்கான அறிவிப்பை வெளியிடுவதற்கான



1990 ஏப்ரல் 6]

அரசினரின் இசைவு 101 உள்ளூர் திட்டக் குழுமங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதுவரை 39 முழுமைத் திட்டம்/புதுநகர் வளர்ச்சித் திட்டங்களுக்கு அரசால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. (இணைப்புகள் 1 மற்றும் 2.) 1990-91 ஆம் ஆண்டில் 10 முழுமைத் திட்டங்களுக்கு இசைவளிக்கவும் சுமார் 20 முழுமைத் திட்டங்களுக்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் அரசு உத்தேசித்துள்ளது.

1989-90 ஆம் ஆண்டில், விரிவு வளர்ச்சித் திட்டம் மற்றும் முழுமைத் திட்டத்தை செயல்படுத்த ரூபாய் 15 இலட்சம் நிதியுதவியை அரசு அளித்தது. இந்நிதியுதவியைக் கொண்டு வட்டார வளர்ச்சிக்காக புதிய சாலைகள் மற்றும் விரிவு வளர்ச்சித் திட்டங்களில் ஒதுக்கப்பட்டுள்ள பூங்காக்களை அமைத்தல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1990-91 ஆம் ஆண்டிலும் இதே போன்று இப்பணிகளுக்கு ரூபாய் 15 இலட்சம் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, 1990-91 ஆம் ஆண்டில் புதுநகர் வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கு ரூபாய் 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு தீர்மானித்துள்ளது. குறிச்சி, சித்தோடு, பல்கலை நகர் மற்றும் ஓசூர் போன்ற புது நகரங்கள் வளர்ச்சியடையும் போது, மாநகர்களான கோவை, மதுரை, ஈரோடு ஆகியவற்றின் எதிர் ஈர்ப்பு மையமாகச் செயல்படும். உலக கலாச்சார மையம் எனப் புகழ்பெற்ற மாமல்லபுரம் தகரும், இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும்.

(3) விரிவு வளர்ச்சித் திட்டங்கள் :

முழுமைத் திட்டத்தின் அடுத்த கட்டமாக, வேகமான வளர்ச்சிக்கு மிகுந்த வாய்ப்புள்ள நகரங்களின் பகுதிகளுக்கு விரிவு வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன,

21-2-1990 வரை 640 விரிவு வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. மேலும் 550 திட்டங்களுக்கு அறிவிக்கைகள் வழங்கப்பட்டு, திட்டம் தயாரிக்கும் பணி பல்வேறு நிலைகளில் தொடர்கிறது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் இத்திட்டங்கள் முடிக்கப்படுமென அரசு நம்புகிறது.

(4) இயற்கைக் கேட்டிற்கெதிராகத் திட்டமிடுதல் :

இயற்கைச் சீற்றத்தின் விளைவாக ஏற்படும் பிரச்சினைகளிலிருந்து பாதுகாக்க, 1970 ஆம் ஆண்டுகளிலேயே இத்துறை கற்பனைத் திறன்மிக்க ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது. இம்மாநிலத்தில், வங்கக் கடலிலிருந்து உருவாகும் புயல்களே பெரும் இயற்கைத் துன்பங்களுக்கு ஆதாரமாக இருந்து வந்துள்ளன. கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலான இப்பொருள் பற்றிய புள்ளி விவரங்களை ஆய்ந்து, எளிதில் புயலின் தாக்குதலுக்கு உள்ளாகும் பகுதிகளைக் கண்டறிந்து, இத்துறையால் வடிவமைக்கப்பட்டவாறு பெரும் எண்ணிக்கையிலான சிறப்பு புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. வட்ட வடிவில் அமைந்த இக்கட்டிடங்கள் சாதாரண நாட்களில் சமுதாய நல மையங்களாகவும் அவசரக் காலங்களில் போதுமான புகல் இடங்களாகவும் திகழ்கின்றன. அண்ணா பல்கலைக் கழகத்துடன் கலந்தறிந்து இத்துறையால் உருவாக்கப்பட்ட, புயல் முன் எச்சரிக்கைச் சின்னம், புயலினால் எளிதில் பாதிக்கப் படக் கூடிய அனைத்து கிராமங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. காற்றின் வேகம் ஒரு குறிப்பிட்ட அளவைக் கடந்தால் இந்த எச்சரிக்கைக் கருவிகள் ஒலி எழுப்புகின்றன. இதனால், முன்னெச்சரிக்கையாக மக்கள் புகலிடங்களுக்கு செல்ல ஏதுவாகும். கடற்கரையோரக் கிராமங்களில் எளிதில் புயலில் பாதிக்கப்படும் மீனவர்களின் உடைமையைப் பாதுகாக்க ஒரு புதுமையான அணுகுமுறை கையாளப்படுகிறது. இதற்கென வடிவமைக்கப்பட்ட இரும்பு கலந்த கலவையிலான பாதுகாப்பு கிடங்கு மீனவர்கள் குடிசைக்குள் வைக்கப்பட்டு,



விலை உயர்ந்த நைலான் வலைகள் மற்றுமுள்ள உடைமைகளை பத்திரப்படுத்தலாம். இப் பாதுகாப்பு கிடங்குகள் அதிக அளவில் இது போன்ற கிராமங்களில் அளிக்கப்படுவதால் கோரக் காற்றில் குடிசையே பறந்தாலும் விலை உயர்ந்த பொருள்கள் சேதமடைவதில்லை. புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்ட அரசால் ஒப்புதலளிக்கப்பட்ட 126 இல்லங்களில் 107 இல்லங்கள் கட்டி முடிக்கப் பெற்றுள்ளன. 7 இல்லங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மீதமுள்ளவை விரைவில் கட்டுமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். இது போன்ற ஆபத்துக் காலங்களை உறுதியுடன் சந்திக்க, மாவட்ட அலுவலர்களுக்கு கணிப்பொறி ( Computer ) மூலமாக ஒத்திகைப் பயிற்சிகளை, உயர் நவீன முறையில் இத்துறை உருவாக்கியுள்ளது. 'சிம்க்ளோன்' எனப்படும் இப்புதுமைப் பயிற்சி, ஆபத்துக் காலங்களில் மாவட்ட அலுவலர்களின் செயல் திறனை செம்மையாக்க கால முறைப்படி நடத்தப்பட்டு வருகிறது.

(5) நகர வான்வழிப் படங்கள் :

வான்வழி நிழற்படங்களை நகரமைப்புப் பணிகளுக்கு பயன் படுத்துவதில், இந்தியாவில் மட்டுமல்லாது, நகரமைப்பு நிறுவனங்கள் அனைத்திலுமே, இத்துறை முதலிடம் வகிக்கிறது. 30 நகரங்களுக்கு வான்வழிப் புகைப்படங்கள் எடுக்கும் மிகவும் சிறப்புமிக்க திட்டத்தை ரூ. 120 இலட்சம் மதிப்பீட்டில் செயல் படுத்த அரசு அனுமதித்துள்ளது. தேசிய தொலை உணர்வு மைய முகமைக்கு (NRSA) இப்பணி அளிக்கப்பட்டுள்ளது. இப் பணியினை நிறைவேற்ற, தேசிய தொலை உணர்வு மைய முகமைக்கு ரூ. 60 இலட்சங்கள் செலுத்தப்பட்டுள்ளது. இத் திட்டம் ''தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்'' கீழ், உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ளது. இவ்வான்வழிப் புகைப்படங்கள் மூலம் தயாரிக்கப்படும் பெரிய அளவு வரைபடங்கள், திட்டம் மற்றும் இதர பணிகளுக்கு உதவியாக இருக்கும்.

(6) தொழிற் பகுதிகள் :

நகர்ப்புறங்களில் மட்டுமல்லாது, கிராமப்புறங்களிலும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கென தனியிடம் வரையறுக்கப் பட்டுள்ளன. இதனால் திட்டத் தொடர்பான இசைவுக்குக் காத்திராது, தொழிற்சாலைகளுக்கு விரைந்து ஒப்புதல் வழங்க ஏதுவாகும். இது பற்றிய பட்டியல்கள் கணிப்பொறி மூலம் அட்டவணைப்படுத்தப்பட்டு, அவ்வப்போது ஏற்படும் முன்னேற்றங்களும் இணைக்கப்பட்டு, அனைத்து மாவட்ட தொழில் மையங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

(7) சிறப்புத் திட்டங்கள் :

தமிழக கடலோரப்பகுதி பற்றிய நிகழ்நிலை அறிக்கையைத் தயாரிக்கவும், அவற்றின் தன்மை கெடாது தடுக்கத்தக்க நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கவும், வகுக்கவும் நடுமுகமையாக இத்துறை கடமையாற்றுகிறது. தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், வனத்துறை, மீன்வளத்துறை ஆகியவற்றின் கூட்டு முயற்சியான இப்பணி, சீராக்க முடியாத அளவிற்கு தீங்கு விளையுமுன், தமிழக கடலோர நில உபயோகத்தினைக் கட்டுப்படுத்த முயலுகிறது.

(8) நகர்ப்புறத் தகவல் மையம் :

இத்துறையின் தலைமை அலுவலகத்திலும், மண்டல அலுவலகங்களிலும் கணிப்பொறிகள் நிறுவப்பட்டு, பெரிய தகவல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் முடிவு எடுக்கத் தேவைப்படும் நகர்ப்புற புள்ளி விவரங்கள் இத்துறையின் அனைத்துப் பிரிவுகளுக்கும் எளிதில் கிடைக்கும்.

(9) போக்குவரத்து ஆய்வு :

பெருநகர்களில் போக்குவரத்து புள்ளி விவரங்களைச் சேகரித்து, செயல் திட்டங்களை இத்துறையின் போக்குவரத்துப் பிரிவு வகுத்துள்ளது. இத்தகு செயல் திட்டங்கள் கோவை,





மதுரைக்கு முன்னரே தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. தற்போது திருச்சிக்கு தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. அண்ணா பல்கலைக் கழகத்தின் கூட்டு முயற்சியுடன், உலக வங்கி நிதியுதவி பெறும் நகர்களுக்கு, நடுத்தரப் போக்குவரத்துத் திட்டங்கள் தயாரிக்க தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(10) சிறு மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்:

மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்பட்டு வரும் சிறு மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தினை நிறைவேற்றும் நடுமுகமையாக இத்துறை இருந்து வருகிறது. ஆறாவது திட்ட காலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட 28 நகரங்களுடன், ஏழாவது திட்டத்தில் 10 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. உள்ளாட்சி மன்றங்களின் வருவாய்க்கு மிக முக்கியமாக வகை செய்யும், பேருந்து நிலையங்கள், கடைகள், விடுதிகள், அங்காடிகள் மற்றும் குறைந்த செலவிலான சுகாதார வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும். ஆறாவது திட்ட காலத்தில் ரூ. 1,800 இலட்சமும், ஏழாவது திட்டத்தில் 28–2–1990 வரை ரூ. 1,197 இலட்சமும் இத்திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. ஆறாவது திட்ட காலத்தில் ஒப்புதல் வழங்கப்பட்ட 183 திட்டங்களில் 176 திட்டங்கள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. மீதமுள்ள திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏழாவது திட்ட காலத்தில் 43 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் ஏழு முடிக்கப்பட்டு பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மற்ற திட்டங்கள் செயல்பாட்டில் வெவ்வேறு நிலையிலுள்ளன. இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 1990-91-ல் ரூ. 400 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. (இத்திட்ட ஒதுக்கீடுகளின் தகவல்கள் இணைப்புகள் 3 மற்றும் 4-ல் உள்ளன.)

143802

[1990 ஏப்ரல் 6

(11) மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் :

சிறு மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்திற்கு இணையான இத்திட்டம் மாநில அரசால் மேற் கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு நகருக்கும் ரூ. 30 இலட்சம் நிதி உதவி அளிக்கப்படுகிறது. சிறு மற்றும் நடுத்தர நகரங் களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தில் நிதியுதவி பெறாத நகர்களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆறாவது திட்டத்தில் 107 நகராட்சி மற்றும் நகரப் பஞ்சாயத்துகளில் 172 திட்டங்களுக்கு ரூ. 745 இலட்சம் கடனுதவி அளிக்கப் பட்டுள்ளது. ஏழாவது திட்டத்தில் கூடுதலாக 149 நகராட்சி மற்றும் நகரப் பஞ்சாயத்துகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. இத்திட்டங்களை நிறைவேற்ற 20—3—1990 வரை ரூ. 1,450 இலட்சம் கடனாக விடுவிக்கப்பட்டுள்ளது. 1990–91-ல் இத்திட்டங்களுக்காக ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. (இணைப்பு-5).

(12) நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதி :

சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த வளர்ச் சித் திட்டம் மற்றும் மாநில ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றிற்கு ஒதுக்கப்படும் நிதியுதவி, நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியில் சேர்க்கப்படுகிறது. திட்டப் பணிகளுக்கு நிதி யுதவி வழங்குதல் மற்றும் திட்டப் பணி முன்னேற்றத்தைக் கண் காணித்தல் ஆகியவற்றை அரசு வீட்டு வசதி மற்றும், நகர்ப்புற வளர்ச்சித் துறையின் செயலரைத் தலைவராகவும், நகர் ஊரமைப்பு இயக்குநரை உறுப்பினர்—செயலராகவும் கொண்ட குழு மேலாண்மை செய்கிறது. இந்நிதியிலிருந்து அரசுக்கு திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய நீண்ட கால கடன் தொகையில் ரூ. 30 கோடி இந்நிதியிலேயே மானியமாக மாற்றப் பட்டு இந்நிதி பலப்படுத்தப்பட உள்ளது. இதனால், மிகச் சிறிய நகராட்சிகளும், மற்றும் நகர்களும் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவி பெற இயலும்.



1990 ஏப்ரல் 6]

(13) தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் :

ரூ. 632.60 கோடி உலக வங்கி நிதி உதவியுடன் தற்போது நிறைவேற்றப்படும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் இத்துறை பெரிதும் ஈடுபட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலை வரைத் தலைவராகவும், இத்துறையின் இணை இயக்குநர் அல்லது துணை இயக்குநரை உறுப்பினர்-செயலராகக் கொண்டு செயல் படும் ''நகரக் கண்காணிப்புக் குழுக்கள்'', இத்திட்டத்திற்கான வளர்ச்சிப் பணிகளைத் தேர்ந்தெடுத்தல், பணிகளுக்கான கருத்துருக்களைத் தயாரித்தல் மற்றும் பணி முன்னேற்றத்தைக் கண்காணித்தல் ஆகிய பணிகளில் முக்கிய பங்கு வகிக்கிறது.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகர் மற்றும் ஊரமைப்பு திட்டமிடுதல் சட்டம் 1971-ன் கீழ் (திருத்தப்பட்ட தமிழ்நாடு சட்டம் 22, 1974) சட்டமுறைப்படி ஒரு அமைப்பாக உருவாக்கப்பட்டது. இந்தக் குழுமம் முதலில் தனிக் குழுவாக 1972-ல் அமைக்கப்பட்டு பின் 1975-ல் சட்டமுறைப்படி அமைக் கப்பட்ட குழுவாக தகுதி பெற்றது. சென்னை மாநகர், 4 நகராட்சிகள், 5 நகரியங்கள், 27 நகர் பஞ்சாயத்துக்கள் மற்றும் 213 கிராமங்களை உள்ளடக்கிய சுமார் 1,174 சதுர கிலோ மீட்டர் பரப்பு கொண்ட சென்னை பெருநகர் பகுதிக்கு நீண்ட கால வளர்ச்சி மற்றும் திட்டமிடுதல் பொறுப்பினை இந்தக் குழுமம் ஏற்றுள்ளது. சென்னை பெருநகர் வளர்ச்சிப் பகுதியில் இன்றைய மக்கள் தொகை சுமார் 62 இலட்சங்கள் என மதிப் பிடப்பட்டுள்ளது.

இக்குழுமத்தின் முக்கிய குறிக்கோள்களாவன :

1. சென்னை பெருநகர் பகுதியில் நிலம், உள்ளமைப்பு, இணைப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காகத் திட்டமிடுதல்;

[1990 ஏப்ரல் 6

2. சென்னை பெருநகர் பகுதிகளான முழுமைத் திட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிமுறைமை ஆகியவற்றை செயல்படுத்துதல் ;

3. பெருநகர் வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்குதல், ஒருங்கிணைப்பு செய்தல் மற்றும் செயல்படுத்துதல்.

1. முழுமைத் திட்டம்— 1991-2011.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒரு நிறுவனம் என்ற முறையில் சென்னைப் பெருநகர் பகுதியில் முறையான வளர்ச்சிகளுக்கு திட்டமிடும் பொறுப்பினை ஏற்றுள்ளது. இது தொடர்பாக ஒரு முழுமைத் திட்டத்தினை 1975-லேயே வகுக்க தமிழ் நாடு நகர மற்றும் ஊரமைப்பு திட்டமிடுதல் சட்டத்தின் கீழ் அரசு அங்கீகாரமும் பெற்றுள்ளது. இந்த முதல் முழுமைத் திட்டம் சீராய்வு செய்யப்பட வேண்டிய கால கட்டத்தில் உள்ளதால் இப்பணியினை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இப்போது செய்து கொண்டிருக்கின்றது. கடந்த 15 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் இப்பொழுது செயலாக்கப் பெற்று வரும் திட்டங்கள் மற்றும் அடுத்த சில ஆண்டுகளில் கட்டாயம் நிறைவேற்றப்படவுள்ள திட்டங்கள், வளர்ச்சியின் போக்கு, மற்றும் சமுதாயத்தின் ஆர்வம் மற்றும் எதிர்பார்ப்புகள் ஆகியவைகளை கருத்திற்கொண்டு சீராய்வு செய்யும் வகையில் இந்த இரண்டாம் முழுமைத் திட்டம் தீட்டப்பட்டு இந்தப்பணி 1990–1991 ஆம் ஆண்டில் முடிக்கப்பட உள்ளது.

இதற்கு உதவும் முகமாக ''2011-ல் சென்னை'' என்ற தலைப்பில் ஒரு ஆராய்ச்சி செயல்முறைத் திட்டத்தினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்பாடு செய்துள்ளது. சென்னைப் பெருநகர் பகுதியில் பொருளாதார மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புக்களைப் பெருக்கும் வகையிலான கொள்கை



1990 ஏப்ரல் 6]

களை தெரிவு செய்து பெருநகரின் முறையான வளர்ச்சி மற்றும் மேலாண்மையை பெருக்குவதற்கான விதிமுறைகள் (Strategy) வகுத்தலும் இவ்வாராய்ச்சி செயல்முறைத் திட்டத்தின் நோக்கமாகும். இந்த ஆராய்ச்சியில் கண்டறிந்தவைகளும், தொடர்பான பரிந்துரைகளும் இரண்டாம் முழுமைத் திட்டத்தினை வகுப்பதற்கு உள்ளீடாக அமையும்.

(2) வளர்ச்சித் திட்டங்கள் :

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் விளக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(2) (அ) நடைபெற்றுவரும் திட்டங்கள் :

மறைமலைநகர் புதுநகர் :

இத்திட்டம் 20 ஆண்டு காலத்தில் 3,300 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு இலட்சம் மக்கள் வாழத் தக்க வகையில் வடிவமைக்கப்பட்டது. இத்திட்டம் 1974-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பாலாறு குடிநீர் திட்டத்தையும் சேர்த்து நிலம் மற்றும் நில அபிவிருத்திக்காக இத்திட்டத்திற்கு சுமாராக 3,100 இலட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இதுவரை 818 ஏக்கர் நிலப்பரப்பை முக்கியமாக குடியிருப்புப் பகுதியாகவும், தொழிற் கூடங்களாகவும் அபிவிருத்தி செய்துள்ளது. மேலும் 1,992 வீடுகள் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் (HUDCO) உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டன. மேலும் 132 ஏக்கர் கூடலூர் மற்றும் காட்டாங்கொளத்தூர் கிராமங்களில் குறிப்பாக குடியிருப்பு மனைகளாக அபிவிருத்தி செய்யப்பட்டு முடியும் நிலையில் உள்ளன. 1989-90-ஆம் நிதி ஆண்டின் இறுதியில் இத்திட்டத்திற்கான நிலம், நில வளர்ச்சிப் பணிகள் மற்றும் பணியாளர்களுக்காக ரூபாய் 1,700 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மணலி புதுநகர் :

இத்திட்டம் 20 ஆண்டுகளில் 1,450 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 75,000 மக்கள் வாழத்தக்க வகையில் வடிவமைக்கப் பட்டது. இத்திட்டம் 1974-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. நிலம் மற்றும் நில அபிவிருத்திக்காக இத்திட்டத்திற்கு ரூபாய் 3,236.55 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டது. இதுவரை 489 ஏக்கர் நிலத்தை நில ஆர்ஜிதம் செய்து அதில் 169 ஏக்கர் நிலப் பரப்பில் குடியிருப்பு மனைகள் அபிவிருத்தி செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் 124 ஏக்கர் நிலப்பரப்பில் அபி விருத்திப் பணிகள் முடியும் நிலையில் உள்ளன. மேலும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் (HUDCO) உதவியுடன் 1,760 வீடுகள் கட்டிமுடித்து ஒதுக்கீடு செய்யப்பட்டு விட்டது. இத்துடன் இப்பகுதியின் வளர்ச்சிப் பணிகள் நிறைவு பெறுகின்றன. 1989-90-ஆம் நிதி ஆண்டு வரை இத்திட்டத்திற் கான செலவு சுமார் 1,022 இலட்சம் ரூபாய்.

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம் :

சென்னை நகர மையப்பகுதியிலுள்ள நெரிசலை தவிர்க்க, அங்கு நடைபெற்று வரும் அழுகும் பொருட்கள் (காய்கறி, கனி மற்றும் மலர்) துணி வகைகள் மற்றும் உணவு தானியங்கள் ஆகிய வற்றின் மொத்த விற்பனை வியாபாரங்களை கோயம்பேடு கிராமத்திற்கு மாற்ற அரசு முடிவு செய்துள்ளது. ஏறத்தாழ 5,000 கடைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது ஒரு தன்னிறைவு சுயநிதி திட்டமாகும். இத்திட்டத்திற்குத் தேவை யான அடிப்படை வசதிகளாகிய சாலைகள், சிறு பாலங்கள், மழைநீர் அகற்றுதல், கழிவு நீர் அகற்றுதல், குடிநீர் வசதி செய்தல் முதலிய பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

அழுகும் பொருட்கள் விற்பனை வளாகத்தில் ஏறத்தாழ 2,400 கடைகள் அமைக்கப்படுகின்றன. பெரும்பகுதி கடைகள் கட்டும் பணி 1991-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் தற்போதைய திருத்த மதிப்பீடு சுமார் ரூபாய் 50 கோடியாகும். 1989-90 நிதி ஆண்டு வரை இதற்கான செலவுத் தொகை ரூபாய் 2,967 இலட்சங்கள் ஆகும். இத்திட்டத்திற்கு 1989-90-ஆம் ஆண்டு வரை அரசு ரூபாய் 1,432 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு மூலம் கடனாக அளித் துள்ளது.

புறநகர் பேருந்து மற்றும் சுமை வண்டிகள் நிலையங்கள் :

சென்னை நகரத்தில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காகவும், திட்டமிட்டபடி ஊர்திகள் நகரத்திலிருந்து செல்லவும், நகரத்திற்குள் வரவும் மாதவரத்தில் சுமை வண்டி



நிலையங்கள் சுமார் 6 கோடி ரூபாய் செலவில் அமைக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. இதுவரை கையகப்படுத்தப்பட்ட 80 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 8 ஏக்கர் நிலப்பரப்பில் பேருந்து வளாகமும் 42 ஏக்கர் நிலப்பரப்பில் சரக்கு ஊந்து வளாகமும் உருவாக்கப் படும். மாதவரம் பேருந்து மற்றும் சுமைவண்டி நிலையங்களுக்கு தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டு வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகிறது. இவை தன்னிறைவு சுயநிதி திட்டங்க ளாகும். 1991-ஆம் ஆண்டு மத்தியில் இப்புதிய வளாகத்தில் பேருந்து வண்டிகளும் சரக்கு வண்டிகளும் செயல்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்த வளாகங்களுடன் மாதவரத்தில் ஆட்டோ நகரம் (Auto Nagar) அபிவிருத்தி செய்ய உத் தேசித்துள்ளது. கோயம்பேட்டில் பேருந்து நிலையத்திற்கான இடத்தை பல்லவன் போக்குவரத்துக் கழகம் எடுத்துக்கொண்டு உள்ளது. வளர்ச்சிப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

1989-90 நிதி ஆண்டு வரை செலவுத் தொகை சுமார் ரூபாய் 165 இலட்சங்கள்.

எஃகு மற்றும் இரும்பு மொத்த அங்காடி, சாத்தாங்காடு :

ஜார்ஜ்டவுன் பகுதியில் இரும்பு மற்றும் எஃகு சாமான்கள் வியாபாரத்தினால் ஏற்படும் நெரிசலைப் போக்குவதற்காக சாத்தாங்காட்டில் நவீன அங்காடி அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்கென கையகப்படுத்தப்பட்ட 203 ஏக்கர் நிலத்தில், அபிவிருத்தி பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இத்திட்டத்தின் மதிப்பீடு ஏறக்குறைய ரூபாய் 17 கோடியாகும். இத்திட்டம் ஒரு தன்னிறைவு சுய நிதித் திட்டமாகும். இத் திட்டத்தின் மூலம் சுமார் 850 இரும்பு மற்றும் எஃகு மொத்த வியாபாரிகள் பயன் பெறுவார்கள் 1989-90 ஆம் நிதி ஆண்டு வரை செலவுத் தொகை ரூபாய் 1,297 இலட்சங்கள்.

சம்பந்தப்பட்ட சட்ட வழிமுறைகள் :

கோயம்பேடு, சாத்தாங்காடு மற்றும் மாதவரம் போன்ற இடங்களில் நிறுவப்படும் இந்த புதிய மொத்த விற்பனை அங்காடி களுக்கு வணிகம் மாற்றப்பட்ட பிறகு சென்னை நகரில் இத் தகைய மொத்த விற்பனை நீடிப்பதை தடுக்க வேண்டும்.

இதற்கென தமிழ்நாடு குறிப்பிட்ட பண்டங்கள், அங்காடி (ஒழுங்கு முறைப்படுத்தல் அமைவிடம்) சட்டம் 1988 என்ற வரைவுச் சட்டம் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் சமர்ப்பிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1990 ஏப்ரல் 6

2. (ஆ) புதிய திட்டங்கள்: நிலச்சேர்ப்பு மற்றும் வளர்ச்சி செயல்முறைத் திட்டம் :

சென்னை நகரில் போக்குவரத்து நிலையினை சீர்படுத்தும் வகையில் மூன்று தேசிய நெடுஞ்சாலைகளையும் இணைக்கும் பாதையாக உள்வட்டச்சாலை உத்தேசிக்கப்பட்டு, தமிழ்நாடு நகர் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு வருகின்றது. இந்த உள்வட்டச்சாலையின் இருமருங்கிலும் உள்ள நிலப்பகுதிகளில் விலை மதிப்பில் ஏற்படக்கூடிய ஏற்றத்தில் ஒரு பகுதியாகிலும் சமுதாயத்தைச் சென்றடைவதற்காகவும், தனி நபர்கள் இப் பகுதியினை சுய லாப நோக்கத்துடன் முடக்குவதைத் தடுப்பதற்காகவும், இப்பகுதி சீரிய முறையில் வளர்ச்சி அடைவதற்காகவும் அவ்வாறு மேம்படுத்துதல் மூலம் பெருகிவரும் வீட்டு வசதி தேவைகளைச் சமாளிக்கும் விதத்திலும் குறிப்பிட்ட உள்வட்டச் சாலையில் வடக்கு நிலையில், அதாவது மாதவரம் மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் குடியிருப்பு மற்றும் வணிகப் பயன்பாட்டிற்காக சில ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்டங்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. ஏறத்தாழ 200 எக்டேர் நிலம் இவ்வித வளர்ச்சிப் பணிகளுக்காக அடுத்துவரும் ஐந்தாண்டுகளில் கையகப்படுத்தப்பட்டு முழு வசதிகளும் பெற்ற இருப்த்தைந்தாயிரம் வரையிலான வீட்டு மனைகள் அமைக்கப்படவிருக்கின்றன. இத்திட்டத்திற்கு சுமார் ரூபாய் முப்பது கோடி தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஒரு பகுதி அரசு மான்யமாகவும் மீதமுள்ள பகுதி நிறுவன நிதியாகவும் பெற திட்டமிடப்பட்டுள்ளது. ரூபாய் 20 இலட்சம் 1990-91 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

விரைவு போக்குவரத்து—இரயில் நிலையப் பகுதிகளை மேம்படுத்துதல் :

தற்போது சென்னை கடற்கரை இரயில் நிலையத்திலிருந்து லஸ் வரையிலான பகுதிக்கு விரைவுப் போக்குவரத்து இரயில் திட்டத்திற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் முழுப் பயனையும் பெறும் வண்ணம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகரில் வணிக மையங்கள் பரவலாக அமைய ஏதுவாக, இவ்வகையான வணிக மையங்கள் உருவாகும் சாத்தியக்கூறுகள் உள்ள விரைவுப் போக்குவரத்து இரயில் நிலையப் பகுதிகளுக்கு மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கும் பணியினை மேற்கொள்ளவிருக்கிறது. பொருத்தமான பகுதிகளில் வணிகம் மற்றும் அலுவலகப் பயன்பாட்டு மாறுதல்கள் மற்றும் பயன்பாட்டு நெருக்கத்தை அதிகரித்தல் ஆகிய செயல் முறைகள் வடிவமைக்கப்படும். அரசின் முதலீடுகளினால் ஏற்படும் தனியார் நிலங்களின் மதிப்புக் கூடுதலின் ஒரு பகுதியாகிலும் சமுதாயததிற்குப் பயன்படும் வகையில் எடுத்துக் கொள்ளப்பட வழிமுறைகளும் இத்திட்டங்களில் குறிப்பிடப்படும். வருகின்ற



1990 ஏப்ரல் 6]

மூன்று ஆண்டு காலத்தில் இதற்கான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் பணிக்கென தனியாக அலுவலர்கள் தேவைப்படும். இத்திட்டம் தயாரிக்கும் பணிக்காக 1990-91ஆம் ஆண்டில் ரூபாய் 4.5 இலட்சம் அரசிடமிருந்து உதவித் தொகையாக ஒதுக்கப்பட்டுள்ளது.

2 (இ) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் கண்காணிப்பில் உள்ள உலக வங்கித் திட்டங்கள்

நெறிப்படுத்தப்பட்ட வளர்ச்சித் திட்டம் (உலக வங்கித் திட்டம்) :

இத்திட்டம் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் தனிநில உடைமையாளர்களும் அபிவிருத்தியாளர்களும் இணைந்து செயலாக்கப்படும். இது உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமையும். எட்டாவது திட்டக் காலத்தில் சுமார் 10,000 வீட்டு மனைகள் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் 7,000 வீட்டு மனைகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு ஒதுக்கப்படும். இத்திட்டத்திற்கு 1990-91ஆம் ஆண்டில் ரூபாய் 150 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்ப உதவி (உலக வங்கித் திட்டம்) :

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கல்வி ஆலோசனை, கல்வித்தளவாடம், வான்வெளியிலிருந்து நிழற்படம் எடுத்தல் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும பணியாளர்களுக்கு செயல்படுத்தப்படும் பயிற்சி வழங்குதல் ஆகியவற்றிற்கும் இவ்வுதவி வழங்கப்படுகிறது. 1990-91ஆம் ஆண்டில் ரூபாய் 150 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

3. பரப்புத் திட்டம்:

வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி 1975-ல் அரசால் ஒப்புதல் பெறப்பட்ட முழுமைத்திட்ட நில உபயோக வரையரைகளுக்கு உட்பட்டு சென்னை பெருநகர் பகுதிக்குள் நகர் மற்றும் ஊரமைப்புத் திட்ட சட்டப் பிரிவு 48-ன்படி வளர்ச்சிப் பணிகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இச்செயல் முறைகள் கீழ்க் காணும் முறையில் வேகப்படுத்தப்படுகின்றன :—

(1) சிறப்புக் கட்டிடப் பிரிவு மற்றும் விதி மீறல் ஏதுமில்லாத நேர் வழி பிரிவு திட்ட அனுமதிக்கான மனுக்கள் நேரடியாகப் பெறப்பட்டு விரைவாக அனுமதி வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(2) தகவல் மற்றும் ஆலோசனை மையம் ஒன்று அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு தகவல்கள் விதிமுறை விளக்கங்கள் மற்றும் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகள், நில உபயோகம் போன்றவற்றில் தகவல்கள் அளிக்கப்படுகின்றன.

(3) மாநகராட்சியினரின் நகரமைப்புப் பிரிவு ஒன்று இக்குழுமத்திலேயே சென்னை மாநகராட்சி சட்டத்தின் கீழ் வழங்கப்படும் கட்டிட உரிம அனுமதிகளை குழுமத்தின் ஒத்துழைப்புடன் வழங்கி வருகிறது.

(4) வளர்ச்சிப் பணிகளை கண்காணிக்கவும், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளை செயல்படுத்தப்படுவதை கண்காணிக்கவும் செயலாக்கப் பிரிவு செம்மைப்படுத்தப்பட்டுள்ளது.

(5) நகர எல்லையிலிருந்து சென்னைப் பெருநகர எல்லை வரையிலான கடலோரப் பகுதிகளில் உருவாகும் வளர்ச்சிப் பணிகளைக் கண்காணிக்க சிறப்புச் செயலாக்கப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் இரு சட்ட வரைவுகள் பரிசீலனையில் உள்ளன:—

(1) தமிழ்நாடு பல அடுக்குமாடி உரிமையாளர்கள் (கட்டுமானப் பணிகளை ஒழுங்குபடுத்தல், விற்பனை, மேலாண்மை மாற்றம்) சட்டம்.

(2) தமிழ்நாடு தனி குடியிருப்பு உரிமையாளர் சட்டம்.

1971 ஆம் ஆண்டு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்திற்கான திருத்தம் கீழ்க்காணும் நோக்கங்களுக்காக பரிசீலனையில் உள்ளன :—

(1) கூட்டுக்கட்டண வசூல் (compounding fees)

(2) வளர்ச்சிக் கட்டணங்களை உயர்த்துதல்.

(3) சீரிய ஒழுங்கு முறை மற்றும் செயலாக்க வழிமுறைகள்.

சென்னை பெருநகர் பகுதிக்குள் நாளும் பெருகிவரும் வளர்ச்சிகளை சீராக்க வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளில் திருத்தம் கொண்டுவர பரிசீலிக்கப்படுகிறது.

4. தமிழ்நாடு நகர் வளர்ச்சித் திட்டம் :

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் முன்னரே வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட சென்னை நகர வளர்ச்சித் திட்டம் I மற்றும் II ஆகிய இரு திட்டங்களைத் தொடர்ந்து மூன்றாவதாக தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டம் என்னும்





மிகப் பெரிய திட்டம் 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தொடங்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் உதவியுடன் நடைபெறும் திட்டமிது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 632.60 கோடி (இணைப்பு-6) தன்னிறைவு வீட்டு மனைகள், அடிப்படை வசதிகளுடன் கூடிய குடிசைப் பகுதி மேம்பாடு, போக்குவரத்து மேம்பாடு ஆகிய வசதிகளை தமிழ்நாட்டில் உள்ள 18 நகரங்களுக்கு வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தொழில் நுட்பம் மற்றும் நிதி உதவியுடன் கூடிய வருவாய் தரத்தக்க திட்டங்களை ஏற்று நடத்தவும் இது உதவுகிறது. திட்டமேலாண்மைக் குழு என்னும் உயர்மட்டத் தொழில் நுட்பக் குழு ஒன்று வீட்டு வசதி மற்றும் நகர வளர்ச்சித் துறை ஆணையாளர் மற்றும் செயலாளர் தலைமையில் இத்திட்டங்களை மேலாண்மை செய்ய உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், நகராட்சிகள் நிர்வாகஇயக்ககம், பல்லவன் போக்குவரத்துக் கழகம், நெடுஞ்சாலைத் துறை, நகர் மற்றும் ஊரமைப்புத்துறை மற்றும் பல செயல்படுத்தும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர்.

சென்னை பெருநகர் பகுதியினுள் அமுலாக்கப்படும் திட்டங்களுக்கு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பொறுப்பேற்கின்றது. சென்னைப் பெருநகர் பகுதி நீங்கலாக உள்ள மதுரை, சேலம், கோவை, திருச்சி ஆகிய திட்ட நகரங்களுக்கு நகர் மற்றும் ஊரமைப்புத்துறை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்கும் நகரமட்ட இணைப்புக் குழுவின் பொறுப்பில் திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கு 1990ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முடிய ரூபாய் 5,921.74 இலட்சங்கள் வரை செலவிடப்பட்டுள்ளது. (இணைப்பு—7). சென்னை, மதுரை, கோவை, திருச்சி, தூத்துக்குடி, ஈரோடு போன்ற நகரங்களில் 11 தன்னிறைவு வீட்டுமனைத் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் மதுரை, கோவை திருச்சி, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் செயல்படுத்தப்படுகின்றன.

சாலைப் பணிகளுக்கான நிர்வாக அனுமதி 19 திட்டங்களுக்கு ரூபாய் 65.11 கோடிக்கு கிடைத்துள்ளது. சென்னை (4) மதுரை (2) திருநெல்வேலி (1) ஆகிய இடங்களில் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. வடசென்னை

யில் நெரிசலை குறைக்கும் பொருட்டு, ரூபாய் 1,320 இலட்சங்கள் திட்ட மதிப்பீட்டில் இராயபுரத்தில் பெரிய அளவில் மேம் பாலம் ஒன்று நிறைவேற்றப்பட உள்ளது. இதற்கான ஆய்வுப் பணிகள் விரைவில் தொடங்கும்.

நகராட்சி நகர வளர்ச்சி நிதியிலிருந்து முதலாவதாக 24 நகராட்சிகள் மற்றும் 3 மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு அவ்வுள்ளாட்சி நிறுவனங்களுக்கு வருவாய் தரத்தக்க திட்டங் களுக்கு உதவ உள்ளது. திட்டங்கள் வரையறுக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளன. ரூபாய் 4,318 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் அரசால் அளிக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரை ரூபாய் 147 இலட்சங்கள் 16 நகராட்சிகள் / மாநகராட்சிகளுக்கு திடகழிவு மேலாண்மைக்காக வண்டிகள் வாங்க கொடுக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் (1990-91) தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டங்களுக்கான ஒதுக்கீடு ரூபாய் 9,041.16 இலட்சங்கள், இதில் அரசின் ஒதுக்கீடு ரூபாய் 3,791.16 இலட்சங்கள் அடங்கும் (இணைப்பு—8).

5. துரித ரயில் போக்குவரத்து திட்டம்:

துரித இரயில் போக்குவரத்து திட்டம் நகரில் தற்பொழுது உள்ள போக்குவரத்து சாதனங்களுக்கு இணையான பெருமை வாய்ந்த முக்கியமானதொரு திட்டமாகும். அண்ணா சாலை யிலிருந்து லஸ் வரை சாலைகளில் உள்ள மிகுந்த நெரிசல்களைத் தவிர்க்க வகை செய்யும்.

சென்னை கடற்கரையிலிருந்து லஸ் வரையில் துரித இரயில் அமைக்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதன் மொத்த நீளம் 8.45 கிலோ மீட்டர். இதில் 2.9 கி.மீ. கடற்கரையிலிருந்து அரசு பொது மருத்துவமனை/பூங்கா இரயில் நிலையம் வரை தரை மட்டத்திலும், அதனையடுத்து 5.55 கி. மீட்டர் தூரம் அரசு பொது மருத்துவமனையிலிருந்து லஸ் வரையில் உயர் மட் டத்திலும் அமையும். தடங்கலற்ற போக்குவரத்துக்கான இருவழி அமைப்புடன் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இத்திட்டம் 1983-84-ஆம் ஆண்டின் மத்திய திட்டக் குழு வினால் ஒப்புதல் செய்யப்பட்டு பின்னர் இரயில் வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை கட்டிட வேலைகள்



சுமார் 32 சதவிகிதம் முடிவடைந்துள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு தற்பொழுது ரூபாய் 125 கோடியாக உயர்ந்துள்ளது. இத்திட்டம் 1993-94-ஆம் ஆண்டில் முழுமையடையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் விரைவாக முடிவடைய வேண்டுமென்று இவ் வரசு ஆர்வமாக உள்ளது. இவ்வரசு இரயில்வேக்கு முழு ஒத் துழைப்பு கொடுத்துள்ளது. மேலும் இத்திட்டத்திற்குத் தேவை யான அரசு நிலங்களை இரயில்வேக்கு இனாமாக கொடுத்துள்ளது. இத்திட்டத்திற்கு அதிக நிதி கோருவது குறித்து மத்திய அரசை அணுகியுள்ளது.

143802